
திருத்தலங்கள் பதினாறு



ஆக்கம்:
பொ. சிவப்பிரகாசம்

உ

தென்னிந்தியத் திருத்தலங்கள் பதினாறு


என்னை ஈன்று தமிழறிவு தந்த
தெய்வங்களின் பாதகமலங்கட்கு
சமர்ப்பணம்

தொகுத்து எழுதியவர்:
பொன்னம்பலம் சிவப்பிரகாசம்
கொழும்புத்துறை மேற்கு,
யாழ்ப்பாணம்.

ஆவணி 2013

நூலின் விபரம்

நூலின் பெயர்:	“தென்னிந்தியத் திருத்தலங்கள் பதினாறு”
முதற்பதிப்பு:	ஆவணி 2013
ஆக்கம்:	திரு. பொ. சிவப்பிரகாசம்
பதிப்புரிமை:	ஆசிரியருக்கு
நூல் வடிவமைப்பு:	யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை அச்சகம்
கிடைக்குமிடம்:	சகல புத்தகசாலைகளிலும்
ஆசிரியர் முகவரி:	இல. 7, விபுலானந்த வீதி, கொழும்புத்துறை மேற்கு, யாழ்ப்பாணம்.
பக்கம்:	viii + 226
விலை :	ரூபா 300.00







சிவமயம்
குருபாதம்





நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

முதலாவது குருமஹா சந்நிதானம்

ஆதீன குரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

இரண்டாவது குருமஹா சந்நிதானம்

ஸ்தாபிதம் : 1966

021 222 2870

மருத்துவத்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

2..7../9../6../20..13..



அருளாசிச் செய்தி

அன்புள்ளவர்களுக்கு

திரு. பொ. சிவப்பிரகாசம் அவர்களினால் உருவாக்கப்பட்ட தலயாத்திரை நூல் வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். இந்தியாவிலுள்ள பல ஆலயங்களுக்குச் சென்று வழிபட்டதின் அடையாளமாக இந்நூல் வெளிவருகின்றது. தலயாத்திரை செய்ய விரும்பும் அன்பர்களுக்கு இந்நூல் மிக உதவியாக அமைகின்றது. செல்கின்ற பாதை; புகையிரதம் செல்கின்றபாதை; பேரூந்து செல்லும் பாதை, அனைத்தையும் உள்ளடக்கியதாக இந்நூல் வெளிவருகின்றது. இதனை அனைவரும் பெற்றுப் பயன்படுத்தி இறையின்பம் அடைவோமாக. வயதான காலத்திலும் திரு. பொ. சிவப்பிரகாசம் அவர்கள் தான் பெற்ற இன்பத்தை அனைவருக்கும் வழங்குவது பாராட்டுக்குரியதாகும்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

– ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள்

யா/ கொழும்புத்துறை இந்துமகா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்
J/ COLUMBUTHURAI HINDU MAHA VIDIYALAYAM
JAFFNA.
Principal: M. Gnanashambanthan B.Ed.(Hons), S.L.P.S
Vice Principal: P. Sarvananthan B.A., Dip in Edu., S.L.T.S 1

வாழ்த்துச் செய்தி



"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

"தென்னிந்தியத் திருத்தலங்கள் பதினாறு" என்கின்ற பெயரினைத்தாங்கி முகிழ்த்திருக்கின்ற இந்த வரலாற்றுப் பேழைக்கு வாழ்த்துரை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன். இதனை ஆக்கி உவந்து அளித்திருக்கின்ற சிவத்திரு பொன்னம்பலம் சிவப்பிரகாரம் ஐயா அவர்கள், எமது பாடசாலையின் புகழ்பூத்த பழைய மாணவர்களுள் முதன்மையானவர் என்பது எமது பாடசாலைச் சமூகத்திற்கு பேருவகை அளிப்பதாயிருக்கின்றது. முகத்திலே என்றும் இறைபணியாளர்களுக்கென்றே தனித்துவமாகத் திகழுகின்ற ஒளிவட்டம் கண்டவரைக் கவர்ந்திழுக்கும்.

கடந்த பதினைந்து ஆண்டுகளின் மேலான தேடலின் விளைவாக பாற்கடல் கடைந்தெடுத்த அமுதமாக, எங்கள் கைகளிலே தவழ்கின்றது இந்த அரிய பொக்கிசம். சிவப்பிரகாசம் ஐயா அவர்களைப்பற்றி இங்கு நான் குறிப்பிட்டேயாக வேண்டும். கொழும்புத்துறை என்றவுடன், முதலில் முகவரி காட்டி நிற்பவர் தவத்திரு சிவயோக சுவாமிகளாவார். கொழும்புத்துறை, சுவாமிகளின் வருகையால் "சிவயோகம்" பெற்றது. சுவாமிகளின் திருவடிகளின் கீழ் அமர்ந்து திருமுறைகளை முற்றோதும் பேறுபெற்றவர் எங்கள் சிவப்பிரகாசம் ஐயா அவர்கள். அகவை எண்பதினைக் கடந்து நின்றபொழுதும் இளைஞருக்குரிய துடிப்புடன் கொழும்புத்துறையூர் உறைகின்ற அருள்மிகு வதரிபீட விநாயகரின் ஆலய அறங்காவலர் சபையின் உபதலைவராக இருந்து சமயப் பணியாற்றி நிற்கின்றார். தான் கண்டும், கேட்டும்,

தரிசித்தும், வாசித்தும் திரட்டிய இந்த அமிர்தத்தைத் தொடர்ந்து வரும் தலைமுறையினரிடம் கையளித்தல் வேண்டும் என்கின்ற பேரவாவினாலும், இத்தலங்களைத் தரிசனம் செய்கின்றவர் களுக்கு ஒரு வழிகாட்டியாக விளங்கக்கூடிய வகையிலும் ஐயா அவர்கள் பத்திரிகைகள், மலர்கள், சஞ்சிகைகளுக்கு எழுதிய வற்றை எல்லாம் ஒன்றாக்கி, எங்களுக்கு அருள் விருந்தாக்கி இருக்கின்றார்கள்.

சைவப்பாரம்பரியமும், தமிழ்ப் பாரம்பரியமும் சிறந்தோங் கிய குடும்பப்பின்னணியில் இருந்து, பிறந்து வளர்ந்த சிவப்பிர காசம் ஐயா அவர்கள் பாடசாலைக்கல்வியை நிறைவுசெய்து அரசாங்க சேவையில் பிரதம பொதுசுகாதாரப் பரிசோதகராக இருந்து, நிறைவான சேவையின் பின், ஓய்வுபெற்ற பொழுதும் தன் அனுபவத்தினைத் தான் வாழ்ந்த சமூகத்தின் நலனுக்காக சமயப் பணியூடாகவும், சமூகப்பணியூடாகவும் இன்றளவும் செய்து நிற்பதைக் காண்கின்றோம். சைவத்தின் தொன்மை, வரலாறு, பாரம்பரியங்கள், வழிபாட்டு முறைகள், விழுமியங்கள் என இந்த "தென்னிந்தியத் திருத்தலங்கள் பதினாறு" என்கின்ற வரலாற்றுப் பேழையினூடாக கிடைக்கப்பெற்றிருப்பதானது வதரி பீட விநாயகரின் திருவருளும், தவத்திரு சிவயோகசுவாமிகளின் குருவருளும் கைவரப்பெற்றதன் மகிமையின் பேறாகவே கருது கின்றேன். பெயருக்கேற்ப, சிவ பிரகாசமாக பிரகாசித்து நிற்கும் ஐயா அவர்களின் சைவத்திற்கும் தமிழிற்கும் ஆற்றி நிற்கின்ற சேவையை நயந்து வாழ்த்தி நிற்பதில் இறும்பூதெய்துகின்றேன்.

ம. ஞானசம்பந்தன்
அதிபர்,
யா/ கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்

01.07.2013

முன்னுரை

நமச்சிவாய வாஅழ்க

நாதன்தாள் வாழ்க!

கடந்த பல வருடங்களாக நல்லைக்குமரன் மலரிலும், உதயன், வலம்புரிப் பத்திரிகைகளிலும் வெளிவந்த எனது ஆக்கங்களை, நிலைத்து நிற்கும் வகையில் எனது நண்பர்களின் அறிவுறுத்தலுக்கு அமைய செவிசாய்த்து, "தென்னிந்தியத் திருத் தலங்கள் பதினாறு" என்னும் தலைப்பில் தொகுத்து நூலாக, உங்கள் கரங்களில் மலர்ந்துளது. இதையிட்டு மனநிறைவடை கிறேன்.

கடந்த காலங்களில் பலமுறை திருத்தல யாத்திரை மேற்கொண்டபோதும், கண்ணால் கண்டதையும், கேட்டு அறிந்த தையும், நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை ஆய்ந்து அறிந்து, தொகுத்து ஒன்று திரட்டி, நூலுருவில் வெளிவரச் செய்தது; ஆடவல்லானின் அருளன்றி வேறில்லை. தஞ்சாவூரில் உள்ள சரஸ்வதி மகால் நூல் நிலையத்திலும், ஒரு நாள் முழுவதும் பொறுமையாக இருந்து சிலகுறிப்புகளை எடுக்க உதவிய நூலகப் பொறுப்பாளருக்கு எனது நன்றிகள். அத்தோடு திருநெல் வேலி சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகத்திலும் தேவையான சில குறிப்புக்களை சேகரிக்க முடிந்தது.

இந்த நூலைப் படிப்பதால் பக்தி மார்க்கம் பெருகவும், எம்மவர் திருத்தல யாத்திரை மேற்கொள்ளவும், இந்நூல் தூண்டுகோலாக அமையட்டும். இதுவே எனது குறிக்கோளும், பேரவாவும் என்று கூறி அமைகிறேன்.

பொ. சிவப்பிரகாசம்

பொருளடக்கம்

01.	சிதம்பரம்	01
02.	மாநகர் மதுரை (ஆலவாய்)	12
03.	திருக்காளத்தீஸ்வரர்	25
04.	நல்லூரில் நாவலரின் புராண படனம்	39
05.	திருப்பெருந்துறையில் திருவாதவூரடிகள்	43
06.	திருச்செந்தூர்	46
07.	தஞ்சாவூர்	68
08.	பெரியபுராணம் தந்த சேக்கிழார் சுவாமிகள்	84
09.	தம்பிரான் தோழர்	90
10.	திருநெல்வேலி	100
11.	காஞ்சி மாவடி வைகுஞ் செவ்வேள் (காஞ்சிபுரம்)	123
12.	நடனம் ஆடினார்	132
13.	திருவாலங்காடு	147
14.	திருவாரூர்	161
15.	இராமேஸ்வரம்	173
16.	திருவண்ணாமலை	188
17.	திருக்குற்றாலம்	207

உ

சிதம்பரம்

(தில்லைத்திருத்தலம்)

திருச்சிற்றம்பலம்

வாரேறு வனமுலையாள் பாகமாக
மழுவாள் கைஏந்தி மயானத் தாடிச்
சீரேறு தண்வயல் சூழ் ஓதவேலித்
திருவாஞ் சியத்தார் திருநள் ளாற்றார்
காரேறு கண்டத்தார் காமற் காய்ந்த
கண்விளங்கு நெற்றியார் கடல் நஞ்சுண்டார்
போரேறு தாமேறிப் பூதஞ்சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே.

- அப்பர் சுவாமிகள்

திருச்சிற்றம்பலம்

வரலாறு

சால்மாலி துவீபம் - லெமுரியாக் கண்டமாகும். இதன் நிலப்பரப்பு விந்தைய மலைக்குத் தெற்கே தென்துருவம் வரையும் 7000 மைல் பரந்திருந்தது. அப்போது விந்தைய மலைக்கு வடக்கே சமுத்திரம், இமயமலைச் சிகரங்கள் சிறுசிறு தீவாக இருந்தது. இந்த லெமுரியாக் கண்டம் தமிழர் வாழ்ந்த நிலப் பரப்பு. பின் கடற்கோளால் இல்லாது போயிற்று. வடதுருவத்திலி ருந்து கடல் கொண்ட தென்துருவத்தில் நமது எஞ்சிய தமிழ் நிலப்பரப்புத் தோன்றியபோது அதன் பாதுகாவலராக பரமேஸ் வரன், அகத்திய முனிவரை அனுப்பி வைத்தார். அகத்தியரும் தமிழ்நாடு வரும்போது முருகப்பெருமானிடம் தமிழ் கற்று வந்தார்.

பொதிய மலையில் குறுமுனிவன் ஆச்சிரமம் அமைந் திருந்தது. இந்தத் தமிழ் நிலப்பரப்பிற்குள்தான் சிதம்பரம் என்னும் தெய்வீகத் திருத்தலம் அமைந்துள்ளது. சிதம்பரத்தின் எல்லை

யாகக் கிழக்கே திருவேட்களமும், மேற்கே நாகசேரிக்குளமும் வடக்கே வெள்ளாறும், தெற்கே கொள்ளிட நதியும் அமைந் துள்ளது. நகரின் நடுவே, ஒழுங்கான நான்கு வீதிகளை உடைய கூத்தப்பெருமான் ஆலயம் உளது. சோழ வேந்தர்கள் திருச்சுற்று மாளிகை எடுத்து, தில்லை வீதிகட்கு கல்பரப்பிச் செப்பனிட்டனர். இன்றைய சிதம்பரம், பல புறவீதிகளுடன் வளர்ந்துள்ளது. பொன்னம்பலமும் சிற்றம்பலமும் மரத்தால் கட்டப்பட்டுள்ளதால், இது ஒரு தொன்மைவாய்ந்த தலமாகும். பல்லவர் கண்ட கற்கோயிலிற்கும், குகைக்கோயிலிற்கும் முற்பட்டது சிதம்பரம். தில்லை, சரித்திரத்திற்கு எட்டாத கோயில். நடராஜர் கலை வடிவம் 6ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டது. சோழ மன்னனின் குல தெய்வம் சிதம்பரநாதன். சிதம்பரம் பல்லவர் காலத்தில் பிரசித்தி பெற்றிருந்தது.

சிதம்பரம்

திருவாரூரை "மூலாதாரம்" என்றும், திருவானைக்காவை "கொப்பூழ்" என்றும், திருவண்ணாமலையைக் "கண்டம்" என்றும், காசியைப் "புருவமத்திமம்" என்றும், சிதம்பரத்தை "இருதயம்" என்றும் புராணிகர் கொள்வர். சிதம்பரத்தைக் கோயில் என்று பொதுவாகவும் சிவாலயம் என்று சிறப்பாகவும், திருச்சிற்றம் பலம், புலியூர், பூலோககைலாயம், வியாக்கிரபுரம், கனகசபை, பொன்னம்பலம், தில்லை, தில்லைவனம், ஞானாகாசம், மெய்ப் பதம் என்றும் துதிப்பர். தில்லை என்பது கோயிலையுங் குறிக்கும்.

அகண்ட பிரகாரங்கள், நீண்டமதிற்சுவர்கள், வானளாவிய கோபுரங்கள் எழில்மிக்க விமானங்கள், கலைத்திறன்மிக்க சிற்பங்கள் நிரம்பியதுதான், இந்த மாபெரும் சிதம்பரலாயம். நாட்டிய நூலில் சொல்லப்பட்ட 108 வகை நடனங்களையும், சிதம்பராலயச் சிற்பங்களில் கண்டின்புற முடியும். திருவாலங் காட்டில் இரத்தின சபையிலும், மதுரையில் வெள்ளியம்பலத்தி லும், திருநெல்வேலியில் தாமிரசபையிலும், குற்றாலத்தில் சித்திர சபையிலும், சிதம்பரத்தில் கனகசபையிலும் இறைவன் சதா திருநடனம் புரிகிறான். இவைகள் "பஞ்சசபை" எனப்படும்.

சைவமக்கள் உலகில் பல்வேறு நாடுகளில் பரந்துபட்டு வாழ்ந்தாலும், "கோயில்" என்று கும்பிடுவது "சிவ சிவ" என்று தியானிப்பது சிதம்பரத்தையே ஆகும். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே அமையப்பெற்றது சிதம்பரம் ஆகும். திருவாரூரில் பிறந்தால், திருவண்ணாமலையை நினைத்தால், சிதம்பரத்தைத் தரிசித்தால், காசியில் இறந்தால், முத்தியடையலாம் என்பது எம்முடைய மூதாதையரின் நம்பிக்கை ஆகும். தில்லை ஒரு தெய்வீக ஞானப்பேரவையாகும். திருச்சிற்றம்பலம், பிரபஞ்சம் தோன்றியபோதே ஏற்பட்டதொன்றாகும். இத்தலம் ஆதியில் தில்லை மரங்கள் சூழ்ந்த வனமாக இருந்தது.

காஞ்சிபுரம் பிருதுவித்தலமாகும், திருவானைக்கா அப்புத் தலமாகும், திருவண்ணாமலை தேயுத்தலமாகும், திருக்காளாத்தி வாயுத்தலமாகும், சிதம்பரம் ஆகாயத்தலமாகும். இவை அனைத் தும் பஞ்சபூதத்தலங்களாகும். தில்லை, சரித்திரத்திற்கு எட்டாத காலக் கோயிலாகும். இந்தச் செம்பொன்மாமன்றில் ஒரு தாள் ஊன்றி, உலகம் உய்ய ஆனந்தத்தாண்டவம் நடைபெறுகிறது. தில்லைப் பெருங்கோயில் 40 ஏக்கர் நிலப்பரப்பில் பரந்து விரிந்துள்ளது. தில்லைப் பெருங்கோயிலில் சிற்றம்பலம், எதிரம் பலம், பேரம்பலம், தேரம்பலம், ஆயிரங்கால் மண்டபம் என ஐந்து சபைகள் உண்டு. ஆண்டுதோறும் ஆனியிலும், மார்கழியி லும் இருமுறை இராஜசபையில் ஸ்ரீநடராஜமூர்த்தி எழுந்தருளித் திருமஞ்சனங் கொண்டு தரிசனம் அளிப்பர்.

ஆனந்த தாண்டவம்

தை மாதமும் குருவாரமும் பூச நட்சத்திரமும், பூரணை யுங் கூடிய நாளில், பிற்பகல் மூன்று மணிக்குச் சற்று முன்னதாக பதஞ்சலி, உபமன்யூ, வியாக்கிரபாதர் முதலானோர் இறைவன் வருகையை ஆவலோடு எதிர்பார்த்து இருந்தனர். தேவர்களும் தில்லை வந்து சேர்ந்தனர். இந்திரன், பிரமா, விஷ்ணு, இலட்சுமி, தில்லை மூவாயிரவர் யாவரும்வந்து சேர்ந்தனர். நந்தியம் பெருமான் கையிற்பொற்பிரம்புடன் தோன்றினார். நந்தியம் பெருமான் வந்தவர்களை, அவர்கட்கு ஏற்ற இடத்தில், அமரச்

செய்தார். பின் நந்திகேஸ்வரர், வியாக்கிரபாதர், பதஞ்சலி, உபமன்யூ முதலியோரை அழைத்துச் சிவபெருமான் நடனஞ் செய்ய இருக்கும் இடத்திற்கு அருகில் நிற்கச் செய்தார்.

தேவதுந்துபிகள் முழங்கின. பதினைந்து நாழிகை ஆனதும் ஞானசபையிலே அஞ்ஞானமாகிய திரையை விலக்க வும், ஒளிவடிவமான வெளியில், கருணை வடிவமான உமை அம்மையாருடன் எம்பெருமான் காட்சிதந்தார். அனைவரும் தலைமீது கரங்குவித்து "சிவசிவ" என்றனர். புன்முறுவல் பூத்த திருமுகம், மூன்று கண்களும், கங்கை, பிறை, கொன்றை மாலையுடைய சடையும், சங்ககுண்டலம் கொண்டசெவியும், திருத்தோடுடைய இடச்செவியும், நீலகண்டமும், வலப்பாகமாக தமருகமும், அபயகரமும், அக்கினிகோளகரத்துடனும், புலித் தோலாடையும், முயலகன் மேல் ஊன்றிய பாதமும் எம்பெரு மானின் வலக்கை தமருகத்தை ஒலித்துக்கொண்டு சிவகாமி அம்மையார் காண ஆனந்த நடனம் ஆடினார். இறைவனின் கால்களில், வேதம் என்னும் சிலம்பு ஒலித்தது. இன்றும் அந்த அற்புத நடனம் தில்லையில் ஓயவில்லை. இந்த நடனத்தைக் கண்டு தரிசித்த கண்ணாலே, பின் காண்பதற்கு, வேறு பொருள் இல்லை. தில்லை வீதியில் நடந்தால் கால்கள் செய்த பாவங்கள் நீங்கும். கண்களுக்கு ஞான விருந்து பொற்சபையில் ஆடும்பூவடிகள், இந்தப் பூவடியின் திருநடனம் கண்டால், எடுத்த எமது பிறவியே பயனடையும்.

சிதம்பர ரகசியம்

தில்லையிலே சிற்சபையிலே நடராஜமூர்த்திக்கு வலப் பாகத்தில் மாசுபடியாத ஆகாயமூர்த்தமாகிய சிதம்பர ரகசியம் உண்டு. சிற்சபையில் சபாநாயகரின் வலப்பாகத்தில் ஒரு சிறு வாயில் உளது. இங்கே உள்ள திரை விலகியதும் பஞ்ச ஆராத்தி காட்டப்பெறும். இதனுள்ளே திருவுருவம் ஏதும் தோன் றாது. தங்கத்தாலான வில்வதள மாலை ஒன்று தொங்கவிடப் பட்டுக் காட்சிதரும். மூர்த்தி இல்லாமலே வில்வதளம் தொங்கும். இதன் ரகசியம் இறைவன் இங்கே ஆகாய உருவில் இருக்கிறார் என்பதுதான். சிதம்பரத்திலேதான் இறைவன் அருவம், உருவம்,

அருவுருவம் என்னும் மூன்று திருமேனிகளாக எழுந்தருளி உள்ளார். நித்திய உற்சவம் உருவமாகவும், ஸ்படிகலிங்கம் அருவுருவமாகவும் "சிதம்பர ரகசியம்" அருவமாகவும் உளது. ஆகாயலிங்கம் மந்திர உருவமாகத் திருவம்பலச் சக்கரத்துடன் அடைபட்டு உளது. ஸ்ரீ நடராஜப் பெருமான் ஆடிய போது, அவர் அணிந்திருந்த சடைக்கொன்றை மாலை, பொன் வடிவத்தில் அமைந்து இருந்தது. கொன்றைச் சடை திரையிட்டு மூடப்பட்டு இருந்தது. அதனுடைய பொன்னிறமான ஒளி நடராசரின் உண்மை உருவத்தை உணர்த்துகிறது. இதுவே "சிதம்பர ரகசியம்" எனப் படும். இந்தச் சிற்றம்பலத்தைத் தூய செம்பொன்னால் எழுதி வேய்ந்தவர் தேவர்கள். பின் பொன் வேய்ந்தவன் முதற்பராந்தக சோழன். (907-953)

திருச்சிற்றம்பலம்

இத்தலத்தில் மூலலிங்கமாகிய, திருமூலநாதருக்குத் தெற்கே, வேதங்களும் காணாத நிலைபெற்ற சபை ஒன்று உண்டு. அச்சபையில் ஐயன் என்றும் ஆனந்த நிருத்தம் செய்கின்றான். முத்தியடைந்தவர் முதல் இமையோர் ஈறாக உள்ள இறைவனது பரிவாரங்கட்கே திருச்சிற்றம்பலம் என்ற பெயராகும். தெய்வத் தன்மை பொருந்திய ஞானசபை, சிதம்பரம். திருச்சிற்றம்பலத் திற்குக் கனகசபை, பொற்சபை, பொன்னம்பலம், சிற்சபை, ரஜதசபை என்றும் பெயர்களுண்டு. திருச்சிற்றம்பலம் பிரபஞ்சம் தோன்றிய போதே ஏற்பட்டதொன்றாகும். வேதம், ஆகமம், புராணம், இதிகாசம், திருமறைகட்கு எல்லாம் திருச்சிற்றம்பலமே ஆதாரம். பண்ணிசை வல்லார் ஓதுவாமூர்த்திகள் திருமறை களை ஓதமுன்பும், இறுதியிலும் திருச்சிற்றம்பலம் என்று என்புருக உச்சரிப்பர். சிற்றம்பலத்திற்குள் செல்ல ஐந்து படிகள் உண்டு. இவற்றை பஞ்சாக்கரப்படிகள் என்பர். சித்தாந்த சாத்திரங்கள் பதின்நான்கில் ஒன்றை இப்படியில் வைத்தபோது, இப்படிகளில் உள்ள யானைகளில் ஒன்று தனது தும்பிக்கையில் அந்நூலை எடுத்து நடராஜப்பெருமானின் திருவடிகளில் வைத் தது. அதனால் அந்த நூலுக்கு "திருக்களிற்றுப்படியார்" என்னும் பெயர் வழங்கலாயிற்று.

ஆருத்திரா தரிசனம்

மார்கழி மாதம் இமையவர்க்கு விடியற்காலம், ஆருத்திரா தரிசனம், அனுக்கிரகம் என்ற அருளல் தொழிலைக் குறிக்கும். சிவபெருமானுக்கு "ஆதிரையன்" என்ற திருநாமம் உண்டு. மார்கழி மாதம் திருவிழா பத்து நாட்கள் நடைபெறும். பகல் இரவு பஞ்சமூர்த்திகள் எழுந்தருளுவர். 9ம், 10ம் நாள் மூலவ ராகிய திருச்சிற்றம்பலமுடையானே எழுந்தருளலாகும். சிவானந் தக் கூத்தன் தேரிற்கு எழுந்தருளும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். 9ம் நாள் ஐந்து தேரும் மாலை 6 மணிக்கு நிலைக்கு வந்துசேரும். இரவு 8மணிக்கு ஆடலரசனும், அம்பிகை யும் ஆயிரங்கால் மண்டபத்திற்கு ஆடி அசைந்து செல்வர். 10ம் நாள் அதிகாலை 3 மணிக்கு ஆயிரங்கால் மண்டபத்தில் அம்மை யும், அப்பனும் மனங்குளிரத் திருமஞ்சனங் கொண்டருளுவர். தொடர்ந்து மாலைகள் சாத்தி, விலைமதிக்க முடியாத ஆபர ணங்கள் அணிந்து, கற்கண்டுப் பொங்கல் நிவேதித்து, முற்பகல் 9 மணியளவில் வழிபாடு முற்றுப்பெற்றதும், சிவகாமசுந்தரி உடனுறை நடராஜப்பெருமான், சச்சிதானந்த நடனம் செய்து கொண்டு, திருச்சிற்றம்பலத்தை அடைவர். இந்தக் காட்சியே ஆருத்திரா தரிசனம் எனப்படும். அதாவது, ஆதிரையானை ஆதிரை நட்சத்திரத்தில் காணச் சிதம்பரத்தில் சனசமுத்திரம் கூடும். ஆண்டுக்கு ஆறு மகா அபிடேகங்கள் இடம்பெறும். அப்போது அவனது பொன்னார் திருமேனியைக் கண்டு இன்புற முடியும். சிதம்பரத்தில் சிறந்த தீர்த்தம் சிவகங்கையாகும். இது அம்மன் சந்நிதி எதிரில் அமைந்துள்ளது.

மகரிஷிகள்

முனிவர்கள், மக்கள் மத்தியில் வதிந்தால், மக்களின் துர்நடத்தைகள், அவர்களின் ஆன்மீக வாழ்வைப் பெரிதும் பாதிக்கும். ஆதலால் மகரிஷிகள் சனசஞ்சாரம் அற்ற காடு களிலும், மலைகளிலும் வதிந்தனர். ஆதிசேஷன் அம்சமாகிய பதஞ்சலி முனிவர், புலிக்கால் முனிவராகிய வியாக்கிரபாதர் முதலான மகரிஷிகள் முக்காலமும் தரிசித்த தலம் தில்லையாகும். நடராஜப்பெருமான் திருநடம் புரியும் திருஅரங்கு தில்லையாகும்.

இந்த எல்லையை அணுகினால் பயம் பறந்தோடும். ஆனந்த எல்லையில் தனிப்பெருங்கூத்து இங்கே நிதம் நிதம் நிகழ்கிறது. சிவபெருமானது உருவத்திருமேனி நடராஜர், சந்திரசேகர், உமாமகேசர், ரிஷபாரூடர், பிட்சாடனர், கல்யாண சுந்தரர், தட்சிணாமூர்த்தி, அர்த்தநாரீசுரர், சோமாஸ்கந்தர் முதலாக இருபத்தைந்து நாமவகைப்படும். சிதம்பரத்தில் வேத நாதகீத ஒலி கேட்கும். மகரிஷிகள், வேதாரண்யம், தில்லைவனம், கடம்ப வனம், நைமிசாரண்யம், பொதிகை, விந்தியம், தாருகாவனம், இமயம் போன்ற இடங்களிலேயே வதிந்தனர். அவர்களது சங்கர்ப்ப எண்ண அலைகள், உலகை உய்விக்கும். இந்த ஜீவன் முத்தர்கள், சிவபெருமானுடைய பஞ்சகிருத்தியங்களைக் கொண்டு செலுத்துகிறார்கள் என்பதை உணர்த்துவதற்காகவே சிதரம்பரத்தில் நடராஜர் விக்கிரகம் தாபனம் ஆகியது. இந்த உருவம் இறைவனின் பஞ்சகிருத்தியங்களைக் குறிக்கும் ஓர் கற்பனாசிலையாகும்.

தில்லைவாழ் அந்தணர்கள்

தில்லைவாழ் அந்தணர்கள், தில்லைப்பெருமானின் திருமேனி தீண்டும் பேறுபெற்றவர்கள். குற்றமில்லாத குலத்தவர், ஒழுக்கம் மிக்கவர். இல்லறதருமம் பூண்டவர். கூத்தப்பெருமான் மீது அன்புமிக்கவர், சம்பந்தப்பெருமானுக்கு, தில்லைவாழ் அந்தணர்கள் சிவகணநாதராகத் தோன்றினர். திருத்தொண்டர் தொகை பாடச் சுந்தரருக்கு, திருவாரூர்த் தியாகேசப்பெருமான் "தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று அடியெடுத் துக் கொடுத்தார். தில்லைவாழ் அந்தணரின் மறுபெயர் திருவுடை அந்தணர். தெய்வவேதியர், மும்மை ஆயிரவர், தில்லை அந்தணர், தீட்சதர் எனப்படுபவர் தில்லைக்கு சிறப்புத் தருபவர் தில்லை மூவாயிரவர். உச்சிக்குடுமியும் வீபூதி தரித்த திருமேனி யும் கொண்டு தில்லைப்பெருந்தலத்தை, திறம்பட நிர்வகித்தனர். இவர்கள் அனைவரும் ஞானதீட்சை பெற்றவர்கள். பரமேஸ்வரன் கயிலாத்தினின்றும் சிதம்பரத்திற்கு வரும்போது தம்முடன் மூவாயிரம் முனிவர்களை, அழைத்து வந்ததாக புராணங்கள் கூறுகின்றன.

வடக்கே அந்தர்வேதி என்னும் பதியில், பிரமதேவர் யாகஞ் செய்தார். தேவர்கள் நேரில் வந்து பங்குபெறாததால், பிரமா தனது மகனாகிய நாரதரை அழைத்துச் சிதம்பரத்தில் இருக்கும் தேவர்களையும் தில்லைமூவாயிரவரையும் அழைத்து வரச் செய்தார். அந்தர்வேதியாகம் சிறப்புற நடைபெற்றபோது ஸ்ரீநடராஜப்பெருமான் அந்த யாகாக்கினியில் இருந்து ஒளிவடிவில் தோன்றினார். யாகம் இனிது நிறைவேறியதும் யாகத்திற்குச் சென்றவர் அனைவரும் சிதம்பரம் திரும்பினர். அவ்வாறு வந்த டைந்த தில்லை மூவாயிரவர் அனைவரும் வந்து சேர்ந்தனரா? என்று சரிபார்த்தபோது ஒருவர் குறைந்தார். அதனால் தீட்சதரும், முனிபுங்குவர்களும் வருந்தினர். அப்போது வானத்தில் ஓர் அசரீரி கேட்டது. "குறையும் ஒருவர் நாமே" எம்மையும் சேர்த்து எண்ணவும். தில்லைமூவாயிரவர் 2999 + ஸ்ரீநடராஜமூர்த்தி = மூவாயிரவர். தில்லைவாழ் அந்தணர்க்கு அந்தர்வேதி யாகத்தில் இருந்து கிடைத்த நடராஜமூர்த்தி, சிதம்பரத்தின் அருள்புரியும் ஸ்ரீ இரத்தினசபாபதியாவர்.

திருப்பணிகள்:

முகமதியர், பிரஞ்சுக்காரர் ஆங்கிலேயர் இடையே நடைபெற்ற போரால், தில்லைக்கூத்தனுக்கு வழிபாடே இல்லாது போயிற்று. அன்னியரால் சிதைவுற்ற கோயிலை, பச்சையப்ப முதலியார் திருப்பணி செய்து மீள்வித்தார். கௌடதேசத்து அரசனான இரணியவர்மன், தில்லைக்கு வந்து ஆதியில் கோவில் கோபுரங்களை அமைத்தான். இரண்டாம் குலோத்துங்க சோழனால், தில்லைக்கோயில் திருப்பணிகள் இடம்பெற்றன. ஆயிரங்கால் மண்டபம் விக்கிரம சோழன் காலத்தில் முற்றுப்பெற்றிருக்க வேண்டும். விண்ணை ஞானவொளியாகத் தொட்டுத் தொழும் கீழைக்கோபுரம் கி.பி 1118 - 1135 வரை விக்கிரம சோழனாலும் மேலைக்கோபுரம் கி.பி 1251 - 1268 வரை சுந்தரபாண்டியன் காலத்தில் ஆரம்பமாகி இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் முற்றுப் பெற்றது. தெற்கு கோபுரம் கி.பி 1243 - 1280 வரை பல்லவமன்னனாலும், வடக்குக் கோபுரம் கி.பி 1509 - 1530 வரை மராட்டிய மன்னன் கிருஷ்ண தேவராயராலும் திருப்பணி செய்யப்பட்டது.

நடராஜப் பெருமானுக்கு அரசர்களும், பெருநிலக்கிழாரும், செட்டி நாட்டாரும் விலை மதிக்க முடியாத ஆபரணங்களை வழங்கினர்.

திருமுறைகள்:

சைவசமய குரவர் நால்வரது தேவார திருவாசகங்கள் சிதம்பரத்திற்கு உண்டு. சேக்கிழார் பெருமானின் 4286 செய்யுள் களைக் கொண்ட 12 ஆம் திருமுறை ஆகிய பெரியபுராணம் அரங்கேறியது சிதம்பரத்தில்தான். சேக்கிழார் காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டு ஆகும். மூவர் முதலிகள் அருளிய தேவாரம் முழுவதும் சிதம்பரத்தில் பொன்னம்பலத்தின் அருகே மூவர் திருக்கர முத்திரையோடு இருப்பதை அறிந்த இராஜராஜசோழன் நம்பியாண்டார் நம்பியை வணங்கி அவ்விடம் சென்றபோது திருமுறைகள் கறையான்புற்று மூடியிருப்பதைக் கண்டு மன மிகவருந்தி எஞ்சியவற்றை அழியவிடாது கூப்பிய இருகரங் களால் எடுத்து அவற்றை நம்பியின் உதவியோடு ஏழாக வகுத்தான். தில்லைமூவாயிரவர், திருமுறை தந்த இராஜராஜ சோழனை சிவபாதசேகரன் எனப்போற்றினர்.

மாணிக்கவாசக சுவாமிகள் பலநாள் சிதம்பரத்தில் தங்கி இருந்து, தமது திருவாசகத்தையும், திருக்கோவையாரையும் இறைவனை எழுத வைத்து, பின் கனகசபையில் இரண்டறக் கலந்தார். திருவாதவூரடிகளிடம் திருக்கோவையாருக்கு பொருள் கேட்க, "முத்தமிழ் மாலைக்கு இவரே பொருள்" என்று நடராசப் பெருமானைச் சுட்டிக்காட்டிச், சிவமாம் தன்மையைப் பெற்றார்.

நின்ற புகழ் புலியூருரர் நேர்மையுடன் புடைசூழச்
சென்றருளுக்கு இடமான செம்பொன்னின் அம்பலம் ஏய்தி
ஒன்றிய இத்தமிழ்மாலை பொருள் இவர் என்றுரை செய்து
மன்றதனில் கடிதேகி மறைந்தனர் அங்கவர் காண.

- வாதவூர்ப்புராணம்

தில்லைக்காளி

முன்னொரு காலத்தில் சிவனுக்கும் சக்திக்கும் அபிப் பிராய பேதம் ஏற்பட்டது. இருவரும் நடனம் ஆடினர். இந்த நடனத்தில் சிவன் காலைத்தூக்கி ஆட, சக்தியும் தனது காலைத் தூக்கக்கூடாத காரணத்தால், சிவன் ஊர்த்துவ தாண்டவம் செய்து அருளி, காளியின் ஆவேசத்தை அடக்கித் தில்லையின் வட எல்லையில் கோயில்கொண்டு அருளச் செய்தார். காளியின் கரிய திருமேனி குங்கும அபிடேகத்தால் செக்கச் சிவந்த திருமேனியாகும். நீண்ட வெள்ளை ஆடை, கருவளைக்கண்கள், கையில் திரிசூலம், வீரம், சீற்றம், கோபம் இந்த ஆவேசம் தணிக்க எண்ணை அபிடேகம். பார்க்க பயங்கரத் தோற்றம் தந்தாலும் சிதம்பர தரிசனம் செய்வோர் தில்லைக் காளியையும் தரிசித்து அருள்பெறுவது மரபு. மேற்குத் திசை நோக்கி உள்ள காளியைக் காஷ்மிரத்தில் அம்பாள் என்றும் இராஜபுவனத்தில் பவானி என்றும், மிதிலையில் உமை என்றும், மதுரையில் மீனாட்சி என்றும், காஞ்சியில் காமாட்சி என்றும், காசியில் விசாலாட்சி என்றும் தொழுவர்.

சீர்காழி

சிதம்பரத்திற்கு தெற்கே 16 கி.மீ தொலைவில் இந்தச் சிவஸ்தலம் உண்டு. சம்பந்தர் ஞானப்பால் உண்ட தலம். தேவாரம் பெற்ற பழம்பதி. இறைவன் தோணியப்பர், இறைவி பெரியநாயகி, சிறப்புவாய்ந்த திருமுலைப்பால் உற்சவம் இங்கே நடைபெறுகிறது. சம்பந்தர் "தோடுஉடைய செவியன்" என்ற தேவாரத்தைப் பாடியது சீர்காழியில்தான். புள்ளிருக்கு வேளூர் அல்லது வைத்தீஸ்வரன் கோவில் சிதம்பரத்திற்குத் தெற்கே 22 கி.மீ தொலைவில் உள்ளது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

சிதம்பரம் புகைவண்டி நிலையத்தில் இருந்து கிழக்கே 2 கி.மீ. தூரத்தில் இந்த அண்ணாமலைப் பல்கலைக்கழகம் உண்டு. அண்ணாமலை நகரின் பழைய பெயர் திருவேட்களம். திருவேட்களம் தேவாரம் பெற்ற சிவப்பதி. செட்டிநாட்டரசர்

ராஜாசேர் அண்ணாமலைச் செட்டியார் 1920இல் சிதம்பரத்தில் கல்வி நிலையங்களை நிறுவத் தொடங்கினார். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 750 ஏக்கர் நிலத்தில், பரந்து விரிந்த நிலப்பரப் பிலுள்ளது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் துறை களாவன:-

1) அண்ணாமலைத் தமிழ்க் கல்லூரி
2) தமிழிசைக் கல்லூரி
3) கலைக் கல்லூரி
4) வடமொழிக் கல்லூரி
5) பல், மருத்துவக்கல்லூரி
6) பொறியியல் கல்லூரி
7) வேளாண்மைக் கல்லூரி
8) ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி
10) பாரிய நூலகம்
11) கதிர்வெப்ப ஆய்வகம்
12) துறைகள் விரிவடைய உளது

உள்ளே சென்றால் பசிய புல்வெளிகள், மலர்ச்சோலைகள், நிழல்தரு விருட்சங்கள் உண்டு.

யாழ்ப்பாணத் தொடர்பு:

சிதம்பரத்தில் நாவலர் பெருமான் தாபித்த சைவப் பிரகாச வித்தியாசாலை இன்று மேல்நிலைப் பள்ளியாக மிளிருகிறது. நாவலர் விருப்பப்படி கட்டிய சேக்கிழார் கோவில், யாழ்ப்பாணம், திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ ஞானப் பிரகாசமுனிவர் வெட்டிய குளம் (இங்கே தெப்போற்சவம் நடைபெறுகிறது). ஈழநாட்டவர் நிறுவிய மானாமுதலிமடம், சிவபுரிமடம், புண்ணியநாச்சிமடம், வரணி ஆதீனமடம், சங்கானைமடம், செய்வாய்க்கிழமை மடம் ஆகும். யாழ்ப்பாண மக்கள் தாம் இறக்கும்போது, தமது காணிகளை சிதம்பரநாதனுக்கு உறுதி முடிப்பர். சிதம்பரத்திற்குச் சொந்த மான காணிகள் பல யாழ்ப்பாணத்தில் உண்டு.

மாநகர் மதுரை
(ஆலவாய்)

தலம்: திருவாலவாய் ஆறாந்திருமுறை

திருச்சிற்றம்பலம்

முளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி
முதிருஞ் சடைமுடிமேல் முகிழ்வெண் திங்கள்
வளைத்தானை வல்லசுரர் புரங்கள் மூன்றும்
வரைசிலையா வாசுகிமா நாணாக் கோத்துத்
துளைத்தானைச் சுடுசரத்தால் துவள நீறாத்
தூமுத்த வெண்முறுவல் உமையோ டாடித்
திளைத்தானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

திருச்சிற்றம்பலம்

- அப்பர் திருத்தாண்டகம்

புராண வரலாறு

"மாமதுரைப் பதியுறை சோமசுந்தரக் கடவுள் பாண்டிய னாகி வீற்றிருந்தார்" என்றார் பரஞ்சோதியார். குலசேகர பாண்டி யன் மதுரையை ஆண்ட காலத்தில், சிவபெருமான் குலசேகரன் கனவில் சித்தர் வடிவில் தோன்றி, கடம்பவனத்தை அழித்து நாடாக்கப் பணித்தார். பாண்டி நாட்டின் தலைநகரம் அழகிய மதுரை ஆகும். மதுரையை, கோவில் மாநகரம் என்பர். வைகை ஆற்றங்கரையில் அமைந்து இருக்கும் மாநகர் மதுரை; கலையழகுமிகு கலைக்கூடம். சிறந்த சிற்பங்கள், மதுரைப் பெருங்கோவிலை அலங்கரிக்கின்றன. இறைவன் தனது 64 திருவிளையாடல்களையும் புரிந்த இடம் மதுரை. சரித்திரப் பெருமையைத் தன்னகத்தே கொண்டது மாநகர் மதுரை. கடற் கோள்கள் காரணமாக இங்கிருந்த மக்கள் பல்வேறு பகுதிகட்கு சென்று, ஈற்றில் மதுரையில் ஒன்று கூடியதால் மதுரையை கூடல் நகர் என்பர். இத்தலம் நான்கு மாடங்களைக் கொண்டதால், நான்மாடக்கூடலாயிற்று. மூர்த்திநாயனார் திருவெண்நீறு, உருத்திராட்சம், திருச்சடை ஆகிய மூன்றோடும் ஆண்ட சிறப்பு மதுரைக்கே உரியது. பழம்பெரும் காப்பியமான சிலப்பதிகாரத் தில், பாண்டியன் நெடுஞ்செழியன் அவையில், கண்ணகி நீதி கேட்டு வாதாடியது, மதுரை தீக்கிரையானது யாவும் நிகழ்ந்தது, பாண்டி நாட்டுப் பெருநிலப்பரப்பிலேயே!

மதுரை மீனாட்சி

பாண்டி நாட்டின் ஒரு பகுதி செட்டி நாடாகும். செட்டி நாட்டு மக்கள் மதுரை மீனாட்சியைத் தாலாட்டும் அழகைப் பார்ப்போம்.

"இரத்தின அடுப்பு வைத்து பவள வீறகிட்டு,
சங்குப் பானை ஏற்றி, தேன் உலைநீர் பெய்து,
முத்து அரிசி போட்டுச் சோறு சமைக்கும்,
குழந்தைகள் நிறைந்த, மதுரைக்கு அரசியே!
தாலோ தாலேலோ! அருள் சூற் கொண்ட
அங்கையற்கண் அம்மையே! தாலோ, தாலேலோ!

மதுரை மீனாட்சி அம்மை ஆலயத்தைச் சுற்றி, நாற்றிசை களிலும் வானளாவி உயர்ந்து நிற்கும் பாரிய கோபுரங்களின் நடுவே, மீனாட்சி அம்மை கொலுவீற்றிருக்கும் அழகு, பாவலரா லும், நாவலராலும் வரைந்துவரும் சொல் ஓவியம் அளவிடற்கரி யது. மீனாட்சி அம்மன் ஆலயமானது ஆனைமலை, நாகமலை, பசுமலை, திருப்பரங்குன்றம் நடுவே தாமரை மொட்டுப் போல அமைந்துளது. மாநகர் மதுரை நாற்புறமும் பொறியியல் வல்லு னர்கள் பாராட்டக் கூடிய வடிவமைப்பைப் பெற்றுள்ளது. "மதுரை யைப் பாராதவன் மாபாவி" என்று கூறுவாரும் உண்டு.

மதுரை மீனாட்சி அம்மன் திருவாயில் - கிழக்கே, சித்திரை வீதியில் அமைந்துளது. அங்கயற்கண்அம்மை கருவறையில் இருகரங்களுடன் எழுந்தருளி உள்ளாள். மீனாட்சி வலது கரத்தில் பச்சைக்கிளியுடன் காட்சி தருகிறாள். மதுரை மீனாட்சிக் குப் பூசை நடந்தபின்பே, சுந்தரேஸ்வரருக்குப் பூசை நடை பெறும். மதுரை மீனாட்சியை தடாதகைப்பிராட்டி, அங்கயற் கண்ணி, அபிராமவல்லி, கற்பூரவல்லி, சுந்தரவல்லி, மாணிக்க வல்லி, பச்சைத்தேவி, பசுங்கொடி, பசுந்தோகை எனப் பல நாமங்கொண்டு அழைப்பர். மீன் போன்ற கண்களை உடையவள் ஆகையால் அவளை "அங்கயற்கண்ணி" என அழைப்பது சாலப் பொருந்தும். மதுரையை ஆளும் மகாராணி இவள். பரமேஸ்வரன் மாநகர் மதுரையில் மீனாட்சியின் நிழலில் தான் அமர்ந்துள்ளார். இந்த ஆலயத்தை 'மீனாட்சி சுந்தரேஸ்வரர்' ஆலயம் என்றுதான் அழைப்பர்.

மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு இடதுபுறத்தில், சுந்தரேஸ் வரர் சொக்கலிங்கப் பெருமானாக எழுந்தருளி உள்ளார்.

மீனாட்சி அம்மன் முன்பாகத் தங்கக் கொடிமரம் உண்டு. அம்மை கோவிலின் முகப்பு மண்டபம்தான் அட்டசித்தி மண்டபம். இடவலத்தூண்களில் எட்டுச் சிற்பங்கள் மிக அழகாக உள. இரண்டாஞ் சுற்று தென்கிழக்கு மூலையில், தனது திருப்பணி யால் உயர்ந்து அழியா வாழ்வு கொண்ட, திருமலைமன்னர், கும்பிட்ட கையுடன் நிற்கும் பணிவான கோலத்தைக் காண முடியும். தல விருட்சம் கடம்பமரம். விமானம் இந்திர விமானம். வைகை ஆற்றின் மணலிற்றான் வாழ்கிறாள் மதுரை மீனாட்சி.

தெப்பக்குள அருகாமையில் ஆறு தூண்களைக் கொண்ட ஊஞ்சல் மண்டபம் உளது. வாராவாரம் வெள்ளிதோறும், மாலை ஐந்து மணியளவில் இறைவன், இறைவியை இந்த ஊஞ்சலில் வைத்து மெல்ல மெல்ல அசைத்து ஆட்டுவர். அப்போது ஆடல் மகளிர் ஆடல் செய்வர். ஆடும் அழகிகள், பாடும் பாவையராய்ப் பாடுவர்!

"பொன் செய்த மாடமலி கூடல் பெருஞ்செல்வி
பொன்னூசல் ஆடி அருளே!
புழுகு நெய்ச் சொக்கர்திரு வழகினுக்கு ஒத்த கொடி
பொன்னுசல் ஆடி அருளே!

எனப் பாடும் மங்கையர்; ஊஞ்சலை மெல்ல அசைப்பர்.

பாண்டியர் ஆட்சி

மதுரையை உருவாக்கிய குலசேகர பாண்டியனின் மைந்தனே, மலையத்துவச பாண்டியன். மலையத்துவச பாண்டி யனின் மனைவியே, காஞ்சனமாலை. மலையத்துவச பாண்டிய னுக்கு நீண்டகாலம் புத்திர பாக்கியம் இன்மையால் மிகவும் வருந்தி, புத்திரகாமேட்டி யாகஞ்செய்தான். அந்த யாகாக்கினி யில் பரமேஸ்வரியே மூன்றுவயது நிரம்பிய பெண் குழந்தை யாகத் தோன்றினாள். இந்த பேரழகுமிக்க குழந்தை, மூன்று தனங்களுடன் தோற்றியதால் மலையத்துவசன் கவலைகொள் ளக் காரணம் ஒருபுறம், பாண்டி நாட்டை ஆள ஆண்குழந்தை இல்லாததாலும்; மறுபுறம், மூன்று தனங்களை உடைய பெண் மகவை உலகம் பரிகசிக்குமே! என்ற தீராத கவலையுறும்போது, சிவபெருமான் பாண்டியன் கனவில் அசரீரியில் தோன்றி, "மலையத்துவசனே! கவலையுறாதே! உன்மகள் மணவாளனைக் காணுங்கால், ஒரு தனம் தாமாகவே மறையும்", என்றது அசரீரி.

கவலை நீங்கிய மலையத்துவசன் மகளுக்குத் தடாதகை என்னும் பெயர்சூட்டி, அன்போடு வளர்த்து, சகல போர் வித்தை களும் கற்றுக்கொடுத்து வந்தான். மலையத்துவசன் மறைவிற் குப் பின் தடாதகைப் பிராட்டியார் அரசாட்சியைப் பொறுப்பேற்று, நீதி வழுவாது செங்கோல் செலுத்தி வந்தாள். தடாதகைப் பிராட்டியார் ஆண்ட பாண்டி நாடு, கன்னி நாடாக விளங்கியது. இதனை பரஞ்சோதியார்,

"வரை செய் பூண்முலைத் தடாதகை மடவரல் பிராட்டி
விரை செய் தார்முடி வேய்ந்து தண்குடை மனுவேந்தன்
கரை செய் நூல்வழி கோல்செலக் கன்னியாம் பருவத்து
அரசு செய்ததால் கன்னி நாடாயது அந்நாடு"

- திருவிளையாடற் புராணம்

திருமணப் பருவம் எய்தியதும், கஜ, ரத, துரக, பதாதி ஆகிய நாற் படைகளுடன் திக்விஜயம் மேற்கொண்ட தடாதகைப் பிராட்டியார், செல்லும் வழியெலாம் பல தேசங்களையும் வெற்றி கொண்டு, ஈற்றில் கைலயங்கிரியையும் முற்றுகையிட்டாள். மீனாட்சியின் பெண்படையை எதிர்கொண்ட, சிவபெருமானின் நந்திப்படை தோற்றது. பின்வாங்கிய திருநந்திதேவர் சிவபெரு மானுக்கு நிகழ்வை அறியத் தந்தார்.

பரமேஸ்வரன் அறம் என்னும் விடைமீது ஆரோகணித்து, போர்க்களம் புகுந்தார். காலில் வெற்றிக்கழலும், இடையில் புலித் தோலும், கையில் மழுவும், மெய்யில் வெண்ணீறும், பூணூல் தரித்த மேனியும், தலையில் சடாமுடியுடன் தோன்றிய ஈஸ்வரன், போர்க்களத்தில் வீரத்திருமகளாக எழுந்தருளிய தடாதகைப் பிராட்டியார்மீது கணைதொடுத்துப் போரை ஆரம்பிக்க வேண்டிய வர்; தேரில் கம்பீரமாக ஆரோகணித்திருக்கும் ஈஸ்வரியையே இமைக்காது நோக்கும் கருணைவிழியையும் கண்ட மீனாட்சி யினது நேர்பார்வை, தரைமீது பதிந்தது. நாணத்தால் தலை கவிழ்ந்தது, அவளது மூன்றாவது தனம் மறைந்தது. சிவபெருமான் தடாதகைப் பிராட்டியாரை நோக்கி, "நீ பாண்டி நாட்டிலிருந்து வரும்போது, உன்னையே தொடர்ந்தோம். இன்றிலிருந்து எட்டாவது நாளாகிய சோமவாரத்திங்களன்று உனது நகரமான மதுரைக்கு, உன்னை திருமணஞ்செய்ய வருவோம்! நீ மதுரைக் குச் செல்க!" என்றருளினார்.

மீனாட்சி திருமணம்

சோமவாரத்திங்களன்று எம்பெருமான் மாநகர் மதுரையை அடைந்ததும், மீனாட்சியின் தாயான காஞ்சனமாலை சிவபெருமானின் பாதபங்கயங்களைக் கழுவி, பட்டாடை கொண்டு துடைத்து, பன்னீர் தெளித்து, மந்தாரப் பூச்சாத்தி, இருகைகூப்பி வணங்கி தூபதீபங்காட்டி "எம்பெருமானே! எனது மகளான கன்னி மீனாட்சியையும், கன்னித்தமிழ் பாண்டி நாட்டையும் ஏற்று ஆள்க!" என்றாள். சிவபரம்பொருள் புன்னகை பூத்தார்! சிவபெருமானுக்குப் பக்கத்தில் தடாதகைப் பிராட்டியார் வீற்றிருந்ததை

"பண்ணு மின் இசையும் நீரும்
தன்மையும் பாலும் பாலில்
நண்ணுமின் சுவையும் பூவும்
நாற்றமும் மணியும் அங்கேழ்
வண்ணமும் வேறு வேறு
வடிவுகொண் டிருந்ததால் ஒத்த (து)
அண்ணலும் உலகம் ஈன்ற
அம்மையும் இருந்த தம்மா!

- திருவிளையாடற்புராணம்

வருடாவருடம் மதுரைப் பெருங்கோவிலில் பங்குனி உத்தர நாளில் இடம்பெறும்; திருமணக்கோலத்தைக் காண, மீனாட்சியின் அண்ணன் சுந்தரராஜன் (அழகர்) கோவிலிருந்து தங்கப் பல்லக்கு, முத்துக்குடை, தங்கக்குடம் சகிதம் சீர்வரிசைகளுடன் வருவது வழக்கம். மீனாட்சி திருக்கல்யாணத்திற்கு, திருப்பரங்குன்றில் உறையும் சுப்பிரமண்யர், காலை வந்து மாலை திரும்புவர். மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணங் காண, லட்சோப லட்சம் மக்கள் மாநகர் மதுரையில் கூடுவர்.

செருக்கநாதர்

குலசேகர பாண்டியன் என்பான் கி.பி 1315 – 1347 வரை மணவூரைத் தலைநகராகக் கொண்டு பாண்டி நாட்டை ஆண்டு வரும்கால், ஒரு சோமவாரத் திங்கள் இரவின்போது, வணிகனொருவன் கடம்பவனத்தில் சுயம்புலிங்கத்தைக்கண்டு, குலசேகர பாண்டியனிடம் கூற, பாண்டியன் கடம்பவனத்தை அழித்து, சிவலிங்கம் இருந்த இடத்திலேயே, கோவிலை எழுப்பினான். இந்தப் புனிதமான இடத்திற்கு மதுரை என்னும் பெயரைச்

சூட்டினான். தற்போது இந்தச் சுயம்புலிங்கமே சொக்கநாதர் என்னும் பெயருடன், மதுரைப்பெருங்கோவிலில், இரண்டாம் சுற்றில் வீற்றிருந்து அருள்பாலித்து வருகிறார். மதுரை சொக்கநாதரைச் சுந்தரேஸ்வரர், சோமசுந்தரர், கல்யாணசுந்தரர், சண்பகசுந்தரர், அபிஷேகச்சொக்கர், அழகிய சொக்கர் எனப் பல நாமங்களால் மக்கள் அழைப்பர். சொக்கநாதர் முன்பாக தங்கக் கொடிமரம் உண்டு. திருவாயில் தென்பால் உள்ள தூண்களில் மீனாட்சி அம்மன் திருமணக் கோலத்தைக் காண முடியும். திக்கெலாம் சென்றவள் மணக்கோலம் கொண்டதும், நாணம் நாணப்புன்னகை நளினமாகவுளது. நாணிக்கோணி நிற்கும் மங்கையின் திருக்கையைத் தில்லைக்கூத்தனின் திருக்கையுடன் இணைத்து, நீர் வார்க்கிறார் திருமால். மேலே கூறிய அழகிய சிற்பங்களுடன் காட்சி தரும் மண்டபத் திருப்பணி கி.பி 1564இல் கிருஷ்ணவீரப்ப நாயக்கரால் மேற்கொள்ளப்பட்டது. தவக்கோலம் கொண்ட கைலைநாதனை மணக்கோலம் கொள்ள வைத்தவள் மதுரை மகாராணி.

மேலும் திரிபுராந்தகர் தேரின்மேல் ஏறி கடுகதியில் செல்லும் சிற்பம், முப்புர அரக்கராகிய தாரகாட்சன், கமலாட்சன், வித்தியுன்மாலி என்பாரை நெற்றிக் கண்ணால் சாம்பலாக்கும் சிற்பம், இரண்டாந்தூணில் உள்ள சிவலிங்கத்தின் மேல், காலன் மார்க்கண்டேயருக்கு வீசிய கயிறு, மார்க்கண்டேயர் சிவலிங்கப் பெருமானைப் பயப்பீதியால் கட்டிப்பிடிக்க, காலனைக்காலால் உதைக்கும் இறைவன்; மூன்றாந்தூணில் கூத்தப்பெருமானின் ஆட்டலுக்கு ஏற்ப நந்தி குடமுழா தட்டுகிறார். சிவபரம்பொருளுக்குக் கல்லால் எறிந்ததையும், வில்லால் எய்ததையும், பிரம்பால் அடித்ததையும் செருப்பால் குறிவைத்ததையும் சிறப்பான சிற்பங்களாகக் கண்டுகளிக்க முடியும். சிவபெருமான் சோமசுந்தரப் பாண்டியனாகத் திருவவதாரம் செய்த காட்சி, காளைக்கொடி நீக்கி, மீனக்கொடி தாங்கி, சர்ப்பக் கலன் நீத்து, வேப்பம் பூமாலை சூடி, புலித்தோல் நீத்து, பட்டாடை புனைந்து, சந்திரமுடி விலக்கி, வயிரமுடிசூடிச் சோமசுந்தரப் பாண்டியனாக மதுரை மாநகரை ஆண்டார்.

முக்குறுணிப் பிள்ளையார்

கீழைக் கோபுர வாயில் வழியாக அங்கயற்கண் அம்மையை வழிபட்டு, முறையே சொக்கரையும் வழிபட்டு வரும் வழியில் எடுப்பாக உயரமாக ஒரே கல்லில் செதுக்கப்பெற்று

அழகாகச் சாந்தமாக அமர்ந்திருக்கிறார் முக்குறுணிப்பிள்ளை யார். இந்த ஆனைமுகனுக்குப் பிள்ளையார் சதுர்த்தியன்று பன்னிரண்டுபடி முக்குறுணி அரிசிமா, வேலூர்ச்சர்க்கரை, பாசிப் பயறு, தேங்காய்த்துருவல், நறுமணம்மிக்க ஏலக்காய் கொண்டு பிசைந்து கொழுக்கட்டையாக ஆக்கிப் படைத்து மதுரை மாநகர் மக்கள் மகிழ்வர்.

மாலிக்கபூர்

13ம் நூற்றாண்டில் மாலிக்கபூர் என்னும் முகமதியன் பாண்டி நாட்டின்மீது படையெடுத்தான். இதனால் ஆற்றல்மிக்க மாநகர் மதுரை அல்லல் பல கண்டது. பெரும் படையுடன் புகுந்த இவன் பாண்டியரின் செல்வங்களை எல்லாம் கொள்ளை யடித்தான். 612 யானைகள், 20,000 குதிரைகள், 96,000 மணங்கு பொன், பல பெட்டிகள் நிறைய முத்துக்களை அள்ளிச் சென்றான், மாலிக்கபூர். பெருஞ்செல்வம் பறிபோனது. இதனால் மாநகர் மதுரை இருள்மயமானது. எங்கும் கவலை படர்ந்தது. கோவில்கள் பூட்டப்பட்டன, கோபுரங்கள் இடிந்தன, மாளிகைகள் பாழடைந்தன. முகமதியர் ஆட்சி 48 ஆண்டுகள் நிலைத்தது. விசயநகர இந்து பேரரசைச்சார்ந்த குமாரகம்பனன், முகமதியர் களை வென்று பாண்டி நாட்டைப் பாண்டியரே ஆளச் செய்தான். பூட்டிக்கிடந்த மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம் 48 ஆண்டுகளின் பின் வழிபாட்டிற்காகத் திறக்கச் செய்தான்.

கால்மாறி ஆடினார்

மதுரைத் திருத்தலத்தை இரசித சபை அல்லது வெள்ளி அம்பலம் என அழைப்பர். இங்கே இறைவன் திருமணம் நிகழ்ந்தது. திருமணத்திற்கு வந்தவர்கள் அனைவரும் விருந்து உண்டனர். பதஞ்சலி முனிவர், வியாக்கிரபாதர் (கி.மு. 150) ஒத்த காலத்தில் வாழ்ந்தவர்கள். இவர்கள் இருவரும் பொன்னம் பூலக்கூத்தைக் காணாமல் உண்பதில்லை என்றிருந்தனர். இறைவன் வெள்ளி மன்றில் முனிவர் இருவரும் தனது கூத்தைக் கண்டுமகிழ்ந்து உண்ணுமாறு ஆடினான். முன்னொருகால் இராஜசேகர பாண்டியன், கூத்துக் கலையைப் பயின்றான். அக்கூத்தால் தனக்கு உண்டாகிய களைப்பை நினைத்தான். "இறைவன் எப்போதும் இப்படி திருக்கூத்து ஆடிக்கொண்டு இருக்கிறானே! இவன் கால் நோகுமே" என ஏங்கி இறைவனை, கால்மாறி ஆடி அருளுமாறு ஒரு சிவராத்திரி தினத்தன்று,

மதுரையம்பதியை அடைந்து, சிவாகம விதிப்படி நான்குசாமப் பூசை செய்த பின்பு இருகரங்களையும் சிரமேற் குவித்து "நடராஜப்பெருமானே! தரை மீது பதித்த தேவரீரது திருவடியை, மேலே தூக்கி அருளி, எடுத்த திருவடியை, தரைமீது பதித்து, எனது மனத்துயரினைப் போக்கியருள இவ்வாறு கால்மாறி ஆடி அருளவேண்டும்" என்று பணிந்தான். "நீர் அருள் புரியவில்லை ஆகின், எனது உயிர் துறக்கவும் தயங்கேன்" என்றான். இதனால் இராஜசேகர பாண்டியனுக்கு அருள்புரிய இசைந்து, இறைவன் கால்மாறி ஆடினான், மதுரை வெள்ளியம்பலத்தில், மதுரையில் கால்மாறி ஆடும் கற்பகத்தை, இன்றும் கண்ணாரக் கண்டு இன்புற முடியும். இந்தக் காட்சியைக்காண பதஞ்சலியும், புலிக்காலர் எனும் வியாக்கிரபாதரும் அருகில் நிற்கின்றனர். ஆடல்வல்லான் சகல சபைகளிலும், இடது காலைத் தூக்கி ஆடும் காட்சியைக் காணமுடியும். ஆனால் வெள்ளி அம்பலத்தில் மட்டும், இடது திருவடியை ஊன்றி, வலது காலைத் தூக்கி ஆடுகிறார் மதுரையில்.

கூன் பாண்டியன்

கூன்பாண்டியன் சமண சமயத்திற்கு கி.பி. 640இல் மாறியதால், சமண சமயம் பாண்டி நாட்டில் மேலோங்கியது. சைவசமயம் குன்றியது. இதனால் சஞ்சலமுற்ற பாண்டியனின் மனைவி மங்கையற்கரசியாரும், மந்திரி குலச்சிறையாரும், சம்பந்தப் பெருமானை மதுரைக்கு அழைக்க ஓலை அனுப்பினர். சம்பந்தப்பெருமானும், அழைப்பை ஏற்று மாநகர் மதுரைக்கு எழுந்தருளினார். எழுந்தருளி வந்த சீர்காழிச் செம்மலை எதிர் கொண்டு அழைத்து, ஒரு மடத்தில் தங்கவைத்தனர். கூன் பாண்டியனுக்கு ஏற்பட்ட வெப்புநோயிலிருந்து தெளிவுபெற, சம்பந்தப்பெருமான் 'மந்திரமாவது நீறு' என்ற திருநீற்றுப் பதிகத் தைப் பாடி பாண்டியனுக்கு திருநீறு இடவே பாண்டியனின் வெப்புநோய் நீங்கியது. மதுரையில் உள்ள வைகை நதியில் தான், புனல்வாதம் நடந்தது. திருஞானசம்பந்தப்பெருமான் தங்கி யிருந்த மடம், ஆவணிமூல வீதியிலுள்ளது. சம்பந்தர் ஆதீனம், இங்கே இருந்து சைவநெறி பரப்புகிறது. மங்கயற்கரசியார், குலச்சிறைார், நின்ற சீர் நெடுமாறன்; நாயனார் ஆயினர். மதுரையில் மீண்டும் சைவநெறி தழைக்க வழிவகுத்த பெருமை, மங்கையற்கரசியாரையே சாரும்.

பொற்றாமரைக்குளம்

பொற்றாமரைக் குளத்தின் இருபக்கமும் 24 தூண்கள். தூண்களில் ஏடும், எழுத்தாணியும் கொண்டு, எழுதும் சிற்பங்கள் உண்டு. பொற்றாமரைக்குளச் சுவர்களில் சிவபெருமானின் 64 திருவிளையாடல் வரலாற்று ஓவியமாகக் கண்டுகளிக்க முடியும். 48 தமிழ்ப் புலவர்களுடன் சோமசுந்தரக் கடவுளே தலைவனாகக் கூட இருந்து தமிழாய்ந்தார். பொற்றாமரைக் குளத்தில் நடுநாயகமாக சங்கப் பலகை மிதந்து இருக்கும். சங்கப் பலகை நல்ல நூல்களை ஏற்கும். திருக்குறளை ஏற்றது. திருப்பனந்தாள் மடம் 1330 குறளையும், அழகாக வெண்சலவைக் கல்லில் பொறித்துப் பெருமைபெற்றது. பழந்தமிழ் நாட்டில் மூன்று தமிழ்ச்சங்கங்கள் இருந்தன. முதற்சங்கம் கடற்கோளால் அழிய, இடைச்சங்கமும் மீண்டும், கடல் கொண்டுவிடவே, பாண்டியர் இன்றைய மதுரைக்கு வந்து கடைச்சங்கம் நிறுவித் தமிழை வளர்த்தனர். இன்று மதுரையில் இருப்பது நாலாவது தமிழ்ச் சங்கமாகும். கடற்கோள் காரணமாக இங்கிருந்த மக்கள் பல்வேறு பகுதிகட்குச் சென்று, மதுரையில் ஒன்று கூடியதால் மதுரைக்குக் கூடல் என்ற பெயர் உண்டு. சங்ககாலத்தில் பேரவையில் பொற்கிழி உயரத் தொங்கும். தமிழைக் குற்றமறப் பாடியவருக்குப் பொற்கிழி தானாகவே அறுந்துவிழும். பாண்டிய ரின் செப்பேடுகள் 20 ஆகும். பாண்டியர் வெளியிட்ட செப்பேடு களில் வேள்விக்குடிச் செப்பேடுகள் மிகவும் பழமைவாய்ந்த தாகும். (கி.பி 768) பாண்டியர் கல்வெட்டுகள் 44. இவை மாநகர் மதுரை காலத்துக்குக் காலம் வளர்ந்தோங்கிய நிலையை எடுத்து இயம்புகிறது.

வானளாவிய கோபுரங்கள்

ஓங்கி வளர்ந்த கோபுரங்களை மாநகர் மதுரையில் நான்கு திசைகளிலும் காணக் கண் ஆயிரம் வேண்டும். தெற்குக் கோபுரத்தில் ஏறிக் கோபுர உச்சிக்குச் செல்ல, விசாலமான படிகளுண்டு. உச்சியில் நின்று மாநகர் மதுரையைப் பார்க்க முடியும். தெற்குக் கோபுரம் கி.பி 1559இல் திருச்சி செவ்வந்தி மூர்த்திச் செட்டியார் திருப்பணி. தெற்குக் கோபுரம் 9 நிலைக் கோபுரம் 1000 பேருக்கு பந்தி வைக்கக்கூடிய இடவசதி உண்டு. உயரம் 152 அடி.

மீனாட்சி அம்மன் கோவிலில் 12 கோபுரங்கள் உண்டு. மேலைக் கோபுரம் பராக்கிரம பாண்டியன் திருப்பணி. வடக்குக்

கோபுரம் கிருட்ண வீரப்ப நாயக்கர் திருப்பணி. வடக்கு கோபுர அருகாமையில் உள்ள 5 இன்னிசை தூண்களை உருட்ட ஏழுசுர ஒலிகள் மெல்லென எழுகின்றன. கிழக்கு கோபுரம் பழமை வாய்ந்தது. சுந்தபுர பாண்டியன் திருப்பணி. ஏறத்தாழ 4 கோபுரங் களும் ஒத்த உயரம். மேற்குக் கோபுரம் 150 அடி. அன்னை மீனாட்சி அம்மையின் ஆலயம் நீளம் 847 அடி, அகலம் 792 அடி.

மீனாட்சி அம்மன் ஆலயத்தைச் சுற்றி ஐந்து வீதிகள் உண்டு. கோவிலுள் இருப்பது ஆடிவீதி, வெளிச்சுற்று சித்திரை வீதி, அடுத்த சுற்று ஆவணி மூலவீதி, இதனை அடுத்துப் பெரிய மாசி வீதி, இறுதி வெளிவீதி போக்குவரத்திற்கு அகன்ற பெருவீதி. மாநகர் மதுரையைத் திருவிழா நகரம் என்பர். ஆண்டு முழுவதும் திருவிழாக்கள் நடந்தவண்ணமே இருக்கும். பங்குனி யில் நடப்பது கோடை வசந்த விழா.

விசுவநாத நாயக்கர் கி.பி 1529 ~ 1736

நாயக என்னும் வடசொல்லுக்கு தலைவன் என்று பொருள்படும். விசுவநாத நாயக்கர் தெலுங்கர். இவர்களின் சந்ததி மதுரையை 207 ஆண்டுகள் ஆண்டனர். அழியும் நிலை யில் இருந்த, எமது சமயத்தையும் தென்னக மக்களின் கலை பண்பாட்டையும் பாதுகாத்த பெருமையை, நாயக்கர் வரலாறு கூறும். மதுரை நாயக்கர் வரலாறும், விஜயநகரப் பேரரசின் வரலாறும் பின்னிப்பிணைந்து நிற்பதாகும். முகமதியர் காலத்தில் மாநகர் மதுரை சொல்லொண்ணாத் துயர் கண்டது. தரைமட்ட மாக்கப்பெற்ற மீனாட்சி அம்மன் கோவில், மதிற்சுவர்கள், கோபுரங்களை மீண்டும் எழுப்பி, நாஞ்சில் நாட்டில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த திருவுருவங்களைக் கொண்டுவரச் செய்து 'பிரதிஷ்டை' பண்ணி அவற்றிற்கு திருஆபரணங்களை அணி வித்து, நாள்தோறும் நித்திய பூசைகளையும் நடக்கச் செய்தார் குமார கம்பனன்.

திருமலை நாயக்கர் கி.பி. 1623 ~ 1659

திருமலை நாயக்கர், மாநகர் மதுரையைத் தனது ஆட்சி யின் பிற்பகுதியில் முழு உரிமையுடன் ஆண்டவர். திருமலை நாயக்கர் இறந்தாலும், இறவாத புகழ் பெற்றவர். மங்காப் புகழ்பெற்ற பாண்டியரை மறந்தாலும், மறையாத புகழ்பெற்ற மங்கம்மாளை மறந்தாலும், மற்ற நாயக்கர்களை மறந்தாலும், மதுரையை ஆண்ட புகழ், மங்காத திருமலை நாயக்கரை

என்றென்றும் தமிழ் கூறும் நல்லுலகம் மறவாது. காரணம் மதுரை யில் 'திருமலை நாயக்கர் மகால்' என்னும் அரண்மனையைக் கட்டி, தெப்பக்குளம் அமைத்து, புது மண்டபம் அமைத்த செம்மலை மறக்க முடியுமா? அட்டசித்தி மண்டப முகப்பில், காவல் வீராங்கனையாக, திருமலை நாயக்கர் பட்டத்து தேவியார் உருத்திராபதி அம்மையும், தோழி அம்மையும் உளர். மீனாட்சி நாயக்கர் மண்டபம் கி.பி 1707இல் கட்டப்பெற்றது. 110 தூண்கள், யானை நிற்கும் இடம், பூக்கடைகளும் உண்டு.

முதலிப்பிள்ளை மண்டபத்தில் கற்சிலையாய், கால மெலாம் கடவுள் முன்னிலையில் கைகூப்பி நிற்கிறார். திருமலை நாயக்கர், உயர்ந்த உருவம், பருத்த உடல், திரண்ட தோள்கள், சரிந்த தொந்தி, கூரிய மூக்கு, முறுக்கிய மீசை, இரு மனைவிய ரோடு கூடிய திருவுருவத்தை மதுரை மீனாட்சி அம்மன் திருக் கோவிலிலும், கள்ளழகர் கோவிலிலும், திருவில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கோவிலும், திருமலை நாயக்கர்களின் உருவம் தூண்களில் பொறிக்கப்பட்டுள்ளது.

ஆயிரங்கால் மண்டபம்

சுவாமி சன்னிதியைக் கடந்தால் ஆயிரங்கால் மண்டபம், 995 தூண்களைக் கொண்டது. இந்தத்திருப்பணியை மேற்கொண் டவர் தளவாய் அரியநாத முதலியார். இவர் திருவுருவம் இவ்வாயிலின் மேல்பால் குதிரையின் மேல் கம்பீரமாக உளது. அடுத்த சிற்பம் காளாத்தி வேடனான கண்ணப்பரை, மறைந்து நின்று பார்க்கிறார் சிவகோசரியார். எவ்வளவு பெரிய தூண்கள், உயர்ந்த தூண்களின் மேல் உள்ள உத்திரக் கற்கள், பாவு கற்களின் வேலைப்பாடு, அதன் அழகு வருணிக்க முடியாதது. இருபால் தூண் வரிசையிலும் மாநகர் மதுரையை ஆட்சிபுரிந்த நாயக்கமன்னர் திருவுருவம், மன்னரின் முகம், அதன் பொலிவு செல்லுந்தரமன்று. ஒருநாள் ஆயிரக்கால் மண்டப வேலை நடைபெறும்போது பிரதம சிற்பி சுந்தரமூர்த்தி சிற்பம் செதுக்கும் போது, வேலையில் தன்னை மறந்த நிலையில் உள்ளான். சிற்பி வெற்றிலைபோடுபவர், வேலையின் ஊடே கையை நீட்ட, ஏவல் பையன் வெற்றிலை மடித்துத் தருவான். ஆனால் அன்று ஏவல் பையன் இல்லை. எதிர்பாராமல் அங்கே வந்த திருமலை மன்னர் நீட்டிய கைக்கு வெற்றிலை மடித்துக் கொடுத்தார். திரும்பிப் பார்த்த சிற்பி நடுநடுங்கிப் போனான்! என்ன தவறு, என்று துடி துடித்துப் போனான் சிற்பி. சிற்ப வேந்தே! அஞ்சாதே! உனக்கு

பணி செய்ய நான் பெற்ற பேறு இது, என்றார் திருமலை மன்னர். சிற்பியின் கைவண்ணத்தால் உருவான குற்றாலக் குறவஞ்சி, குறுநாட்டுச்சேலை கட்டி மிக மிடுக்காக அழகாக நிற்கிறாள்.

"இலகுநீ றணிந்து திலகமும் எழுதிக்
குலமணிப் பாசியும் குன்றியும் புனைந்து
சலவைசேர் மருங்கில் சாத்திய கூடையும்
வலதுகைப் பிடித்த மாத்திரக் கோலும்"

இன்று இந்தக் குறவஞ்சிச் சிற்பத்தை, ரசிக்க ரசிகமணி டி.கே.சி. இல்லையே! காலாயிரம் உடைய இம்மண்டபத்தைக் காணக் கண்ணாயிரம் வேண்டுமே!

மாமதுரை

மைந்தரோ டூடி மகளிர் திமிர்ந்திட்ட
குங்கும வீரஞ்சாந்தின் சேறிமுக்கி எங்குந்
தடுமாற லாகிய தன்மைத்தே தென்னன்
நெடுமாடக் கூட லகம்.

- முத்தொள்ளாயிரம்

மதுரை மாநகரிலுள்ள சாலை ஓரங்களில் சந்தனத்தில் நல்ல மணங்கமழும். இல்லறம் புகுந்த தலைவன், தலைவிய ரிடையே ஊடல் நிகழும். அந்த ஊடலைத் தணிக்க தலைவரில் ஒரு சிலர் பன்னீர் கலந்த குளிர்மையான சந்தனத்துடன் தலைவியரை நண்ணுவர். ஆனால் ஊடல் உற்ற மகளிரோ கோபாவேசங் கொண்டு குங்குமத்துடன் கூடிய குளிர்ந்த சந்தனக் கிண்ணத்தை தட்டி விடுவர். அவ்வாறு தட்டிய கிண்ணங் களிலிருந்து சந்தனக் குளம்பானது தாவாரம் வழியே ஆறாய்ப் பெருக்கெடுத்து ஓடும். இதனால் மதுரை மாநகரின் செல்வமும், இன்பப்பெருக்கும் எவ்வாறு சங்க காலத்தில் இருந்தது என்பதை அறிய முடிகிறது. ஒரு வருடத்தில் 294 நாட்களுக்கு மாநகர் மதுரை விழாக்கோலம் பூணும். கோவிலைச் சுற்றிய ஐந்து வீதிகளிலும் நாளங்காடி (பகற்கடை), அல்லங்காடி (இரவுக் கடை), கூலக்கடை (தானியக்கடை), புடவைக்கடை, வெண்கலக் கடை, சுற்றுலா விடுதிகள், உணவகங்கள் எனப் பல ஓயாத ஒலிகள் எஞ்ஞான்றும் ஒலிக்கும். தாழம்பூ, செவ்வந்தி, மல்லிகை, முல்லை, இருவாட்சி, தாமரை, செண்பக மலர்களை முன் இரவுவரை பெறமுடியும்.

குமரகுருபரர்

குமரகுருபர சுவாமிகள் பாடிய "மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ்" திருமலை மன்னர் முன்னிலையில் அரங் கேறியது. "தொடுக்குங் கடவுட் பழம் பாடற்றொடையின் பயனே" என்னும் செய்யுளுக்குச் சுவாமிகள் பொருள் கூறும்போது, கீழ்க் காணும் பாடலுக்கு மகிழ்ந்த மீனாட்சியம்மையார், அர்ச்சகரின் சிறிய பெண்குழந்தை ஆக வந்து, திருமலை மன்னர் சூடியிருந்த முத்து மாலையைக் கழற்றி, குமரகுருபரருக்குச் சூடி மறைந் தருளினார்.

வருகைப் பருவம்

"பெருந்தே னிறைக்கு நறைக்கூந்தற்
பிடியே வருக முழுஞானப்
பெருக்கே வருக பிறைமௌலிப்
பெம்மான் முக்கட் சுடர்க்கிடுநல்
விருந்தே வருக மும்முதற்கும்
வித்தே வருக வித்தின்றி
விளைக்கும் பரமா னந்தத்தின்
விளைவே வருக பழமறையின்
குருந்தே வருக அருள் பழுத்த
கொம்பே வருக திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளங்
குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கோர்
மருந்தே வருக பசுங்குதலை
மழலைக் கிளியே வருகவே!
மலையத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே!

- குமரகுருபரசுவாமிகள்

இதுவரை மாநகர் மதுரை என்னும் தலைப்பில், புராண வரலாறு, மதுரை மீனாட்சி, பாண்டியர் ஆட்சி, மீனாட்சி திருமணம், சொக்கநாதர், முக்குறுணிப் பிள்ளையார், மாலிக்கபூர், கால்மாறி ஆடினார், கூன் பாண்டியன், பொற்றா மரைக்குளம், வானளாவிய கோபுரங்கள், விசுவநாத நாயக்கர், திருமலை நாயக்கர், ஆயிரங்கால் மண்டபம், மாமதுரை, குமரகுருபரர் எனும் விடயங்களாகத் தொகுத்து எழுதினோம்.

திருக்காளத்தீஸ்வரர்

திருச்சிற்றம்பலம்

தலம் - திருக்காளத்தி **பண் - கொல்லி**

சந்தம் ஆர், அகிலொடு, சாதி, தேக்க(ம்) மரம்
உந்தும் மா முகலியின் கரையினில், உமையொடும்,
மந்தம் ஆர் பொழில் வளர் மல்கு வண் காளத்தி
எந்தையார் இணைஅடி, என் மனத்து உள்ளவே.

- சம்பந்தப் பெருமான்

திருச்சிற்றம்பலம்

திருக்காளத்தி வரலாறு

தமிழ் நாட்டின் வடபால், ஆந்திர மாநிலத்தில், பொத்தப்பி என்னும் மலைநாட்டில் உடுப்பூர் என்னும் முதுபதி உண்டு. இதை கண்ணப்பர் திருநாடு, திருக்காளத்தி, சீகாளத்தி, காள கஸ்தி, தென்கைலாயம் என்னும் பல திருப்பெயர்களால் அழைப் பர். சென்னையிலிருந்து பேரூந்து வழியாகவும், புகை வண்டி மூலமாகவும் திருக்காளத்தி என்னும் புனிதமான சிவஸ்தலத் திற்குச் செல்லமுடியும். பொத்தப்பி நாடு இரேணுகுண்டா - கூடூர் றெயில் பாதையில், காளகத்தி நிலையத்திலிருந்து ஒரு கல் தொலைவில் உளது. திருக்காளத்தி பஞ்சபூதத் தலங்களில் ஒன்று. இது வாயுத் தலமாகும். கருவறையிலுள்ள திருவிளக்குச் சுடர் காற்றினால் அசைந்த வண்ணமே இருக்கும்.

சிலந்தியும், பாம்பும், யானையும் திருக்காளத்தி நாதனை வழிபட்டன என்பது புராண வரலாறு. சீகாளத்தி என்றால் சீ - சிலந்தி, காளம் - அரவம், அத்தி - யானை. சிலந்தி, பாம்பு, யானை ஆகிய மூன்றையும் மூலமூர்த்தி தன் சிவலிங்கத் திருமேனியில் ஒடுங்கிக் காட்சி தருகின்றார். இந்தச் சிவலிங்கத் திருமேனி சுயம்புத் திருமேனியாகும். சுவாமி மேற்கே பார்த்த வண்ணம் உள்ளார். தல விருட்சம் கல்லால மரம், அகண்ட வில்வ மரம். திருக்காளத்தித் திருக்கோயிலை ஐந்து கோபுரங்கள் அலங்கரிக்கின்றன. தேவாரம் பாடிய மூவரும் இம்மலை மீது ஏறி வந்து திருப்பதிகம் பாடியுள்ளனர். இங்கே உள்ள "சோதி

மரங்களால் இங்கு இருள் இல்லை" என்றார் சேக்கிழார் பெருமான். பச்சைக்கற்பூரம் கலந்த நீரால் திருமஞ்சனம் செய்யப் பெற்றுப் பக்தர்கட்குத் தீர்த்தம் வழங்கப்படுகிறது. தலபுராணம் மூலம் தல வரலாற்றைக் கண்டறிய முடிகிறது. சுவாமி பெயர் காளத்தி அப்பர், கணநாதர், குடுமித்தேவர் ஆகும். தேவி பெயர் - ஞானப்பூங்கோதை. அப்பர் பெருமான் இவ்வம்மையாரை "ஞானப்பூங்கோதையாள் பாகத்தன்" என்று பாடிப் பரவியுள்ளார்.

வேடர் குலம்

பொத்தப்பி நாடு, உடுப்பூர் குறிஞ்சி நிலமாகையால் இங்கே மலைகள், நீர் நிலைகள், பூஞ்சோலைகள், அடர்ந்த காடுகள் நிறைந்த பிரதேசம் ஆகும். யானைக் கொம்புகளாலான தொடர் வேலியை உடைய உடுப்பூர், தொன்மைவாய்ந்த சிற்றூராக விளங்கிற்று. இப்பதியில் வாழ்பவர்கள் மலை வாழ் வேடர்கள் ஆவர். இங்கே வளைவான காதுகளை உடைய நாய் களைக் காணலாம். விளாமரக் கிளைகளில் வேட்டைக்கான, வார்களை உடைய வலைகள் தொங்கும். மனைகளின் முன்னுள்ள கற்பாறை முற்றங்களில் மலை நெல் உலரும்.

வரண்ட தலைமுடி உடைய, வேடுவச் சிறுவர்களைப் பரக்கக் காணலாம். வேடர்களின் வன்சொற்களாகிய "கொல், எறி, குத்து" என்ற சொற்களும், உடுக்கையின் ஒலியும், ஊது கொம்பின் ஓசையும், சிறு முகங்கொண்ட ஆகுளிப் பறையின் முழக்கமும், மலை அருவிகளின் 'சல சல' என்ற சத்தமும் மிகுந்து இருக்கும். இந்த வேடர்கள், தமது பயிர்களை மேயவரும் மாற்றானின் ஆநிரை கவர்வர். இந்த வேடர்கள், வழிப்பறி செய்து வாழ்க்கையை ஓட்டுவர். நாகன் என்பான், இந்த வேடர்களின் தலைவனாக விளங்கினான். நாகனுக்கு "தத்தை" என்பாள் குறிஞ்சிநில மனைவியாக அமைந்தாள். வேடர்குலம் வீரம்மிக்க வர்கள் ஆகையால், பழந்தமிழ் மரபுக்கமைய, புலிப்பல்லைத் தாலியாகவும், முல்லை மலர் சூடிய கொண்டை உடையவளாக வும் தத்தை தோற்றம் அளித்தாள். இந்த வேடர்கள் மலைத் தேனும், ஊன் கலந்த சோறும், தேனுந் தினைமாவும், கிழங்கு களையும் பிரதான உணவாகக் கொண்டனர்.

வாதவூர்ப் புராணத்தில் இறைவன்

"பிட்டுநன் றென்று கூறிப்
பிறைமுடி யசைப்பார் வேட
னிட்டமென் றசையிற் சால
வீசனுக் காமி தென்பார்"

முன்னொரு காலத்தில் வேடனாகிய திண்ணனார், தமக்கு இட்ட மென்மையான இறைச்சியிலும் பார்க்க, இந்த இனிய பிட்டு நல்லது என்று பிறைமுடிடைய அசைத்தார், அந்த மண் சுமந்த கடவுள்.

திண்ணனார் உதயம்

வேடர் தலைவன் நாகனுக்கும், தத்தைக்கும் இனிப் புதல்வர்கள் பெறுகின்ற பேறு அரிது என்று பலரும் பகர, இவர்கள் கவலை மிகக் கொண்டு, நறுமணங் கமழும் கடம்ப மலர் மாலை அணியும் முருகவேள் சந்நிதியில், நாளிலும், பொழுதிலும் கந்தப் பெருமானை வணங்கி வரலாயினர். சேவற் கோழிகளையும், தோகை மயில்களையும் கந்தப்பெருமானுக்கு காணிக்கையாகக் கொடுத்துத் திருக்கோவிலில் வளர விட்டனர். கடம்ப மலர் மாலைகளாலும் மணிமாலைகளாலும், கந்தவேளை அலங்காரஞ் செய்து, தோத்திரங்கள் பாடி, துதி செய்து, குரவைக் கூத்தாடியும், தேவராட்டியைக் கொண்டு ஆவேசித்து, அருள் ஏறி ஆடச் செய்தும், செவ்வேள் திருவருளால், கானவர் குலம் விளங்க திருமகவு தோன்றியது. மாதவம் செய்து தோன்றிய ஞானக்குழந்தைக்குத் தந்தையாகிய நாகன் கையில் ஏந்துதற்குக் கனமாக இருந்ததால் திண்ணன் எனப் பெயர் சூட்டினான். கண்ணப்பநாயனார் காலம் கி.பி 400 – 600 வரை என்பர்.

வில் ஏந்தல்

சில பல ஆண்டுகள் செல்லத் திண்ணனார் விற்பயிற்சி பெறும் பருவம் அடைந்தார். வேடர்கட்கெலாம் தலைவனான நாகன், தன் மகன் வில் ஏந்தி நலம் பெருகும் கல்வியைப் பெறுகின்றார் எனப் பறைசாற்றி அறிவிக்க, அது கேட்டு, அயலில் உள்ள மலைவேடர்களெலாம், தம்முடன் மலைபடு நவரெத்தின

மணிகளை, பொன்னை, முத்தை, புலித்தோலை, யானைக் கொம்பை, மயிற்பீலிகளை, தேனை, மது வகைகளை, ஊனை, பழவகைகளை, கிழங்கு முதலியவற்றைத் தம்முடன் கொண்டு வந்து குவித்தனர். திண்ணனார் பயிற்சிபெற ஏந்திய வில்லானது, பின்னர் திண்ணனார் கானகத்தில் குடுமித்தேவருக்கு ஊன் அமுதம் ஆக்க, விலங்கினை வேட்டை ஆடப் பயன்பட்டது. வில் விழா நிறைவெய்தியதும், மலைநெல் அரிசி, புல்லரிசி, மூங்கிலரிசி வகையான சோறு, ஊன், கிழங்கு, தேன், தினைமா கலந்த உணவு வகைகளை உண்ண வேடர் குலம் ஒன்று கூடியது. விருந்து நிறைவெய்தியதும் குறிஞ்சிப் பறைமுழங்க, ஊதுகொம்பு ஊத, உடுக்கை ஒலிக்க, மூங்கில் குழலிசையும் ஒன்றுசேர விழாவைச் சிறப்பித்த அனைத்து வாத்தியங்களுடன் ஊர் வலம் வந்தனர்.

வேடுவச் சிங்கமனைய திண்ணனார், வலிமைமிக்க விற் றொழிலில், வீரம் மிக்கவராய் முழுநிலையில் கற்றறிந்தார். திண்ணனார் அகவை பதினாறு அடைந்ததும், மலை சூழ்ந்த அடர்ந்த காட்டில், நாகன் தன் மகனுக்கு கன்னி வேட்டை ஆட மலைப் பிரதேசத்திற்குரிய ஆட்சியை மகிழ்வுடன் ஈந்தான். வில் ஏந்திய வேடர் பலர் போற்றி நிற்க, அன்பு மிக்க தந்தையின் பாதத்தில் திண்ணனார் வீழ்ந்து வணங்கினார். எண்ணற்ற வேட்டை நாய்கள் காட்டிற் பாய்ந்து செல்ல, திண்ணனாரைச் சூழச்சென்ற வேடர் சேனையானது, அலைமோதும் கடற்பரப்பின் கண், விரைந்து புகும் காளிந்தி நதியை ஒத்து இருந்தது. கானகத்தில் நாணனும், காடனும் திண்ணனாரை விட்டுப் பிரியாது தொடர்ந்து சென்றனர்.

பொன்முகலி ஆறு

பொன்முகலி ஆறு உத்தர வாகினியாக, வடக்கு நோக்கிப் பாய்கிறது. பொன்முகலியை சுவர்ணமுகி என்று தெலுங்கில் வழங்குவர். பொன்முகலி ஆறே, இப்பெருந்தலத்தின் தீர்த்தம். அடர்ந்த காட்டின் முன்னே உள்ள தேக்க மரச்சோலையைக் கடந்து சென்றால், நீண்ட குன்றின் சாரலில் குளிர்ந்த நீரோடும் பொன்முகலி ஆறு உளது. பொன்முகலியைக் கடந்தே திருக்

காளத்தி மலையின் அடிவாரத்தை அடையவேண்டும். நீரருவி யின் சாரல் உடைய நீண்ட மலைகள் சூழ்ந்தது இந்த மலைநாடு. நறும்புகை ஊட்ட அகிலும், சந்தனமும் சிவபூசை செய்யத் திரட்டித் தருகிறது பொன்முகலி ஆறு.

குடுமித்தேவர்

திருக்காளத்தி மலையின் உச்சியில் வீற்றிருக்கும் சிவலிங்கப்பெருமானை, வேடர்கள் குடுமித்தேவர் என அழைத் துக் கும்பிட்டனர் (குடுமி - உச்சி). திண்ணனாரைக் கூட்டிச் சென்ற நாணன், திண்ணனாருக்கு முன்னே சென்று திருக்காளத்தி மலையைப் பற்றி "நீ காணச் செல்லும்போது நல்ல காட்சியே தோன்றும், நீண்டு உயர்ந்து விளங்கும் இத்திருக்காளத்தி மலை யின்மீது, நமது இடர்களையெல்லாம் தீர்க்கும், அருமருந்தாகிய குடுமித்தேவர் இருக்கிறார். அவரை நீ கும்பிடலாம்" என்று கூறிக் கூட்டிச் சென்றான். அப்போது திண்ணனார் "இந்த மலையைக் கடந்து இவ்விடத்திற்கு வரும்போது, என்மேல் உள்ள சுமை யாவும் விலகிச் செல்வது போன்று தெரிகிறது. மனத்தில் பேரவா பொங்கி எழுகிறது. என் நெஞ்சில், வேறு ஒரு ஒப்பற்ற பொருளை நான் விருப்பொடு பற்ற விரைகிறது" என்றார். திண்ணனார் திருமேனியில் காணப்பெறும், சுமைகள் அனைத்தும் நீங்கு தலானது, பிறவிக்கான வினைகள் நீங்குவதாகும். திண்ணனார் பேரானந்தம் கொண்டவராய், திருக்காளத்தி மலையைத் தனது இரு கண்களாலும் இனிது கண்டு, பொன்முகலியில் புனித நீராடித் திருமலை அடிவாரத்தை அடைந்தார்.

மலை அடிவாரத்தை அடைந்ததும், திண்ணனார் தனது இரு செவிகளாலும் ஆலய தேவதுந்துபியின் ஒலியைக் கேட்டார். அங்கே அவர் செவியுற்ற தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக் கருவி, மிடற்றுக்கருவி, கஞ்சகக் கருவிகளின் அதிர்வு தரும் ஓசை ஐந்தாகும். சக்தியே ஆணையாயுடைய சிவபரம்பொரு ளைச் சாரும், சிவயோகிகள் போன்று திண்ணனார், ஈசன் வீற்றிருக்கும், நீண்ட நெடிய மலையை முப்பத்தாறு தத்துவங் கள் என்னும் முப்பத்தாறு படி வழியால் ஏறிச் சென்றார்.

மாகமார் திருக்கா ளத்தி
மலை எழு கொழுந்தாய் உள்ள
ஏகநா யகரைக் கண்டார்
எழுந்த பேர் உவகை அன்பின்
வேகமா னது மேற் செல்ல
மிக்க தோர் விரைவி னோடு
மோகமாய் ஓடிச் சென்றார்
தழுவினார் மோந்து நின்றார்.

- பெரிய புராணம்

சென்ற பிறவியில் அருச்சுனனாகப் பிறந்து தவஞ்செய்து பெற்ற வரத்தால், திருக்காளத்தி அப்பரைக் கண்ட உடனேயே திண்ணனார் அவரைப் பற்றிக் கொண்டார். அங்கே சென்றதும் குடுமித் தேவரைக் கண்ட நாயனார், அவர் மேல் பெருமோகங் கொண்டு, ஓடிச் சென்று, தழுவி, இரு கண்களிலும் கண்ணீர் ஆறாய்ப் பெருக "அடியேற்கு இவர் தாம் இங்கே அகப்பட்டார் அச்சோ" என்ற கலைச்சொற்களால் அருளினார் (அச்சோ - அந்தோ). குடுமித்தேவரைக் காட்ட வந்த நாணன், திருக்காளத்தி யில் தரித்து இருந்தாலும், திண்ணனாரின் சிந்தனை வேறு எங்கேயும் செல்லாது, சிவபரம்பொருளையே நெஞ்சில் இருத்திய பாங்கினையே நாம் அறிந்துகொள்ள முடிகிறது. இதனால் முன்னர் அப்பெருமானின் திருப்பெயரைக் கேட்டுத் தெவிட்டாத ஆனந்தம் கொண்டவராகி, அப்பெருமானையே எல்லாமாகக் கொண்டு தன்னை மறந்த நிலையில் திண்ணனார் இருந்தமையைத் திருவாரூர்த் திருப்பதிகம் எமது ஞாபகத்திற்கு வருகிறது.

திருச்சிற்றம்பலம்

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள்தன் நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

திருச்சிற்றம்பலம்

- திருநாவுக்கரசர்

சிவபூசை

குளிர்ந்த பொன்முகலி ஆற்றின் நீரால் குடுமித்தேவரை நீராட்டிப் பச்சிலையும், பூவும் சூட்டி, உணவு படைத்து, வேத மந்திரங்கள் சாற்றி; இந்தத் தகாத செயலைச் செய்தவர் யாரோ என்று திண்ணனார் வினவியபோது, கூட வந்திருந்த நாணன் கூறு கின்றான் "நான் முன்பு உம்முடைய பிதாவுடன் வேட்டையாட இங்கே வந்தபோது, ஒரு வேதியன், இவர் முடியிலே நீர் வார்த்து, பூச்சூடி, உணவு ஊட்டி, சில வார்த்தை பேசியதைக் கண்டேன், அவரே இப்படி செய்திருக்கலாம்" என்றான். நாயனாரும் அவ்வந்தணர் போல, அவ்வண்ணமே செயல்படத்தலைப்பட்டார். ஆதலால் சிவபூசைக்கு உரிய திருமஞ்சன நீரும், அன்றலர்ந்த மலரும், உணவும் கொண்டு வருவதற்குக் குடுமித் தேவரைத் தனியே விட்டு நீங்க மனமிலராய், தேவதேவன் தனியாய் இருக் கிறாரே என்று எண்ணினார். இறைவனுக்கு அமுது கொண்டுவரப் புறப்படுவார், பின் அன்பெனும் பாசத்தால் பிணைக்கப்பட்டு, குடுமித்தேவரைப் பிரிய மனமிலராய், இளம் கன்றை ஈன்ற தலை யீற்றுப் பசுவைப் போல, குடுமித்தேவரைத் தழுவி நிற்பார். தேவரீற்குத் துணை யார்? பசியோடு இருக்கிறீரே என்று பிதற்று வார், பின் ஒருவாறு தெளிந்து துணிந்து பிரிந்து தன் நீண்ட வில்லை எடுத்துக் கொண்டவராகி, திருக்காளத்தி ஈஸ்வரரைத் தன் இருகைகளாலும் தொழுது ஊனமுது தேடிப் புறப்பட்டார்.

செல்வம் கொழிக்கும் பொன்முகலியாற்றின் கரையில் ஏறிய நாயனார், புதுமலர்ப் பூஞ்சோலையினுள் புகுந்தார். ஆங்கே நாயனார் வரவிற்காக காத்திருந்த காடன், நாம் திரும்பிச் செல்வதற்கு காலம் தாழ்த்தி வந்த காரணம்தான் என்ன? என்ற தும், நாணன் காடனை நோக்கி "இவன் மலையிலுள்ள குடுமித் தேவரைக் கண்டு, மரப்பொந்தினைப் பற்றி மேவும் வலிமை யான உடும்பு போன்று, ஆங்கு நீங்காதவராயினான். எங்கள் குலத்தலமையை விட்டு, சுவாமி வசமாகிவிட்டான்" என்றான்.

திண்ணனார் வேட்டையாடிப் பெற்ற தசையை நன்றாகத் தீயிலிட்டு வேகச் செய்து, அதன் இனிய சுவையை அறியும்

வகையில் வாயிலிட்டுத் தேர்ந்து, தெரிந்து, மிகவும் இனிய வற்றையெல்லாம் தேக்கிலை கொண்டு தைக்கப்பெற்ற கல்லை யில் இட்டுத், தனக்கு பெரும்பசி இருந்தாலும் பேச்சிலாது, வேக மாக சிவபூசைக்கான பொருட்களுடன், இறைவன் வீற்றிருக்கும் திருமலையை அடைந்தார். சிவபெருமான் பசியால் களைத்திருப் பார் என விரைந்து நெருங்கிச் சென்று மலையில் முளைத் தெழும் முழுமுதற் பொருளாகிய குடுமித் தேவரின் திருமுடியின் மீது இருந்த நிர்மாலியத்தை, தன் செருப்பு அணிந்த காலால் அகற்றித், தன் திருவாயில் கொள்கலனாகக் கொண்டு வந்த திருமஞ்சன நீரை உமிழ்ந்து (அபிடேகஞ் செய்து) தமது தலை முடிமீது சுமந்து வந்த அன்றலர்ந்த மலர்களைக், குடுமித்தேவரின் திருமுடி மீது சாத்திக், கல்லையிலுள்ள ஊனமுதை சுவாமியின் எதிரே வைத்து "அமுது செய்தருளும்" என அன்பாகப் பரிவோடு உண்பித்து, நீள் இருள் நீங்கும்வரை உறங்காது காவல் காத்து நின்றார். திருக்காளத்தி மலையின்கண் சிறப்பின்மிக்க சோதி மரங்கள் உள்ளதால், அவை இரவில் ஒளி வீசிக்கொண்டிருக்கும். ஆதலால் அங்கே இரவு என்பது எக்காலத்திலும் இல்லை.

பொழுது புலர்ந்ததும், பறவைகளின் ஓசை கேட்ட நாய னார், தம்முடைய பெருமானுக்கு உரிய நேரத்தில் ஊனமுதைக் கொண்டு வரும் வகையில், குடுமித்தேவரை வணங்கிச் சென்ற பின்னர், மலை மருந்தாகிய திருக்காளத்திநாதரை நித்தமும் பூசை செய்யும் அறிவு, அருள், அடக்கம், தவம், சிவபக்தி யாவும் திரண்ட வடிவாம் சிவகோசரியார் கொய்த மலரும், பொன்முகலி நீருங் கொண்டு வரலாயினார். திருக்காளத்திநாதரின் திருமுன் தவமுனிவர் சிவகோசரியார் வந்தபோது, வெந்த இறைச்சியும், எலும்பும் சிதறி இருக்கக்கண்டு அவைமீது அவர் பாதம்பட்ட நிலையில் அகலமிதித்து விலகி ஓடி வருந்தினார். பின் அலகிட்டு ஆசார முறைப்படி பொன் முகலிப்புனல் மூழ்கி, பிராயச்சித்தம் செய்து, சிவபெருமானை வணங்கி, விடைபெற்று மனந்தணிந்த நிலையில் தனது தவச்சாலையை அடைந்தார்.

வந்து திரு மலையின்கண்
வானவர் நா யகர் மருங்கு
சிந்தைநிய மத்தோடும்
செல்கின்றார் திருமுன்பு
வெந்த இறைச் சியும் எலும்பும்
கண்டகல மிதித்தோடி
"இந்த அனு சிதம் கெட்டேன்
யார் செய்தார்" என்றழிவார்.

- பெரியபுராணம்

திண்ணனார் நல்ல பதமாக வேகவைத்த ஊனமுதை, சுவையுடையவற்றை தேக்கிலையால் செய்த கல்லையில் வைத்து, அதற்குத் தேன்வதையைப் பிழிந்து கலந்து, வெகு விரைவாக அன்றலர்ந்த மலர்களைத் தலைமுடியில் சொருகி யும், தூய்மையான திருவாயில் திருமஞ்சன நீருங்கொண்டு, மலையேறி வந்து, குடுமித்தேவரை நண்ணிய வெங்குல வேட ராகிய திண்ணனார், செருப்பணிந்த காலால் நிர்மாலியத்தை நீக்கி, திருமஞ்சனஞ்செய்து, அன்றலர்ந்த மலர்களைத் திருமுடி மேல் சூட்டி "எம்பெருமானே இந்த உணவு முன்பு படைத்ததை விட நன்றாக உளது. அடியேனும் இதன் சுவை கண்டேன். தேனும் இதனுடன் கலந்துளதால் தித்திக்கும்" என்று அன்போடு கூறி, திருவமுது செய்வித்து, சிவபூசையை நிறைவுசெய்து, இரவுக் காவலில், கண்துயிலாது நின்றருளினார். திண்ணனாரைவிட்டு நீங்கிய, நாணனுங் காடனும் தம்தலைவனாகிய நாகனிடம் நடந்தவற்றை எல்லாம் கூற, நாகன் பெருங்கவலை கொண்டு ஊன் உறக்கமின்றி, தனையனைக் காண மலையேறி வந்து, தன் மகன் சிவநெறியில் ஆழ்ந்திருப்பதைக் கண்டு, வேறுவழி யின்றி, தன் மகனைவிட்டு நீங்கினான். திண்ணனார் தாம் அறிந்த நெறியில் சிவபூசைசெய்து மகிழ்ந்தார். தபோதனரான சிவகோசரி யார், சிவாகம விதிப்படி பூசித்து "எம்பெருமானே இச்செயலைச் செய்தவர் யார்? என்று தெரியவில்லை, தேவதேவனே இதை நீக்கி அருள வேண்டும்" என்று முறையிட்டார்.

அன்றிரவு சிவகோசரியார் கனவில், சடைமுடி உடைய சிவபெருமான் தோன்றி "வன்மை உடைய வேடுவன் என்று அவனை நினையாதே! அவன் செயல் மிகநல்லது, அவனுடைய

செயல் நமக்கு மிகவும் இனியது, நீ அன்புடன் இட்ட மலரை, அவன் செருப்பணிந்த காலால் அதை நீக்கியது, என் அருமைச் செவ்வேளின் மலரடியினுஞ் சிறப்பானது, அன்பு நிறைந்த கொள் கலமான அவன் வாய் உமிழ்நீர் கங்கை, காவிரி போன்ற தூய நதிகளின் நீரைவிடத் தூயது ஆகும். அவன் தனது முடியில் செருகி எடுத்து வந்த மலர்கள் தேவர்களிடும் மலர்களை விடத் தூயவை. அவன் செயல்களை நாளைக்கு உமக்குக் காட்டு வோம் ஒழிந்திருந்து காண்பாயாக! இதனை நீ அறிந்துகொள்" என்று அருளினார் பரம்பொருள். திண்ணனாரின் சிந்தனையானது சிவபிரானை அல்லாது வேறு எதனையும் நினையாத தன்மை, மற்றும் மனம், மொழி, மெய் என யாவும் இறைவனுக்கே இருத்தி வழிபடும் சிறந்த நெறியை மாணிக்கவாசகசுவாமிகள் தனது திருவாசகத்தில் மனம் உருக, தன்னைத்தாழ்த்தி அருளிய பாங்கினை வேறு எங்கினும் காணமுடியாதவை.

திருச்சிற்றம்பலம்

சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணினை நின் திருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்குன்
மணிவார்த்தைக்கு ஆக்கி ஐம்புலன்கள் ஆர
வந்துஎனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனைசெந் தாமரைக் காடனைய மேனித்
தனிச் சுடரே இரண்டுமிலித் தனிய னேற்கே.

திருச்சிற்றம்பலம்

- திருச்சதகம்

கண் இடந்து அப்பல்

பொழுது புலர்ந்தது, பூங்குயில்கள் கூவின. அந்தணர் தம்வழிபாட்டை முடித்து, இறைவன் ஆணைப்படி ஒரு மரத்தின் பின்னால் மறைந்திருந்தார். திண்ணனார் வழமைபோல ஊனைப் பக்குவமாகப் பதப்படுத்தி, வதை பிழிந்த தேனை ஊனுடன் கலந்து, தலைமுடியில் மலர் செருகி, திருவாயில் பொன்முகலி நீரும் முகர்ந்து, மலையை நோக்கி விரைந்தார். தீய சகுனங்கள் தென்பட்டன. தேவாதிதேவனுக்கு என்ன நேர்ந்திருக்குமோ? என்று திண்ணனார் மனங்கலங்கி, தொலைதூரத்தில் வரும்போதே

காளத்தி அப்பரைக்கூர்ந்து பார்த்தார். வேடனன்பை வேதியருக் குக் காட்ட விரும்பிய விரிசடையார், தனது வலது திருவிழியிலே செந்நீர் சொரிந்தார். உதிரம் வழிந்ததைக் கண்டதும், திண்ண னார் அறிவு மயங்கி வீழ்ந்தார். வாயாகிய கொள்கலனில் எடுத்து வந்த திருமஞ்சன நீர் சிந்தியது, ஊனமுதம் சிதறியது, முடி குலைந்து மலர்கள் சிந்தின. நிலமிசை வீழ்ந்த நாயனார், பரம் பொருளின் விழியால் சிந்தின செந்நீரைத் துடைத்தார். இரத்தப் பெருக்கு நிற்கவில்லை. இவ்வாறு செய்தவர் யாராய் இருக்க லாம்? என்று அம்பும், வில்லுங் கொண்டு நாற்றிசையிலும் சுற்றிப் பார்த்தார். வேடர்களும் இல்லை, விலங்குகளும் இல்லை. திருக் காளத்திநாதனின் திருப்பாதமலரைக் கட்டித்தழுவி, உயிரினும் இனிய எங்கள் தேவாதி தேவனுக்கு நடந்தது என்ன? கோவென்று கதறினார்.

பொன்னனைய மூலிகைகள் நிறைந்த மலையடி வாரம் சென்று, பச்சிலைகள் பறித்து வந்து பிழிந்து விட்டும் குருதி வழிந்தது நிற்கவில்லை. இனி என்ன செய்யலாம்? ஊனுக்கு ஊனிட வேண்டும் என்ற பழிமொழிக்கேற்ப, எந்தை ஈசனார் கண்ணுக்கு என் கண்ணை அம்பால் இடந்து அப்பினால் இரத்தப் பெருக்கு நிற்கும் என்று, தனது வலது கண்ணை அம்பால் பெயர்த்துத், திருக்காளத்தி அப்பரின் வலது கண்ணில் அப்பினார். இரத்தப் பெருக்கு நின்றது.

நின்ற செங்குருதி கண்டார்
நிலத்தில் நின்று ஏறப் பாய்ந்தார்
குன்றென வளர்ந்த தோள்கள்
கொட்டினார் கூத்தும் ஆடி
"நன்று நான் செய்த இந்த
மதி" யென நகையும் தோன்ற
ஒன்றிய களிப்பினாலே
உன்மத்தர் போல மிக்கார்.

- பெரியபுராணம்

கூத்து – ஆனந்தக் கூத்து
உன்மத்தர் - சிவானந்த நிலை

நாயனார் தம் வலக்கண்ணைப் பெயர்த்துத் திருக்காளத்தி நாதரின் வலக்கண்ணில் அப்பி உதிரம் நிற்கச் செய்ததை ஈசன் தன் அன்பரின் அன்பை வெளிக்காட்டும் வகையில், இடது கண்ணிலும் சிவந்த இரத்தம் அளவிலாது பெருகுமாறு செய்தார். வேடர்குலம் செய்த பெருந்தவத்தால் வந்து உதித்த தேவர்களி லும் மேன்மையுடைய திண்ணனார் "அந்தோ" எங்கள் காளத்தி யப்பருக்கு ஒரு கண்ணில் புண் உண்டாகி, அது நலம் அடைந்து வரத் தற்போது மற்றக் கண்ணும் புண்ணீர் பெருகி வழிகிறதே! "நான் அஞ்ச மாட்டேன், அஞ்சப் போவதும் இல்லை, என்னிடம் உள்ள மற்றக் கண்ணையும் இடந்து அப்புவேன்" என்றார் நாயனார்.

காளத்தி ஈஸ்வரரின் இடது கண்ணில் தனது இடது கண்ணையும் இடந்து அப்ப, இரண்டு கண்ணும் இல்லாத நிலையில், இறைவனுடைய கண்ணுள்ள இடத்தை உணரும் குறிப்பை எண்ணுபவராய், நாயனார் பரம்பொருளின் திருக்கண் ணில் தம்முடைய இடக்காலை ஊன்றி, உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்க, ஒப்பற்றதோர் அம்புகொண்டு, தம்முடைய கண்ணை இடந்து எடுக்க முற்படும்போது தேவதேவனாகிய ஈசன் தரித்தில ராகி இரங்கினார்.

"திருக்கண்ணில் இடக்கால் ஊன்றி
உண்ணிறை விருப்பி னோடும்
ஒருதனிப் பகழி கொண்டு
திண்ணனார் கண்ணில் ஊன்றத்
தரித்திலர் தேவதேவர்

- பெரியபுராணம்

பகழி – அம்பு

"தன்னிடைப் பிறந்த தடமலர்க் கையால்
அன்னவன் தன்கை அம்பொடும் அகப்படப்
பிடித்து அருளினான்" - நக்கீரர்

சிவந்த கண்ணுடைய வெள்ளை இடபத்தை வாகனமாக உடையவரும், திண்ணனாரை ஆட்கொண்ட திருக்காளத்தி நாதரும், அற்புதமான சிவபரம்பொருள்; திண்ணனார் தன்னுடைய மற்றக் கண்ணையும் பெயர்த்து எடுக்க முன்னதாக, தமது சிவலிங்கத் திருமேனியினின்றும், திருக்கையை வெளியே நீட்டி, அம்பு தொட்ட திருக்கையைத் தடுத்துப் பற்றியதையும் "கண்ணப்ப நில், கண்ணப்ப நில், கண்ணப்ப நில்" என்று கூறியதையும்; மறைந்து நின்றிருந்த ஞானமா முனிவரான சிவகோசரியார் நேரில் கண்டார். வேதங்கள் ஒலித்தன! தேவர்கள் கற்பக மலர் மாரி பொழிந்தனர்! குடுமித்தேவரின் புண்ணீர் நின்றது! கண்ணப்ப நாயனாரின் வலக்கண்ணும் பார்வை பெற்றது! திருக்காளத்தி அப்பர் கண்ணப்பரை விழித்து "என் வலத்தில் மாறிலாய் எக்காலமும் நிற்க" என்றருளினார். ஆறுநாள் இரவு அகன்ற காலை கண்ணப்பர் பெரும்பேறு பெற்றார்!

ஆலய வளாகம்

திருக்காளத்தி அப்பரின் கருவறை வாயிலில், கண்ணப்ப நாயனாரின் திருமேனி இன்றும் உண்டு. திருக்காளத்தி மலை மேல் மடம் ஒன்று உண்டு. இம்மடத்தில் மகேஸ்வர பூசை செய்ய, நன்செய் புன்செய் நிலங்களை மாதவராயன் என்பவ ரால் வழங்கப்பட்டது. கோவிற் சுவர்களில் தமிழ்க் கல்வெட்டுக் கள் பல உண்டு. திருக்காளத்தி மலைமேல் உள்ள சிவலிங் கத்தையே கண்ணப்ப நாயனார் வழிபட்டார். மலையடிவாரத்தில், பொன்முகலி ஆற்றங் கரையில் உள்ள கோவிலையும் தற்போது வணங்குகிறார்கள். திருக்காளத்தியில் சிவராத்திரி, பெருவிழா வாக இடம்பெறுகிறது. இத்தலத்தினை நக்கீரர், முசுகுந்தன் முதலியோர் வழிபட்டுள்ளனர். தெலுங்கு, தமிழ்மொழித் தல புராணங்கள் உண்டு.

திருக்காளத்தி நாதர் உலா

திருக்காளத்தி நாதர் உலா பாடியவர் சேறைக் கவிராஜ பண்டிதர். இவ்வுலாவில் காளத்தியப்பர் ஞானப்பூங்கோதை யாளுடன் கூடி இன்புற்ற நிலையை மிக அழகாக சுவைபடப் பாடியுள்ளார்.

"அகிலாண்டம் ஈன்றாளை அவ்விருளில் கூடி
அகிலாண்ட பூண்முலைப் போர்ஆடி – மிக உறங்கிச்
செங்கதிரோன் கைமலரச் செந்தாமரை மலர்
மங்கையுடன் செங்கண் மலர்ந்தருளி"

- சேறைக்கவிராஜ பண்டிதர்

இதுகாறும் திருக்காளத்தி வரலாறு, வேடர் குலம் திண்ணனார் உதயம், வில் ஏந்தல், பொன்முகலி ஆறு, குடுமித் தேவர், சிவபூசை, கண் இடந்து அப்பல், ஆலய வளாகம், திருக்காளத்தி நாதர் உலா சம்பந்தமாக தொகுத்து விரித்துரைத்தோம்.

திருச்சிற்றம்பலம்

தலம் - திருக்காளத்தி **பண்: கொல்லி**

கோங்கமே, குரவமே, கொன்றை, அம்பாதிரி
ஓங்கில் வந்து அணைதரு முகலியின் கரையினில்
ஆங்கு அமர் காளத்தி அடிகளை அடி தொழ
வீங்கு வெந்துயர் கெடும், வீடு எளிது ஆகுமே.

திருச்சிற்றம்பலம்

- சம்பந்தப் பெருமான்

பி.கு:

பூநகரிப் பகுதியில் பூவரசம் இலை கொண்டு வானம்பாடி புல்லால் கல்லை தைத்து உண்கலமாகப் பாவிப்பர். வாழை இலைக்குப் பதிலாகப் பாவிப்பர். யாழ்ப்பாணச் சைவப் பெருங்குடியினர் தென்னோலையிலும் கல்லை தைப்பர். பனை ஓலையிலும் தட்டுவம் கோலி உண்கலமாகப் பாவிப்பர்.



நல்லூரில் நாவலரின் புராண படனம்

புராணங்கள் பதினெட்டு என வரையறுக்கப்பட்டுள்ளது. இந்தப் பதினெண் புராணங்களிலும் கந்தபுராணம் ஆனது, யாழ்ப்பாணச் சைவப்பெருமக்களிடையே முருகபக்தியைப் பெரிதும் வளர்த்துவிட்டது. விரிவாகக் கூறப்புகின், கந்தபுராணக் கலாசாரம் யாழ்ப்பாணத்தில் வேருன்றி விழுதுவிட்டு நிலைத்து விட்டது எனத் துணிந்து கூறலாம். கந்தபுராணம் எழுந்த ஊர் காஞ்சிமாநகரென்பர். புகுந்த வீடோசெந்தமிழ் நாட்டிலும்சரி, ஈழத்திருநாட்டிலும்சரி ஆலயங்கள், மடாலயங்கள், சைவ ஆதீனங்கள் பலவற்றிலும் வருடந்தோறும் கந்தபுராணம் படித்து, பயன் சொல்லும் இடங்களாக இருந்து வந்துள்ளது. புராணத் தைப் படித்தல், அதற்குப் பயன் சொல்லுதல், நல்ல பயனைத் தரவேண்டுமென்றால், கந்தபுராணம் கேட்போர் திருக்கூட்டம், பன்மடங்காகப் பெருக வேண்டும். திருக்கோவில்களில் புராண படனம் நடைபெறும்; அதனைக் கேட்க, பயனடைய ஒரு சிலரே இருப்பார். இந்த நிலை மாறவேண்டும்.

புராண படனம் செய்பவர் புராணங்களை முறையாக விளக்கமாகப் பிரித்துப் படிக்கவும், பயன் சொல்பவர் புலமை மிக்கவராகவும் நல்ல பயிற்சிபெற்றவராகவும் இருக்கவேண்டும். மேலும் புராண படனத்தில் ஈடுபடுபவர்கள் சிறந்த நல்லொழுக் கம் உடையவராய், நிகண்டு கற்றவராய், இலக்கண இலக்கியம் கற்றவராய், நீதி நூல்கள் கற்றவராய், சைவ நூல்கள் ஓதி உணர்ந்தவராய், சந்தியாவந்தனம் - சிவபூசை செய்பவராய், சைவ ஆசாரம் மிக்கவராய் இருத்தல் அவசியம்.

புராணம் வாசிப்பவர், சபையில் உள்ளோர் யாவரும் கேட்கும் பொருட்டு தெளிவுற வாசித்தல் வேண்டும். நல்ல குரல் வளம், புராண படனத்திற்கு மெருகூட்டும். வாசிக்குங் காலத் துக்கும், எடுத்துக்கொண்ட விஷயத்தினது குணத்துக்கும் ஏற்ற இராகத்தில் வாசிக்கப்படுகின்றதோ, அச்சுதியில் அவ்விராகத் திற்றானே பொருள் சொல்லப்பட வேண்டும். இலக்கியப் பிழை இல்லாமலும் வெளிப்படையாகவும் இன்றியமையாவிடயங்களில்

விரிவாக உவமான, உவமேயங்களுடன் பொருள் சொல்ல வேண்டும்.

புராணபடனம் தொடங்கிய நாளிலிருந்து, கந்த புராணத்தை சிறிது உயர்ந்த பீடத்தின்மீது வைத்து, நாடோறும் விதிப்படி பூசை செய்தல் வேண்டும். புராணபடனம் சுபதினத்தில், சுபமுகூர்த்தத்தில் ஆரம்பித்தல் வேண்டும். நூலுக்கான பூசை முற்றுப்பெற்றதும், புராண போதகரை, சிவபரம்பொருளாகக் கருதிப் பூசிக்கவேண்டும். நாடொறும் புராணபடனம் தொடங்கும் போதும், புராணபடனம் படித்து முடிக்கும்போதும் காப்புச் சொல்ல வேண்டும். காப்புக்கு முன்பும் பின்பும் "திருச்சிற்றம்பலம்" என்று உச்சரித்தல் வேண்டும். காப்புச் சொல்லும்போது யாவருங் கைகூப்பித் தொழவேண்டும். சிவபுராண படனம் நடைபெறுங் காலத்து இடைவிடாது கேட்டல், சிவனடியாருக்குத் திருவமுது செய்தல், புராண போதகருக்கு வஸ்திரம், ஆபரணம் கொடுத் தல், புராணப்படிப்பு முற்றுப்பெற்றதும் திருமுறையையும், புராண போதகரையும், மங்கள வாத்தியம் ஒலிக்க வீதிவலம் செய்தல் வேண்டும். மேற்கூறிய அறவிதிகளை சிவபுராணபடன விதியில் பரக்கக் காணலாம்.

வடமொழியில் இருந்த கந்தபுராணத்தைத், தமிழில் கந்த புராணமாக அருளியவர் கச்சியப்பசிவாச்சாரியாராவர். கச்சியப்ப சிவாச்சாரியார் நாள்தோறும் நூறு செய்யுள்களைப் பாடி முருகப் பெருமானது திருவடித் தாமரையில் வைத்து, மறுநாட் காலையில் எழுத்தாணியையும், ஏட்டையும் எடுக்கும்போது, அந்தச் செய்யுள் கள் சிற்சில இடங்களில் கந்தவேளால் திருத்தம் செய்யப்பெற்றி ருப்பது கண்டு கச்சியப்பசிவாச்சாரியார் இது குறித்து பேரானந் தம் உறுவர்.

கச்சியப்பசிவாச்சாரியார் கந்தபுராணம் பாடி முடித்தபின், அரங்கேற்றம் குமர கோட்டத்தில் நடந்தேறியது. அரங்கேற்றம் காண அரசர்கள், அரசவைப்புலவர்கள், சிவனடியார்கள் போன்ற பலர் குழுமியிருந்தனர். முருகப்பெருமான் எடுத்துக் கொடுத்த "திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்....." என்னும் முதற் செய்யு ளைப் பாடினார். இந்தச் செய்யுளைப் பாடியதும் அவையின் கண்ணே வீற்றிருந்த தமிழ்ப் புலவர்களில் ஒருவர் "சுவாமிகள் திகழ்தசம் திகடசம்" என புணர்வதற்கு விதி தொல்காப்பியத்தில்

இல்லையே என்றார். அதற்கு கச்சியப்பர் நீங்கள் சொல்வது சரி, இந்த முதலடி எனதன்று, இ.ஃ.து முருகப்பெருமானது திருவாக் காகும் என்றார் கச்சியப்பசிவாசாரியார்.

உடனே அப்புலவர் பெருந்தகை இதை எப்படி அங்கீ கரிப்பது? கந்தவேள் உங்களுக்கு தோன்றியது போல், எமக்கும் தோன்றி "இவ்வடியை நாமே கொடுத்தருளினோம்" என்று திருவாய்மலர்ந்தருளின் அங்கீகரிப்போம் அல்லால், கந்தவேள் புராணத்தை அரங்கேற்ற வொட்டோம் என்றார். கச்சியப்பர் அன்றிரவு முழுவதும் கவலை மிகுதியால், திருவமுது செய்யா மல் முருகப்பெருமானது சந்நிதியிலேயே சயனித்திருந்தார். கந்தவேள் கனவில் தோன்றி "அப்பனே சோழ தேசத்தில் வீரசோழியம் என்ற இலக்கண நூலுளது, அதில் திகழ்தசம் திகடசம் எனப் புணர்தற்கு விதி அதிலுளது. அந்த விதியை நாளை சோழ தேசத்து புலவன் ஒருவன் எல்லோருக்கும் காட்டுவன்" என திருவாய்மலர்ந்தருளினார். மறுநாள் அவ்வாறே நடந்தது. அந்த இலக்கண விதியைக், கற்றோர் அவையில் காட்டிய பின்பே கந்தபுராணம் அரங்கேறியது. பிந்திய காலத்தில் "வீரசோழியம்" இலக்கண நூலை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ராவ்பகதூர் சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் அச்சுவாகனம் ஏற்றினார் என்பதை நாம் அனைவரும் அறிந்ததே.

1872இல் நல்லூர்க், கோவிலிலே கந்தபுராணபடனம் வழமைபோல நடந்தது. விபூதி, உருத்திராக்கம் தரித்தவராய் சிவக்கோலம் பூண்டு நாவலர் கந்தபுராணத்திற்கு பொருள் கூறினார். நாவலருடைய மருகர் வித்துவசிரோன்மணி ந.ச. பொன்னம்பலப்பிள்ளை அவர்கள் செய்யுளைப் பயன்சொல்வ தற்கு ஏற்றவாறு பிரித்து வாசித்தார். வித்துவசிரோன்மணியோ இலக்கிய இரசனையில் இரசனையை எடுத்துக்காட்டுவதில் ஈடும் எடுப்பும் இல்லாதவர். வித்துவசிரோன்மணி அவர்கள் பயன் சொல் லுவதன்றி வாசிக்கின்ற வழக்கம் கிடையாது. அவ்வளவு புலமை மிக்கவர் ந.ச. அவர்கள். அவர் வாசிக்க விரும்பினாலும் நாவலர் திருமுன் பயன்சொல்ல யாருக்குத் துணிவு வரும்! இத்துணைச் சிறப்புமிக்க பொன்னம்பலப்பிள்ளை அவர்கள் அன்றைய தினம் நல்லூரில் நாவலர் பெருமானின் முன்னிலையில் அடங்கி, ஒடுங்கி,

மிக்க அச்சத்துடன் வாசித்தார். தவத்திரு நாவலர் பெருமான் அவர்கள் பயன் சொன்னார்கள். மாமனார் முன்னிலையில் மருகரைக் காணவே முடியாது. இந்த அதிசயத்தைக் காணக் கற்றோர் பலர் நல்லூரில் கூடிவிட்டனர். அவையின் கண்ணே அமைதி நிலவியது - புராணபடனம் தொடங்கியது.

அன்றைய தினம் கந்தபுராணபடனத்தின் நடுவே மிகவும் அருமையான ஓர் செய்யுள். இமையமலை அரசன் உலக மாதா வாகிய உமாதேவியாரின் திருக்கரத்தைச் சிவபரம்பொருளின் திருக்கரத்துள் வைத்துத் தத்தம் செய்த பயபக்தியான அற்புத மிக்க காட்சி.

"பூசனை புரிந்த பின்னர் புவன மீன்றாடன் கையைப்
பாசப தகன்ற தொல்சீர்ப் பரஞ்சுடர் கரத்துள் வைத்து
நேசமோ டளித்தேனென்னா நெடுமறை மனுக்கள் கூறி
வாசநல் லுதக முய்த்தான் மருக னென்றவனை யுன்னி"

மேற்படி செய்யுளை புலமைமிக்க வித்துவசிரோன்மணி அவர்கள் மிகவும் பயபக்தியோடு வாசிக்க, நல்லைநகர் ஆறுமுக நாவலரோ செய்யுளுக்கு ஏற்ற இராகத்தில், பொருத்தமான பொருளை, மிகவிரிவாக மெய்யுருக உரைத்தார். கற்றோர் கூடியிருந்த அவையை, இந்த புராணபடனம் மெய்சிலிர்க்க வைத்தது.

புராணபடனம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கு அன்றைய புராணபடனம் ஓர் எடுத்துக்காட்டாக அமைந்தது. அந்தப் புலமைமிக்க பரம்பரை குன்றாது இருக்க, சைவ ஆதீனங் கள், மடாலயங்கள் உதவுகின்றன. மேலும் உதவ வேண்டும். கந்தபுராணம் மாத்திரம் அல்ல திருவாதவூரடிகள் புராணம், தலபுராணங்கள் யாவும் சிறப்பு உரைகளுடன், மலிவு விலையில் அச்சேற்றி வெளியிட வேண்டும். நூலகங்கள், கல்விக்கழகங் கள், சர்வகலாசாலைகள் இவற்றைப் பேணிப்பாது காக்க வேண்டும். தமிழ் கூறும் நல்லுலகமனைத்திலும் இவை கிடைக்க வழிசமைக்க வேண்டும். இளைய பரம்பரையினரைப் புராண படனத்தில் பயிற்றுவிக்க, அரசின் நிதியுதவி கிடைக்க அரசியலார் முன்வர வேண்டும்.

திருப்பெருந்துறையில் திருவாதவூரடிகள்

எழுந்தருளல்

சைவத்திருமுறைகள் பன்னிரண்டில் எட்டாந் திருமுறையாக வகுக்கப்பெற்றது மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய தித்திக் கும் திருவாசகம் ஆகும். மாணிக்கவாசகர் பாண்டியனுக்கு நல்லமைச்சராக இருந்தபோது அரசியல் நிமித்தம், திருப் பெருந்துறை செல்ல நேர்ந்தது. அப்பெருந்துறையில் அவனரு ளால் பாச ஒழிவும், சிவத்துவப் பேறும் பெறும் பருவம், கனிந்து வந்தது. இந்நிலையில் திருவாதவூரடிகளது, பந்தமறும் எல் லையை எதிர்பார்த்தினிது இருந்த இறைவன், ஞானதேசிகத் திருமேனி கொண்டு, கைலையங்கிரியை நீங்கி, பூதகணங்கள் புடைசூழ எழுந்தருளினார்.

சிவஞானபோதம் என்னும் அரிய நூல் செந்தமிழில் உருவாக வும், நித்தியாக்கினி வளர்ப்பவர்கள் ஆகிய சிவப்பிராமணர்கள் சூழ இருக்கின்றதுமான திருப்பெருந்துறையானது கோங்கு, சந்தன மரங்கள் நிறைந்த பதியாகும். வேதங்களாகிய சிலம்பு கள் தரித்த, உபய திருவடிகளை உடைய சிவபெருமான் திருப் பெருந்துறை என்னும் பெரும்பதியை அடைந்தார். மானிட வடிவங் கொண்டு வந்த பரம்பொருள், பெருந்துறையில் உள்ள அழகிய பூஞ்சோலையின் கண்ணே, ஒரு குருந்தமர நீழலில் சிவ கணங்களாகிய மாணவர் சூழ யோகாசன நிலையில் வீற்றிருந் தருளினார்.

வாதவூரர் வருகை

திருவாதவூரர் திருப்பெருந்துறையை அண்மித்ததும், அங்கே சிவகணங்கள் சிவாகமம் ஓதும் ஒலியை செவியுற்றவர்; சிவாகம ஒலி கேட்ட அந்தப் பூஞ்சோலையை நண்ணினார். திருவாதவூரர் தமது முத்துச் சிவிகையின்றும் நீங்கி, அந்தக் குருந்தமர நீழலில் கொன்றைமாலை அணிந்த சிவபெருமான், குரு இலட்சணம் பொருந்த, ஞானாசிரியனாகச் சிவகணங்கள் சூழப் பொன்போலுந் திருமேனி, பேரொளி வீச வீற்றிருக்கும் அரிய காட்சியைக் கண் ணாரக் கண்டார். இதனால் வாதவூரர் உள்ளம் நெக்கு நெக்குரு கத் தம்வயமிழந்து, சிரசில் இருகரமும் குவித்து வணங்கி

நின்றார். அக்குரு சந்நிதியில் ஓதுபவர் ஒருசிலரும், சிந்திப்பவர் சிலருமாக, மற்றும் தெளிந்து தம்வயமிழப்போருமாக, அத்தெய்வ சபை இருந்தது.

சிவஞானபோதம்

சிவபெருமானது பொன்போன்ற திருமேனியைத் தரிசித்த வாதவூரர், "ஐயா உமது செங்கை மீது பொருந்தி இருக்கும் திருமுறை யாது?" என வினவ, அதற்குச் சிவபெருமானானவர், "இது மெய்மையாகிய சிவஞானபோதம்" என்று கூறியருளினார். அதுகேட்ட திருவாதவூரடிகள், "சுவாமி சிவமாவது யாது? ஞான மாவது யாது, போதம் என்றால் என்ன என்ற மூன்று வினாக் கட்கும் விடைதந்து அருளுக!" "அன்று வடநீழலில் வந்து இருந்த சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் முதலிய முனீந்திரர் நால்வர்க்கும் வேதாந்தங்களின் சமுசயம் பிறந்த போது சிவமாவது, நித்தமுத்த சுத்த சித்தாகிய ஒரு வஸ்த்து, அதனைத் தேர்தல் ஞானமாகும். போதமாவது தேர்ந்ததனைத் தெளிதலாம். இவ்வாறு அனுபூதி நிலையில் வைத்து நிச்சயம் செய்தலேயாம்." இவ்வண்ணம் சிந்தை உருகும்வரை உரை செய்தார் பரமாசாரியார்.

ஆட்கொள்ளல்

இது கேட்டு மனம் மகிழ்ந்த மணிவாசகப்பெருமான் நாலாஞ்சத்திநிபாதம் நான்கினுள், இறுதியாகிய அதிதீவிர பக்குவம் பொருந்திய, திரிகரண சுத்தியை உடையவராதலின் அக்கனகசபையின் கண்ணே, பஞ்சகிருத்திய நிருத்தஞ் செய் தருளும் சபாநாயகரே என்னை ஆள, இத்திருமேனி கொண்டரு ளினார் என மனதிலெண்ணி, "எம்முயிர்க்கிறைவா, பிரபஞ்சப் பொருள்கள் எவையும் வேண்டேன், தேவரீருடைய திருவடிகளை அடைய இப்போதே என்னை ஆட்கொள்ள வேண்டும்," எனக் கண்ணீர் வார வணங்கி நின்றார். திருவாதவூரடிகளைப் பரமாசாரியார் நோக்கி, "நீ முன் இயற்றிய தவத்தினாலே இன்று உன்னை ஆட்கொள்ள இப்பெருந்துறைக்கு வந்தோம். ஆதலால் நீ வருந்த வேண்டாம்" எனத் திருவாய் மலர்ந்தருளினார், சிவபெருமான்.

திருவடி தீட்சை

திருப்பெருந்துறையில் உள்ள பூஞ்சோலையின் கண்ணே திருவடி தீட்சைக்கு உகந்த பூங்கோயில் அமைத்துத் திவ்விய மான ஆசனம் இட்டுப் பூமியில் இருள் பரந்தபின்னர், உயிர்கள் எல்லாம் துயிலும்போது, இறைவன் கங்கை நீராடிச் செம்பட் டாடை அணிந்து, வாசனைமிக்க சந்தனம் திருமேனி எங்கும் பூசி, அவ்வாசனத்தில் தென்திசை நோக்கி யோகாசனமாக வீற்றி ருக்க, திருவாதவூரரும் அவ்வாறே தீர்த்தமாடி, திருநீறணிந்து சிவபெருமான் திருமுன் குறுகி நின்று, சருக்கரை கலந்த பால் கொண்டு சமைத்த நல்ல திருவமுதைப் பொன் கலத்தில் விருப் பொடு படைத்து, நெய்யும், முக்கனியும் பெய்து, பெருவிருப் பொடு தொழுது நிற்க, தவப்பெருவடிவங் கொண்ட சிவபெரு மான், திருவாசகம் என்னும் தேனை, இந்த உலகுக்கு அருளிய திருவாதவூரருக்குத் திருவைந்தெழுத்தை உபதேசித்து மணி வாசகப்பெருந்தகையின் சிரசிலே ஞானாசக்தி, கிரியாசக்தி ஆகிய இரு திருவடிகளையும் வாதவூரர் மனம் மகிழுமாறு திருவடி தீட்சை செய்தருளி, மணிவாசகரைத் தனது ஞானப் புதல்வராக ஏற்றுக்கொண்டார், சிவபரம்பொருள்.

அற்புத னிருந்தருள் பெருந்துறை யடைந்தே
சிற்பர முணர்ந்துதிரு வாசக முரைப்பார்
முற்பக லருந்தவ முயன்றுபெறு மன்பா
லுற்பவ மொழிந்தமை மொழிந்திட ரொழிப்பாம்.

- வாதவூரர் புராணம்



திருச்செந்தூர்

திருச்சிற்றம்பலம்

கள்ளி முதுகாட்டி லாடி கண்டாய்
காலனையுங் காலாற் கடந்தான் கண்டாய்
புள்ளி யுழைமானின் தோலான் கண்டாய்
புலியுரிசே ராடைப் புனிதன் கண்டாய்
வெள்ளிமிளிர் பிறைமுடிமேற் சூடி கண்டாய்
வெண்ணீற்றான் கண்டாய்நஞ் செந்தின் மேய
வள்ளி மணாளற்குத் தாதை கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே.

- அப்பர்

திருச்சிற்றம்பலம்

புராண வரலாறு

புராண வரலாறுகளின்படி, கந்தவேள் சூரபத்மன் மீது படை எடுத்து வரும்போது, வழியில் எதிர்ப்பட்ட தாரகா சூரனை அழித்துவிட்டு, சூரனுக்கு துணை நின்ற கிரௌஞ்ச மலையையும் பிளந்துவிட்டு, தன் படைகளுடன் செவ்வேள் திருச்செந்தூரில் தங்கினார். அண்மையில் ஆப்கானிஸ்தானின் மலைகளைப் பிளக்க, ஒளிந்திருக்கும் போராளிகளைக் கைப்பற்ற, வீசிய பாரிய குண்டுகள் நினைவிற்கு வருகிறது. கந்தவேள் திருச்செந்தூரில் தங்க, தேவகம்மியனைக் கொண்டு ஆலயம் அமைத்து, அந்த ஆலயத்தில் எழுந்தருளினார். தேவகுருவாகிய வியாழபகவான் முருகப்பெருமானுக்கு பூசைகள் செய்தார். இதற்குப்பின் அசுரர் வரலாறுகளை முருகப்பெருமான் கேட்டறிந்தார். திருச்செந்தூரிலிருந்தே முருகப்பெருமான், வீரவாகுதேவரை சூரபத்மனுக்கு அறிவுரைகள் கூறும்படி அனுப்பி வைத்தார். வீரவாகு தேவரின் தூது பயனற்றுப் போகவே, செவ்வேள் சூரன் மீது போர் தொடுக்கச் சென்றார். இறுதியில் கடலில் மாமரமாக நின்ற சூரனை தனது வேலால் பிளந்து. அவனைச் சங்காரஞ்செய்து, சூரனை ஆட்கொண்டு, தேவர் சிறைமீட்டதும், திரும்ப வந்த முருகப்பெருமான் தேவர்களது பூசையை ஏற்றதும் புராணவரலாறு. கந்தவேள், தான் சிவபூசை செய்ய, அபிஷேகத்

திற்கு தன் கைவேலால், ஸ்கந்த புஷ்கரணி தீர்த்தத்தை தோற்றுவித்த இடமும் திருச்செந்தூரே ஆகும். இந்தத் தீர்த்தம் தான், தற்போது நாழிக்கிணறு என அழைக்கப் படுகிறது. இந்த நாழிக்கிணறு கடற்கரையிலே அமைந்திருந்தாலும், இனிமை யான வற்றாத நீராகும். செவ்வேள் சிவபெருமானை வழிபட்டார் - அவர் வழிபட்ட சிவலிங்கமூர்த்தி, தற்போது மூலத்தானத்தி லுளது. தியானசொரூபத்திலுள்ள முருகப்பெருமானின் மூலவர் உருவை, திருச்செந்தூரைத் தவிர வேறு இடங்களில் காண்பதரிது.

அமைவிடம்:

திருச்செந்தூர் என்னும் பெருந்தலம், தமிழ்நாட்டின் கிழக் குக் கரையோரமாக, வங்காள விரிகுடாக்கடலில், திருநெல் வேலியிலிருந்து கிழக்கே 36 கல் தொலைவில் அமைந்துள்ளது. செந்திலாண்டவனின் இத்திருத்தலம் தமிழ்ச்சங்க காலத்திலேயே மிகவும் பிரபலம் பெற்று இருந்தது. மன்னார் குடாக்கடலலை களாலும், ஓயாமல் ஒழியாமல் தழுவப்பெறுவதலால், அலை வாய் அல்லது திருச்சீரலைவாய் என அழைக்கப்படுகிறது. கடற்கரையில் உள்ள மணல் மேடுகளில் கடலலைகள் வந்து தழுவிக் கொண்டேயிருக்கும். இந்த இடத்தில்தான் செந்திலாண் டவன் கோயில் கொண்டுள்ளான். திருச்செந்தூருக்கு திருநெல் வேலியிருந்து பேரூந்துகள், புகைவண்டிகள் வந்தவண்ணமே யுள்ளன. இதர வாகன வசதிகளும் உண்டு. சென்னையிலிருந் தும், காலந்தவறாமல் போக்குவரத்து வசதிகள் அதிகம் உண்டு. திருச்செந்தூர், கந்தப்பெருமானுக்கு வெற்றி தந்த திருநகரம். சீறிப்பாய்ந்து வரும் கடலலைகள் முருகப்பெரு மானது திருவடிகளை அலசிநிற்கும்.

திருநெல்வேலி மாவட்டத்திற்கு அழகு தருவன, மேற்கே மலைவளம் மிகுந்த திருக்குற்றாலம், தென்கிழக்கே அலைவளம் மிக்க திருச்செந்தூராகும். திருச்செந்தூர் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே பொருந்திய திருத்தலம். நக்கீரர் உரைத்தபடி திருச் செந்தூர் 2வது படைவீடாம். ஆங்காங்கே மணல் மேடுகளும், கடற்காற்றும், ஓங்கியுயர்ந்த பனை மரங்களும், இத்தலத்தைச் சுற்றி வேலி போல் வளர்ந்து காணப்படுகின்றது. திருச்செந்தூரை கச்சியப்ப சிவாச்சாரியார் "பருமணி வயிர முத்தம் பலவளம் பிறவும் ஆழித்திரை எறி அலைவாய் ஆகும், செந்திமா நகரம்"

என்று விதந்துரைத்தார். மேலும் இப்பதியை நக்கீரர் தமது திருமுருகாற்றுப்படையில் "உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர் அலைவாய்" என்று சிறப்பித்துப் பாடியுள்ளார். திருச்செந்தூரில் கதலி, மஞ்சள், இஞ்சி போன்ற பயிர்கள் பயிரிடப்பட்டு, பசுமை மிக்க வளமான ஊராக இருந்ததாம். செந்திமாநகரில் வானளாவிய சோலைகள், பன்னீர் மரங்கள், செண்பகக் காடுகள், தென்னை, கமுகு, நறுமணம் கமழும் மலர்கள், மலர்களை நாடி தேனருந்தவரும் வண்டினங்கள், சோலைகளில் கொப்புவிட்டு கொப்புத்தாவும் மந்திகள், கூவும் குயிலினங்களை பரக்கக் கண்டின்புற முடியும்.

கோயிலின் வாயில்கள் தெற்கிலும், மேற்கிலும் உண்டு. கிழக்கு வாயில் திறந்த நிலையில் இல்லை. செந்திலாண்டவன் ஆலயம் எழில்மிகு சிற்பங்களைக் கொண்டது. மூன்று சுற்றுப் பிரகாரங்களையும், ஒன்பது நிலை கொண்ட இராஜகோபுரத்துடன் திருச்செந்தூர் காட்சி தருகிறது. இப்பெருநகரில் இடையறாது தேவ துந்துபிகள் முழங்கும். மறையவரின் வேதபாராயணமும், மணியின் நாதமும், பேரிகையின் ஒலியும், கோழி கூவுவதும், கடலின் அலை ஓசையும் தொடர்ந்து கேட்கும். தோகை விரித்தாடும் நீலநிற மயிலும், காலையில் முருகா முருகா எனக் கூவி அழைக்கும். ஓதுவா மூர்த்திகளின் பண்ணிசை, இன்னிசையாக இருக்கும். "செவ்வேள் வீற்றிருக்கும் செந்தில்" என்று புறநானூறில் இவ்வூர் குறிக்கப்பட்டுள்ளது. சங்ககாலத்திற்குப் பின்னும், முற்காலப் பாண்டியர் காலத்திலும், திருச்செந்தூர் சிறப்புடன் விளங்கியது. கி.பி 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசர் தமது திருமறைக்காட்டுப் பதிகத்தில் வள்ளியின் மணவாளனான செவ்வேள், திருச்செந்தூரில் வீற்றிருக்கும் சிறப்பினைப் பாடியுள்ளார். திருச்செந்தூரில் கந்தப்பெருமானுக்கும், வள்ளி, தெய்வயானைக்கும் தனித்தனியாக கருவறைகள் உண்டு. வள்ளியம்மை திருமணத்திற்குப் பின், முருகப்பெருமான் தேரேறி வந்து, திருச்செந்தூராலயம் உட்புகுந்து தரிசனம் தருகிறான். ஞான வள்ளல், தேவகுருவாகிய வியாழபகவானுக்கு, விசேட வழிபாடு கள் செய்ய ஏற்ற இடம் திருச்செந்தூர். சிதம்பரத்தில் ஆனந்தத் திருக்கூத்தை தரிசித்த பின்னர் வியாக்கிரபாத முனிவர் தலயாத்திரை செய்து, ஈற்றில் திருச்செந்தூருக்கும் வந்து வந்தனை புரிந்தாராம்.

திருமுருகாற்றுப்படை

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான்பின் செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே.

- நக்கீரர் -

கோவில் அமைப்பு:

திருச்செந்தூரில், நீலக் கடல் நிறைந்த இயற்கை வனப்பு மிகுந்தது. அதிகாலையில் சிவந்த நிறத்தில் வெய்யோன், நீல வானத்தில் உதயமாகும் காட்சி, செவ்வேள் நீல மயில் மீது அமர்ந்து வீதி உலா வருவது போன்றிருக்கும். செந்தூரில் அதி காலையில், சங்குகள் முழங்கும், கடலோர ஆலய வீதியைச் சுற்றிச்சுற்றி உலாவிவரும் நீல மயில்கள் தோகை விரித்தாடும் காட்சி காணக்கரியது. ஆலய இராஜகோபுரத்தில் வேல்வடிவில் அமைக்கப்பட்டுள்ள தீப அலங்காரம் பல கல் தொலைவிற்குத் தெரிகிறது. கடலிலும் பலகல் தொலைவிற்கு திருச்செந்தூர் திருவிளக்குத் தெரியும். பரப்பளவு அதிகமாகவுள்ள திருத்தலங் களில், திருச்செந்தூரும் ஒன்றாகும். மேற்குத்திசையிலும் எழில் மிக்க சிற்பங்களைக் கொண்ட ஒன்பது நிலை இராஜகோபு ரத்துடன் திருச்செந்தூர் திகழ்கின்றது. இந்த மேலைக் கோபுரம், 17ம் நூற்றாண்டில், திருவாவடுதுறை ஆதீனமுதல்வரால் அமைக் கப்பட்டது. 137' உயரமான கோபுரம். ஆனால், மேலைக்கோபுரம் உக்கிர பாண்டியனால் கட்டப்பட்டது என்பாரும் உளர்.

மலைச்சுற்று எனப்படும் செந்தில் ஆண்டவனின் ஆலயத் தின் மூன்றாவது வெளிப்பிரகாரம், கோவிலைச் சுற்றி கடற்கரை யோராக உள்ளது. இப்பிரகாரத்தின் வடபால் ஓங்கி உயர்ந்த குன்றைக் குடைந்து வள்ளியம்மன் ஆலயம் அமைத்துள்ளனர். இது குடவரைக் கோயிலாகும். இங்கே உள்ள குகையின் முற்பக்கத்தில் ஓர் அழகிய 16 கால் மண்டபம் அலங்கரிக் கின்றது. இந்தக் குகையின் புறப்பகுதி இப்போது வள்ளி ஒழித்த வளநாடு என அழைக்கப்படுகின்றது. இந்த நகருக்கு அருகில் உள்ள புன்னைக்காயல் என்னும் இடத்தில் தாமிரபரணி ஆறு கடலில் சங்கமிக்கிறது. இரண்டாம் பிரகாரத்தில் உள்ள தூண் களில் சிறந்த சிற்பங்கள் காணப்படுகின்றன. இந்தப் பிரகாரத்தின்

மேற்குப் பகுதியில் சித்திவிநாயகர், சகஸ்ரலிங்கம், சூரசங்காரர், ஆன்மநாதர், மனோன்மணி அம்மன், பானுகேஸ்வரர், சோமசுந்தரர், மீனாட்சி அம்மன், ஸ்ரீமூலநாதர், திருக்காளத்தி ஈஸ்வரர், உமாமகேஸ்வரர். அருணாசலேஸ்வரர், உண்ணாமுலையம்மன், ஜம்புகேஸ்வரர், வன்மீகநாதர், அருணகிரிநாதர், வல்லபகணபதி ஆகியோரின் சந்நிதிகள் உள்ளன. மயில்மீது அமர்ந்த கோலத்தில் ஆறுமுகப்பெருமான் சூரபத்மனுடன் போர் செய்வதாகவும், எதிரே சூரபன்மன் மார்பில் வேல் பாய்ந்திருப்பதாகவும், சூரன் பின்னர் பயங்கரமாக சேவல் உருவில் எம்பெருமானை எதிர்த்துப் பாய்ந்து வருவதாகவும், வடிக்கப்பெற்றுள்ள இந்தக் கருத்துப் பொதிந்துள்ள சிற்பம் சிற்பக் கருவூலமாகும்.

இரண்டாம் பிரகாரத்தில் இருந்து, தென்பக்கமாக முதற் பிரகாரத்திற்குச் செல்லும் வாயிலை, நவவீரர்களுள் இருவராகிய வீரகேசரியும், வீரமார்த்தாண்டாரும் காவல் செய்கின்றனர். உட்புகுந்த உடன் முதலில் தெற்கில் குமாரவிடங்கப்பெருமான் வள்ளி தேவசேனா தேவியர்களுடன் தரிசனம் தருகிறார். இப்பிரகாரத்தின் தென்மேற்குப் பகுதியில் வள்ளியம்மனுக்கும், வடமேற்குப் பகுதியில் தேவசேனை அம்மனுக்கும் பளிங்குக் கற்களாலான தனிக்கோவில்கள் உள. இப்பிரகாரத்தின் மேற்குப் பகுதியில் சங்கரநாராயணர் காசிவிஸ்வநாதர், விசாலாட்சியம்மையார், வேதபுரீஸ்வரர், திருவாதபுரீஸ்வரர், நாகநாதசோமேஸ்வரரும், வடபகுதியில் மணிவாசகர், காரைக்கால் அம்மையார், சிவகாமியம்மன் சமேத நடராஜர், சனீஸ்வரர், பைரவர் சந்நிதிகள் உண்டு. அடுத்து மகாமண்டபத்துள் புகும்போது வள்ளி தேவசேனா தேவியருடன் கூடிய ஆறுமுகப்பெருமான் காட்சி தருகிறார். இரண்டாம் சுற்றில் கிழக்குப் பகுதியில் செப்புக் கொடிமரம் உள்ளது.

தூண்டுகை விநாயகர்:

திருச்செந்தூர்ப் பெருந்தலத்தை முருகன் அடியார்கட்கு வழிகாட்ட, கடற்கரைப் பாதையில் தூண்டுகை விநாயகர் கோவில் கொண்டு உள்ளார். இந்த விநாயகரை நாம் வணங்கிக் கொண்டு, திருமுருகன் ஆலயத்திற்குச் செல்வோமாக! தூண்டுகைப் பிள்ளையார் கோவிலிலிருந்து செந்திற்குமாரன் ஆலயம் வரை, கல் மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. செந்திற்குமரன்

ஆலயம் செல்லும் அடியார் திருக்கூட்டம் வெயில், மழையால் பாதிப்புறாவண்ணம் செல்ல நீளமான கல் மண்டபம் நிர்மாணிக் கப்பட்டுள்ளது.

செந்திலாண்டவன்

சூழுதல் வேண்டுந் தாள்க
டொழுதிடல் வேண்டு மங்கை
தாழுதல் வேண்டுஞ் சென்னி
குதித்திடல் வேண்டுந் தாலு
வாழுதல் வேண்டுந் தீமை
யகன்றுநா னிவற்கா ளாகி
வாழுதல் வேண்டு நெஞ்சந்
தடுத்தது மான மொன்றே.

- சூரபன்மன் வதைப்படலம் -

தாலு - நா

ஞானத்தின் திருவுருவாய் காக்குங் கடவுளாய், கடலோ ரத்தில் காட்சி தருகிறார் கந்தக்கடவுள். கருங்கல் திருவுருவாய், கிழக்கு நோக்கி நிற்கும் மூலவர்தான் பாலசுப்பிரமணியர். இவரே சூரசம்மார மூர்த்தி! திருக்கரத்திலே வேல் தாங்கி, திருமார்பிலே நவமணிகள் பதித்த வைரக்கிரீடம் ஒளிவீச, திருச்செவிகளிலே மகர குண்டலங்கள் அசைந்தாட, கழுத்திலே முத்துமணி மாலை கள், நவரத்தின தண்டைகள், அரையில் உள்ள கிண்கிணிகள் யாவும் இசைவிருந்து தர, திருநெற்றியிலே திருவெண்ணீறு பொலிந்து துலங்க, சூரனை வென்றுவந்த நிலையில், கருவறை யில் எழுந்தருளி அபயம், வரதம், உருத்திராக்கம், புஷ்பம் விளங்கும் திருக்கரங்களுடன், சிவபூசை செய்யும் தியானத் திருக்கோலத்தில் செந்தில் ஆண்டவனைக் காணமுடிகிறது. மூலவருக்கு முன்னுள்ள அர்த்த மண்டபத்தில், நவவீரர்களில் இருவராகிய வீரவாகுதேவரும், வீரமகேந்திரரும் காவல் செய்ய, செந்தில் ஆண்டவன் கடற்கரையிலே ஆண்டியாகக் காட்சி தருவதால், இருபுறமும் வேழ மங்கையான தெய்வயானையும், குறவள்ளியும் அருகில் இல்லை. ஆனால் ஞான சக்தியாகிய வேலேந்திய கையுடன் காட்சி தருகிறார். செந்தில் ஆண்டவ னுக்கு இடதுபுறம் சிவலிங்கத் திருமேனி உள்ளது. தாயான

சிவசங்கரி, மனம் குழைந்துருக, முத்தம் தர, அடி மேலடி வைத்து வரும் பாலமுருகனை, அருணகிரியார் உள்ளம் உருகிப்பாடு கிறார். அருணகிரிநாத சுவாமிகள் திருச்செந்தூர் வரமுன், திருவண்ணாமலையில் முருக பக்தியை வளர்த்தவர். திருச்செந் தூரில் ஆதியில் அமைந்திருந்த மூலவரின் சிலையை, கி.பி 1648இல் டச்சுக்காரர் உடைத்துவிட்டனர். இத்தகைய மூர்த்தி அமைப்பு தமிழ்நாட்டில் வேறு எங்கும் இல்லை. திருச் செந்தூ ரின் காவல்தெய்வம் வீரவாகுதேவர். ஆகவே இந்தத் தலமும், இந்தத் தலத்தைச் சுற்றியுள்ள நகரும், வீரவாகுப் பட்டினமாகும். வீரவாகு தேவருக்கு பூசைநடந்தபின், மூலவருக் குப் பூசை நடைபெறுகிறது. வீரவாகு தேவருக்குச் சர்க்கரை, தேங்காய்த் துருவல் கலந்த பிட்டு அமுது படைப்பர். செந்தில் ஆண்டவனின் இருப்பிடம் ஆலயத்தில் படிப்படியாக கீழே மிகவும் தாழ்ந்த இடத்தில் அமைந்துள்ளது. இவ்வாறான அமைப்பு மனிதன் அடக்கமாக வாழவேண்டும் என்ற உன்னத இலட்சி யத்தை எடுத்துக்காட்டுகிறது. செந்திலதிபரை திருநீற்றுத் திரு முழுக்கில் காணக் கண்கோடி வேண்டும். செந்தில்குமரனின் அறையிலே கோவில் கருவூலம் உள்ளது. காலை 6.45இல் இருந்து இரவு 9.30 மணிவரை மூலவருக்கு 9 காலப்பூசை நடை பெறும். பள்ளியறைத் தீபாராதனை இரவு 10.00 மணிக்கு இடம் பெறும். விஸ்வரூபக் காலைப்பூசை 5.30 மணிக்கு அதிகாலை யில் நடைபெறும். இந்தப்பூசை மிகவும் சிறப்பாக இருக்கும். கார்த்திகை மாதத்தில் சுப்பிரமணியர் சந்நிதியில் பசு நெய்யில் விளக்கு இடுவோர், முத்தி அடைவர் என்னும் நம்பிக்கை எம்மவ ரிடம் உண்டு. முருகனுக்குரிய பிரசாதம் சர்க்கரைப் பொங்கல், கற்கண்டுப் பொங்கல், புளியோதரை, கடலைப்பருப்பு தாளிதம், வடை, பூம்பருப்புப் போன்றவையாகும்.

ஆறுமுகப்பெருமான்

பன்னிரு கரத்தாய் போற்றி பசுப்பொன்மா மயிலாய் போற்றி
முன்னிய கருணை யாறுமுகப்பரம் பொருளே போற்றி
கன்னியர் இருவர் நீங்காக் கருணைவா ரிதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணு ளிருக்குமா மணியே போற்றி

- திருச்செந்தூர்த் தலபுராணம்

ஆறுமுகப்பெருமான் திருச்செந்தூரின் சிறப்பு மூர்த்தி, தென்திசை நோக்கி எழுந்தருளி உள்ளார். இருபுறமும் இச்சா சக்தியாகிய வள்ளியுடனும், கிரியாசக்தியாகிய தெய்வயானை யுடனும், செந்திலாண்டவனாகக் காட்சிதருகிறார். இத்திரு மேனியை நக்கீரர், அருணகிரிநாதர், குமரகுருபரர் சிறப்பித்துப் பாடியுள்ளனர். ஆறுமுகப் பெருமானின் பன்னிரு கரங்களிலும் விளங்கும் படைக்கலங்கள் வருமாறு: (கீழிருந்து மேலாக)

வலக்கைகள்	**இடக்கைகள்**
1. அபயம்	வரதம்
2. பாசம்	அங்குசம்
3. சக்கரம்	கோழி
4. குறுவாள்	கேடகம்
5. அம்பு	வில்
6. வேல் (ஞானாசக்தி)	வச்சிரம்

இரத்தினமயமான சிம்மாசனத்தில் தேவர்கள் புடைசூழ ஆறுமுகப்பெருமான் வீற்றிருந்தார். ஆறுமுகா அர்ச்சனை சிறப்பு அர்ச்சனை ஆகும். ஆறுமுகா அர்ச்சனையின்போது ஆறுவகை நிவேதனம் செய்து படைப்பர்.

கந்தரலங்காரம்

கொள்ளித் தலையில் எறும்பது போலக் குலையும் என்றன்
உள்ளத் துயரை ஒழித்து அருளாய் ஒருகோடி முத்தம்
தெள்ளிக் கொழிக்கும் கடல் செந்தில் மேவிய சேவகனே
வள்ளிக்கு வாய்த்தவனே மயில் ஏறிய மாணிக்கமே.

- அருணகிரிநாத சுவாமிகள்

திருவிழாக்கள்:

திருச்செந்தூரில்; திருவிழாக்கள் பக்தியும் பண்பாடும் பெருகவும், கலியுக வரதனாம் கந்தனை வந்தனை செய்யவும், வழிபடவும், அடியார் திருக்கூட்டம் கூடுவது ஆவணி, மாசி மாத மகோற்சவங்களில் ஆகும். 7ஆம் நாள் திருவிழாவன்று தங்கப் பல்லக்கில் செந்திலாண்டவன் முன்புறம் ஆறுமுகன் தோற்றத்தி லும், பின்புறம் நடராஜர் திருக்கோலத்திலும் தரிசனம் தருவது, கண்கொள்ளாக்காட்சியாகும். செந்திலம்பதியில் நடைபெறும்

திருவிழாக்களில் முருகப்பெருமான் திரு அவதாரத்தைக் குறிக்கும் வைகாசி விசாகமும் ஒன்றாகும். வைகாசித் திங்கள் சுக்கில பட்சத்து சஷ்டியில் வசந்தத் திருவிழா ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறும். வைகாசி விசாகத்தன்று வசந்த மண்டபத்தில் செந்திலாண்டவன் எழுந்தருளுவர். அன்று ஆயிரக்கணக்கான அடியார் திருக்கூட்டம் அணிதிரளும். கந்தனுக்கு காவடிகள், பாற்காவடிகள், கால்நடைக் காணிக்கைகள் கணக்கிலடங்கா. ஆவணித்திருவிழா அசுவதி நட்சத்திரத்தில் ஆரம்பமாகி 12 தினங்கள் இடம்பெறும். ஆடி அமாவாசையன்று தீர்த்தவாரியும், ஐப்பசி பிரதமையில் கந்தர் சஷ்டி உற்சவமும், 6ஆம் நாள் மாலை சூரசம்மாரமும், மறுநாள் திருக்கல்யாணமும் இடம் பெறும். சூரபத்மனை அழித்து ஆட்கொண்ட கந்தசஷ்டி விழா மிகவும் முக்கியமானவை. அத்தோடு சித்திரை விஷு புண்ணிய நாளில் முருகனுக்கு அன்னாபிஷேகம் நடைபெறும். செந்திலம் பதியை அடைவார்க்கு நித்திய வாழ்வு, நோயற்ற வாழ்வு, நிறை செல்வம் அனைத்தும் கிட்டுமாம். செந்திலம்பதியைத் தரிசிக்க வரும் அடியார்கட்கு தங்க மடம், சிறுவர்நல மையம், நூல் நிலையம், அன்னதான மண்டபம், விபத்துச் சிகிச்சை, தேவஸ் தானச் சார்பில் நடைபெறுகிறது. மேலும் சிறிய நலிந்த கோவில் கட்கு உதவி, இலவச சித்த வைத்தியம், அஞ்சல் நிலையம், காவல் நிலையம், முதியோர் இல்லம், வேத, தேவாரப் பாடசாலை, இலவசத் திருமணம், மாணவர்கட்கு மதிய உணவு வசதிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

முக்காணியப் பிராமணர்கள்:

சிவாச்சாரியார்களை முக்காணியப் பிராமணர்கள் அல்லது போற்றிமார் அல்லது பட்டர்கள் அல்லது செந்தில் ஈராயிரவர் என்றும் மிகக் கௌரவமாக அழைப்பர். சிலர் முன் குடும்பியுடன் திகழ்வர். இவர்களில் நிவேதனப் பொறுப்பாளரும் உளர். மேலும் சிலர் திருச்செந்தூர் வழிகாட்டியாகவும் செயற் படுவர். இன்னும் பலர் கோவில் திருப்பணியாளர்களாகவும், கருவூலப்பொறுப்பாளராகவும் இருக்கின்றனர். இந்த சிவாச்சாரி யார்கள் செந்திலாண்டவனின் தொண்டே பெரிதும் மேற்கொள் ளும் அந்தணராவர். இவர்களை முருகப்பெருமானே, இங்கு பணிபுரிய அழைத்து வந்ததாக புராண வரலாறுகள் கூறுகின்றன. இந்த முக்காணியப் பிராமணர்களே, மூலமூர்த்திக்குப் பூசை

செய்யும் போற்றிமார் ஆவர். அவர்கள் மங்களூரைச் சார்ந்த வர்கள். சிவாச்சாரியார்களின் வேள்விக்கூடம் கோவிலின் வட கிழக்கு மூலையிலுளது. போற்றிமாருக்கு தங்க, சமையல் செய்ய மடப்பள்ளி வசதி உண்டு.

கி.பி 1803இல் திருநெல்வேலியில் கலெக்டராக இருந்த லூஷிங்டன் பிரபு, திருச்செந்தூரில் முகாமிட்டு இருந்தார். அப்போது வசந்த மண்டபத்தில் ஆறுமுகப்பெருமான் எழுந்தருளி இருந்தார். கோவிலுக்கு வந்த பிரபு சுவாமிக்கு சாமரை வீசு வதைக் கண்டு கேலியாக உங்கள் தெய்வத்திற்கு வியர்வையும் உண்டோ? என்றார். "ஆம்" என்று பதிலளித்த பக்தர்கள், அதனை நிரூபிக்க அர்ச்சகர்களைக் கொண்டு இறைவனது மாலைகளைக் களைந்து கோடித் துணியை விக்கிரகத்தின் மேல் போர்த்து, அந்தத் துணி முழுவதும் சிறிது நேரத்தில் நனைந்ததைக் கண்ட ஆங்கிலத்துரை, செந்திலாண்டவர்மீது பக்தி, நம்பிக்கை கொண்டு பல வெள்ளிப்பாத்திரங்களைக் காணிக்கையாகச் செலுத்தினார்.

பன்னீரிலை விபூதி:

கி.பி. 17ஆம் நூற்றாண்டில் செந்திற்குமரன் கனவில் இட்ட கட்டளைப்படி திருச்செந்தூர் மேலைக்கோபுரம், திருவா வடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீதேசிகமூர்த்தி தம்பிரான் சுவாமி களால் நிர்மாணிக்கப்பட்டது. இறைவன் இட்ட கட்டளைப்படி பணியை நிறைவேற்ற, தம்பிரானிடம் போதிய பொருள் வசதி இருக்கவில்லை. ஆகவே கூலியாட்களுக்கு கூலிக்குப் பதிலாக செந்திலாண்டவனின் இலை விபூதியை, வேலை முடித்து வீட்டுக் குப் போகும்போது கூலியாட்களுக்குக் கொடுத்து தூண்டுகை விநாயகர் கோவிலைத் தாண்டிப் போய்த்தான், தான் பெற்ற விபூதிப் பிரசாதத்தைத் திறந்து பார்க்கவேண்டும் எனத் தம்பிரான் பணித்தார். கூலியாட்களும் அப்படியே செய்தனர். கூலியாட்கள் தம் கையைத் திறந்து பார்க்குங்கால், தத்தம் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் இருப்பதை ஒவ்வொருவருங் கண்டு மகிழ்ந்தனர். திருச்செந்தூரில் வேதங்களே பன்னீர் மரங்களாகத் தோன்றி, விபூதியையும் அதன் மேல் பெறும்படி செய்கிறது. இது செந்தி லோடு கலந்த நெடுநாளைய வழக்கம்.

வந்த வினையும் வருகின்ற வல்வினையும்
கந்தனென்று சொல்லக் கலங்குமே செந்திநகர்ச்
சேவகா! என்று திருநீ (று) அணிவார்க்கு
மேவவா ராதே வினை.

தலப்பெருமை:

இரண்டாவது தமிழ்ச்சங்கம் இருந்த கபாடபுத்திரன், ஒரு பகுதியே திருச்செந்தூர். திருச்செந்தூரின் மறுபெயர்கள் ஆவன:- செந்திற்பதி, திருச்சீரலைவாய், சந்தனசைலம், வீரவாகுப் பட்டினம், ஜெயந்திபுரம், ஸ்ரீசாந்திநகரம், சதுர்வேதி மங்கலம், அலைசெய்திருப்பதி, அலையெறி திருநகர் உயர்கரை, செந்தி மலை, வேலைநகர், இரண்டாவது படைவீடு, கந்தமாதனபர் வதம், திரிபுவனமாதேவி எனப் பல. நக்கீரர் இத்தலத்தை திருச் சீரலைவாய் என்றார். கல்வெட்டுகள் திருச்செந்தூர், திரிபுவன மாதேவி, சதுர்வேதி மங்கலம் எனக் கூறுகின்றன. அலைவாய் என்றார் பரணர். கந்தப்புராணம் கந்தமாதனபர்வதம் என்கிறது. கச்சியப்பர்; செவ்வேளே சிவபெருமானை வழிபட இக்கோவிலை அமைத்தார் என்கிறார்.

திருச்செந்தூர்த்தல புராணம்:

சுமார் 300 ஆண்டுகளுக்கு முன், திருச்செந்தூர் ஆலய மடப்பள்ளியில் பணிபுரித்தவர் வென்றிமலை. இவர் தனது சமையற் பாகசாலையில் செய்த தவறுக்காக, ஆலய நிர்வாகம் தண்டித்தது. இதனால் அவமானமடைந்த வென்றிமலை, மனமிக நொந்து உயிர் துறக்க எண்ணி, கடலில் குதிக்க கந்தவேள் தோன்றி இவரை மீட்டு எடுத்து கல்வி அறியாத இவரை கவிராயராக மாற்றி, தனது "திருச்செந்தூர்த்தல புராணம்" பாட வைத்தார். இந்தத் திருச்செந்தூர்த் தலபுராணம், படித்தும் பயன் சொல்லும் மரபை, யாழ்ப்பாணம் பௌராணிகர் (புராணம் பயன் சொல்பவர்) இன்றும் பாதுகாத்து வருவது பெருமைக்குரியது.

கௌமாரம்:

இந்துமதம் பரந்த விரிந்த வழிபாடுகளையுடையது. சிவ வழிபாடு சைவம் என்றும், கணபதி வழிபாடு காணாபத்தியம் என்றும், சக்தி வழிபாடு சாக்தம் என்றும், விஷ்ணு வழிபாடு

வைஷ்ணவம் என்றும், சூரிய வழிபாடு சௌரம் என்றும் முருகவழிபாடு கௌமாரம் என்றும் கொள்ளப்படும். ஆகவே முருகப்பெருமானை, பரம்பொருள் என்று போற்றுவோரின் வழி பாடே கௌமாரம் எனப்படும். முருகப்பெருமான் பெரும்பாலும் மலைகளில் கோவில் கொண்டு இருப்பதால், மலை வாழ் மக்கள் தங்களுக்கு உரிய தெய்வமாக முருகப்பெருமானை உரிமை கொண்டாடுவர். செவ்வேளுக்கு ஆறுபடை வீடுகளுண்டு. அவையாவன: திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமி மலை, திருத்தணி, பழமுதிர்ச்சோலை என்பனவாம். இந்த ஆறு படை வீடுகளைவிட, முருகப்பெருமானுக்கு சுருளிமலை, இலஞ்சி, குன்றக்குடி, விராலிமலை, வயலூர், வைத்தீஸ் வரன் கோவில், இலங்கையில் கதிர்காமம், நல்லூர், மண்டூர், செல்வச்சந்நிதி எனப் பல உண்டு. படைவீடு என்றால் மன்னன் ஒருவன் போருக்குப் புறப்படுமுன் எதிரி நாட்டின் வழியில் போர்க்க ருவிகளை வைத்துப் பூசை செய்து வணங்கிப், பின்னர் போருக் குப் புறப்படுதல் வழக்கு. "படைப் பற்று" எனவும் கல்வெட்டுக் களில் காணலாம். இது படைவீரர் வாழும் ஊர். அதாவது அரசன் தன் படைகளுடன் தங்கி இருக் கும் இடம். இந்த வகையில், சூரனுடன் போருக்கும் புறப்படு முன் முருகப்பெருமான் தங்கி இருந்த இடம் திருச்செந்தூராகும். இது முருகனின் இரண்டாவது படைவீடாகும். இளமை மாறாத அழகுத் தெய்வமான முருகன் சிக்கலில் சிங்கார வேலனாக, உமை அம்மையிடம் வேல் தாங்கி, சூரனை வதம் செய்தார்.

மண்டபங்கள்:

தெய்வயானை திருமண மண்டபம், மேலைக்கோபுர வாயிலுக்கு மேற்கே உண்டு. ஐப்பசி மாதத்தில் தெய்வயானை திருக்கல்யாணம் நடைபெறுகிறது. இந்த மண்டபம்தான் வசந்த மண்டபம், திருமண மண்டபத்திற்கு மேற்கே அமைந்துள்ளது. 120 தூண்களைக் கொண்டது. இந்த மண்டபத்தில் சித்திரை, வைகாசி மாதங்களில் வசந்தவிழா நடைபெறும். சண்முகவிலாசம், மத்தியில் மண்டபம், மண்டபத்தைச் சுற்றி தூண்களே இல்லாத அமைப்புமுறை, சிறந்த பொறியியல் நுட்பம், வேளாண் மக்கள் தங்கள் நன்செய், புன்செய் நிலங்களில் விளைந்தவற்றை இங்கே இறைவனுக்கு காணிக்கையாகச்

செலுத்துவர். சஷ்டி மண்டபம் சண்முக விலாசத்திற்கு கிழக்கே, சென்ற நூற்றாண்டின் இறுதியில் 1971இல், திருவாவடுதுறை ஆதீனத்தால் உருவாக்கம் பெற்றது. கந்தர் சஷ்டியின்போது மாலையில் செந்திலாண்டவன் இங்கே எழுந்தருளுவார். வள்ளி யம்மை குகை, இங்கே தான் வள்ளியம்மை ஒளிந்திருந்தார். வள்ளியின் தந்தையோடு, முன் பொருதியபோது முருகன் வள்ளியை இந்தக் குகையில் தான் ஒளித்திருக்குமாறு கூறினார். கலை அரங்கம் மிக அண்மையில் 1973இல், சிங்கப்பூராரின் நன்கொடையில் அமைக்கப்பட்டது. மகோற்சவ காலங்களில் விரிவுரைகள், இசை, நாட்டிய வில்லிசை நிகழ்வுகள் இங்கே இடம்பெறும். ஆனந்த விலாசம், கலை அரங்கத்திற்கு நேர் எதிரே உளது. மணல் மேட்டில் அமைந்துள்ளது. சூரபன்மன் நகரை இங்கே நின்று செவ்வேள் கண்டாராம். சிபலி மண்டபம் தான் கோவிற் களஞ்சியம். இதன் தூண்களில் யானைகள் தாங்கும் அழகிய ஓவியங்களைக் காணலாம். மேலும் சந்தனம் அரைத்தல், சோற்றுத்தளிகை வழங்குவதும் இங்கே தான்.

மாப்பாடு:

சூரனை படுத்த (கொன்ற) இடம்தான் இந்த மாப்பாடு. மாமரமாக உருமாறிய சூரபத்மனை, கந்தவேளின் வீரவேலால் பிளவுபடுத்திய இடம்தான் இந்த மாப்பாடு. திருச்செந்தூரிலிருந்து 6 கல் தொலைவில் இருக்கிறது இந்த ஊர். இது ஓர் கடற்கரை ஓரத்தலம். தற்போது மணப்பாடு என மருகிவிட்டது. இப்போது இங்கே கத்தோலிக்க சேர்ச் உண்டு. மாப்பாட்டில் மாமரமாக உருமாறிய சூரன், இறந்து போனதால் மாமரங்கள் உண்டாவ தில்லை.

தீர்த்தங்கள்:

சண்முகவிலாசத்திலிருந்து நடைபாதையாகச் சென்றால் கடலோரமுளது, நாழிக்கிணறு என்னும் தீர்த்தம். கந்தவேள் தன் படைவீரர் தாகம் தணிக்க, வேலால் இங்கே குத்தினார் எனத் தலபுராணம் கூறுகிறது. இந்தத் தீர்த்தம் இனிமையான வற்றாத நீரூற்று. அடுத்து மூலவருக்கு நேராக கடலில் அமைந்துள்ளது, முகாரம்பம் என்னும் தீர்த்தம். முகாரம்பம் கடலாகையால் நீராடு தல் இயலாது. மேலும் இத்தத் தலத்தைச் சுற்றி 24 தீர்த்தங்கள்

உளது. இவை காயத்திரீ மகா மந்திரத்தின் 24 எழுத்துக்களை யும் குறிக்கும் என்பர்.

ஆதிசங்கரர்:

கி.பி 6ஆம் நூற்றாண்டில் அவதரித்த ஆதிசங்கராச்சாரிய சுவாமிகள் ஷண்மத தாபனம் செய்து வரும்போது, அவரிடம் பொறாமை கொண்ட அபிநவகுப்தன், ஆதிசங்கரர் மீது அபிசாரம் என்ற சூனியப் பிரயோகம் செய்து, காசநோயை ஏற் படுத்தினான். அந்த நோயால் அவதியுற்ற சங்கரர், திருக்கோகர் ணத்தில் வழிபடும்போது, "செந்தில் சென்று கந்தனை வழிபட் டால் நோய் தீரும்" எனச் சிவபெருமானால் அறிவுறுத்தப்பெற்று, திருச்செந்தூர் வந்து அடைந்தார். அதிகாலை ஆலயத்தில் சுப்பிரமணிய மூர்த்திக்கு புஜங்களில் அணிய; என்று அருமை யான பாமாலை இயற்றியதும் முருகன் அருளால், நோய் குண மடைந்து ஆனந்தமுற்றார். இந்த அரிய பாமாலை 33 பாடல் களைக் கொண்டது. 3+3 இலக்கங்களைக் கூட்டினால் ஆறுமுக னுக்கு உகந்தது. ஆறு என்றே வருகிறது.

திருமுருகாற்றுப்படை:

சைவத்திருமுறைகளுள் திருமுருகாற்றுப்படை 11ஆம் திருமுறையாகும். இதை இயற்றியவர் நக்கீரர் ஆவார். சங்கம் மருவிய நூல்கள் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினென்கீழ்க் கணக்கு என்பனவாம். பத்துப் பாட்டுள் முதலாவதாக அமைந்தது திருமுருகாற்றுப்படை ஆகும். இதனை புலவரலாற்றுப்படை என்றுங் கூறுவர். உரை கண்டவர் பலர். கடைச்சங்கப் புலவர்கள் நாற்பத்தொன்மரில் முதன்மைப் புலவர் நக்கீரர் ஆவார். நக்கீரர் ஒரு பூதத்தால் சிறைப்பட்டிருந்தபோது திருமுருகாற்றுப்படை பாடி, முருகன் அருளால் சிறையில் இருந்து விடுதலை அடைந் தது சரித்திரம். திருமுருகாற்றுப்படை என்னும் இந்த நூல் முருகன் அருள்பெற்ற சான்றோர் ஒருவர் வீடு பெறுவதற்கு தகுதி வாய்ந்த ஓர் இரவலனை முருகனிடத்தில் ஆற்றுப்படுத்துவ தாகவே அமைந்துள்ளது.

திருச்சீரலைவாய்:

அந்தணர் வேள்வி ஓர்க்குமே ஒருமுகம்
எஞ்சிய பொருளை ஏமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே, ஓர் முகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே - ஒருமுகம்

- நக்கீரர்

திருச்செந்தூர் மீது பாடியவை:

பிரபந்தங்கள், திருப்புகழ், பிள்ளைத்தமிழ், பஞ்சாமிர்த வண்ணம், நொண்டி நாடகம், செந்திற் கலம்பகம், தலபுராணம், யமக அந்தாதி, கந்தரலங்காரம், பரணி, கோவை, சந்தமஞ்சரி, கீர்த்தனை, சுப்பிரபாதம், இருபாஇருப.்.து, மாலை, அகவல், பள்ளு, குறவஞ்சி, பதிகம், வெண்பா, விருத்தம், கும்மி எனப்பல நூல்கள்.

கல்வெட்டுக்கள்:

திருச்செந்தூர்க் கோவில் வரலாறுகளை கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகிறது. திருச்செந்தூரில் கந்தவேள் தன் படைகளுடன் தங்கி இருந்ததால் இது படைவீடாகியது. ஆதியில் மூலவர் கோவில் கொண்டு இருந்த இடம் கந்தமாதனபர்வதம் என்றும், சந்தனசைலம் என்னும் மணற் குன்றைக்குடைந்து கட்டப்பட்டதாகும். காலகெதியில் பாண்டிய சேர மன்னர்களால் இத்திருப்பணி நடைபெற்று இருக்கிறது. ஆலயத்திற்கு அளிக்கப் பட்ட நிவத்தங்களைப் பற்றிய பாண்டியர் கல்வெட்டுக்கள், கோவிலில் இன்றும் காணப்படுகின்றன. கல்வெட்டுக்கள் இரண் டாம் சுற்றுப்பிரகாரத்தின் தென்கிழக்கு வாயிலின் அருகே உளது.

1. திருச்செந்தூர்க் கருவறை சுமார் 2000 ஆண்டு பழமை வாய்ந்தது. உக்கிர பாண்டியனே இக்கோயிலைக் கட்டி னான். போற்றிமார் சமையல் செய்ய மடப்பள்ளி கட்டிய செய்தியையும் இக்கல்வெட்டுக் கூறுகிறது.

2. இரண்டாம் வரகுணபாண்டியன் கி.பி 875இல் 1400 பொற்காசு களை வட்டிக்குக் கொடுத்து திருச்செந்தூர்க் கோவில் பூசை, திருவிழாக்கள் தடங்கலின்றி நடைபெற ஆவண

செய்தான்.

3. மாறவர்மன் கல்வெட்டு கி.பி 1282படி இந்தப் பாண்டியன் நந்தா விளக்குப்பணிக்கு ஏற்பாடு செய்தான்.

4. விக்கிரம பாண்டியத் தேவர் (கொல்லம் 621) நக்கீர தேவருக்கு தனிப்பூசை செய்ய நிலம் விலைக்கு வாங்கி விட்டான். ஆழ்ந்த தமிழ்ப் பற்று மிக்கவன்.

5. கி.பி 1648இல் டச்சுக்காரர் திருச்செந்தூர்க்கோவிலை கொள்ளையிட்டு, உலோகப் படிமங்களை இலங்கைக்கு எடுத்துச் சென்றனர்.

கி.பி 1651இல் திருமலை நாயக்கர் பிரதிநிதி இலங்கை சென்று இந்தத் திருமேனிகளை மீட்டுவந்தனர், என்ற செய்தியை திருமலை நாயக்கர் கி.பி 1653 கல்வெட்டு கூறுகிறது.

பகழிக்கூத்தர்:

இவர் பெரும் புலவர். அத்தோடு வைஷ்ணவப் பெரியார், சேதுமன்னர் ஆட்சிக்கு உட்பட்ட சதுர்வேதி மங்கலத்தைச் சார்ந்தவர். நான் மறைகளில் வல்லவர், இவர் வயிற்றுவலியால் அவதிப்பட்டபோது கந்தவேள் இவர் கனவில் தோன்றி தன்மீது "பிள்ளைத்தமிழ்" பாடும்படி பணிக்க "திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ்" பாடினார். நோய் குணம் பெற்றது. செந்திலாண்டவனுக்கு பிரியமான இப்பிள்ளைத்தமிழ், தினந்தோறும் பூசை முடிவில் ஓதுவார்களால் திருப்புகழோடு சேர்த்துப் பாடப்படுகிறது. பிள்ளைத்தமிழ் என்பது இறைவனையோ, மக்களில் மாண்புற் றோரையோ, பிள்ளைப்பருவத்தில் வைத்துப் பிள்ளைப்பருவ நிலைகளைச் சுவைபடப் புகழ்ந்து பாடுவதாகும். பகழிக்கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழைப் பாடியபின், செந்தூர் முருகனை வணங்கி, அவனது சந்நிதியிலே புலவர்கள், அடியார் கள், முக்காணியர்கள் கூடியிருக்க, அரங்கேற்றம் நிகழ்ந்தது. பகழிக்கூத்தர் வைஷ்ணவர் என்ற காரணத்தால், கூடிய சபை பாராமுகமாக இருந்தது. ஆனால் ஞான பண்டிதராகிய முருகன், பகழிக்கூத்தருக்கு மற்றவர் அறியாவண்ணம் தமது மார்பிலிருந்த விலை உயர்ந்த மாணிக்கப் பதக்கத்தைக் கொண்டு வந்து நித்திரையில் இருந்த பகழிக்கூத்தரின் மார்பில் அணிந்துவிட்டார். மறுநாள் திருவனந்தல் பூசையின்போது, அந்தப் பதக்கத்தைக்

காணாத பெரியவர்கள் ஊரெங்குந்தேடி காணதவராய், கூத்தர் மார்பில் இருக்கக் கண்டு, இதைச் செய்தவர் செந்திலாண்டவனே என்று வந்து, பகழிக்கூத்தரை வணங்கி, பொறுத்தருள வேண்டி பல்லக்கி லேற்றி, மேள வாத்தியம் முழங்கப் பரிசுகள் வழங்கி நகர் வலஞ்செய்து திருநீறு, தீர்த்தம் வழங்கி, மாலை அணிந்து வரவேற்றனர்.

பிள்ளைத்தமிழ்:

1. காப்புப்பருவம் என்பது 2ஆம் திங்களில் குழந்தையைக் காக்க இறையருள் வேண்டிப் பாடுவது.
2. செங்கீரைப் பருவம் என்பது 5ஆம் திங்களில் கை, கால் நீட்டி தலை நிமிர்த்த வேண்டிப் பாடுவது.
3. தாலப்பருவம் 7ஆம் திங்களில் தாலாட்டைக் கேட்கும் பருவம் பாடுதல்.
4. சப்பாணிப் பருவம் 9ஆம் மாதம் இரு கை சேர்த்துக் கொட்டச் சொல்லிப் பாடுதல்.
5. முத்தப் பருவம் 11ஆம் மாதம் முத்தம் தரவேண்டிப் பாடுதல்.
6. வருகைப்பருவம் 13ஆம் மாதம் மெல்ல மெல்ல நடந்து வரப்பாடுதல்.
7. அம்புலிப் பருவம் 15ஆம் மாதத்தில் நிலவுடன் விளையாட அழைத்தல்.
8. சிற்றிப் பருவம் 17ஆம் மாதம் மணலால் சிறுவீடு கட்டல்.
9. சிறு பறைப்பருவம் 19ஆம் மாதம் சிறுபறை கொட்டும் பருவம்.
10. சிறு தேர்ப்பருவம் 21ஆம் மாதம் சிறுதேர் உருட்டி விளை யாடல்.

குமரகுருபரர்:

குமரகுருபரர் வாழ்ந்த காலம் ஏறத்தாழ 300 ஆண்டுகட்கு முன். திருநெல்வேலியிருந்து 18 மைல் தூரத்திலுள்ள ஸ்ரீ கைலாசத்தில் சண்முகக் கவிராயருக்கும், சிவகாமசுந்தரி அம்மை

யாருக்கும் தவப்புதல்வராக அவதரித்தவர், குமரகுருபர சுவாமிகள். இவர் 5 வயதுவரை வாய்பேசாத நிலையில் இருந்த வர். கவலை அடைந்த பெற்றோர் ஈற்றில் செந்திலாண்டவனே கதியென திருச்செந்தூர் சென்று ஆலயத்தின் முன்னுள்ள சண்முக விலாசமண்டபத்தில் விரதமிருந்தனர். செந்தூர் முருகன் ஒருநாள் இரவு அர்ச்சகர் வடிவில்தோன்றி, வாய்பேசாத பிள்ளை யின் நாவில் தனது வேலினால் எழுதிக்கவிபாடும் வல்லமையை அளித்தார். பூ ஒன்றினைக் காட்டி இது என்ன? எனக் கேட்டதும் "பூ" என்று வாய்திறந்து பேசினார். அத்தோடு வாய்பேசாத பிள்ளை பேசியது. அடுத்து அச்சொல்லையே முதலாகக் கொண்டு "பூமேவு செங்கமலப்புத்தேளும்" எனத் தொடங்கும் பாடலைப் பாடிப் பின் பல பாடல்களைப் பாடினார். சைவ சித்தாந் தத்தின் சாரம் என்றும் குட்டிக் கந்தபுராணம் என்றும் போற்றப் படும் கந்தர்கலி வெண்பாவையே தனக்கு அருள் செய்த முருகன்மீது பாடியது அக்குழந்தை. குமரகுரபரர் பாடியுள்ள பக்திச் சுவைமிக்க பிரபந்தங்கள் பல. கந்தர் கலி வெண்பா 122 கண்ணிகளை உள்ளடக்கியது. முருகன் பெருமை, அவன் அருள் புரியும் முறை, முருகன் தோற்றம், அவனது திருவிளை யாடல், சூரனை வென்றது, அருள் புரிந்தது, யாவும் கற்குந் தோறும் வெல்லம் போல இனிக்கும். குமரகுருபரர் மதுரை சென்று மீனாட்சி மீது பிள்ளைத்தமிழ் பாடினார். அப்போது அம்பிகை சிறு குழந்தையாக வந்து. திருமலை மன்னனின் கழுத்திலிருந்த முத்து மாலையை எடுத்து, சுவாமிகளின் கழுத்தில் அணிவித்துப் பாராட்டினார்.

வடமலையப்ப பிள்ளையன்:

திருநெல்வேலி மாவட்டத்தை, 17ஆம் நூற்றாண்டின் மத்தியில் மதுரையிலிருந்த நாயக்கமன்னரே ஆட்சி புரிந்தனர். அப்போது வடமலையப்ப பிள்ளையன் நாயக்க மன்னரின் செயலாளராக இருந்தார். பிள்ளையன் சிறந்த முருகபக்தர், நற்புலவருங்கூட. நாயக்க மன்னரிடம் பெரிய அளிவல் கடற்பரை இருக்கவில்லை. இக்காலத்தில் இந்தியாவிற்குள் புகுந்திருந்த டச்சுக்கார வியாபாரிகள், திருச்செந்தூர்க் கோயிலுக்குள் புகுந்து, அங்கிருந்த ஆறுமுகசுவாமியின் விக்கிரகத்தை கட்டித் தங்கம் என்று கருதி, கொள்ளையடித்துச் சென்றதும், புயல்வீச, கடல் கொந்தளிக்க, கப்பல் தத்தளிக்க, பயந்த பரதேசிகள்,

ஆறுமுகப்பெருமானின் விக்கிரகத்தை அலைகடலில் வீசினர். இயற்கையின் சீற்றம் இதனால் தணிந்தது. இந்த நிகழ்வு 1648இல் நிகழ்ந்தது. இதனை ஒரு டச்சுக்கார மாலுமி சொல்லக் கேட்ட, எம். ரெனல் என்ற பிரேஞ்சு ஆசிரியர், தான் 1785இல் ஜேர்மனியில் பேர்லின் நகரில் வெளியிட்ட சரித்திர இந்தியா, என்ற நூலில் எழுதியுள்ளார்.

காலங்கடந்தது, ஆறுமுகப் பெருமான் ஐந்து ஆண்டுகள் வரை, கடலில் பள்ளிகொண்டார். திருமலை நாயக்க மன்னனின் செயலர் பிள்ளையன், வேறுவிக்கிரகம் செய்ய முயன்றனர். ஆறுமுகப்பெருமான், செயலர் பிள்ளையன் கனவில் தோன்றி, தான் கடலில் இருப்பதாகவும், கடலில் சிறிது தூரம் வந்ததும், வானத்தில் கருடன் வட்டமிடும், எலுமிச்சம்பழம் மிதக்கும் என்று கனவில் கூறியதும் பேரானந்தம் அடைந்தார், வடமலையப்பன் உடன் ஒரு சிலரைக்கூட்டி, வள்ளம் ஏறி பக்திப் பெருக்கால் குறித்த இடத்தில் குதித்தார். பிள்ளையன் முதலில் நடராஜர் திருவுருவையும், பின்னர் ஆறுமுகப்பெருமானின் திருவுருவை யும், மீட்டு 1653இல் திருச்செந்தூரில் சேர்க்கப்பட்டது. பக்தர்கள் பரவசமாகினர். இன்றும் அத்திருவுருவையே நாம் திருச்செந் தூரில் காண்கின்றோம். இவ்வாறு கடலில் இருந்து எடுக்கப்பட் டதை கொல்லம் 829ஆம் ஆண்டு தை 29ஆம் நாள் வெள்ளிக் கிழமை என்பதை கோவிலில் உள்ள கல்வெட்டில் இன்றும் காணமுடியும். அ.·.து ஆங்கில வருடம் கி.பி. 1653 ஆகும். இதை உறுதி செய்ய திருச்செந்தூர் தலபுராணப்பாடல், சான்றாக அமைந்துள்ளது. வடமலையப்ப பிள்ளையன் அவர்கள் கோவில் வளாகத்தில் கட்டிய மண்டபத்தில், மாசி ஆவணித் திருநாட் களில் 7ஆம் நாள் அன்று ஆறுமுகப்பெருமான் எழுந்தருளி இருப்பது, பிள்ளையன் முருகப்பெருமான் பால் கொண்ட பக்திக்கு எடுத்துக்காட்டு.

வீரபாண்டியக் கட்டப்பொம்மன்:

இவன் பாஞ்சாலங் குறிச்சியின் குறுநில மன்னன். செந்திலாண்டவனே குலதெய்வம் என வாழ்ந்தவன். பாஞ்சாலங் குறிச்சியில் புரட்சி ஏற்பட்ட காலம் 1785 - 1801 வரை வந்தேறு குடிகளான வெள்ளையன் வரி வசூலிப்பதே அவனின் பிரதான

நோக்கமாக இருந்தது. தமிழ்நாட்டின் பாஞ்சாலங் குறிச்சிக்குள் வெள்ளையன்படை புகுந்தது. 3ஆம் கட்டப்பொம்மன் பணிய வில்லை. முற்றுகையின் போது பீரங்கிகள் நாள் முழுவதும் முழங்கின. குண்டுகள் வீசியதால் பாஞ்சாலங்குறிச்சி தகர்ந்தது. எதிரி நுழையமுன் மன்னனும் படைவீரரும் வெளியேறி சிவகிரி சென்றனர். சிவகிரியும் முற்றுகைக்குள்ளாயிற்று. 3ஆம் கட்டப் பொம்மன் மறைவிற்குப்பின், 4ஆம் வீரபாண்டியக் கட்டப் பொம்மன் பட்டத்திற்கு வந்தான். மீண்டும் ஆங்கிலப்படை பாஞ்சாலங் குறிச்சியைத் தாக்க, பாளையங்கோட்டை வரும் போதே, போர்முரசுகள் ஒலித்தன. இதனால் ஊரெல்லாம் திரண்டு வந்து கோட்டை முற்றுகைக்குச் சித்தமாயினர். ஆனால் திருச்செந்தூர் விசாகவிழா அன்று நடைபெற்றதால், கட்டப்பொம் மனின் வீரம் செறிந்த சகோதரர்கள் திருச்செந்தூர் சென்றி ருந்தனர். இவர்களில் சிவத்தையா மட்டும் செய்திகேட்டு உடன் வந்திருந்தான். பீரங்கிகளால் கோட்டை தகர்ந்தது. எதிரிகள் அழிந்தும் உட்புகமுடியவில்லை. படைத்தலைவன் காலின்சை கொன்ற வெள்ளைத்தேவனை வெள்ளைத் தேவனின் மாமனே பணத்திற்காக பிடித்துக்கொடுத்தான். மீண்டும் தப்பிய வீரபாண்டி யக் கட்டப்பொம்மனை காட்டிக் கொடுத்தனர். பாஞ்சாலஞ் குறிச்சியின் கோட்டைக்கு அருகில் இருந்த புளியமரத்தில் தமிழக மாவீரன் வீரபாண்டியக் கட்டப்பொம்மன் தூக்கிலிடப் பட்டான். வீரபாண்டியக் கட்டப்பொம்மனின் தந்தையாகிய செகவீர கட்டப்பொம்மு செந்திலாண்டவனிடம் மிகவும் பயபக்தி கொண்டவன். திருச்செந்தர் கோயில் உச்சிக்காலப் பூசை கண்டே மதிய உணவு உண்ணும் வழக்கமுடையவன். பாஞ்சா லங்குறிச்சியிலிருந்து திருச்செந்தூர் சுமார் 50 மைல் தூரம். ஆகவே உச்சிகாலப்பூசை நிறைவெய்தியதை அறிய இந்த 50 மைல் தூரத்திற்கும், இடக்கிடை 3-4 மைல்கட்கு ஒன்று என்று நகரா மண்டபங்கள் அமைத்து, அதில் (நகரா - பெரிய முரசு) வைத்திருந்தான். உச்சிக்காலப் பூசை முடிந்ததும் திருச்செந் தூரிலுள்ள சண்முக விலாச மண்டபத்தில் பெருமுரசு முழங்கும். இந்த ஓசை கேட்டதும், அடுத்த மண்டபப் பணியாளர் தன் முரசை முழக்குவார். இவ்வாறே பாஞ்சை வரை முரசுகள்

ஒலிக்கும். உடனே பாஞ்சைத்தலைவர் தனது முருகவழிபாட்டை முடித்து உணவு உண்ணுவார். தற்போதும் இந்த நகர மண்ட பங்களை இடிந்த நிலையில் காணலாம். வெள்ளிக்கிழமை தோறும், திருச்செந்தூர் முருகனது திருவெண்ணீறு, ஒரு அழகிய வெள்ளிப்பேழையில் வைத்து பட்டாடையில் பொதிந்து, தயார் நிலையில் இருக்கும். இது குதிரை வீரரிடம் பட்டர் கொடுப்பது வழக்கம். அடிக்கடி வீரபாண்டியனின் தாய்தந்தையார் செந்தி லாண்டவனைத் தரிசிப்பதும் உண்டு. சுதந்திர வீரனான பாஞ் சாலங்குறிச்சி வீரபாண்டியக் கட்டப்பொம்மன், வழிபட்ட வேலைப் பாடுமிக்க சண்முக விக்கிரகம் திருச்செந்தூர் தேவஸ்தான பணிமனையில் ஒரு கண்ணாடி அலுமாரியில் இருக்கிறது. ஒரு முறை ஜகவீரகட்டப் பொம்முவும் இவரது மனைவியும் தங்களது நகைகள் யாவற்றையும் முருகனுக்கு காணிக்கையாக அளித்த போது, அரசியார் ஒரு இரத்தினப்பதக்கத்தை தமக்கென வைத்துக் கொண்டார். அன்றிரவு முருகப்பெருமான் மன்னரது கனவில் தோன்றி தனது மனைவியாகிய குறவள்ளி, இரத்தினப் பதக்கத் திற்கு ஆசைப்படுவதாகவும், ஆண்டியாகிய தன்னால் அவளது விருப்பத்தை நிறைவேற்ற முடியாமல் உள்ளது என்றார். இம் மன்னர் அளித்த ஆபரணங்கள் அனைத்தும் இன்றும் ஆலயக் கருவூலத்தில் உள்ளது. தந்தையைப் போலவே அவனது மகனான வீரபாண்டியக்கட்டப்பொம்மனும் செந்திலாண்டவன் மீது அளவிலா பக்தியால் அளப்பரிய தொண்டுகள் செய்தான்.

குறுநிலமன்னனான வீரபாண்டியக் கட்டப்பொம்மன் தென் னாட்டு பாளையக்காரரில் தலைசிறந்த வீரன். ஆங்கில வர்த்தக கும்பினியார்க்கு அளவிலாத துன்பம் கொடுத்த தென்னாட்டு பாளயக்காரரில் தலைசிறந்தவனான வீரபாண்டியக் கட்டப் பொம்மன் புதிதாக மண்டபம் கட்டினான். மாசித் திருவிழா 7ஆம் நாள் வடமலையப்பன் மண்டபத்திற்கே சேர வேண்டிய செந்தி லாண்டவனை, வீரபாண்டியக் கட்டப்பொம்மன் பக்தி மேலீட்டால் தான் புதிதாக அமைத்த மண்டபத்திற்கே அலங்காரத்துடன் சுவாமி எழுந்தருளவேண்டும் எனத் தீர்மானிக்கின்றான். வீரபாண் டியக் கட்டப்பொம்மனோ குறுநில மன்னன், பிள்ளையனோ சாதாரண செயலாளர், ஆகவே செந்திலாண்டவனின் அடியார்

கள் மாறாத்துயரில் மூழ்கி விடுகிறார்கள். கட்டப்பொம்மனுக்கு அஞ்சி நெஞ்சம் குமுறி நிற்கிறார்கள். பிள்ளையனும் கட்டப் பொம்மனுக்கு அஞ்சி வாழாது இருந்துவிட்டான். இருந்தபோதும் திருவிழாக்கட்டளைகளை ஏற்பாடு செய்து காத்திருந்தான் பிள்ளையன்.

திருச்செந்தூர் 7ஆம் திருவிழா மங்களமாக தொடங் கிற்று. ஆறுமுகப்பெருமான் எழுந்தருளினார். பிள்ளையான் மண்டபம் அருகில் சுவாமிவர, சுழல்காற்று வீச, மணல், கற்றோடு எழுந்தது. சகலரது கண்களையும் மறைக்க, மின்னல் மின்ன, இடிஇடிக்க, பெருமழை பெய்ய, யாவரும் அஞ்சினர். ஆறுமுகப்பெருமானை கைபாறாக இறக்க வேண்டியதாயிற்று. மாவீரன் வீரபாண்டியக்கட்டப்பொம்மன் கலங்கினான், கண்ணீர் சிந்தினான், ஈற்றில் காற்றின் வேகம் குறைய, மழை தணிய, கட்டப்பொம்மன் தன் தவறை உணர்ந்தான். கைபாறாக இறக்கிய மூர்த்தி பிள்ளையான் மண்டபத்திலேயே வீற்றிருந்தது! வீரபாண்டியக்கட்டப்பொம்மன் நெஞ்சம் உருக, பதைபதைத்து ஐயகோ! அன்று கடலாடிகள் கடத்திய மூர்த்தியை, கடலில் நின்றும் கொணர்ந்த வடமலை ஐயன் பெருங்குலத்து மெய்யடி யார்கட்கு பிழை நினைத்தேனே! அந்தோ நான் பெரும்பிழை செய்தேனே! என்று கதறி அழுது மன்னிப்புக் கேட்டு, வழமை போலத் திருவிழா நடக்கட்டும் என உத்தரவிட்டான். வீரபாண்டி யக் கட்டப்பொம்மன் திருநாமத்தை உச்சரிக்க வீரபாண்டியன் பட்டணம் உருவாகியுள்ளது.

திருச்செந்தூர்த் திருத்தலத்தின் புராண வரலாறு, அதன் அமைவிடம், கோவிலின் அமைப்பு, தூண்டுகை விநாயகர், செந்திலாண்டவன், ஆறுமுகப்பெருமான், திருவிழாக்கள், முக்காணியப்பிராமணர்கள், பன்னீரிலை வீபூதி, தலப்பெருமை, தலபுராணம், கௌமாரம், மண்டபங்கள், மாப்பாடு, தீர்த்தங்கள், ஆதிசங்கரர், செந்தூர் வெளியீடுகள், கல்வெட்டுக்கள், பகழிக் கூத்தர், (பிள்ளைத்தமிழ்) குமரகுருபரர், வடமலைஐயன், கட்டப் பொம்மன் சம்பந்தமாக ஓரளவு தொகுத்து விரித்துரைத்தோம்.

தஞ்சாவூர்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

உலகெலாம் தொழவந் (து) எழுகதிர்ப் பருதி
ஒன்றுநூ றாயிர கோடி
அலகெலாம் பொதிந்த திருவுடம் (பு) அச்சோ!
அங்ஙனே அழகிதோ, அரணம்
பலகுலாம் படைசெய் நெடுநிலை மாடம்
பருவரை ஞாங்கர்வெண் டிங்கள்
இலைகுலாம் பதணத் (து) இஞ்சி சூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் (து) இவர்க்கே.

திருச்சிற்றம்பலம்

- கருவூர்த்தேவர் திருவிசைப்பா

தஞ்சாவூர்

பரராச முனிவரின் தவத்தைக் கலைத்த தஞ்சன் என்னும் அரக்கன், விஷ்ணுவால் வதையுற்றபோது, அவன் பெற்ற வரத் தால், அவன் அரசாள ஓர் ஊரைப் பெற்றான். தஞ்சன் என்னும் அரக்கன் அரசாண்ட ஊர் தஞ்சாவூராயிற்று. தஞ்சையிலுள்ள இராசராசேச்சரம் என்னும் இச்சிவாலயம் தேவார, திருவாசக கால ஆசிரியருக்கு பிற்பட்டது. செந்தமிழ் நாட்டின் நெற் களஞ்சியம் எனப்படும் தஞ்சாவூர், காவிரி ஆறு கவினுறப் பாயும் கழிமுக வெளியாகும். நீர்வளம், நிலவளம்மிக்க பகுதி தஞ்சாவூர். வண்டல் மண்படிந்த, செறிந்த, செழிப்பான திருவூர் தஞ்சாவூர். பார்க்கும் இடமெங்கும் பச்சைப் பசேல் எனப் பரந்த கண்ணுக்கினிய நெற்கழனிகளைக் கண்டு இன்புற முடியும். சென்னையில் இருந்து 174 கல் தொலைவிலும், திருச்சியிலி ருந்து 31கல் தொலைவிலும் தஞ்சாவூர், உள்ளது. 1981இல் தஞ்சாவூரில் தாபிக்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக்கழகம், ஆல் போல் தழைத்து அறுகுபோல் வேருன்றி வருகிறது.

பிற்காலச் சோழர் வரலாறு

தஞ்சாவூரும், கங்கை கொண்ட சோழபுரமும் பிற்காலச் சோழர்களின் தலைநகரமாக பெருமையுடன் திகழ்ந்தன. விசயாலயச் சோழனும், இவனுக்கு பின் வந்த சுந்தரசோழனும், இவனது புதல்வனான முதல் இராசராச சோழனும், இராசராச சோழனின் மகனான முதல் இராசேந்திரசோழனும் தான், குறிப்பிடத்தக்க பிற்காலச் சோழர்கள் ஆவர். சங்ககாலத்தில் சீரும் சிறப்பும் பெற்று, வெற்றிவாகைசூடி, நல் ஆட்சிபுரிந்த முற்காலச் சோழர்கள் கி.பி 3ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து 9ஆம் நூற்றாண்டு வரை அதாவது 600 ஆண்டுகள் வரை சோழர்கள் ஒளியிழந்து மங்கி இருந்தனர். பல்லவரும், பாண்டி யரும் சோழ நாட்டை அடிமைப்படுத்தினர். கி.பி 600இல் இருந்து கி.பி 850 வரை முத்தரையர்கள் என்ற குறுநில மன்னர்கள் தஞ்சதைத் தரணியை ஆண்டனர். சோழ மன்னர்கள் தஞ்சை, தலைநகராக எழுச்சி பெறமுன், பழையாறையில் சிற்றரசர்களாக வாழ்ந்தனர். இந்த நிலையில் கி.பி 850இல் பாண்டியரையும், பல்லவரையும் வெற்றிகண்ட விசயாலயச் சோழன், தஞ்சாவூரைக் கைப்பற்றியதும் சோழர் ஆட்சி, மீண்டும் துளிர்க்கத் தொடங்கி யது. அன்று முதல் தஞ்சை, சோழர்களின் தலைநகரும் ஆகியது. கி.பி 9 - 13ஆம் நூற்றாண்டு இறுதி வரை சிறப்போடு ஆட்சிபுரிந்த சோழர், ஆட்சி மறைந்தாலும், அவர்கள் வெட்டிய ஏரிகள், கட்டிய பேரணைகள், எடுத்த சிவாலயங்கள், அவர்கள் ஆதரவுடன் வெளிவந்த நூல்கள், சோழர்களை என்றென்றும் நினைவுகூரும்.

இராசராச சோழன் 1

இராசராசசோழன் 1 காலம் கி.பி 985 தொடக்கம் கி.பி 1014 வரை ஆகும். இக்காலத்தில் தஞ்சாவூர் மிக்க புகழ் எய்தியது. இராசராசன் ஒரு சிறந்த சிவபக்தன். இராசராச சோழன் தனது 29 ஆண்டு ஆட்சியில் 20 ஆண்டுகள் மாபெரும் சோழ சாம்ராச்சியத்தை நிறுவுவதிலேயே செலவாயிற்று. இறுதி 10 ஆண்டு காலத்தில் தமிழரின் கலைகள் வளர்ந்தன. சோழ மண்டலம் முழுவதும் இராசராசனாலும் அவனது குடும்பத்தா ராலும் காவிரியின் கரை இருமருங்கிலும் 52 சிவாலயங்கள் எழுந்தன. மேலைச் சழுக்கிய பகுதியான இரட்டை பாடியில்

சத்திராயன் என்ற மன்னனை புறமுதுகிடச் செய்து, மிகுந்த பொன்னும், பொருளும் பெற்று தஞ்சைத் தரணியில் வரலாறு கண்டிராத மாபெரும் சிவாலயத்தை எழுப்பினான். இராசராசன் தனது 25 ஆண்டு ஆட்சியில் தஞ்சையில் அவன் அமைத்த பெருவுடையார் கோவிலை பூசனைக்கு உரியதாக்கினான். இராச ராசன், தன் பாட்டன் பராந்தகனைப் போல, தில்லையில் பல சிவ கைங்கரியங்களைச் செய்து, சிவபாதசேகரன் எனப் பட்டம் பெற்றான். தஞ்சைப் பெருவுடையார் கோவில் கட்டுமானப்பணி கி.பி 1003இல் ஆரம்பமாகி கி.பி 1009இல் நிறைவெய்தியது. பெருவுடையார் கோவிலை, தஞ்சைப் பெரிய கோவில் என்றும் இராசராசேச்வரம் என்றும், வடமொழியில் பிரகதீஸ்வரர் கோவில் என்றும் கூறுவர். இராசராசன்; சேர, பாண்டிய, ஈழமண்டலங் களை வென்றதால் மும்முடிச் சோழ மண்டலம் எனச் சோழநாடு அழைக்கப்பட்டது.

13ஆம் நூற்றாண்டில் பாண்டியர் எழுச்சியால் தஞ்சைப் பேரரசு வீழ்ந்தது. பாண்டியரின் வீழ்ச்சிக்குப் பின் தஞ்சாவூர் விஜய நகர ஆட்சிக்கு உட்பட்டது. கி.பி 1532இல் தஞ்சையில் நாயக்க மன்னரின் ஆட்சி தொடங்கியது. கி.பி 1676இல் தஞ்சை யில் மராட்சியர் ஆட்சியை ஏற்படுத்தினர். தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னன் 2ஆம் சரபோஜி (1798 - 1832) கலை, இசை, இலக்கியத்திற்கு ஆதரவு நல்கினான். தஞ்சைப் பெரிய கோவி லில் இடம்பெற வேண்டிய திருப்பணிகளை மேற்கொண்டான். சோழர் காலத்து சிற்பக் கலையைப் பார்க்க வேண்டுமானால் ஆதித்தசோழன் ஆண்டுதோறும் மூன்று நாட்கள் சிவலிங்கத் திருமேனியை தீண்டித் தொழுத, கும்பகோணம் ஸ்ரீ நாகேச்வர சுவாமி ஆலயத்திற்கு செல்ல வேண்டும். பரப்பளவில் சிறிய கோவில், சிற்பங்கள் ஈடு இணையற்றவை.

பிரகதீஸ்வரர் ஆலயம்

'THE TAMIL RACE WERE PERHAPS THE GREATEST TEMPLE BUILDERS IN THE WORLD' - ENCYCLOPEDIA OF BRITANNICA "கோவில் கட்டுவதில் உலகிலேயே உண்மையான திறமைசாலிகள் தமிழினம்தான்"

- பிரித்தானியா கலைக்களஞ்சியம்

சக்கரவர்த்தி இராராசசோழன், ஒரு நாள் மாலையில் தஞ்சைப் பெருநகரில், தனது மூத்த சகோதரி குந்தவைப் பிராட்டியாருடன் வீதி வலம் வந்தான். பல மன்னர்களை வென்று, பல நாடுகளை வெற்றி கண்டு, கடல் கடந்து, ஈழநாட்டையும் வெற்றிகண்டவன். ஒரு நாள் வீதி உலா வந்தபோது ஒரு சோலை யின் மத்தியில் சிறிய தாமரைத் தடாகம், அந்த தடாகத்தின் மத்தியில் இலிங்க வடிவில் சிவபெருமான் கோவில் கொண்டு இருப்பதை பெருமன்னன் இராசராசனும், குந்தவைப் பிராட்டி யாரும் கண்ணுற்றனர். திருவீழிமிழலைத் திருத்தாண்டகத்தில் அப்பர் சுவாமிகள் தஞ்சைத் தளிக்குளத்தார், என்று ஒரு சிவால யத்தைக் குறிப்பிடுகிறார். இந்த தஞ்சை தளிக்குளத்தில் எழுந் தருளி இருந்த சிவபெருமானைத் தான், அப்பர் சுவாமிகள் பாடி இருக்கிறார். இதுதான் தேவாரப் பதிகம் இல்லாத வைப்புத் தலமாகிய பழைய சிவாலயம். இந்தச் சிவாலயமே இராசராச னால் திருப்பணி செய்து, ஈற்றில் தஞ்சைப் பெரிய கோவிலாகி யது. ஆகவே தஞ்சைப் பெரிய கோவில் வெற்றிடத்தில் புதிதாக தோன்றவில்லை. எனவே ஏற்கனவே இலிங்க வடிவில் எம்பெரு மான் கோவில் கொண்டு இருந்ததை, அப்பர் சுவாமிகளும் தமது திருத்தாண்டகத்தில் உறுதிப்படுத்தி உள்ளார்.

'அஞ்சைக் களத்துள்ளார் ஐயாற் றுள்ளார்
ஆரூரார் பேரூரார் அழுந்தூ ருள்ளார்
தஞ்சைத் தளிக்குளத்தார் தக்களூரார்
சாந்தை அயவந்தி தங்கி னார்தாம்
நஞ்சைத் தமக்கமுதா வுண்ட நம்பர்
நாகேச்ச சரத்துள்ளார் நரை யூரார்
வெஞ்சொற் சமண்சிறையி லென்னை மீட்டார்
வீழி மிழலையே மேவி னாரே.

- அப்பர் தேவாரம்

அந்தச் சோலையில் இருந்த தாமரை பூத்த தடாகத்தில் எழுந் தருளி இருந்த சிவலிங்கத்திருமேனியை பெருமன்னன் இராச ராசனும், குந்தவைப் பிராட்டியாரும் கண்ணுற்றதும் விண்ணி றைந்து எல்லையிலாது பரந்திருக்கும் பரம்பொருளுக்கா, இந்த

மாபெரும் சோழசாம்ராச்சியத்தில் இத்தனை சிறிய கோவில் என்ற வினா இருவரது உள்ளங்களிலும் கருக்கொண்டது. இந்தச் சிந்தனைதான் ஈற்றில் தஞ்சைப் பெரிய கோவிலாக உருப் பெற்றது.

சோழப்பேரரசின் அழியாச் சின்னமாய், நமது கலைகளின் இருப்பிடமாய், சிவபக்தியின் பிறப்பிடமாய் இருக்க, என் உடன் பிறப்பே, தாங்கள் எனக்கு இந்தப் பாரிய பணியை மேற்கொள்ள உறுதுணையாய், ஆலோசகராய் இருந்து வழிகாட்ட வேண்டும் என்றான், இராசராசப்பெருவேந்தன். ஏழே ஏழு ஆண்டுகளில் இந்தக் கற்றளியை நிறைவு செய்தான். தஞ்சைப் பெருவுடையார் கோவில் திருப்பணியிலேயே இராசராசனின் கவனமெல்லாம் சென்றது. தன் உடமைகள், தான் தேடிய தேட்டங்களோடு இராச ராசனின், மனைவியரெல்லாம் தங்களது பெருஞ்செல்வங்கள் யாவற்றையும் அள்ளி அள்ளிக் கொடுத்தனர். இராசராசனின் மூத்த சகோதரி குந்தவைப்பிராட்டியாரும் பொன்னும், பொருளும் மனநிறைவோடு குறைவறக் கொடுத்தார். இந்த தட்சிண மேருவை உருவாக்க, இந்த சிவப்பணியை நிறைவேற்ற, செந்தமிழ் நாட்டின் கலைவளர் தொட்டிலாக விளங்கும் தஞ்சைத் தரணியில் இராசராசனின் அரசியல் சாணக்கியம், ஆழ்ந்த அனுபவம், ஆற்றல், நுண்ணறிவு தான் காரணம் என்று துணிந்து கூறலாம்.

இராசராசேச்வரம் உடையார் உட்கோயில் ஆறு மண்டபங்களை உடையது.

1. கருவறை
2. அர்த்தமண்டபம்
3. மகாமண்டபம்
4. ஸ்நபன மண்டபம்
5. நர்த்தன மண்டபம்
6. வாத்திய மண்டபம்

இந்த இராசராசேச்வரம் ஆதியில் ஏழு பிரகாரங்களைக் கொண்ட பெரும் பரப்புடைய சிவாலயமாக இருந்தது. தற்போது கோயிலும் வெளிப்பிரகாரமுமே உளது. கோவில் பிரகாரத்தில்

உலக முழுதுடையாள் சந்நிதி கி.பி 13ஆம் நூற்றாண்டு பாண்டிய மன்னன் பிற்காலத் திருப்பணி. ஆறுமுகசாமி சந்நிதி கி.பி 17ஆம் நூற்றாண்டு நாயக்க மன்னர் திருப்பணி. மகா கணபதி ஆலயம் கி.பி 1803 மராட்டிய மன்னன் இரண்டாம் சரபோஜியின் திருப்பணி.

இராசராசேச்வரம்

இராசராசேச்வரம் அமைந்துள்ள பெருநிலப்பரப்பு மருத நிலமாகும். வயலும் வயல்சார்ந்த நிலமும் கருங்கல் கிடையாத பூமி, அவ்வாறாயின் இங்கே கற்கோவில் உருவாக வளங்கள் தான் என்ன? உருவாக்கம் பெற்றதெப்படி? குறிஞ்சி நிலமான மலையும் மலைசார்ந்த இடமான திருச்சிப்பகுதியில் இருந்துதான் கருங்கல் வந்திருக்க வேண்டும். வாகன வசதி இல்லாத காலம். பாரம் தூக்கி இல்லாது இருந்த காலம். ஆனைகளின் உதவி இருந்திருக்கலாம். கோவில் விமானத்தை எடுக்கையில், கோவி லைச்சுற்றி மண்மேடு அமைத்து பாரிய கற்களை உருட்டி மேலே கொண்டு சென்று கட்டுமாணப்பணி நிறைவுபெற்றதும், மண்குவி யலை அகற்றிவிடுவர். இயற்கையான கற்பாறை மீது அடித்தளம் அமைந்திருப்பதால் இவ்வளவு பாரிய பாரத்தையும் தாங்குகின் றது. இவ்வாலயத்தை நிறுவ இராசராசன், காஞ்சிபுரத்தில் இருந்து சிற்பிகளை வரவழைத்தான். நிறைய நிலபுலன்களையும், ஆபர ணங்களையும் வழங்கினான். இந்தியாவில் மிகப்பெரிய கற்கோவில் இராசராசேச்வரம் ஆகும். அத்திபாரம் முதல் விமானத்தின் தூபிவரை, கருங்கல்லால் ஆனது. திருக் கோயில், நிலப்பரப்பின் மேல் உயர்ந்த மேடையில் நிறுவப் பெற்றதனால் மாடக்கோவில் இலக்கணமுளது. இந்த மாபெரும் சிவாலயத்தின் உருவாக்கத்திற்கு சோழப்பேரரசர், சிற்பிகள், குடிமக்கள் பெருமனதுடன் உதவினர்.

இறைவன் கருவறைமீது எழுப்பப்படும் உயரிய கட்டிடம் விமானம் எனப்படும். இராசராசன் இராசேச்வரத்தில் நிர்மாணித்த விமானம் தமிழரின் பெருமையை, பொறியியல் திறமையை என்றென்றும் உலகிற்குக் கூறி நிற்கும் எவரும் வியக்கத்தக்க சிற்பக்கலை, நுண் அறிவு, அன்றைய சிற்பிகளிடம் இருந்தது. விமானத்தில் அதிசயிக்கத்தக்க அழகிய தெய்வாம்சம் நிறைந்த

சிலைகள் உள. இராசராசேச்வரத்தை கலைக் கோவில் என்று கருதுவாரும் உண்டு. இராசராசேச்வரத்தின் கட்டுமானம், சிற்பம், கட்டடம், நுண்கலை, படிமக்கலை, ஓவியக்கலை ஆகிய வற்றின் ஒருமித்த கருவூலமாக இந்தக் கற்றளி விளங்குகிறது.

கோவிலின் நுழைவாயிலில் எழுப்பப்படும் உயரிய கட்டம் கோபுரம் எனப்படும். கிழக்கில் இருந்து சென்றால் கதவின்றி இருக்கும் கேரளாந்தகன் திருவாசல் உண்டு. இதைக் கடந்து சென்றால் இராசராசன் திருவாசல் என்று கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டுள்ளன. அடுத்து தஞ்சாவூர் நந்தியைக் கடந்து தான் உள்ளே செல்ல வேண்டும். இறைவன் பெருவுடையாரின் கருவறைமேல் உள்ள விமானம் 216' உயரம் கலசப் பகுதி நீங்கலாக விமானம் முழுவதும் அழியாத கருங்கல் ஆகும். சதுர வடிவில் 13 நிலைகளை உடைய அழகிய விமானம் செம்பினால் செய்த கலசத்தின் உயரம் 12' அதாவது இரண்டு ஆள் உயரம் 3083 பலம் நிறையுள்ள செம்பினாலானது. இந்தக் கலசத்தில் 2926 கழஞ்சு பொன் பூசிய தகடு உளது. தூபியில் உள்ள தளக்கல் மேல் இந்தக் கலசம் உளது. தட்சிணமேரு என இந்த விமானத்தைச் சிறப்பித்துக் கூறுவர். இந்த மாடக்கோயில் திராவிடச் சிற்பக்கலைக்கு ஓர் எடுத்துக் காட்டு.

விமானம் மீதுள்ள சிகர தளக்கல் 81.3 தொன் எடை யுள்ள ஒரே கல்லாகும். இந்த பாறாங்கல்லை விமானத்தின் உச்சியில் ஏற்ற தஞ்சாவூரில் இருந்த 4 கல் தொலைவில் உள்ள சாரப்பள்ளத்தில் இருந்து, சாரம் (சாய்தளம்) கட்டி ஏற்ற முடியும் என்று இராசராசனுக்கு அறிவுறுத்தியவள் ஓர் வயோதிப மாது. இராசராசேச்வர சிற்ப வேலை சிறப்பாக நடந்துகொண்டிருந்த வேளை, நாட்டிய கரணங்கள் சிறப்புற அமைய வேண்டும் எனப் பெருமன்னன் பெரிதும் விரும்பினான். இராசராசனின் விருப்பறிந்து மகன் இராசேந்திரன், தனது அன்பு மனைவியை சாரப்பள்ளத்து கிழவியின் மகளாக சிற்பி இனியனிடம் சிற்பம் செதுக்க உதவும் முகமாக, நடனம் ஆடிவரும்படி பணிக்கப்பட்டாள் பட்ட மகிஷி.

இறைவன் பெருவுடையாரின் கருவறை மேற்றள சுவர் களில் 81 சிற்பங்களை வரிசையாக செதுக்கிய சிற்பி ஆடல்

வல்லானின் மீதமுள்ள 27 தாண்டவங்களையும் செதுக்க முடியா மல் போய்விட்டது. விமானத்தின் முதல் மாடத்தில் கிழக்கு புறம் தொடங்கி, பரத சாத்திரத்தின் 108 நிருத்திய கரணங்களில் முதலாவாக புஷ்பாஞ்சலி உடன், சிற்ப வரிசை ஆரம்பமாகி, நாட்டிய அரங்கில் எவ்வாறு சல், சல் என்று சதங்கை ஒலி கேட்குமோ, அதேபோல் தா, தி என்ற மிருதங்க ஓசை, நட்டு வாங்கத்தின் இனிய இசை கேட்குமாப்போல் இருக்கும். 81வது சிற்பத்துடன் தடைப்படுகிறது. மீதமுள்ள 27 நாட்டிய கரணசிற்பங் களும் செதுக்க இடம் உண்டு. ஆனால் இராசராசனின் அருமை மைந்தன் இராசேந்திரன், தான் தன் தந்தையைப்போல் எழுப் பிய, தனது தலைநகரான கங்கை கொண்ட சோழபுர சிவாலயத் திருப்பணிக்காக, இங்கு இருந்த சிற்பிகளை, வலுக்கட்டாயமாக அழைத்தச் சென்றுவிட்டானாம். சிற்ப ஆர்வலர்கள் 108 கரண வகைகளை முற்றாக சிதம்பரத்திலும், கும்பகோணம் சாரங்க பாணி கோவிலிலும் கண்டு இன்புற முடியும்.

பெருவுடையார்

கல்வெட்டுகள் தஞ்சைப் பெரிய கோவிலை, பெருவுடை யார் கோவில் என்று சிறப்பித்துக் கூறுகின்றன. கருவறையில் உள்ள லிங்கத் திருவுருவம் 13' உயரம் ஆவுடையார் 54' சுற்றளவு கொண்டது. பெருவுடையாருக்கு ஏற்ற ஆவுடையார் என்பர். கருவறையில் உள்ள பெருலிங்கத்தையே பெருவுடை யார் என்பர். உண்ணாழிகையின் உள்ளே காணப்பெறும் பெருவுடையார், இந்தியாவிலேயே பெரிய உயரமான லிங்கம். பெருவுடையார், நர்மதை ஆற்றங்கரையில் இருந்து கொண்டு வரப்பட்ட ஒரே கல்லாலான லிங்கம். பெருவுடையாருக்கு சிவாச்சாரியர்கள் இருபக்கங்களிலுமுள்ள ஏணியில் ஏறித்தான் அபிடேக ஆராதனை செய்வர். தந்தையான இராசராச சோழனும் தனையனான இராசேந்திர சோழனும், தங்களது செயற்றிறனை யும், வீரமரபையும் சோழர் பெரும் புகழையும் காலம் காலமாக நிலைத்து இருக்க, பெருவுடையாராக எழுந்தருளச் செய்து, வழிபட்டு மனநிறைவு எய்தினர். பெருவுடையார் பிரமனும் திருமா லும், தேவர்களும், வேதங்களும், திருமுறைகளும் தம்மை உள்ளவாறு, உணராத தழற்பிழம்பு. கதலியும், கரும்பும், மாவும், பலாவும், தேனும் அமுதும் போன்ற சுவையினர் பெருவுடையார்.

வெண்புரி நூலினராய், தூயராய் முறுக்கிய சடைமுடியினராய், அத்திரு மேனியில் அணியப்பெற்ற திருநீறு சடையில் கரந்துறையும் கங்கையாளின் கசிவால் கரைகிறது.

சோழர் செங்கோலோச்சிய காலத்தும், கோவில் பூசைகள் நிகழும்போதும் இறைவனின் திருவுலாவின் போதும், பல வகை யான இசைக்கருவிகள் இசைத்தன. சம்பந்தர் தேவாரத்திலும் இசைக்கருவிகள் விபரம் ஆங்காங்கே வருகின்றன. அவை யாவன உடுக்கை, கத்திரிகை, கல்லவடம், குழல், குடமுழா, கைநரம்பு, கொட்டு, கொடு கொட்டி, சங்கு, சிறுகுழல், சல்லரி, சிலம்பு, தக்கை, தண்ணுமை, தமருகம், தண்டு, தாளம், துடி, துந்துபி, படகம், பறை, பாலையாழ், பிடவம், பேரி, மணி, முரவம், முரசு, முழவு, முழா, யாழ், வீணை முதலியன. மேலும் பெருவுடையார், திருமுன் வேய்ங்குழல், ஊதுவோர் ஒருபுறம், மகர யாழ் மீட்போர் மறுபுறம், தாளம் இசைப்போர், இன்னொரு புறம், முழவு கொட்டுவோர் உடன் கொம்பு ஊதுவோருமாக இருந்தனர். பரந்த நெற்றியில் பரவிய நீற்றுடன் நின்று சிவசிவ என்றனர். இன்னொரு சாரார், ஓதுவா மூர்த்திகள் திருமுறை ஓதி நின்றனர். வேதம் ஓதும் வேதியர் வேறு ஒரு புறம். நாயனம் வாசிப்போர் தாம் வாசிக்கும் இராகத் திற்கும், சுரத்திற்கும் ஏற்ப குருவியை மாற்றி வாசிப்பர்.

தஞ்சாவூர் சமஸ்தானம் சகல கலைகளிலும் முன்னேறி இருந்தது. பிரதானமாக இசைக்கலையில் பெரு முன்னேற்றம் பெற்றிருந்தது. காரணம் சமஸ்தான மன்னர்கள் கலாரசிகர்களாக இருந்து கலைவல்லவர்களை பொன்னும், பொருளும் கொடுத்து ஆதரித்தமையே. மேல்நாட்டு இசைக் கருவியான பிடிலை முதன் முதலில் கர்நாடக சங்கீதத்தில் புகுத்தியவர் தஞ்சாவூர் வித்து வான் வடிவேலு ஆவார். மாமன்னன் இராசராசன் பிறந்த ஐப்பசி சதயத்திருநாளில் பெருவுடையாருக்கு அபிஷேக ஆராதனைகள் நிகழும், அச்சமயம் இராசராசனின் வெண்கலத் திருமேனி வீதி உலாவரும். கருவறையில் பெருவுடையார் அருகாமையில் போக சக்தி அம்மன், பிரதிஷ்டை செய்யப்பெற்றுள்ளது.

பெரிய நாயகி அம்மன்:

அழகே உருவானவள் பெரியநாயகி அம்மன். உயரம் 10' பெருவுடையாருக்கு ஏற்ற உயரத்தில், முழுச்சேலை உடுத்திருக் கும் பெரியநாயகியின் அருள் வதனத்தைக் காண கொடுத்து வைத்திருக்க வேண்டும். இன்றிருக்கும் அம்மன் கோவில் மல்லப்ப நாயக்கர் திருப்பணி. ஈசான மூலையில் ஸ்ரீநடராஜர் சந்நிதியை தரிசிக்கலாம். இந்த நடராஜர்மீது இராசராசன் எல்லையற்ற ஈடுபாடு கொண்டிருந்தான். இந்த நடராஜரை அன்புடன் ஆடவல்லான் என்று அழைத்ததோடு நிறுவைக்கோல் முதல் கஞ்சிக்கலயம் வரை ஆடவல்லான் என்றே பெயர் பொறித்திருந்தான்.

சோழர் - நாயக்கர் கால ஓவியங்கள்

சோழர் - நாயக்கர் கால ஓவியங்கள் தட்சிண மேருவின் கீழ், திரு மூலத்தானத்தின் திருச்சுற்று மாளிகைச்சுவர்கள் மீதும், மண்டபமேற்கட்டிலும் சுமார் 940 ஆண்டு காலமாக மறைந் திருந்த ஓவியக்குவியல்கள் ஆகும். 1931இல் முதன்முதலில் உலகுக்கு தெரியவந்த கலைச்செல்வங்கள். 11ஆம் நூற்றாண்டு சோழர் ஓவியம் மீதும் சுண்ணச்சாந்து பூசி அதன் மேல் தீட்டிய நாயக்கர் ஓவியங்கள் மறைந்திருந்து வெளியானவை, முனிவ ராக வந்த சிவ பரம்பொருள் வழக்காடும் நிகழ்வும், மறையவர் களும், சுந்தரரும் செய்வதறியாது திகைப்பதும், முதியவராகிய முனிவர் தமது வழக்கு வெற்றிகண்டு பெருமிதம் உறுவதும் ஆகிய பெரியபுராணப் பாடல் நினைவிற்கு வருகின்றது.

'பொருவரும் வழக்கால் வென்ற புண்ணிய முனிவ ரென்னை
யொருவரு மறியீ ராகிற் போதுமென் றுரைத்துச் சூழ்ந்த
பெருமறை யவர்கு ழாமு நம்பியும் பின்பு செல்லத்
திருவருட் டுறையே புக்கார் கண்டிலர் திகைத்து நின்றார்.

- சேக்கிழார் சுவாமிகள்

ஒப்பற்ற வழக்குப் பேசி வெற்றி கொண்ட புண்ணிய முனிவர் அந்தணர்களைப் பார்த்து என்னை உங்களுக்குத் தெரியாவிட்டால், என்னோடு வாருங்கள். எனது வீட்டையும்

எனது வாழ்வையும் காட்டுகிறேன், என்று சொல்ல அந்த அந்தணர்களும் சுந்தரரும் பின்னே செல்ல, திருவருட்டுறை என்ற திருத்தலத்திற்குள் புகுந்து மறைந்தார். அனைவரும் திகைத்து நின்றனர்.

தஞ்சாவூர் நந்தி

சோழர் கால முன்னைய சிறிய நந்தி தற்போது திருச்சுற்று மாளிகையில் உள்ளது. தற்போதைய பிரமாண்டமான நந்தி சோழர் கால மேடையில், நாயக்கர்கால மண்டபத்தில் உள்ளது. இன்றைய அழகே உருவான தஞ்சாவூர் நந்தி, தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னரின் திருப்பணி. பெருவுடை யார் கோவில் அதிசயங்களில் ஒன்று. இந்த எழிலான நந்தி தனது கால்களை மடக்கி படுத்தநிலையில் உளது. தனது பெருந்தலைவரான பெருவுடையாரை நோக்கியவாறு உளது. பெருவுடையாருக்கு ஏற்ற பெருநந்தி என்ன கம்பீரம், என்ன அழகு, இந்த நந்தி ஒற்றைக்கல்லிலாலானது. இந்தக் கருங்கல் திருச்சி பச்சை மலையில் இருந்து கொண்டு வரப்பட்டது. 25 தொன் நிறையுளது. 12' உயரம், 20' நீளம், 8' அகலம். பல மாலைகள் நந்தியினுடைய கழுத்தை அலங்கரிக்கின்றது. அந்த மாலைகளில் சிவலிங்க மாலையும் ஒன்று. இந்த நந்தியும் மண்டபமும் மிகச் சிறந்த சிற்ப வேலைப்பாடு உடையன. நந்தியம் பெருமானுக்கு வேட்டிகள் பொருத்தி தைத்து அணி வித்து உள்ளனர். நந்தி மண்டபத்தை அடுத்து மகா மண்டபம் உண்டு.

கருவூர்த்தேவர்

கருவூர், திருச்சியில் இருந்து 76கி.மீ தொலைவில் உள்ளது. இந்த கருவூர்தான் சேரமன்னர்களின் தலைநகரமான வஞ்சி எனக்கருதப்படுகின்றது. கருவூரில் பசுபதீஸ்வரர் சிவால யம் உண்டு. கொங்கு நாட்டின் ஏழு சிவத்தலங்களில் இது ஒன்று. கொங்கு நாட்டிலே கருவூரிலே, மறையவர் குலத்தில் அவதரித்தவர் கருவூர்த்தேவர். இவரது காலம் கி.பி 1000 - 1040 ஆகும். இலக்கண இலக்கியம் ஐயம் திரிபறக்கற்றவர். பதினெண் சித்தர்களில் ஒருவர் கருவூர்த்தேவர். பொதிய மலையில் அகத்தியரைத் தரிசித்தவர். 9ஆம் திருமுறையான திருவிசைப்

பாவைப் பாடியவர்களில் கருவூராரும் ஒருவர். சோழ மன்னன் முதலாம் இராசராசனது குருவாக விளங்கியவர் கருவூர்த்தேவர். பெருவுடையாரின் மேற்குப்பக்கசுவரில் நாமகள் சிற்பத்தின் கீழ் கருவூர்த்தேவரும் இராசராசனும் ஒன்றாக அமர்ந்த நிலையில் உளர். மிக அழகான சிற்பம். கருவூர்த்தேவருக்கு திருவுருவச் சிலை தஞ்சையின் வெளிப்பிரகாரத்தின் தென்மேற்குத்திசையில் உளது, சிறிய சந்நிதிதான்.

தஞ்சையிலே இராசராசன் பெரிய கோவிலைக்கட்டி முடித்து, சிவலிங்கத்திருமேனியை எழுந்தருளச்செய்து, ஆதி சைவர்களைக் கொண்டு மருந்து சாத்தி பந்தனம்செய்யச் சொன்னான். மருந்து இளகி இறுகாது இருந்தது. மாமன்னன் மனம் நொந்தான். அசரீரி ஒன்று எழுந்தது. அந்த அசரீரியின் வழிகாட்டலில், போக நாதரின் வேண்டுதலின்பேரிலும், கருவூர்த் தேவர் தஞ்சையை அடைந்தார். கருவூரார் இறைவனை நினைத்து, பாசுரங்கள் பாடி, தூயராய், கருவறையில் புகுந்து தமது தவவலிமையாலும், யோக சித்தியாலும், பெருவுடையாரை ஆவுடையாருடன் கெட்டியாக தம்பனம் செய்தார், மருந்து இறுகியது, பெருவுடையார் நிலை கொண்டார். கருவூரார் பாடியது பத்துப் பதிகங்கள். அவை திருவிசைப்பா ஆகும். இதில் பெருவுடையாருக்கு ஒரு பதிகம் உண்டு. பெருவுடையார் தம்மை ஆட்கொண்டதைப்பாடிப் பாடி கரைந்து உருகுகிறார் கருவூரார். கருவூரார் பாடிய திருவிசைப்பா தஞ்சை நகரையும், பெருவுடை யாரின் பெருமைகளையும் கூறுகிறது.

செப்பேடுகள்

தஞ்சையில் 1676 முதல் 1855 வரை மராட்டிய மன்னர் சுமார் 180 ஆண்டுகள் ஆண்டனர். தமிழகத்திற்கும் தமிழிற்கும் நாயக்கர்கள் செய்த கலைப்பணி போல், மராட்டியர் செய்ய வில்லை. தஞ்சை மராட்டியர் 50 செப்பேடுகளில் 40 செப்பேடுகள் சிவாலயம் சம்பந்தமானது. சுவாமிக்கு நைவேத்தியம் சந்திர சூரியர் உள்ள காலம் வரை படைக்க ஒப்புக்கொண்டமை செப்பேடுகள் மூலம் தெரியவந்துள்ளது. தஞ்சைப் பெருவுடை யாருக்கு அளித்த வெள்ளித் தட்டும், விபூதிச் சம்புடம் (விபூதி மடல்) கூட செப்பேடுகளில் பொறிக்கப்பட்டுள்ளது. இந்த

செப்பேடுகளை தஞ்சை பிரகதீஸ்வரர் கோவிலில் காணலாம். எடுத்துக்காட்டாக மேலும் செப்பேட்டில் அரசன் இரண்டாம் சரபோஜி காலம் 16.12.1798 என்று பொறிக்கப்பட்டு உளது.

அமைப்பும் செய்தியும்

மாமன்னன் இராசராசன் கி.பி (985 - 1014) கட்டுவித்த பெரும் கலைக்கோவில், கி.பி 1004இல் கட்டத் தொடங்கி ஏறத்தாழ 7 ஆண்டுகளில் இக்கலைக் கோவிலைக் கட்டி முடித்தான். மேலும் ஒரு செப்பேடுமூலம் இரண்டாம் சரபோஜி மன்னன் வெள்ளித் தகடு போர்த்திய காளை வாகனம் தஞ்சைப் பெருவுடையாருக்கு அளித்தது தெரியவந்துள்ளது. இராசராசன் கட்டிய தஞ்சைப் பெரிய கோவில் அவர் காலத்திலேயே எல்லாப் பரிவார தெய்வங்களும் பெரும்பாலும் பிரதிஷ்டை செய்யப் பெற்றன. அந்தவகையில் நடராஜர் படிமமும் அமைக்கப்பட்டது. மராட்டியர், இன்னொரு செப்பேட்டில் தஞ்சைப் பெரிய கோவில் தேர்த்திருவிழா, நாள் வழிபாடு, இறைவன் வீதி உலாப் போதல் முதலிய அமைப்பு முழுவதும் திருவாரூர் போலவே தஞ்சை யிலும் பின்பற்றச் செய்ததை கூடப்பொறித்துள்ளனர்.

தஞ்சாவூர் சரஸ்வதி மகால்

தஞ்சாவூரில் உள்ள சரஸ்வதி மகால் ஒரு நூல் நிலைய மாகும். சரஸ்வதி மகால் ஓர் அறிவுக் கருவூலம். சரபோஜி 2 மகாராஜாவால் (1798 - 1832) சேகரிக்கப்பட்ட ஓலைச்சுவடிகள், இங்கே உண்டு. மகாபாரதம் 16,000 ஓலைச்சுவடிகள், 24,000 காகிதச் சுவடிகளில் பல மொழிச் சுவடிகளும் உண்டு. கண்ணாடிப் பெட்டிகளில் பழுதுறாமல் களஞ்சியப்படுத்திப் பாவனையில் உள. கலைக்கூடங்கள், சிற்பங்கள், வெண்கலச் சிலைகள், அழகிய தூண்கள், வளைவுகள், குவிமாடம், சித்திர வேலைப்பாடுகளையும் காண முடியும். தஞ்சாவூர் அரண்மனை நகர மத்தியில் உளது. நாயக்கர் மராட்டியர் தர்பார் கூடங்கள் பார்க்கத் தகுந்தவை. 1972ஆம் ஆண்டு தஞ்சைப் பெரிய கோவிலில் முன் தமிழக முதல்வரால் இராசராசன் வெண்கலச் சிலை திறந்து வைக்கப்பட்டது.

கல்வெட்டுகள்

கல்வெட்டுகளில் கற்பனைக்கோ, புனைந்துரைக்கவோ, கட்டுக் கதைக்கோ இடமில்லை. நடந்தவற்றை நடந்தவாறே பொய் சொல்லாது வெளிப்படுத்துவன. இவை எத்தனை ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் அழியாதவை. கி.பி 7ஆம் நூற்றாண்டில் இருந்து 9ஆம் நூற்றாண்டுவரை தமிழ் நாட்டில் பல்லவ அரசர்கள் கற்கோவிலைக் கட்டினர். அதற்குப் பின் 430 ஆண்டு கட்கு மேல் அரசோச்சிய சோழர்கள் சோழ நாட்டிலே கற்கோவில்களைக் கட்டினர். இவ்வாறே பாண்டியரும் செய்தனர். இவை கல்வெட்டுக்களிலும் செப்பேடுகளிலும் பொறிக்கப்பட் டுள்ளன.

இரவிலும் பகலிலும் எரிந்த நந்தா விளக்குகள், அணி கலன்கள், செம்பொற்காசுகள், அரசர் ஆணை, இறை நிலம், இதன் எல்லைகள், மங்கலச் சொற்கள், காலத்தைக் கணித்து ஆண்டு, நாள், திகதி, நட்சத்தரம்கூட கல்வெட்டுகளில் பொறிக் கப்பட்டுள்ளன. முதலாம் இராசராசசோழன் தஞ்சாவூரில் கற்கோவிலை எடுப்பித்து, அளித்த அளவிறந்த கொடைகளைப் பற்றி இந்த கோவில் கல்வெட்டுகளில் காணலாம். கோவில் வழிபாட்டுக்கு 50 ஊர்கள், 1000க்கு மேற்பட்ட கால்நடைகள், அளவிறந்த இறைவன் திருமேனிகள், திருப்பதிகம் ஓத ஓதுவா மூர்த்திகள், நாற்பத்தெண்மர் உடுக்கை கொட்டி, மிருதங்கம் வாசிக்க இருவர், உரிய கோவில் பணிகள் செய்ய 400 தளிச்சேரிப்பெண்கள், இவர்கட்கு நடனம் கற்பிக்க நட்டுவனார், கணக்கர், கருவூலம் காக்கும் பண்டாரிகள், திருமேனிகாக்க மெய்க்காப்பாளர் ஆகிய இத்துணை விலைமதிப் பற்ற பொருள் களையும் பணியாளர்களையும் இராசராசன் அளித்தான் என கல்வெட்டுக்கள் கூறுகின்றன. கல்வெட்டுகள் பதிவாளர்களால் படி எடுக்கப் பெற்றுள்ளன.

தமிழ் நாட்டில் பல்லவர், பாண்டியர், சோழர், நாயக்கர், மராட்டியர் இராமநாதபுரம் சேதுபதிகள் பிற குறுநில அரசர்களின் (கி.பி 550 - 1000) வரையான 24,000 கல்வெட்டுகள் உள. எடுத்துக்காட்டாக "நெய் அமுது நாழியும், தயிரமுதம், கறிய முதும்" என்று கல்வெட்டு வழக்கில் காணலாம். மேலும்

"திருவிளக்கெண்ணெய் உள்ளிட்ட அழிவுகட்கு" கல்வெட்டு வழக்கில் இதன் கருத்து என்ன என்றால் நாள் தோறும் ஏற்படும் செலவு ஆகும். "உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் மும்முடி சோழத் தெரிந்த பரிவாரத்தால் ஆடவல்லார்க்கு வைத்த திருவிளக்குத் தந்த பசு நாற்பத்தெட்டு" (தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி 2: எண் 6495) இறைவனுக்குத் திருவிளக்கு ஏற்றவும் அக்கினிஹோமத்திற்கும் பசுநெய் தான் சாலச்சிறந்தது.

தேவரடியார்கள்

தேவரடியார்கள் முற்காலத்தில் சமுதாயத்தால் மதிக்கப் பெற்றவர்கள். கோவில் பொட்டு கட்டி விடப்பெற்றவர்கள். தஞ்சை பெரியகோவிலில் "பதியிலார்" என்று அழைக்கப்பெற்ற பெண்கள் 400 பேரை கோவில் பணிக்காக குடியமைத்துக் கொடுக்கப்பட்டது. இந்த தளிச்சேரிப் பெண்கள் பரதக் கலையை பாங்குறப் பயின்றவர்கள், இசையோடு ஆடத்தெரிந்தவர்கள். இவர்கள் நாள்தோறும் மூன்று காலங்களிலும் இறைவன் திருமுன் நின்று ஆடலும் பாடலும் நிகழ்த்துபவர். யாவரையும் மணந்து கொள்ளாமையால் "பதியிலார்" என வழங்கப்பெற்றனர். கோவிலைச் சார்ந்து வாழும் கணிகையர் இவர்கள், இவர்களின் அழகுத் திருமேனி, வதனத்தில் அரும்பும் குறும்புப் புன்னகை, கயிறு போன்ற உடல் அள்ளிச் செருகிய கொண்டை, அந்தக் கொண்டையில் வைத்த முல்லையின் நறுமணம், துடி இடை, துடிப்பான கண்கள் அன்னத்தைப் பழிக்கும் நடைகொண்ட வர்கள்தான் தேவரடியார்கள்.

பெருவுடையாரின் விமான உண்ணாழியில் வரையப்பட் டிருக்கும் நடன மங்கை இடக்காலை ஊன்றி, வலக்காலைத் தூக்கி, இடதுகையை மடக்கி, வலக்கையை நீட்டி, முகத்தை இடது தோள் பக்கம் வளைத்து, தன்னை மறந்து ஆடும் இந்த ஓவியம் பார்வைக்கு ஓர் விருந்து. இராசராச சோழன் தனது மகள் குந்தவிக்கு, பரதக்கலையை பயிற்றுவித்து தஞ்சைப் பெரிய கோவிலிலேயே அரங்கேற்றம் செய்தான். தஞ்சையில் வானளாவிய ஒன்பது நிலை மாடங்கள் இருந்தன. மாளிகை களில் இரவில் அகில் மணக்கும், தெருவிளக்குகள் அங்கும் இங்கும் எரியும். பெண்கள், இல்லங்கள் தோறும் யாழ் இசைப்பர்

- மங்கையர் நடனம் மயிலாட்டம் போன்றிருக்கும். தஞ்சைப் பெரிய கோவிலின் புறமதிலின் முந்தைய அகழியில் முதலைகள் நீந்தி விளையாடின.

"தடந்தெருவு தன்னிடையே சாரும் ஒருமாது
மடந்தைப் பிராயம் உற்ற மஞ்ஞை, - திடங்கொண்ட
ஆடவர்கள் தம் மனதை ஆடுகின்ற பம்பரம் போல்
நாடிச் சுழல வைக்கும் நற்குழலாள்; - பீடுபெறு
சந்திரற்குத் தன்னேர் சிறிதும் தராதவனை
அந்தரத்தில் போகச் செய் யானைத்தாள் - சந்ததமும்
கூற்றுவனை யாரும் குலவும் தருமன் எனச்
சாற்றிடச் செய்யும் தடங்கண்ணாள், - ஆற்றலொடும்
நீண்டகொடும் சாமம்நிலவியிடு நெடுநாண்
பூண்டிடத் தோற்றும் புருவத்தாள், - வேண்டும்
இனத்தின் உடன் ஆம்பல் எழில் போது தோற்று,
வனத்திருக்க மன்னியசெவ் வாயாள் - கனத்த புகழ்
உண்ட கமல முகை ஓங்கலருற்று ஏகஎழில்
கொண்டு வளரும் குவி முலையாள்.

- தஞ்சைப் பெருவுடையார் உலா

தஞ்சாவூர்ப் பெருநிலப்பரப்பு, பிற்காலச் சோழர் வரலாறு, இராசராசசோழன் 1, பிரகதீஸ்வரர் ஆலயம், இராசராசேச்வரம், தஞ்சைப் பெருவுடையார், பெரியநாயகி அம்மன், சோழர், நாயக்கர் கால ஓவியங்கள், தஞ்சாவூர் நந்தி, கருவூர்த்தேவர், செப்பேடுகள், அமைப்பும் செய்தியும், தஞ்சாவூர் சரஸ்வதி மகால், கல்வெட்டுகள், தேவரடியார்கள் பற்றி ஓரளவு தொகுத்து விபரித்தோம்.



பெரியபுராணம் தந்த சேக்கிழார் சுவாமிகள்

திருச்சிற்றம்பலம்

பெருமையால் தம்மை ஒப்பார்
பேணலால் எம்மைப் பெற்றார்
ஒருமையால் உலகை வெல்வார்
ஊனம் மேல் ஒன்றும் இல்லார்
அருமையாம் நிலையில் நின்றார்
அன்பினால் இன்பம் ஆர்வார்
இருமையும் கலந்து நின்றார்
இவரை நீ அடைவாய்.

திருச்சிற்றம்பலம்
- திருவாரூர் தியாகேசர் (அசரீரி)

திரு அவதாரம்

தமிழ்நாடு செய்த மாதவத்தால் தொண்டை மண்டலம் என்ற பெருநிலப்பரப்பிலே, புலியூர்க் கோட்டத்தில் உள்ள குன்றத்தூரிலே, வேளாளர் மரபிலே, சேக்கிழார் குடியிலே, அருண்மொழித் தேவர் என்ற சேக்கிழார் சுவாமிகள் சைவம் என்னும் செஞ்சாலி ஓங்கி வளர, திரு அவதாரம் செய்தார். சேக்கிழாரின் திரு அவதாரத்தால் வலிகுன்றி இருந்த சிவசமயம் மீண்டும் பெருவளர்ச்சி கண்டது. வேதநெறி தழைத்து ஓங்கியது, பக்தி மார்க்கம் பரவியது. பிற்காலத்தில் வாழ்ந்த மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் தனது "சேக்கிழார் பிள்ளைத்தமிழ்" என்ற நூலில் சேக்கிழாரின் குழந்தைப் பருவத்தை வெகு அழகாகத் தருகிறார்:-

"தத்திப் புனல்பாய் குன்றத் திருமுனி தாலோ, தாலேலோ!
சைவப் பயிர்தழை யத்தழை யும்புயல் தாலோ, தாலேலோ!"

என்று தாலாட்டினார். சேக்கிழார் திருஅவதாரம் செய்ததால் சைவ உலகிற்கு சமய குரவர் நால்வர், எல்லாமாக நாயன்

மார்கள் அறுபத்திமூவர், இவர்களுடைய மாகதைகள் சுவைபட கிடைத்தது தெய்வச் செயலே!

சேக்கிழார் காலம்

இரண்டாம் குலோத்துங்க சோழன் காலம் (1133 – 1146) என்பர். இரண்டாம் குலோத்துங்கனே, அநபாயன் எனப்பட்டான். திருநீற்றுச் சோழன், அபயன், அநபாயன் முதலிய பட்டப் பெயர்கள் இவனுக்கு உண்டு. சகம் 1065ல் பொறித்த செல்லூர் செப்பேட்டால், இரண்டாம் குலோத்துங்கனே அநபாயன் என்பது தெளிவாகிறது. (Indian Antiquary XIV P.55) இரண்டாம் குலோத்துங்கனாகிய அநபாயன் அவையில், முதலமைச்சராக வீற்றிருந்து, அநபாயனை நெறிப்படுத்தியவர் சேக்கிழார். ஆகவே அநபாய சோழன் காலமே, சேக்கிழார் காலம் என்பது தெளிவு. இதுவரை கிடைத்த சாசனங்களாலும், ஆராய்ச்சி களாலும், சரித்திரச் சான்றுகளாலும், சேக்கிழார் பெருமான் 12ம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர் என்பது ஆய்வாளர் கருத்தாகும்.

சேக்கிழார் பெருமான்

சேக்கிழார் இளமையிலேயே கல்வி, அறிவு, ஒழுக்கங் களில் சிறந்து விளங்கியதை, அக்காலத்தில் அரசுபுரிந்த அநபாய சோழன் அறிந்து, இவரது தகுதி கண்டு, சேக்கிழாரை அழைத்து, தனது முதன் மந்திரி ஆக்கியதோடு அல்லாமல், சேக்கிழாருக்கு "உத்தம சோழன்" என்ற பட்டத்தையும், பெருஞ் செல்வத்தையும் ஈந்தான். சேக்கிழாரும் தமது அமைச்சர் பதவியை தருமநெறி பிசகாது நடத்தி வந்தார். அமைச்சராக இருந்த காலத்தில், அநபாய சோழன் ஈந்த பெருஞ்செல்வத்தைக் கொண்டு, சேக்கிழார் தனது அவதார தலமாகிய குன்றத் தூரிலே, ஒரு சிவாலயம் அமைத்து அதற்கு திருநாகேச்சரம் எனப் பெயரிட்டார். இவ்வாறு சேக்கிழார் அநபாயனுக்கு அமைச்சராக இருந்து வருங் காலத்தில், அநபாயன் திருத்தக்க தேவர் இயற்றிய சீவகசிந்தாமணி என்ற சமண காவியத்தில் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தான். மன்னனின் நிலைகண்டு

வருந்திய சேக்கிழார், சிவ வரலாறுகளை எடுத்துக்கூறி வந்தார். சோழன் இவற்றை விரும்பிக்கேட்டு மன மகிழ்ந்து, சைவ அடியார்களின் வரலாற்றைத் தொகுத்து ஒன்றாக்கி, ஒரு காப்பியம் இயற்றித் தருமாறு சேக்கிழாரைக் கேட்டுக் கொண்டான்.

சிவனடியார்கள் வரலாற்றைத் திரட்டி, ஒரு காப்பியமாக இயற்றுவது, இங்கே இருந்தால் நிறைவுபெறாது. எனவே தில்லைத் திருத்தலத்திற்குச் சென்றாலே இந்த பெருங்காப்பியம் நிறைவுபெறும் என சேக்கிழார் கூற, அநபாயனும் அதற்கி சைந்து, விடை கொடுத்து, சேக்கிழாரை, தில்லைத்திருத் தலத் திற்கு அனுப்பி வைத்தான். தில்லை சென்ற சேக்கிழார் பெருமான், நடராசப் பெருமானைத் தொழுது, இந்தப் பெருங் கைங்கரியம் நிறைவேறப் பணிந்து நின்றார். அப்போது ஒரு அசரீரி வாக்கு:- 'உலகெலாம்' என சேக்கிழாருக்கு அடி எடுத்துக் கொடுத்தது. இந்த அடியையே முதலும், நடுவும் இறுதி யுமாகக் கொண்டு, சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணத்தைப் பாடிமுடித்தார்.

திருச்சிற்றம்பலம்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்”

திருச்சிற்றம்பலம்

சேக்கிழார் முதல் மந்திரிப் பதவியில் இருந்தமையால், அரச வசதிகளைப் பயன் படுத்தி கல்வெட்டு, பட்டயம், ஏடுகள், சரித்திரச் சான்றுகளையும் ஒப்புநோக்கி, தொகுத்துச் சரியெனக் கண்ட பின்பே, பெரிய புராணம் பாடினார் என்பதில் ஐயம் ஏதும் இல்லை.

அறுபத்தி மூன்று நாயன்மார் சரிதையை உள்ளடக் கியதே, தேனினும் இனிய பெரிய புராணம் என்னும் பெருங்

காப்பியம் ஆகும். பெரிய புராணம் பாடும்போது, சேக்கிழார் நாட்டின் நகர அமைப்பை நன்றாக அறிந்து இருந்த காரணத்தால், நாயன்மார்கள் யாத்திரை செய்த வழிகளை, எழுதும் திறன் சேக்கிழாருக்கே இருந்தது! புறச்சமயத்தவர் மிகுந்த இடங்களைத் தவிர்த்து, நேர் வழியாகச் செல்லாது சுற்று வழியாக சிவஸ்தலங்கள் தோறும் சென்று, தேவாரம் பாடிச் சென்றதை கூறும், சேக்கிழாரின் அறிவாற்றலை நாம் அறிந்து, வியந்துகொள்ள முடிகிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் தொகுத்துக் கூறிய "திருத்தொண்டத் தொகையை" பெரிய புராணத்தின் முதல் நூலாகவும் நம்பியாண்டார் நம்பிகளின் "திருத்தொண்டர் திருவந்தாதியை" வழிநூலாகக் கொண்டு பெரியபுராணம் ஒரு பெருங்காப்பியமாக அமைக்கப்பட்டுள்ளது. சேக்கிழாரால் சாதிபேதம், குலபேதம், தொழில்பேதம், ஆண், பெண் என்ற பேதம் ஏதுமின்றி அருளப்பட்டது திருத்தொண்டர் மாகதை யாகும். நாலாயிரத்தி இருநூற்றி எண்பத்தேழு (4287) விருத்தப் பாக்களை உள்ளடக்கியது பெரியபுராணம்.

அநபாய சோழன்

சேக்கிழார் பெருமான் தில்லையில், பெரியபுராணம் பாடி நிறைவுபெற்றதை அறிந்த அநபாய சோழன், மனமிக மகிழ்ந்து, தனது பரிவாரங்களுடன் தில்லைப் பெரும்பதியை அடைந்து, சேக்கிழாரை இருகரங்கூப்பி வணங்கி நின்றான். அதன்பின் பல அரசர்கட்கும், தமிழ் அறிஞர், புலவர் பெருமக்கட்கும் ஓலை அனுப்பி, சிதம்பர தலத்திலுள்ள ராஜ சபையாகிய ஆயிரங்கால் மண்டபத்தில் பேரவையைக்கூட்டி, சேக்கிழார் பெருமானைக் கொண்டு, அந்த அறிஞர் பேரவையில், பெரிய புராணத்தை அரங்கேற்றினான். பெரிய புராணம் அரங்கேறியதும், அந்த பெரியபுராண பெருங்காப்பியத்திற்கு, விரிவாக பொருள் கூற, ஓர் ஆண்டு காலம் சென்றது. பொருள்கூறி முடிந்ததும், சேக்கிழார் சுவாமிகளையும், திருத்தொண்டர் புராணத்தையும் யானைமீது ஏற்றி, அநபாயச் சோழன் பின் இருந்து, கவரி வீசி, தில்லை நான்கு வீதிகளிலும் ஊர்வலம்வரச் செய்தான். சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் நிறைவாக அமைந்திருப்பது

பெரியபுராணம். அநபாயன், சேக்கிழாருக்கு 'தொண்டர்சீர் பரவுவார்' என்ற பட்டத்தையும் அளித்துச் சிறப்பித்தான். பின்பு சேக்கிழார் சிலகாலம் தில்லையிலேயே தங்கியிருந்து தவம் செய்து, கூத்தப்பிரான் திருவடிகளில் இரண்டறக் கலந்தார். பெரியபுராணம் மொழிபெயர்ப்பு அல்ல. அநபாய சோழன் எனச் சிறப்புப் பெயர்பெற்ற குலோத்துங்க சோழன் தில்லைத் திருவெல்லையைப் பொன்னின் மயமாக்கி, தில்லைத் திருவீதி களை விளக்கி, பேரம்பலத்தை, பொன் வேய்ந்தமையை, கோகர்ணக் கல்வெட்டுகளின் மூலம் (SII VOL.VII No. 1044) தெரியவருகிறது.

பெரியபுராணமும் சுந்தரரும்

பெரியபுராணத்தின் முதல் நூல், சுந்தரமூர்த்தி சுவாமி களின் திருத்தொண்டத் தொகையே ஆகும். ஆகவே சிவனடியார் வரலாறுகளைத் தொகுத்துத் தந்த சுந்தரமூர்த்தி சுவாமி களையே, காப்பியத் தலைவராகச் சேக்கிழார் கொண்டார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாறுகளையும் விளக்கமாக, விரிவாகத் தந்து, சுந்தரராற் போற்றி வணங்கப்பட்ட அடியவர் வரலாறுகளையும், பெரிய புராணத்தில் உள்ளடக்கி, சைவ உலகை பக்தி மார்க்கத்தில் இணைத்துள்ளார் சேக்கிழார் சுவாமிகள். திருத்தொண்டத்தொகையின் முதற்பாடல் 'தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' என்ற பாடல் மூலம் அடியார் வரலாறுகளை விபரமாகப் படைத்துள்ளார் சேக்கிழார்.

திருவாரூரும் சுந்தரரும்

தம்பிரான் தோழரான சுந்தரர், திருவாரூரில் தங்கி இருந்தபோது, இறைவன் திருவருட் பாங்கின்படி, பரவையார் என்ற ருத்திரகணிகை மீது காதல்கொண்டு அவளை கடிமணம் புரிந்தார். பரவையார் வாழ்ந்த வீட்டில் தற்போது பரவையாருக்கு தனிக்கோயில் உண்டு. அந்தக் கோயில் திருவாரூர் தெற்கு கோபுர வாயில் அருகே உண்டு. பரவையார் கோவில் உள் வீதியை செந்தாமரை நாறும் வீதி என்பர். சுந்தரர் திருவொற்றி யூர் சென்ற போது அங்கே சங்கிலியாரையும் விரும்பி மணந்து

கொண்டார். இதனால் திருவாரூரில் பரவையார் ஊடல் கொண் டார். பரவையாரின் ஊடலைத் தணிக்க, சுந்தரர் தனது தோழரான இறைவனை, இரவில் தூது அனுப்பினார். சிவபெருமான் ஒரு முறைக்கு இருமுறை, பரவையாரின் ஊடலைத் தணிக்க தூது சென்றதால், பரம்பொருளின் பாதம் சிவந்தது. சிவபெருமான் பாதம் சிவக்க நடந்து தூது சென்ற உள் வீதியை:-

"வன் றொண்டர்க்கு தூது போய்
நடந்த செந்தமாரை யடி நாறுமால்"

என்கிறது பெரியபுராணம்.

மேலும் இறைவன் பரவையார் இல்லத்திற்கு தூது சென்றதை, புலவர் ஒருவர் வெகு அழகாகத் தருகிறார். சிவபெருமான் அடியும், முடியும் காண வேண்டி திருவண்ணா மலையில் அயனும் அரியும் தினறி இருக்கிறார்களே! அந்த அயனும் அரியும் இந்த பரவையார் வீட்டு வாயிலிற்கு வந்திருந்தால் சிவபெருமான் அடியையும் முடியையும் வெகு சுலபமாக ஐயன் தூது வந்தபோது கண்டிருக்கலாம்.

"ஆனார் இலையே அயனும், அரியும் காணா
அடிமுடி முன் காண்பதற்கு – மேநாள்
இரவு திருவாரூரில் எந்தை பிரான் சென்ற
பரவை திருவாயில் படி"

சேக்கிழாரின் திருஅவதாரம், சேக்கிழார் காலம், சேக்கிழார் பெருமான், அநபாய சோழன், பெரியபுராணமும் சுந்தரரும், திருவாரூரும் சுந்தரரும் என்ற தலைப்புகளில் தொகுத்து எழுதினோம்.



தம்பிரான் தோழர்

தலம்: திருக்கானாட்டுமுள்ளூர் பண்: கொச்சிக்கௌவானம்

திருச்சிற்றம்பலம்

அருமணியை முத்தினை யானஞ்சுமாடும்
அமரர்கள்தம் பெருமானை அருமறையின் பொருளைத்
திருமணியைத் தீங்கரும்பின் ஊறலிருந் தேனைத்
தெரிவரிய மாமணியைத் திகள்தருசெம் பொன்னைக்
குருமணிகள் கொழித்திழிந்து சுழித்திழியுந் திரைவாய்க்
கோல்வளையார் குடைந்தாடுங் கொள்ளிடத்தின் கரைமேல்
கருமணிகள் போல்நீலம் மலர்கின்ற கழனிக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே.

திருச்சிற்றம்பலம்

- சுந்தரர் தேவாரம்

வரலாறு

கைலாய மலையில் தேவாதி தேவனான சிவபெருமானுக்கு அள்ளு திருநீறு சாத்தி, மதுமலர் மாலையும் அணிசெய்யும் திருத்தொண்டர்தான் ஆலாலசுந்தரர். இவருக்கு தம்பிரான் தோழர், ஆரூரன், வன்தொண்டர், திருநாவலூரான், சுந்தர மூர்த்தி நாயனார் எனப் பல பெயர்களுண்டு. சுந்தரர் ஒருநாள் வழமைபோல சிவபெருமானுக்கு அன்றலர்ந்த நன்மலர்கள் கொய்ய, நந்தவனம் சென்றார். ஆலாலசுந்தரர் நந்தவனம் செல்லமுன்னே ஞானப்பூங்கோதையான, உலகமாதாவாகிய உமாதேவியாரின் தோழிகளான அனிந்ததை, கமலினி ஆகிய பூவையர் இருவரும், இறைவியின் இயற்கை மணம் கமழும் கூந்தலுக்கு ஏற்ற, நறுமலர் கொய்து கொண்டிருந்தனர். அன்னம் போன்ற அழகிகளைக் கண்ணுற்ற சுந்தரர், தன் மனதை தையலாரிடம் பறிகொடுத்தார். பூவையர் இருவரும், ஆலால சுந்தரரைக் கண்டதும் நிலை தடுமாறினர். இருந்தும், பாவையர் இருவரும் பார்வதி அம்மையாருக்கு பறித்த மலருடன், சுந்தரரைத் தவிக்கவிட்டுச் சென்றனர். சுந்தரரும் ஈசனுக்கு உகந்த மலர் பறித்தகையோடு சென்றார். பரம்பொருள் சுந்தரரின் நிலை அறிந்து; 'ஆலாலசுந்தரா; நீ மங்கையரை பெரிதும் விரும்பினாய், ஆதலால் நீ தென்தமிழ் நாட்டில் மனிதனாகப் பிறந்து இந்தப்

பாவையர் இருவருடனும் கலந்து, தாபம் நீங்கியபின் எம்மை வந்தடைவாயாக! என்று அருளினார்.

இது கேட்ட ஆலாலசுந்தரர், மிக்க கவலையடைந்து கருணாநிதியே! தங்கள் திருப்பாதங்களையே சதா சிந்திக்கும் அடியேனை, மானுடனாகப் பிறந்து மயங்கும் தருணத்தில், அடியேனைத் தாங்கள் தடுத்தாட்கொள்ள வேண்டும் என்று பணிவாக வேண்டினார் சுந்தரர்; எம்பெருமானும் அவ்வாறே ஆகுக! என்றார்.

திருமுனைப்பாடி

தாமரை மலர்கள் பூத்துக்குலுங்கும் தடாகங்கள் சூழ்ந்த திருமுனைப்பாடி நாட்டிலே, வைதீகநெறி தழைத்தோங்கவும், இன்பத் தமிழால் இசை பாடவும், ஆலாலசுந்தரர் திருநாவலூர் என்னும் திருப்பதியில், திருஅவதாரம் செய்தார். இவருக்கு நம்பியாரூரர் என்று பெற்றோர் நாமகரணஞ் செய்தனர். நம்பியாரூரர் சிவசிந்தனையோடு, திருநீறுபூசிய திருமேனி துலங்க திருமணப்பருவம் எய்தினார். நம்பியாரூரரின் தந்தையாரான சடையனார், புத்தூரிலுள்ள சடங்கவிச்சிவாச்சாரியாரின் மகளை, நம்பியாரூரருக்கு திருமணஞ்செய்து வைக்க விரும்பி நிச்சயார்த்தம் செய்தனர்.

தடுத்தாட்கொள்ளல்

மங்கள நாளிலே, ஆரூரர் திருமணக் கோலங்கொண்டு வெண்குதிரை மீது ஏறி, வெண்சங்குகள் முழங்க, மணப்பந்தல் வந்தணைந்தார். முன்பு கையிலையில் ஆலாலசுந்தரர் பாவையர் இருவரை விரும்பியதால் சுந்தரரை பூமியில் மனிதனாகப் பிறக்கும்படி சிவபெருமான் கட்டளையிட்டபோது, சுந்தரரின் வேண்டுகோளை ஏற்ற சிவபெருமான், சுந்தரரை தக்க சமயத்தில், ஆட்கொள்ள இசைந்தபடி, சுந்தரரின் மணநாளில் சிவபெருமான் ஒரு முதிய வேதியர் வடிவங் கொண்டு, முழுநீறு பூசிய முனிவர் போல உருத்திராக்கம், பூணூல் பூண்டு, தள்ளாடித் தள்ளாடி மணப்பந்தலுக்குள் புகுந்தார், தேவாதி தேவன்.

மணவினை தொடங்கமுன் வயதான வேதியர் "அவையோரே! என விழித்து உங்கள் முன் இருக்கும், இந்த நம்பியாருரனுக்கும் எனக்கும் முன்னம் ஒரு பெருவழக்கு உண்டு; அந்த வழக்கை முடித்தபின் இவனது திருமணத்தை நடத்தத்

தடையில்லை" என்றார், சிவபெருமானான வேதியர், உடனே ஆரூரன் முதியவரே, அந்த வழக்கை இப்போதே கூறுங்கள் என்றார். முதியவர், "மறையவர்களே! இந்த நாவலூரான் எனக்கு அடிமை, எனக்கு ஆட்பட்டவன்" என்றார். சபையில் இருந்தவர்கள் திகைத்தனர். கோபங்கொண்டு சிரித்தனர். முதியவரோ, நம்பியாரூரனை அணுகி, உன் பாட்டனார் எனக்கு அடிமை ஓலை எழுதிக் கொடுத்திருக்கும்போது நீ ஏன் இன்று சிரித்தாய்? என்றார். வேதியரே! அந்தணர் அந்தணருக்கு அடிமை வேலை செய்வது உலக வழக்கில் இல்லையே! நீர் என்ன பித்தனோ? முதியவரோ நீ என்னை அறியவில்லை! வித்தகம்பேசாது நீ எனக்கு பணிசெய்ய வேண்டும் என்றார்.

நம்பியாரூரரோ, வேதியரே! நீர் கூறிய அந்த அடிமை ஓலையைக் காட்டும் என்றார். வேதியரை விரட்டித் துரத்தி அந்த அடிமை ஓலையைப் பறித்துக் கிழிக்க முயன்றார். முதியவர் ஓடலானார். நான்முகனும், திருமாலும் காணமுடியாத சிவபெருமானான அந்த முதியவரை, துரத்தி அடிமை ஓலை யைப் பிரதியை பறித்துப் பிடுங்கி கிழித்து எறிந்தார் சுந்தரர். முடிவிலா முதல்வரான முதிய வேதியர் நாவலூரரை பிடித்து நீ கிழித்து எறிந்தது முறையோ? என்றார். கூட இருந்தவர்கள் முதியவரே! நீர் இருக்கும் இடத்தைச் சொல்லும் என்றதும்; எனது ஊர் திருவெண்ணை நல்லூராகும் என்றார். அந்த நல் ஊரிலே வேதங்களைக் கற்று உணர்ந்த வேதியர் பலர் உளர். அந்த அந்தணர் அவையிலே, இவன் எனக்கு அடிமை என்பதை எனது மூலை ஓலை கொண்டு வழக்கு உரைப்பேன் என்று கூறி, தனது ஊன்றுகோலை ஊன்றி, ஊன்றி நடக்கலானார். காந்தத்தை இரும்பு ஈர்ப்பது போல் சுந்தரரும் சுற்றம்சூழ பின் சென்றார். அந்த அந்தணர் அவையில் அடிமை ஓலையை (மூலப்பிரதியை) முன்வைத்தார், அந்த முதிய வேதியர். வேதிய அவையினர் நம்பியாரூரரே! நீர் இந்த நான்மறை முனிவருக்குத் தோற்றுவிட்டீர்! என்று தீர்ப்பளித்தனர்.

இருந்தபோதும் முதிய முனிவரே! இந்த ஊரில் உமது மனையைக் காட்டும் என்றலும், சிவபெருமானான வேதியர், என்னை நீவிர் அறியவில்லையானால், என்னுடன் வாருங்கள் என்று கூறி, குடுகுடுவென முன்னே நடந்து சென்றார். அனை வரும் பின் சென்றனர். முதியவரோ முன் நடந்து, திருவருட்துறை என்னும் திருவெண்ணைநல்லூர் ஆலயத்திற்குள் புகுந்து,

மறைந்தார். அனைவரும் அதிர்ந்து போயினர். இவ்வாறே முன்னொருகால் திருவாதவூரடிகளும் இறைவனுடன் இரண்டறக் கலந்ததை நினைவு கூரலாம்.

"ஓங்குபுகழ்த் திருவாத
வூருறையெம் பெருமானுந்
தேங்கியெமெய்ச் சிவஞான
சிந்தையுடன் களிகூர்ந்து
பூங்கனகப் பொதுவெதிரே
போய்புகல்வே னெனப்போக
வாங்கவர்முன் சென்றாரு
மன்பொடுபின் சென்றார்கள்" -வாதவூர்ப்புராணம்

திருவெண்ணை நல்லூர் கோவிலிற்குள் மறைந்த இறைவன் நம்பியாரூரர் முன் காட்சி தந்து "உன்னை ஆட் கொண்டோம்" நீ வாதாடு மன்றத்தில் நம்மை எதிர்த்து வலுவாக வாதிட்டதால், இன்று முதல் "வன்தொண்டர்" எனப் பெயர் பெற்றாய்! எம்மை இனிமையான தமிழால் பாடுவாயாக! என்றார் பரமேஸ்வரன்.

திருவாரூர்

சோழதேசம் நீர் குன்றாது காவிரி பாயும் நாடாகும். பொங்கிவரும் காவிரி நதியானது, தமிழ் நாட்டை வளம்மிக்க நாடாக்கிறது. காவிரி ஆற்றில் கட்டிளம் பெண்கள் கலகல என்ற சிரிப்பொலியுடன் நீந்தி, நீராடி குதூகலிப்பர். காவிரிப் புதுப்புனல் திரண்டு வரும்போது, சோழ தேச உழவர் மிகவும் ஆனந்தமடை வர். 'சிவாயநம' என்னும் ஐந்தெழுத்தைத் தினமும் ஓதுவதால் சோழ தேசத்தில் விக்கினமின்றி மக்கள் வயிறார உண்டு வாழ்வர். சோழ நாட்டில், திருவாரூர் என்னும் பெருநகரம் உண்டு. சிவபெருமான் தியாகேசராக எழுந்தருளி உள்ளார். திருவாரூரில் வேதஒலியும், வீணை இசையும், தேவாரம் பண்ணுடன் பாடும் ஓதுவாரின் ஓசை கேட்க கேட்க, இன்பம் தரும். நடன மாதரின் சிலம்பொலியும், ஆலய மணியோசையும், மிருதங்க முழக்கமும் செவிக்கு இதம்தரும். மாடவீதியில் அசைந்தோடும் தேரும், யானை, குதிரைகளின் குளம்பொலியும் ஓயாது ஒலித்த வண்ணமே இருக்கும்.

இ்.து இவ்வண்ணம் இருக்க தல யாத்திரை மேற் கொண்ட சுந்தரர் திருவாரூர்த் தியாகேசப்பெருமானின் திருத் தலத்தை அடைந்தார். அக்கணமே தியாகேசப்பெருமான் நம்மை உனக்குத் தோழனாகத் தந்தோம் என்றருளினார். அன்றுமுதல் நம்பியாரூரனை 'தம்பிரான் தோழர்' என்று அழைக் கலாயினர். இ்.து இவ்வாறிருக்க முன்பு கையிலையில் உலக மாதாவாகிய உமாதேவியாரின் தோழியரான, கமலினி என்பார், குயில்கள் குவிந்து கூவும் திருவாரூரில் வந்த வதரித்தார்.

கமலினி, உருத்திரகணிகையான பதியிலார் குலத்தில் தோன்றினார். பெற்றோர் இவருக்கு பரவையார் என்று பெயர் சூட்டினர். குழந்தைப் பருவம் நீங்கி, பேதைப் பருவம் எய்தி, அள்ளி அணைக்கும் மங்கைப் பருவம் அடைந்து, அன்னம்போல நடை நடந்து, சிவபெருமானின் திருப்பாதங்களைத் தொழ, பெருவிருப்போடு, தோழியர் சூழ, திருவாரூர் திருத்தலத்தை வலம் வந்து, தியாகேசப் பெருமானை மனதார வணங்கிய பின் தனது மணிமாளிகை நோக்கி மெல்ல நடந்து வந்ததை, தம்பிரான் தோழர் கண்டார். வேல் போன்ற கூர்மையான கருநிறக் கண்களைக் கொண்ட, பவளவாய் உடைய இப்பெண் யார்? என; அரச கோலமும், சிவக்கோலமும் ஒருங்கே அமைந்த தம்பிரான் தோழர் எண்ணி அதிர்வடைந்தார். பரவையாரும் கடைக்கண் புரள, கயல்விழி வியக்க மயங்கினார். பரவையாரும் நிலை தடுமாறித் தத்தளித்தார். இருவரின் காதலும் போதாகி, பூவாகி, காயாகி, கனிந்தது.

தேவர்கள் பணியும் திருவாரூர்த் தியாகேசர் தம்முடைய அடியவர் கனவில் தோன்றி, தம்பிரான் தோழரும் - பரவையாரும் கொண்ட தெய்வீகக் காதலை இனிது நிறைவேற்றுங்கள் என அறியத் தந்தார். சிவபெருமான் திருவருளால் திருமணம் இனிது நிறைவேறியது. தியாகேசப்பெருமானைத் தொழ பெரிதும் விரும் பிய நம்பியாரூரர் ஆலயத்தை வந்தடைந்தார். அங்கே தேவா சிரிய மண்டபத்தில், முழுநீறு பூசி சிவக்கோலத்தில் வீற்றிருந்த சிவனடியார் திருக்கூட்டத்தைக் கண்டதும், சுந்தரமூர்த்தி சுவாமி கள், இருகரத்தையும் சிரமேற்கொண்டு நிலமுற வீழ்ந்து, வணங் கினார். திருவாரூரின் கண், தேவர்கள் மிகுந்து காணப்பெற்றா லும் அத்தகைய தேவர்கள் திருத்தொண்டர்கட்கு வழிவிட்டு ஒதுங்கி நிற்பதை, பெரியபுராணம் "தேவர் ஒதுங்கத் திருத் தொண்டர் மிடையும் செல்வத் திருவாரூர்" என்கிறது.

சிவனடியார் மகிமை

சிவபிரான் சிவனடியார்களின் அருமை, பெருமையை சுந்தரருக்கு எடுத்துக் கூறல்.

"பெருமையால் தம்மை ஒப்பார்
பேணலால் எம்மை பெற்றார்
ஒருமையால் உலகை வெல்வார்
ஊனம்மேல் ஒன்றும் இல்லார்
அருமையாம் நிலையில் நின்றார்
அன்பினால் இன்பம் ஆர்வார்
இருமையும் கடந்து நின்றார்
இவரை நீ அடைவாய்" - பெரியபுராணம்

சிவபெருமான், அஞ்ஞானத்தால் விளையும் துன்பம் தீரும் வகையில், வேதங்கள் நவின்ற திருவாயால், சுந்தரர்க்கு ஞானமார்க்கம் பிரவாகிக்கும் முகமாக, சிவனடியார் மகிமையை இனிய தமிழால் பாடும் வண்ணம் "தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்ற முதலடியை எடுத்து அருளினார்.

குண்டையூர்க்கிழார்

திருநாவலூர் அரசராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள், முப்போதும் திருவாரூர்த் தியாகேசப் பெருமானை மனம் உருகி, அன்பு பெருகப் பணிந்து வரும் நாளில், உத்தம தொழிலாகிய உழவுத் தொழிலை மேற்கொண்டு வந்த குண்டையூர்க்கிழார் என்னும் பெரியார், சுந்தரரின் திருவடிதொழுது வரும் நாளில், செந்நெல்லும், செம்பருப்பும், தீங்கரும்பின் நல் அமுதை சுந்தர மூர்த்தி சுவாமிகட்கு திருவமுதாக, படித்திறனாகத் தவறாமல் அனுப்பி வரும் நாளில், ஒருகால் வானம் பொய்த்தது. வளம் சுருங்கியதால் சுந்தரரின் திருமாளிகைக்கு, நல்லமுது அனுப்ப முடியாமல் கவலை பெருகிய கிழார், தானும் அமுதுசெய்யாமல் இருந்தபோது, கண் அயர்ந்த கிழாரின் கனவில் தேவாதி தேவனாகிய சிவபெருமான் தோன்றி, நம்பியாரூரனுக்கு நெல் தந்தோம் என்றருளினார். திருவாரூர் வீடுகள், சாலைகள் எங்கும் நெல் மலையாக பொலிந்து பரவியது. அந்த நெல் மலையை பரவையார் திருமாளிகைக்கு எடுத்துச் செல்ல, ஆள் அணி வேண்டி, சுந்தரர் எம்பெருமானைத் தொழுது "நீள நினைந்தடி யேன்" என்ற திருப்பதிகம் பாடுகிறார். நிறைந்த நெல் குவியலைப்

பார்த்த பரவையார் திருவாரூரில் இருந்தாரை அவரவர் வீட்டிற்கு இந்த நெல்லில் ஒரு பகுதியை எடுத்துச் செல்லுமாறு வேண்டினார்.

சில நாட்கள் சென்றதும், சுந்தரர் சிவஸ்தலங்கள் தோறும் சென்று பதிகம்பாடி திருக்கலய நல்லூர் சென்று அங்குள்ள இறைவனைப் போற்றிப் பதிகம் பாடுகிறார்.

இராகம்: காம்போதி தாளம்: கண்டசாப்பு

திருச்சிற்றம்பலம்

குரும்பைமுலை மலர்க்குழலி கொண்டதவங்கண்டு
குறிப்பினொடுஞ் சென்றவள் தன் குணத்தினைநன் கறிந்து
விரும்புவரம் கொடுத்தவளை வேட்டருளிச் செய்த
வினணவர்கோன் கண்ணுதலோன் மேவியஊர் வினவில்
அரும்பருகே கரும்பருவ அறுபதம்பண் பாட
அணிமயில்கள் நடமாடும் அணிபொழில்சூழ் அயலின்
கரும்பருகே கருங்குவளை கண்வளருங் கழனிக்
கமலங்கள் முகமலருங் கலயநல்லூர் காணே.

திருச்சிற்றம்பலம்

- சுந்தரமூர்த்திசுவாமிகள்

திருமுதுகுன்றம்

திருப்பதிகம் பாடிப்பாடிச் சென்ற திருத்தலங்களுள் திருமுதுகுன்றம் ஒன்றாகும். இந்த பெருந்தலத்தை அடைந்த சுந்தரர் அப்பெருமானை வலம் வந்து பொன்பெற வேண்டி "மெய்யை முற்றப்பொடி" எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடினார். சிவபெருமான் சுந்தரரை மெச்சி பன்னீராயிரம் பொன் கொடுத்ததும்; சுந்தரர் "ஐயனே இப்பொன்னை திருவாரூரில் தந்தருள வேண்டும் என்றதும், இறைவன் இங்குள்ள திருமணி முத்தாற்றில் இட்டு, திருவாரூர் கமலாலய திருக்குளத்தில் கொள்வாயாக என்றார். ஒரு நாள் சுந்தரர் பரவையாருடன் சென்று அப்பொன்னை மகிழ்வுடன் பெற்றார்.

திருவொற்றியூர்

தலங்கள் தோறும் சென்ற சுந்தரர், திருவொற்றியூர் என்னும் பெருந்தலத்தை அடைந்து அப்பெருமானை வணங்கி இருந்தார். முன்பு கயிலையில் நம்பியாரூரரைக் காதலித்த இரு

பெண்களில், ஒருவரான அனிந்ததை என்பவள், ஞாயிறு கிழாருக்கு பெருமகளாய்ப் பிறந்து, வளர்ந்து மணப்பருவம் எய்திய சங்கிலியாரை, திருவொற்றியூர்த் திருத்தலத்தில் கண்டதும், சிந்தை நிலை தடுமாறிய சுந்தரர் எல்லாம்வல்ல சிவபெருமானிடம் சங்கிலியாரை தனக்கு தந்துதவ வேண்டி, கோவிலின் ஒருபுறம் வாழாவிருந்தார். சிவபெருமான் வன்றொண் டர் முன் தோன்றி, சங்கிலியாரை உமக்குத் தந்தோம் என்றருளினார். பின் பரம்பொருள் சங்கிலியாரிடம் வந்து, சுந்தரர் உன்னை யாசித்தான், நீ அவனை மணந்து மகிழ்ந்திருப்பாயாக என்றார். சங்கிலியாரும் எம்பெருமானிடம், சுந்தரரை மணக்க சம்மதித்து, இந்த ஆரூரர் திருவாரூரில் பரவையாருடன் மகிழ்ந்து உறைபவர் என்பதை தெரிவித்து, சுந்தரருடன் இனிது வாழ்ந்து வந்தார் சங்கிலியார்.

வசந்த காலம் வந்தது, திருவாரூர் தியாகேசப்பெரு மானின் வசந்த விழா உற்சவம், ஆரூரரின் நினைவிற்கு வந்தது. திருவொற்றியூர் பெருமானை வணங்கி, திருவொற்றியூர் எல்லை யைக் கடக்க முன், சங்கிலியார்முன் செய்த சபதம் மீறியதால், கண்கள் ஒளி மறைந்தது. இருந்தும் திருவாரூர் செல்வோர் வழிகாட்ட, கச்சிஏகம்பம் என்னும் பெருந்தலத்தை அடைந்தார். செய்த தவறை பொறுத்தருள வேண்டி கச்சி ஏகம்பனைத் தொழுது இரங்க, மங்கை உடல் தழுவ குழைந்த பிரான் மனமிரங்கி, ஆரூரனுக்கு இடக்கண் ஒளிபெறச் செய்தார். சுந்தரர் நிலமுற வீழ்ந்து, இறைவனை வணங்கி திருப்பதிகம் பாடுகிறார்

இராகம் : காம்போதி தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

ஆலந் தான்உகந் தமுதுசெய் தானை
ஆதியை அமரர் தொழு தேத்தும்
சீலந் தான்பெரி தும்உடை யானை
சிந்திப் பார்அவர் சிந்தையுள் ளானை
ஏல வார்குழ லாளுமை நங்கை
என்று மேத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்அடியேன் பெற்றவாறே.

திருச்சிற்றம்பலம்

- சுந்தரமூர்த்தி சுவாமிகள்

திருவாரூர் மூலவரை அர்த்த ஜாம பூசை வேளையில் பெரிதும் வணங்கி, "மீளாவடிமை" என்ற பதிகம் பாடியதும் புற்றிடம் கொண்ட பெருமான், மனமிக நெகிழ்ந்து சுந்தரரது வலக்கண் பார்வையையும் கொடுத்தருளினார். இ்.து இவ்வாறிருக்க நம்பியாரூரரை பிரிந்த பரவையார், பொங்கும் காதல் மேலிட ஏங்கித் தவித்துக்கொண்டிருந்தார். சங்கிலியாரை காதல் மணம் செய்த செய்தி அறிந்து, நம்பியாரூரரை மறக்கவும் முடியாது, விரும்பவும் முடியாமல் தத்தளித்தார். நம்பியாரூரரின் தூதர்கள் பரவையார் மாளிகைக்குச் சென்று, ஊடல் என்னும் துயர்க்கடலில் நீந்தும், பரவையாரை தணிக்க முடியாமல் திரும்பினார்.

தம்பிரான் தோழர் இறைவனை தனது பிணக்கைத்தீர்க்க, பரவையாரிடம் தூது அனுப்பத் துணிந்து பணிந்து வேண்டினார். இந்த அர்த்த ஜாமத்திலேயே சென்று பரவையிடம் அவளுடைய ஊடலைத்தீர்த்து, என்னோடு சேர்ந்து வாழ வழிசெய்க! என்றார் சுந்தரர். தேவாதி தேவனாகிய தியாகேசப்பெருமான் தம்பிரான் தோழராகிய சுந்தரர் படும் துயர் தீர்க்கப், பரவையார் மாடத்திற்கு செல்ல விருப்பங் கொண்டார். வேதங்கள், பூதகணங்கள், தேவர்கள் பின்தொடர சிவபெருமான் சென்றதால், நெருக்க மிகுதியால் திருவாரூர்த் திருவீதிகள் சிவலோகமாகக் காட்சிதந்தன. பரவையாரின் புலவியை தணிக்க, சிவவேதியர் வடிவங் கொண்டு தன்னந்தனியாக பரவையாரின் மாளிகை உள்ளே சென்றபோது, மாளிகைக்கதவு இறுகமூடி, தாழிடப் பட்டிருந்தது. சிவபெருமான் "பாவாய்! கதவைத் திறவென்றார். பதைபதைப்புடன் பரவை கதவைத் திறந்தாள். பரவையார் 'உலகம் முழுவதும் உறங்கும் வேளையில் நீர் ஏன் இங்கு வந்தீர்? காரணந்தான் என்ன? என்று வினவ, பரவையே! நம்பியாரூரன் இங்கு வரவேண்டும் என்றார் அச்சிவவேதியர். அதற்கு சிறிதும் உடன்பாடு இல்லாதநிலை கண்டு தனது மெய்உருவத்தைக் காட்டாமல், இறைவன் திரும்பி வந்து, சுந்தரருக்கு பரவையார் உடன்படாத நிலையை இயம்பினார்.

சுந்தரரோ, இறைவா நீர் என் மனநிலையை தீராவிடின் என் உயிர் தரியேன் என்று கூறி, பரம்பொருளின் திருவடிகளில்

வீழ்ந்த நம்பியாரூரனுக்கு அருள் நோக்களுஞ் செய்து, நான் மீண்டும் பரவையிடம் தூதுபோய், அவளை இசைய வைப்பேன் என்று கூறி, எண்ணிறைந்த பூதகணங்கள், தேவர்கள், முனிவர கள், சித்தர்கள், இயக்கர்கள் சூழச் சென்றது, திருக்கயி லாயம் போன்றிருந்தது. சிவபெருமான் முன்போலன்றி சுயகோலத்துடன் பரவையார் திருமாளிகையை வந்தடைந்தார்.

சிவபெருமான் பரவையாரை நோக்கி, பூங்கூந்தல் பரவையே, தோழன் என்ற உரிமையால் நம்பி என்னை ஏவ, மீண்டும் நாம் உன்னிடம் வந்தோம். பரவையார் மெய்நடுங்க, அச்சம்மிக, பரம்பொருளை எதிர்கொண்டு எம்பெருமானின் பாத கமலங்களில் வீழ்ந்து வணங்கி ஒதுங்கி நின்றாள் பரவை. பாவையே! சுந்தரன் உன்னுடன் வந்து சேரவேண்டும் என்றார்.

பரவையார் எம்பெருமானே! உம்முடைய திருவடி நோவ, பாதம் சிவக்க பலதரம் நடுநிசியில் அடியவர் பொருட்டு என்னிடம் வந்தபின், நான் இசையாமல் இருப்பேனா? என்றதும் சிவபெருமான் சுந்தரரிடம் திரும்ப வந்து நம்பியே! பரவை உன் பிரிவால் வந்த தாபத்தை அணையச் செய்தோம்! நீ எனி அவளைச்சென்று சேர்வாயாக! என்றார்.

"வன்றொண்டர்க்கு தூது போய்
நடந்த செந்தாமரை யடி நாறுமால்"

- பெரியபுராணம்

பரவையார் கண்களுக்கு மைதீட்டி, நெற்றியில் திலகமிட்டு, பூங்கூத்தலுக்கு பூச்சூட்டி, நெய் விளக்கேற்றி, தூப, தீபங்கள் வைத்து, ஊடல் மறந்து, சுந்தரர் வரவிற்காக வாயிலில் காத்து நின்றாள் பரவை.

விளக்கம்

புலவி – ஊடல், வெறுப்பு
ஊடல் - தலைவன், தலைவி, பிணக்கு
வித்தகம் - பெருமை

திருநெல்வேலி

பண்: சாதாரி

திருச்சிற்றம்பலம்

வெடிதரு தலையினர் வேனல் வெள் ஏற்றினர் வீரி சடையர்
பொடி அணிமார்பினர் புலிஅதன் ஆடையர் பொங்கு அரவர்
வடிவு உடைமங்கை ஓர் பங்கினர் மாதரை மையல் செய்வார்
செடி படு பொழில் அணி திருநெல்வேலி உறை செல்வர் தாமே.

திருச்சிற்றம்பலம்

- சம்பந்தர் தேவாரம்

புராண வரலாறு

திருநெல்வேலி பாண்டிய நாட்டின் சைவத்திருப்பதி. அந்த ணரான வேதசர்மாவை வேதப்பட்டர் என்றும் அழைப்பர். வேதப் பட்டர் ஓர் சிவபக்தன். தென்பாண்டி நாடு பெரும் நெற்கழனி. ஆயினும் முன்னொருகால் பஞ்சம் தலைதூக்கியது. இதனால் வேதப்பட்டர் இறைவனுக்கு திருவமுது படைக்கத் தாம் யாசித்து எடுத்து வந்த நெல்லை சிந்துபூந்துறைக்கு கொண்டு சென்று தீர்த்தக்கரையில் உலர வைத்துப் பரம்பொருளை மனதில் இருத்தி நீராடச் சென்றார். அப்போது கடும் காற்றுவீசப், பெரு மழை பெய்ய அந்த நெல்லை வெள்ளம் அள்ளிச் செல்லா வண்ணம் வேலியிட்டு பரம்பொருள் காப்பாற்றியமையால் இறைவனுக்கு நெல்வேலி நாதர் என்ற பெயர் வந்ததாக தல புராணத்தில் காணமுடிகிறது. இதனால் இத்தலம் திருநெல்வேலி யாயிற்று. பண்டுதொட்டு இன்றுவரை இத்திருவூரைச் சுற்றி பெரும் நெல்வயல்கள் வேலியாக அரண் செய்கின்றன.

திருநெல்வேலியில் நடந்த ஞான அற்புதம், வேதங்கள் ஈசனுக்கு தாயாகப் பிறக்க வேண்டும் என்று தவம் இருந்தன. வேதங்கள் வேண்டியபடி, வரம் பெற்று ஞானபூமி ஆகிய திருநெல்வேலியில் வேதங்கள் மூங்கில் காடாகத் தவமாக முகிழ்ந்தன. அஞ்ஞானத்தை அறுக்க மெய்ஞ்ஞானம் கல்லாகக் குறுக்கிட்டது. திருநெல்வேலியில் மணவையை ஆண்ட அரசன் முழுதுகண்ட இராமன் எனும் வழுதியர்கோன். இந்த அரசனுக்கு பால் தருபவன், இடையன் இராமக்கோன். அரசனுக்குப் பால்

கொண்டு வரும் வழியில் நாள் தவறாது கல் ஒன்று தடக்கி பாலைச் சிந்த வேண்டியதாயிற்று. ஒருநாள் தடக்கும் கல்லை நீக்க, இராமக்கோன் கோடரி கொண்டு வெட்ட இரத்தம் அந்தக் கல்லிலிருந்தும் பீறிட, இடையன் அஞ்சி அரசனுக்கு முறையிட, அரசனும் அஞ்சி ஓடோடிச் சென்று, இந்த மூங்கில் வனத்தில் தாமிரபருணி தீர்த்தத்தில் இடறிய கல்லைச்சுற்றியுள்ள நிலத்தை அகழ்ந்தபோது, அயனும் அரியும் காணாத பரம்பொருள் சிவலிங்க வடிவில் மனித குலத்திற்கு இடர்வராமல் காக்க, இறைவன் சுயம்புலிங்கமாக வளர்ந்து நின்றார். பாண்டியனும் இடையனும் ஆடினர், பாடினர், நிலமுற வீழ்ந்து வணங்கினர். தேவதேவியரின் தரிசனம் கிடைத்தது. இவ்விடத்திலேயே பாண்டி யன் காடழித்து ஆலயம் அமைத்தான். இந்தப் பாண்டியனே, மூலமகாலிங்கர்க்கு பொற்கோவில் எடுப்பித்தான் எனத் தல புராணங் கூறுகிறது. சுவாமிக்கு வேணுவனநாதர் எனும் திருநாம மும் வழங்கலாயிற்று. சிவத்தலத்தில் உயர் தலம் திருநெல் வேலி என்பர். இத்தலத்தில் தர்மதேவதையே ரிஷபமாக நின்றுலாவும் பெருமை பெற்றது.

அமைவிடம்

திருநெல்வேலி தமிழ் நாட்டின் தென் பகுதியில் கிழக்குக் கரையோரமாக உள்ள மாவட்டம். திருநெல்வேலியே, திருநெல் வேலி மாவட்டத்தின் தலைநகரம். தலைநகரம் தாமிரபருணி ஆற்றின் கடற்கரையில் உள்ளது. தாமிரபருணியை பொருநை என்றும் அழைப்பர். இந்த நதிக் கொடியாள் நடந்து வரும் பாதை எங்கும் சைவமும் தமிழும் தழைத்தன. இந்த மாவட்டத்தின் பரப்பளவு 4337 சதுர மைல், வடக்கில் இராமநாதபுரம் மாவட்டம், கிழக்கில் வங்காள விரிகுடாக் கடல், தென்மேற்கில் கன்னியா குமாரி மாவட்டம், மேற்கில் மேற்குத்தொடர்ச்சி மலையின் தென்பகுதி இதன் எல்லைகள். இன்று திருநெல்வேலி மாவட்டம் கட்டப்பொம்மன், வ.உ. சிதம்பரனார் மாவட்டம் என இரண்டாகப் பிரித்துள்ளது. 130 கிராமங்களைக் கொண்டது, திருநெல்வேலி மாவட்டம். சென்னையிலிருந்து விரைவுப் பேரூந்துக்களும் புகைவண்டிகளும் உண்டு. புகைவண்டி நிலையம் பாரிய திருநெல்வேலிச் சந்திப்பாகும். மதுரையிலிருந்தும் பிறவூர்களி லிருந்தும் மதுரை வழியாகவும், திருநெல்வேலிக்கு அடிக்கடி

பேரூந்து வசதிகள் உள. புகைவண்டி நிலையத்திலிருந்து ½ மைல் தொலைவில் திருக்கோவிலுள்ளது.

நெல்வேலித்தலம், பொன்திணிந்த புனல் பெருகும் பொருநை நதிக்கரையிலுள்ளது என்று புலவர் பெருமக்கள் பெருமைப்படக் கூறுவர். திருநெல்வேலியில் மந்திகள் கொப்பு விட்டு கொப்புத்தாவும் போது மரபுக்கொப்புக்களில் உள்ள மலர்கள் குலுங்கிச் செந்தேன் துளிக்கும் என்பர். இவ்வளவு வளமான பூமியில் முல்லை, மல்லிகை, இருவாட்சி, செண்பகம், வெட்சி மலர்கள் பூத்துக் குலுங்கும்.

பொதியமலை

கொச்சகக் கலிப்பா

திங்கள் முடி சூடுமலை, தென்றல்விளை யடுமலை
தங்குபுயல் குழுமலை, தமிழ்முனிவன் வாழுமலை
அங்கயற்கண் அம்மைதிரு அருள்சுரந்து பொழிவதெனப்
பொங்கருவி தூங்குமலை, பொதியமலை என்மலையே.

- குமரகுருபரர், மீனாட்சியம்மை குறம்

குமரிமுனைக்குத் தெற்கே, பல நூற்றாண்டுகட்கு முன் பெருநிலப்பரப்பு நிலவியது. அந்தப் பாரிய நிலப்பரப்பு கடற் கோளால் கொள்ளப்பட்டது. எஞ்சிய பகுதியே தென்தமிழ் பாண்டிநாடு அல்லது பொருநை நாடு என்று துணிந்து கூறலாம். குமரகுருபரரும் இந்தத் தென்பாண்டிச் சீமையிலே தோன்றிய வராவார். மேற்கு மலைத் தொடர்ச்சிப் பகுதிகள் 3000' - 5000' உயரப்பகுதியில் அடர்த்தியான காடுகளால் மேவியவை. அகத்திய மலையின் உச்சி 6,200' ஆகும். இங்கு உள்ள மகேந்திரகிரியிலிருந்து தான் அனுமான், இலங்கைக்குத் தாவிய தாக கம்பராமாயணங் கூறும். இம்மாவட்டத்தில் பாயும் ஆறுகள் யாவும், மேற்கு மலைத்தொடரிற் தோன்றி கிழக்கு நோக்கிப் பாய்ந்து, வங்காள விரிகுடாக்கடலில் சங்கமிக்கின்றன. தாமிர பருணி ஆறு மிகப்பிரதானமான ஆறு. தாமிரபருணியைப் பொருநை என்றும் கூறுவர். இது அகத்திய மலையில் தோன்றுகின்றது. மலை ஓரத்தில் மழை அதிகம். மூலிகைகள், வனவிலங்குகள்,

பறவைகள் மாத்திரமல்ல, தேக்கு, மருது, கோங்கு மரங்களும் வானளாவி வளர்கின்றன. கிழக்கே செல்லச் செல்ல மழை குறைகின்றது. ஐந்திணை நிலங்களும் பொருநை நாட்டில் உண்டு. (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை)

இங்கே நீர்ப்பாசனத் திட்டங்கள் சிறப்பாக அமைந்துள்ளன. கல்யாணி தீர்த்தம் எனும் நீர்வீழ்ச்சிக்கு மேல் குறுக்கே அணை கட்டி பாபநாசம் எனும் நீர்த்தேக்கம் அமைத்து உள்ளனர். இங்கேதான் நீர் மின்சாரம் உற்பத்தியாகி திருநெல்வேலி மாவட்டத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. மணிமுத்தாற்றுக் குறுக்கேயும் பாரிய அணைகட்டி உள்ளனர். திருநெல்வேலி, தூத்துக்குடி, குற்றாலம், திருச்செந்தூர், பாபநாசம் முக்கிய ஊர்களாகும். ஆதிச்ச நல்லூர் வரலாற்றுச் சிறப்புமிக்க இடம். தூத்துக்குடி தமிழ்நாட்டின் பெயர்பெற்ற பாரிய இரண்டாவது துறைமுகம். இம்மாவட்டத்தில் திருநெல்வேலி, தென்காசி, பாபநாசம், திருக்குற்றாலம் ஆகியன சிவத்தலங்களாகும். திருச்செந்தூர் கழுகுமலை முருகத்தலங்கள் ஆகும். பாலர்பள்ளி, உயர்கல்விக் கல்லூரிகள் போன்ற கல்விச்சாலைகள் கணக்கிலடங்கா. திருநெல்வேலி சென்னையிலிருந்து 446 மைல்கள் ஆகும். திருநெல்வேலித் திருப்பதியை நெல்லை, வேணுவனம், நெல்வேலி, நெல்லூர், சாலிவேலி, சாலிவாடி, சாலிநகர், பிரம விருத்தபுரம், தாருகா வனம் எனத் தலபுராணங் கூறுகிறது.

நெல்லையப்பர் திருக்கோவில்

குன்றாத மூவுருவா, யருவாய் ஞானக்
கொழுந்தாகி யறுசமயக் கூத்துமாடி
நின்றாயே மாயையெனுந் திரையை நீக்கி
நின்னையா ரறிய வல்லார்.

- தாயுமான சுவாமிகள்

திக்கெலாம் புகழ் திருநெல்வேலிச் சீமையில், திருச்செந்தூர் எனும் கடலோரச் செவ்வேளின் திருத்தலமும், திருக்குற்றாலம் எனும் சிவத்தலமும் உண்டு. நாம் இறைவனிடத்தில் விரும்புவது, பொன்னும் பொருளும், போகமுமல்ல, மாறாக

அன்பும், அருளும் அறவாழ்வுமே ஆகும். திருநெல்வேலியின் நகர மத்தியில் மதுரையைப் போல், அருள்மிகு நெல்லையப்பர் திருத்தலம் நாலாபக்கமும் பாரிய இராஜகோபுரங்களுடன் அழகுற அமைந்துள்ளது. நெல்லையப்பர் கோவில் இராஜகோபுரம் கி.பி 1606இல் கட்டப்பட்டது. பாடல்பெற்ற நெல்லை, கடந்த 1300 வருடங்களாக, நெல்லை மக்களாலும், பாண்டிய மன்னராலும் வளர்ச்சி பெற்றது. சமயகுரவர் காலத்திற்கு முன்னரே, தமிழ் நாட்டில் கோவில்கள் இருந்தன. திருநெல்வேலி மருதவள நாடு, அழகிய நெல்வயல்கள் பச்சைப் பசேலென நகரைச்சுற்றி வேலியாக அணிசெய்கிறது. திருநெல்வேலியைத் தென்பாண்டி நாடு என்றார் மணிவாசகர். திருநெல்வேலியைச் சார்ந்த கொற்கை, மிகப்பழைய காலந்தொட்டே பாண்டிய இளவரசர் களின் இருக்கையாகவும், துறைமுகம் ஆகவும் இருந்தது. திருநெல்வேலியிலுள்ள சிந்து பூந்துறை சம்பந்தப்பெருமானுக்கு இயற்கை விருந்து படைத்தது. திருநெல்வேலிக்கு சம்பந்தப் பெருமானுடைய திருப்பதிகம் உண்டு. நெல்லையப்பர் மேற்பால் ஞானசம்பந்தப் பெருமானுக்கு கோயில் உண்டு. நெல்லையப்பர் கோவில் மதுரை மீனாட்சி அம்மன் ஆலயம் போல் இரட்டைக் கோயிலாக இருப்பினும் வழக்காற்றில் நெல்லையப்பர் கோவில் என்றே அழைக்கப்படுகிறது. திருநெல்வேலியில் நாளிலும், பொழுதிலும், ஓதுவார் தமிழ்மறை ஓத, அந்தணர் வேதம் ஓத, பெண்கள் பரதம் பயின்றாடி மகிழ, திங்கள் தோறும் திருவிழா நடைபெற்று தேரோடும் பெருமை பெற்றது திருநெல்வேலித் திருவீதிகள்.

காமிக ஆக முறைப்படி 14 ஏக்கர் நிலப்பரப்பில், 7ஆம் நூற்றாண்டிலிருந்து இத்திருக்கோவில் அமைந்து, வானுற நிமிர்ந்து நிற்கிறது. நெல்லையப்பர் கோவில் அகல நீளம் 756' x 850' ஆகும். 32 தீர்த்தங்கள் நெல்லையப்பர் கோவிலிலுள்ளது. இவற்றுள் தாமிரபருணி ஆறு, சிந்துபூந்துறை, கருமாறி, பொற்றாமரைத் தீர்த்தங்கள் விசேடமானவை. கோயிலுள்ள பொற்றாமரைத் தீர்த்தம் நாலாபக்கமும் நல்ல படிகள், சுற்றுக் கால் மண்டபத்துடன், அதன் நடுவே நீராழி மண்டபத்துடன் அரன் கோவிலை அழகு செய்கிறது. இந்த பொற்றாமரைத்

தீர்த்தத்தில் சிவபெருமான் நீர் வடிவினராகத் தோன்ற, பிரமன் அதன்மீது பொன்மலராகத் தோன்றியதாக ஐதீகம். சுவாமி அம்பாள் சந்நிதிகள் அருகருகே கிழக்கு நோக்கி உள்ளன. சுதையாலான பெரியநந்தி, சுவாமி சந்நிதியை நோக்கியவாறு அலங்கார மாகவுள்ளது. சுவாமி சந்நிதிக்கு செல்லும், வழியில் இசைத் தூண்கள் இருக்கின்றன. துவரார பாலரகர்களைக் கடந்து சென்றால், மகாகணபதி, முருகப்பெருமானைத் தரிசித்த பின் உட்புகுந்தால், சுவாமி சந்நிதி விசாலமானது. நெல்லை யப்பர் சிவலிங்கத் திருமேனியில் வெட்டிய அடையாளம் தெரிகின்றது. இறைவனின் ஆக்கச் சக்தியைக் குறிக்கும் அடையாளமே இலிங்கமாகும். இந்த திருவடிவிற்கே சிவபூசை. தற்போது உள்ள ஆவுடையார் 21 ஆவது ஆவுடையார் என்றும் 20 ஆவுடையார்கள் பூமியின்கீழே உள்ளனர் என்பதும் ஐதீகம். இம்மூர்த்தியை "மிருத்யுஞ்சயமூர்த்தி" என்பர். இறைவனை வேணுவனநாதர், நெல்லையப்பர், வேய்முத்தர், நெல்வேலி நாதர், சாலிவாடீசர், வேணுவனேஸ்வரர், வேணுவன மகாலிங் கேஸ்வரர் என்பர். மூலவர் சுயம்புமூர்த்தி, இறைவன் மூங்கிலில் தோன்றின வராகையால் வேய்முத்தரானார். தலமரம் மூங்கில் (வேணு - வேய்)

தான்தோன்றியான நெல்லையப்பர், மூலமகாலிங்கர்க்கு பிற்பட்டவராக இருத்தல் வேண்டும். கோவில் பூசைகள் முதலில் மூல மகாலிங்கத்திற்குச் செய்த பின்பே நெல்லையப்பருக்கு நடைபெறுகிறது. மூலமகாலிங்கர் கோயில் தரை மட்டத்திற்கு கீழே அமைய வேணுவன நாதர் கோவில் உயரத்தில் அமைத் துள்ளனர். நாள்தோறும் நடைபெறும் உச்சிகாலப் பூசைக்கு மட்டும் காந்திமதி அம்மை ஆகிய இறைவியே நேரில் வந்து சுவாமியை வழிபட்டுச் செல்வதாக ஐதீகம், குறுமுனி ஆகிய அகத்தியற்கு இறைவன் அகத்தியர் வேண்டியபடி தனது திருமணக் காட்சியைக்காட்டி அருளியது தென்பாண்டி நாட்டி லேயே! இஸ்லாமியரான அன்னவர்க்கான், தனது மனைவியின் நோய் நீங்க, நெல்லையப்பரை வேண்ட அவரின் மனைவி நோய் நீங்கியதும் அன்னவர்க்கான் பயபக்தியோடு உபகரித்த நகை களும் கருவூலத்தில் உள்ளது. நெல்லையப்பர் கோவிலுக்குள் இருதுர்க்கை சந்நிதிகள் உண்டு. அறுபத்து மூவர் மூலத்

திருமேனிகளை அடுத்து, கயிலாயபர்வதக் காட்சியையுங் காணலாம். நடராசர் சந்நிதி தனியே உள்ளது. இப்பெருமான் அக்கினி சபாபதி எனப்படுவர். இவர் சிவகாமி உடன் நிற்க, காரைக்கால்அம்மையார் கையில் தாளமிட்டுப்பாட, சிரித்த முகத்துடன் ஆடும் அம்பலக்கூத்தன் அழகைக் காணாத கண் என்ன கண்ணோ?

இத்தலத்திற்கு தலபுராணமுள்ளது. தாருகாவன விசேடங்கள் இங்கே நடைபெற்றதென்பர். இலக்கணக்கொத்து ஆசிரியர்; இத்தலத்தைச் சிவபுரம் என்றார். பாடல்பெற்ற நெல்லை, கடந்த 1300 வருடங்களாக, நெல்லை மக்களாலும் பாண்டிய மன்னராலும், வளர்ச்சி அடைந்தது. திருநெல்வேலி மேலரத வீதியில், திருவாவடுதுறை ஆதீனக் கிளை மடம் ஈசான்னிய மடமாகத் திருத்தொண்டு பல செய்து வருகிறது. இந்த மடம் திருக்கோவில்களை நிர்வகிப்பது, சைவசித்தாந்த வகுப்பு நடாத்துதல், ஓதுவாரைப் பயிற்றல், சைவ நூல்களைப் பதிப்பித்தல், வெளியிடுதல் போன்ற நிர்வாக சேவைகளைச் சிறப்பாகச் செய்து வருகிறது. நெல்லையில் உள்ள தெருக்கள் தூய தமிழில் பெயரிடப்பட்டுள்ளன. உதாரணமாக சம்பந்தர் தெரு, காசுகடைத்தெரு, கூலக்கடைத்தெரு, கம்பராமாயணத் தெரு, எல்லாம்வல்லான் தெரு போன்றவை.

நெல்லையப்பர் கோவில் நந்தவனத்தில் இருந்து அன்றலர்ந்த மலர் பறித்தல், பூமாலை தொடுத்தல், மங்கள வாத்தியம் வாசித்தல், கோசாலைகள் பராமரித்தல், கோவில் தீர்த்தங்களில் செங்கழுநீர்ச் செடிகளை பராமரித்தல், அன்ன தான மடங்களில் அன்னமிடுதல் போன்ற பெரும் சேவைகள் இடம்பெறுகின்றன. கோவிலில் பணிபுரிவோருக்கு நிலம், மனைகள் ஒதுக்கப்பட்டன. கோவில் நிலங்கட்கு அதன் எல்லை களில் திரிசூலக் கற்கள் பதித்திருந்தன. காராண்மை மூலம் நெல், கரும்பு, கதலி, பால், தயிர், நெய் பெறப்பட்டன. திருநெல் வேலித் தேர் 450 தொன் எடை கொண்ட பாரிய தேராகும்.

காந்திமதி அம்மன்

பண்: சாதாரி

திருச்சிற்றம்பலம்

பொறி கிளர் அரவமும் போழ்இள மதியமும் கங்கை என்னும்
நெறிபடு குழலியைச் சடைமிசைச் சுலவி வெண்ணீறு பூசி
கிறிபட நடந்து நல் கிளிமொழியவர் மனம் கவர்வர் போலும்
செறி பொழில் தழுவிய திருநெல்வேலி உறை செலவர் தாமே.

திருச்சிற்றம்பலம்

- சம்பந்தர் தேவாரம்

திருநெல்வேலியின் இறைவியான காந்திமதி அம்மை, இறைவனான நெல்லைப்பரைத் தவமிருந்தே திருமணஞ் செய்தாள். நெல்லையப்பருக்கும் காந்திமதி அம்மைக்கும் இரட்டைக் கோயிலாக, கிழக்கு நோக்கி இருப்பது பார்வைக்கு விருந்தாக அமைந்துள்ளது. இறைவி தலம் ஆகையால் தனிக் கோயிலாக நின்ற நிலையில் அருள்புரிந்து வருகிறார். காந்திமதி அம்மையை, வடிவுடை அம்மை என்றும் அழைப்பர். காந்திமதி அம்மன் திருமணப்பெண் போல முழு அலங்கார பூஷிதையாக அணிகள் பல அணியப்பெற்று சாந்தம் தழுவும் திருமுகத்துடன் உயர்ந்திருக்கும் வலக்கரத்தில் பசுங்கிளி காட்சிதர இடக்கரம் தாழ்த்தி தம்மை தொழுவார்பால் அருட் கருணைப் பார்வையுடன் காட்சி தருகிறார். முக்கிய சக்தி பீடங்கள் அறுபத்து நான்கில் திருநெல்வேலியும் ஒன்றாகும். இறைவன் கோவிலைப் போலவே இங்கும் முகப்பில் அம்பலம் அமைந்துள்ளது. கடந்த 1300 வருடங்களாக காந்திமதி அம்மன் கோவில், திருநெல்வேலியை அழகுக்கு அழகு செய்கிறது. மிகவும் அழகுவாய்ந்த இறைவி யின் கீழைக்கோபுரம் கி.பி 1626இல் கட்டப்பட்டது. காந்திமதி அம்மனுக்கு கீழைக்கோபுரம் மட்டுமே உண்டு. காஞ்சியில் காமாட்சிக்கும், மதுரையில் மீனாட்சிக்கும், முக்கியத்துவம் உள்ளது போல் அன்னை காந்திமதி அம்மைக்கும் முதன்மை முக்கியத்துவம் உண்டு.

கீழைக்கோபுரத்தைக் கடந்ததும் ஊஞ்சல் மண்டபம் 96 தூண்களைக் கொண்டது. நந்தியைக் கடந்து கோயிலுட்

சென்றால் கொடிமரம், அடுத்து மணிமண்டபம், இதன் வழியாக மகாமண்டபம் அர்த்தமண்டபத்தை அடுத்துக் கருவறையில் தேவியின் எழிலார்ந்த திருக்கோலத்தைத் தரிசிக்கலாம். ஊஞ்சல் மண்டபத்திற்கு வடக்கே ஆயிரங்கால் மண்டபமுள்ளது. இதன் அகலம் நீளம் 63x520 ஆகும். இங்குதான் இறைவிக்கு ஐப்பசி மாதத்தில் திருக்கல்யாணம் நடைபெறும். சிற்பக்கலை வல்லுனர் FERGUSSON என்பார்; இப்பெருமன்றை தூண்களாலான காடு என்றார். வியாழக்கிழமை தோறும் தேவிக்கு தங்கப்பாவாடை சாத்தப்படும். மகாமண்டபத்திற்கு வடபால் இறைவனும் இறைவியும், அர்த்தசாமப் பூசைக்கென எழுந்தருளும் பள்ளியறை உளது. இறைவன் கோயிலையும் இறைவி கோயிலையும் இணைப்பது சங்கிலி மண்டபம். இதன் அகலம் நீளம் 30X300 உள்ள பெருமன்று. இதனைக் கி.பி 1647இல் கட்டியவர் திருச்செந்தூர் புகழ் வடமலையப்பன் ஆவார். அம்மையின் மேற்பிரகாரத்தில் கருமாரித் தீர்த்தம் உளது. சித்திரை வைகாசியில் இளவேனிற் காலத்தில் இறைவன் இறைவிக்கு வசந்தவிழா! மண்டபப் படிகள் இடம்பெறும். ஆடிப் பூரத் திருநாள் அம்பாளுக்கு 10 தினம் உற்சவம் சிறப்பாக நடைபெறும். இறைவன் இங்கிருப்பதும் இறைவி 32 அறங்களைப் புரிந்ததாலும் சிந்துபூந்துறை பொற்றாமரைத் தீர்த்தங்களில் நீராடினவர்; இவ்வூரில் வாழ்வோர் வருவோர் அனைவரும் பெரும்பேறடைவர். நெல்லையப்பர் மீதும் அன்னை காந்திமதி மீதும், இது காலவரை 29க்கு மேற்பட்ட நூல்கள் வெளிவந்துள்ளது. காந்திமதி அம்மை பிள்ளைத்தமிழ் நூல் இவற்றுள் சிறந்த சுவையான நூலாகும். மேலும் யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை திரு. ஆ. அம்பலவாணப்பிள்ளை என்பவரால் ஸ்ரீவேணுவனலிங்கோற்பவம் என்னும் சிவபக்தி நிரம்பிய நூல் உரைநடையில் செயற்பட்டுள்ளது.

ஞானமும் தவமும் ஒருங்கிணைந்து ஒரு தாயாகத் தோன்றின. மெய்ஞ்ஞானப் பெருவாழ்வு வாழும் வழியை ஏற்றார் அன்னை காந்திமதி. வேதமணம் நிகழ்ந்தது. கணவனை மனைவி உபசரிப்பதுபோல் இறைவனின் உச்சிக்காலப் பூசைக்கு முன், அம்பாளுக்கு அபிஷேகம் நடைபெறும். அடுத்து சங்கிலி

மண்டபம் தாண்டி இருக்கும் ஈசனைத் தரிசிக்கப் போகிறாள் அன்னை. அதற்கு முன், அன்னைக்கு ஆராதனை நைவேத்தியம் நடைபெறாது. நைவேத்தியத் தட்டுடன் ஈசனை நோக்கி, சாதம், துவரம் பருப்புப் பொரியல், நறுநெய் குழம்பு முதலிய நைவேத்தி யப் பொருட்களுடன் சிவாச்சாரியார் அன்னையின் பாவாடையை தோளில் இட்டபடி, அன்னை உருவம் போல் சென்று ஈசனுக்கு அபிடேகம், ஆராதனை படையல் செய்து, தேவி சந்நிதிக்குத் திரும்பி, பரிவார தேவதைகட்கு, நைவேத்தியம் இட்டு, இதன் பின்பே தேவிக்கு ஆராதனை நைவேத்தியம் இடம்பெறும். அறம் எனும் செங்கோலேந்தி, அருள் நாயகியாக வீற்றிருக்கிறாள் அன்னை காந்திமதி.

திருநெல்வேலியில் தாமிர சபையில், இறைவன் ஆடியது அன்னையின் புன்னகை ஒன்றிற்காகவே! ஆடல் வல்லானை ஆட்டுவித்தவள் அவளே! அவள் மனதை நிறைவிக்க ஆடுகிறான் இறைவன். பிரமாதி தேவர்கள் இசை வாத்தியங்கள் முழங்க தாம் தை ..... தாம் ஜதிகள் தெய்வீகமாக முழங்குகின்றன. அன்னை அனைவருக்கும் நடுநாயகமாக வீற்றிருக்க, அவள் முன் அவளுக்காக, அரன் தன் திருப்பாதம் பெயர்த்து ஆட, சடை விரிந்தாட, காதில் குழை அசைந்து ஆட, மானாட, மழுவாட, மதியாட, புனலாட, மறையாட, அரையில் புலித்தோல் அசைந்தாட, வேத ஞானங்களும் விகசித்தாட, ஆனந்தமாய் இறைவன் ஆட, ஆட அந்தத் திருக்கோலங்கண்டு அன்னை திருமுகம் மலர்கிறது அம்பிகையே! இன்னும் யாது வேண்டும்? என இறைவன் வினவ? தேவாதி தேவ இத்திருத்தலத்தில் தினமும் உமது திருநடனம் நடைபெறவேண்டும் என்றாள்.

பொல்லாப்பிள்ளையார்

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை.

- கபிலதேவநாயனார்

திருநெல்வேலியிலுள்ள பொல்லாப்பிள்ளையார் பொள்ளப்படாத (உளி படாத) தான்தோன்றிய (சுயம்பு) பொல்லாப் பிள்ளையார் எனக் கல்வெட்டிலுள்ளது. கருவறையும் அர்த்த மண்டபமும் கொண்ட சிறிய கோவில் இது. இப்பிள்ளையாருக்கு அட்டமி தோறும் ஆடி அருள நெய் வழங்கப் பசுக்கள், காலைச் சந்தி நிவேதனமாகக் கொழுக்கட்டை படைக்க நிலம் வழங்கப்பட்டுள்ளது. கல்வெட்டு இல. SIIIV 423 ARE 44OF 1927 மூலம் இவற்றை அறிய முடிகிறது.

ஆறுமுக நயினார் சந்நிதி

ஆறுமுகநயினார் சந்நிதி, வெளிப்பிரகாரத்தில் தெற்குச் சுற்று வாயுதிசையில் அமைந்துள்ளது. கி.பி 1642இல் வடமலையப்ப பிள்ளையன் அவர்களால் இத்திருக்கோவில் அமைக்கப் பட்டது. குறித்த பிள்ளையே, திருச்செந்தூரில் பகைவரால் (வெள்ளையரால்) கவர்ந்து, கடத்தி கடலில் இடப்பட்ட முருகப் பெருமானை மீட்டவராவார். ஆறுமுகர் சந்நிதி நெல்லையப்பர் கோவிலில் விசேடமானது. வள்ளி தெய்வானையுடன் ஆறு முகங்கள் சுற்றிலும் திகழ, ஒவ்வொரு முகத்திற்கும் நேரே இரண்டு திருக்கரங்கள் வீதம் சுற்றியும் திகழ அவற்றிற்குரிய ஆயுதங்களும் கொண்டு மயில் மீது அமர்ந்துள்ள பாங்கு அற்புதமானது.

மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம், ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்தினிது ஒழுகிக்
காதலின் உவந்து வரம் கொடுத்தன்றே ஒரு முகம்
மந்திர வீதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே ஒருமுகம்
எஞ்சிய பொருளை ஏமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளங்கும் ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவு கொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே ஒருமுகம்

- திருமுருகாற்றுப்படை

வைகாசி விசாகத்தன்று சங்காபிடேகம் ஆறுமுகநயினாருக்கு சிறப்புற நடைபெறும். கந்தசஷ்டி ஆறுநாளும் ஆறுமுக சுவாமி சந்நிதியில் பெருவிழா. 7ஆம் நாள் திருக்கல்யாணம் இடம்பெறும். பாம்பன் சுவாமிகள் பதிகம் சுவரில் பதிக்கப் பெற்றுள்ளது.

நித்திய பூசைகள்

நெல்லையப்பர் கோவிலில், ஆறுகாலப் பூசைகள் தவறாது நடைபெறுகின்றன. திருவனந்தல் காலை 6 மணிக்கு ஆரம்பம். பள்ளியறைக் கதவுக்கு தூபதீபாரதனையின் பின் கதவு மெல்லத் திறபடுகிறது. இறைவன் மதுரைச் சொக்க நாதராகவும் இறைவி மதுரை மீனாட்சியாகவும் பள்ளியறையில் அறிதுயில் கொண்டிருக்கும் ஊஞ்சலை சிவாச்சாரியார் மெல்ல மெல்ல அசைப்பர். தூபதீப நைவேத்தியத்தை அடுத்து ஓதுவார் மூர்த்திகள் திருப்பள்ளி எழுச்சி பாடியபின், திருப்பாத உருவிலிருக்கும் மீனாட்சியை இறைவி காந்திமதியம்மை கருவறையில் சேர்ப்பித்து, மூலவருடன் ஐக்கியமானதும், இதன் பின் பாதுகை வடிவிலிருக்கும் இறைவன் சொக்கநாதரைப் பள்ளியறை நீக்கி பல்லக்கில் இருத்தி, இறைவன் கருவறையில் வைத்து அதிலிருந்து ஒரு மலரை எடுத்து மூலவரின் ஆவுடையாரில் சேர்ப்பர். காலைச் சந்திப் பூசைக்கு யானை, மேளவாத்தியம் போன்ற பரிவாரத்துடன் தாமிரபருணி ஆற்றினின்றும் திருமஞ்சன நீர் கொண்டு வந்து, இறைவனுக்கு அபிடேகம், பூசைகள் நடைபெறும். மீண்டும் உச்சிக்காலப் பூசைக்கும் இவ்வண்ணமே நடைபெறுகிறது. அர்த்தசாமப்பூசை, பள்ளியறைப் பூசை எனப்படும். இறைவியின் சந்நிதியின்றும் முத்தாளம் முழங்க, இறைவன் கோயிலிற்கு வந்து இறைவியின் கோயிலிற்கு வருமாறு அழைப்பு விடுத்தல், திருப்பாத வடிவிலிருக்கும் சொக்கரைச் சிவிகையிலேற்றி, இறைவி சந்நிதிக்கு மேளதாளத்துடன் அழைத்து வந்து, பாத பூசை செய்து, பின் தங்க ஊஞ்சலில் சொக்கரை அமர்த்தி, இதே போல் மீனாட்சியையும் அழைத்து வந்து பள்ளியறையில், இறைவனின் இடப்பாகத்தில் சேர்த்துப் பால், பழம், அப்பம், வடை, சர்க்கரைப்பொங்கல் நிவேதித்து, பள்ளியறையைச் சாத்தி திருமுறை ஓதி, அடியார்க்கு வீபூதிப் பிரசாதம் வழங்குவார். இவ்வண்ணமே நெல்லையப்பருக்கு ஆறுகாலப் பூசை நிறைவுபெறும்.

திருவிழாக்கள்

ஒருமுறை கண்ணபிரானிடம் முனிவர்களும், வேத விற்பனர்களும் "தேவரீர் நாளை கலியும் பிறக்கின்றதே, கலியின் கொடுமைக்கு நாம் என்ன செய்வது?" என்று வினவ, அப்போது கண்ணபிரான் "நீவீர் வருந்தற்க. அபயம் என்று வந்த சந்திரனை முடியிற் சூடிய சிவபெருமான் பாதங்கள் உண்டு. அந்த பாதங்களை அர்ச்சிக்க மலருண்டு, திருவடிப் பூசைக்கு நீருண்டு, ஜெபிக்க ஐந்தெழுத்துண்டு, ஐந்தெழுத்தைச் சொல்லி பூசிக்கொள்ள திருநீறுண்டு. இந்த ஐந்தும் உங்களுக்கு என்றும் துணை செய்யும் அஞ்சற்க!" என்றார் கண்ணபிரான்.

திங்களங் கண்ணிப் புத்தேள் சேவடிக் கமல முண்டு
கொங்கவிழ் மலருமுண்டு குளிர்தரு புனலுமுண்டு
தங்கும்அஞ் செழுத்து முண்டு தவளவெண்ணீறு முண்டு
வெங்கலிக் குடைவ தென்னே வெளிற்றறி வுடைய ரேபோல்

- கூர்ம புராணம்

இத்தகைய பரம்பொருள் திருநெல்வேலியில் கோயில் கொண்டு உள்ளார். அத்தகைய நெல்லையப்பர் கோவிலில் வருடம் முழுவதும் ஏதாவது உற்சவம் நடந்த வண்ணமே இருக்கும். சித்திரை - வைகாசியில் வசந்த விழா ஆரம்பமாகி 10 நாள் நடைபெறும். அம்மை அப்பருக்கு ஆனியில் பிரமோற்சவம். இது பெருவிழாவாக 10 நாட்களுக்கு நடைபெறும். மண்டலா பிஷேகத்துடன் நிறைவுபெறும். அடுத்து ஆடி மாதத்தில் அன்னை காந்திமதி அம்மைக்கு ஆடிப்பூரத் திருநாள் 10 நாளும், ஆவணி மூலத் திருநாள் 10 நாளும், புரட்டாதி நவராத்திரி 10 நாளும் நடைபெற்று ஐப்பசியில் திருக்கல்யாண விழா 12 நாள். அப்போது திருமண நாளில் மேடை, தளவாய் வீட்டில் இருந்து பெறப்படும் திருமாங்கல்யம், கூறைச்சேலை, கூறைவேட்டி பல்லக்கில் நெல்லை அப்பர் கோவிலுக்கு எடுத்து வரப்படும். கார்த்திகைத் திங்கள் சோமவார தரிசனம் காலை 4 மணிக்கு ஆரம்பம். திருவிளக்குகள் அனைத்தும் பிரகாசிக்கும். கார்த்தி கைத் தீபத்திருவிழாவும் சிறப்பாக அமையும் ஆறுமுகநயினார் சந்நிதியில் கந்தசஷ்டி 6ஆம் நாள், 7ஆம் நாள் திருக்கல்யாணம்.

மார்கழித் திருவெம்பாவை, திருவாதிரை, தாமிரசபை முன் கூத்தப்பெருமான் சந்நிதியில் இடம்பெறும். ஆருத்திரா அபிடேகம் தனிச்சிறப்பு அடுத்து தைப்பூசத் திருவிழா. 10நாள் மாசியில் மகாசிவராத்திரி, மாசி மகத்தில் அப்பர் தெப்பத் திருவிழாவுண்டு. பங்குனி உத்தரம் விழா 10 நாள் செங்கோல் கொடுக்கும் வைபவம் இடம்பெறும்.

செப்புத் திருமேனிகள்

திருநெல்வேலியிலுள்ள செப்புத் திருமேனிகள் கி.பி 16ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. இத்திருக்கோவிலில் கூத்தப் பெருமானது செப்புத் திருமேனிகள் மூன்று உள. இறைவனான நெல்லையப்பருக்கு, இறைவியான காந்திமதி அம்மையை திருமால் தாரைவார்த்துத் தரும் பாத்திரத்துடன், இறைவன் மணந்துகொள்ளும உற்சவத்திருமேனிகளைக் கண்டு கழிபேரு வகை கொள்ள முடியும். தெற்குச் சுற்றில் 63வரது செப்பு படிமங் களைக் காணலாம். காந்திமதியம்மைக்கும் செப்பாலான உற்சவத் திருமேனி கி.பி 16 - 17ஆம் நூற்றாண்டில் வார்க்கப் பட்டது.

தாமிரசபை

திருச்சிற்றம்பலம்

பெருக லாந்தவம் பேதமை தீரலாம்
திருக லாகிய சீந்தை திருத்தலாம்
பருக லாம்பர மாயதோர் ஆனந்தம்
மருக லானடி வாழ்த்தி வணங்கவே.

திருச்சிற்றம்பலம்

- அப்பர்

இறைவனுடைய திருவடிகளை வாயார வாழ்த்த வேண்டும். தலையார வணங்க வேண்டும். இதுதான் தவம். இத்தவத்தால் பேரானந்தமுண்டாகும். உத்தம மனைவி, தங்கமான புத்திரர், நோயற்ற வாழ்வு, திடமான உடம்பு கிடைப்பதற்கு தவமே காரணம். பஞ்ச சபைகளுள் ஒன்றான தாமிரசபை திருநெல்வேலி யில் மேற்குப் பிரகாரத்தில் வாயு திக்கில் அமைந்துள்ளது.

இங்கே நடராஜப் பெருமானும் சிவகாமி அம்மையும் மிகப்பெரிய உருவினராக விளங்குகின்றனர். இச்சபை தனியே உள்ளது. இங்குள்ள நடராஜர் தாமிர சபாபதி எனப்படுவர். சபைக்கு மேலே செப்புத்தகட்டால் வேயப்பட்டுள்ளது. நடராஜர் சிலாரூபம் சந்தன சபாபதி எனப்படுபவர் உள்ளே ருத்திர விஷ்ணு பேதங்கள் ரிஷி உருவங்கள் உள. கீழே மரத்தாலும் மேலே தாமிரத்தாலும் ஆக்கப்பட்ட ஏழு அடுக்குகளைக் கொண்ட இச்சபை சித்திர வேலைப்பாடுகளுடன் காணப்படுகிறது. சபைக்குப் பக்கத்தில் தல மரமான மூங்கில் உள்ளது.

சோமவார மண்டபம்

நெல்லையப்பர் கோவில் சோமவார மண்டபம் நுழை வாயில் இருமருங்கிலும் தூண்கள் உள்ளது. இத்தூண்கள் கோபுர வடிவில் அமைக்கப்பட்டு சிற்பவேலைகளுடன் காண் போரைக் கவர்கிறது. கீழ்ப்பிரகாரத்தில் வடபால் 78 அழகிய திண்ணிய தூண்களுடன் அமைந்துள்ளது. இந்தத் தூண்களில் கல் உத்தரங்களும் வளைவுகளும் மரத்தாலான உத்தரங்களும் அமைந்துள்ளன. இம்மண்டபத்தில் புரட்டாதியில் நவராத்திரி கார்த்திகைச் சோமவார மண்டபப்படிகளும் இடம்பெறும்.

புராணக்கதைகளின்படி தடாதகைப்பிராட்டியார் பாண்டி நாட்டை ஆண்டு வரும்போது, கயிலங்கிரியையும் முற்றுகை யிட்டபோது பூதகணங்களும் அம்மையாரிடம் அடிவணங்கின. இதனால் சிவபெருமான் போர்க்களம் எய்தினார். அங்கே சிங்கேறனைய தேவியையும் அவள் வீரத்தையும் கண்டார். அப்போது பரம் பொருள் தடாதகைப் பிராட்டியாரை உற்று நோக்கிய வண்ணம் நிற்பதைக்கண்ட எம்பிராட்டி, அச்சம் குடி கொள்ள நாணம் உற்று நிலைகுலைந்து தலைகுனிந்து, தன் பாதங்களையே பார்த்த வண்ணம் நின்றாள். அக்கணமே சிவபெருமான் அம்மையாரை நோக்கி இன்றிலிருந்து 8வது நாளாகிய சோமவாரத்தில் உனது நகரான பாண்டி நாடு வந்து, உன்னை திருமணம் செய்வோம் என்ற திருவாய் மலர்ந்து அருளினார். அத்தகைய பெருமை வாய்ந்தது சோமவாரம்.

பாண்டிய வரலாறு

மாணிக்கவாசக சுவாமிகள் "தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே" என்றார். ஆகவே தென்பாண்டி நாடாகிய திருநெல்வேலிக்கு உரியவன் சிவபெருமான். இந்த தென்பாண்டியை பாண்டியர் வாழையடி வாழையாக கி.பி 17ஆம் நூற்றாண்டுவரை அரசோச்சியதால் சோழர் ஆட்சிக்காலத்தில் பாண்டியர் அடங்கியும் இருந்தனர். நெல்லையப்பர் கோவிலுக் குத் திருப்பணி செய்தவன், நின்றசீர் நெடுமாறன் அரிகேசரி மாறவர்மனே! இக்கோயிலை மணிமண்டபம் வரை கட்டி முடித்த வன் இவனே என்கிறது தலபுராணம். ஆனால் இந்த திருப்பணி களை இவன் செய்திருப்பானே ஆகில் சாசனங்களில் கட்டாயம் குறிக்கப்பட்டிருக்கும். மேலும் மணிமண்டபச் சிற்பங்களும் இசைத் தூண்களும் நாயக்கர் காலச் செல்வங்களாகும். எனவே நெல்லையப்பர் கோவிலும் அதனுள்ளே இருக்கும் சிறு கோவில் களும் படிப்படியாகப் பாண்டியப் பேரரசர் காலத்தில் வளர்ச்சி யுற்று, நாயக்கர் காலத்தில் நிறைவுபெற்றிருக்க வேண்டும். நின்றசீர் நெடுமாறன் நெல்லையப்பர் ஆலயத்திருப்பணி செய்த போது தச்சர்களை அமர்த்திய இடம்தான் இன்றைய தச்ச நல்லூராகும். அண்ணல் நெல்லை அப்பர் - அன்னை காந்திமதி அம்மை ஆலயத்தை இத்துணை கம்பீரமாக அமைத்தவர், சம்பந்தர், அப்பர் காலமான கி.பி 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மதுரை மன்னன் நின்றசீர் நெடுமாறன் (கூன்பாண்டியனே)! இவனுக்குப் பின் பாண்டிய நாயக்க மன்னர்களும் மேலும் விரிவும் எழிலும் சேரச் சிறப்பித்தனர்.

திராவிடக் கலை

திராவிடக் கலையை தமிழகத்தினுடைய கலை என்பர். தமிழகத்தை ஆண்ட அரசர் பரம்பரையைக் கொண்டு பல்லவ மகேந்திரவர்மன் காலந்தொடங்கியதாகக் கொள்வர்.

1. பல்லவர் கலைக்காலம் கி.பி 600 - 850 வரை
2. சோழர் கலைக்காலம் கி.பி 850 - 1100 வரை (விமானங்களின் காலம்)
3. பாண்டியர் கலைக்காலம் கி.பி. 1100 - 1350 வரை (கோபுரங்களின் காலம்)
4. விசய நகர கலைக்காலம் கி.பி 1350 - 1565 வரை
5. மதுரை நகர கலைக்காலம் கி.பி 1600

ஆதியில் செங்கற் கோவில்களே அதிகமாக இருந்தன. கி.பி 9ஆம் நூற்றாண்டிலிருந்து கற்கோவில்கள் பாண்டி நாட்டில் எழுந்தன. இருந்தும் பல்லவர் கலைப்பாணியும் சோழர் கலைப் பாணியும் அறிஞர்களைக் கவர்ந்தது எனலாம் சோழர் கருவறை யின் மேல் எழுப்பும் விமானத்திற்கே முக்கியத்துவம் அளித்தனர். தஞ்சைப் பெருவுடையார் கோவில் விமானம் இதற்குச் சான்று. ஆனால், பாண்டியர் துணைக்கோயில்களையும் கோபுரங்களை யும் கட்டுவதிலேயே கவனஞ் செலுத்தினர்.

மதுரைக் கட்டடக்கலை, இது விசயநகரக் கலைக்காலத் தின் இறுதி நிலையே என்பர். மதுரைக்கலையை ஓரளவு பாண்டியர் கட்டடக்கலையின் மறுமலர்ச்சி எனலாம். மதுரை நாயக்கர்களே இந்தக் கலையை ஊக்குவித்தனர். இக்கலை 17ஆம் நூற்றாண்டில் உச்சநிலையை அடைந்தது. நாயக்கர் தம்கலைச் செல்வங்களை மதுரை, திருநெல்வேலி, இராமநாத புரம், திருச்சி, மாவட்டங்களில் காணலாம். விசயநகரக் கலைப் பாணியில் முக்கிய செயற்பாடாக இருந்தது ஆயிரங்கால் மண்ட பம். ஆளுயரத்திற்கும் அதிகமான சிலைகளைத் தூண்களில் (Portrait Sculptures) செதுக்குவது நாயக்கர்கால வழக்கம். இத்தகைய சிலைகளை மதுரை, திருவரங்கம், இராமேஸ்வரம், திருவானைக்கா, திருவாரூர், திருவண்ணாமலை, ஸ்ரீவில்லி புத்தூரில் காணலாம்.

விசயநகர அரசர்களும், நாயக்க மன்னர்களும், இசைத் தூண்களை எழுப்பிய கலைச்சிற்பிகள். இசைத்தூண்களை மதுரை ஆழ்வார் திருநகரிக்கோவில், சுசீந்திரம், திருவனந்தபுர பத்மநாத சுவாமி கோயில், திருநெல்வேலியிலும் காணலாம். சாமகானத்தில் ஒரு சுலோகத்தையும் வேறு சில பாடல்களையும் இசைத்தூண்களில் எழும்பும் ஒலியை சுரத்தைக் கொண்டு அமைத்து, திருநெல்வேலி வானொலி நிலையத்தில் ஒலி பரப் பினர். ஒரு பெரிய கற்றூண், அதைச் சுற்றிவர 48 சிறிய தூண்கள், இத்தூண்கள் கூரையைத் தாங்குவதுமன்றி, பண்ணிசைக்கும் பாட்டுத் தூண்களாகவும் உள்ளன. இத்தூண்களின் உச்சியில் பதுமபந்தம், கலசம், தாடி, குடம், இதழ், முனை, பலகை, கண்டம், போதிகை, மேலே யாழிகள் கவின்பெற விளங்குகின்றன.

சிற்பக்கலை

நெல்லையப்பர் கோவில், சேரன் மாதேவி மணப்படைவீடு ஆகிய இடங்களில் தெய்வ உருவங்களையும் வரலாறு கூறும் உருவங்களையும் குறிப்பாக சுவாமி கோயிலின் தென் பிரகாரத் தில் நாயக்க மன்னர்களின் உருவச் சிலைகளைத் தூண்களில் அழகாக செதுக்கி வைத்து உள்ளனர். அவையாவன

1. புடைப்புச் சிற்பங்கள் (Bas Reliefs)
2. தூண் சிற்பங்கள் (Portrait Sculptures)
3. மரச் சிற்பங்கள் (Wooden Sculptures)
4. செப்புச் சிற்பங்கள் (Bronzes)

நெல்லையப்பர் கோவிலின் மணிமண்டப நடுவில் ஒரு பெரும் கற்றூண் உள்ளது. அதனைச் சுற்றிலும் உருவிலும் உயரத்திலும் வேறுபட்ட 48 சிறு தூண்கள் உள. இவை ஒவ் வொன்றும் தனித்தனிக் (குரல்) சுரம் எழுப்பும் தன்மையின. அம்பாள் சந்நிதி முன்மண்டபத்திலுள்ள இரு தூண்கள் இசைத் தூண்களாகும். கோவிலின் முன் உள்ள வெள்ளை நந்தி கண்ணைக் கவரும் வனப்பை உடையது. கோவிலுள்ள ஊஞ்சல் மண்டபம், திருக் கல்யாண மண்டபம், ஆயிரங்கால் மண்டபம், வசந்த மண்டபம், அம்பாள் மண்டபம், அம்பாள் கோவிலையும் சுவாமி கோவிலையும் இணைக்கும் சங்கிலி மண்டபம், சோமாவார மண்டபம், நவக்கிரக மண்டபம், மகா மண்டபம் மிகுந்த சிற்ப வேலைப்பாடுகளுடன் தனித்தமிழ் நாகரிகத்தின் சின்னமாக அதை எடுத்து இயம்புகிறது. தெற்குப் பிரகாரத்தி லிருந்து வலமாக வந்தால் ஆறுமுக நயினார் முன் மண்டபம், நடுமண்டபம், கருவறை முதலியவற்றை அடையலாம். கொடி மரத்திற்குப் பின்னால் உள்ள நந்தி மண்டபத்திலுள்ள நான்கு தூண்களும் ஆச்சரியப் படக்கூடிய அலங்காரச் சிற்பங்களைக் கொண்டன. நெல்லை யப்பர் கோவிலின் வடக்குக் கோபுரத்தின் சில அடுக்குகள் மரச்சிற்பங்களை உள்ளடக்கியவை. நெல்லை யப்பர் கருவறையின் மேற்புறம் லிங்கோற்பவர் மகர தோரணங் கட்கு இடையே காணலாம். லிங்கோற்பவரின் இரு மருங்கும் அரியும் அயனும் கூப்பிய கரங்களுடன் நிற்பது எழிலார்ந்த சிற்பமாகும்.

மணிமண்டபத்தின் வலப்பக்கமாக உள்ள புடைப்புச் சிற்பம் மிக மிக அழகு வாய்ந்தது. இவை பாண்டியர் காலச் சிற்ப மாகும். கயிலையைப் பெயர்க்க முயன்ற இலங்கையர்கோனின் முகத்தில் எத்தனை வேதனை? சிவபெருமானோ அமைதி நிலவிய முகத்துடன் காணப்படுகிறார். உமையவளோ அஞ்சி நடுங்கிய நிலை, ஆனால் சிவபரம்பொருளோ அன்னையை கரத்தால் அணைத்தநிலை, மறுபுறம் அயனும், அரியும் இரா வணனின் அருகருகே நின்று இறைவனை வணங்க, இறைவன் இருமருங்கிலும் ஆனைமுகனும், ஆறுமுகனும் நிற்க, அடுத்து இரண்டு பூதங்கள் இராவணன் நசியுண்ட வேதனை கண்டு நகைக்க, வித்தியாதரர்கள் போற்ற, அமைந்துள்ள இந்தப் புடைப் புச் சிற்பம் கி.பி 8, 9ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது எனக் கருத முடியும்.

கம்பனைப் போல், கல்கியைப் போல் காதல் இலக்கியம் உருவாகியது போல, சிற்பக்கலையிலும் பண்டைய தமிழ்நாட் டுச் சிற்பிகள் கல்லுளியால் காதலை வடிவமைத்தனர். சிற்றின்ப அடிப்படையில் பேரின்பத்தை அடைவது அடைய முடியும் என் பதை அடியார் பாடலிலும் அகப்பாடலிலும் பரக்கக் காணலாம். விசயநகர, நாயக்க அரசர் காலத்தில் மக்கள் மகிழ்வுற்றிருந் தனர். சிருங்கார மரச்சிற்பங்கள் (Wooden Sculptures) பலவற்றை இன்றும் திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில் இறைவன் இறைவி அம்பலத்திலும் வடகோபுர முதல் அடுக்கிலும் காணலாம்.

கல்வெட்டுக்கள்

கல்வெட்டுக்கள், செப்பேடுகள் மூலம் தமிழ்நாட்டுத் திருத்தல வரலாறுகளை ஓரளவு ஆய்வாளர்களால் கண்டறிய முடிகிறது. திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில் 10ஆம் நூற்றாண்டுக்குக் கல்வெட்டுக்கள் வட்ட எழுத்துக்களால் ஆனவை. கி.பி 10ஆம் நூற்றாண்டில் மாமன்னன் இராசராச சோழன் காலத்தனவாக வாழ்ந்த தலை கொண்ட வீரபாண்டியன் ஆட்சியாண்டுக் கல்வெட்டுக்களே இங்கு காணப்படும் பழைய கல்வெட்டுக்கள். சோழர் வீழ்ச்சிக்குப் பின் 14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பாண்டியர் விட்டுச்சென்ற கல்வெட்டுக்கள் ஏராளம்.

முதலாம் மாறவர்மன், குலசேகர பாண்டியன், கேரளன், சோழன், கொயசளர்களை வென்று கொண்ட திறமையால், மூங்கிலிடைப் பிறந்த வேய்முக்தர் கோயில் உயர்ந்த மதிற்சவரை எழுப்பிய தாகக் கூறும் கல்வெட்டு இல. SIV 426. இது இரண்டாம் திருச்சுற்றிலுள்ளது. இவனது 27ஆம் ஆட்சி ஆண்டுக் காலத்து கல்வெட்டு மூலம் நெல்லையப்பர் கோவிலுக்கு அட்டமி தோறும் ஆடி அருள பசுநெய் அளக்க ஒப்புக்கொண்டான் என்பது தெரிய வருகிறது.

மேலும் இத்தலம் கீழ் வேம்பு நாட்டு குலசேகர சதுர்வேதி மங்கலம் என்று வேண்ட வளர்ந்தகோன் கல்வெட்டு இல. IBID 408இல் காணப்படுகிறது. இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் 11ஆம் ஆட்சி ஆண்டில் திருநெல்வேலியுடைய அழகிய திருச்சிற்றம்பலம் உடையார்க்கு நிவந்தமளித்த செய்திக் கல்வெட்டு இல IBID 437, 439இல் காணப்படுகிறது. நெல்லையப்பர் கோவிலின் கல்வெட்டு இல. S.L.L.Vol. V. 417, 423, 425, 427, 433 மூலம் இசைக்கலைஞர் மங்கள வாத்தியம், ஆடலழகியரும் இருந்ததாக அறிய முடிகிறது. பல்லவரும், சோழரும், பாண்டியரும், வேதவிற்பனராகிய சிவாச்சாரியார்கட்கு நிலம் வழங்கினர். இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கீழ் வேம்ப நாட்டுத் திருநெல்வேலித் தேவதான குலசேகர சதுர்வேதி மங்கலம் என நிலம் வழங்கப்பட்ட கல்வெட்டு இல. S.I.I.V 449 மூலம் அறிய முடிகிறது.

சோழர் பொற்காலத்தில் சமயகுரவரால் சைவசமயம் மேலோங்கியது. கற்கோவில்கள் பெருகின. கி.பி 9ஆம் நூற் றாண்டில் கோவில்களில் திருப்பதிகங்கள் ஓதும் பணி ஆரம்ப மாகின. திருப்பதிகங்கட்கு பண் வகுக்க முதலாம் இராசராசன் ஆரம்பித்த அளப்பரிய சிவப்பணியைக் கல்வெட்டு இல. S.I.I. Vol. II, III இல. 65 மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. கி.பி 10ஆம் நூற்றாண்டிலிருந்து சமய குரவர் திருமேனிகளைக் கோவில் களில் வைத்துப் பூசிக்க ஆரம்பித்தனர். தமிழகத்தில் 27 கோவில்களில் திருப்பதிகங்களை ஓத நிலங்கள் நிவந்தம் அளிக்கப்பட்டதை கல்வெட்டு இல. 148 உறுதி செய்கிறது.

தொல்பொருள்

திருநெல்வேலியில் தொல்பொருள் ஆய்வின்போது நமக்குக் கிடைத்துள்ள மனித குடியிருப்புச் சின்னங்களில் மிகப்பழையன பிற்பட்ட காலத்தைச் சார்ந்தவை. மணல்மேடுகளில் காணப்பட்ட படிகங்கள், சிறுகருவிகள், கூரிய கருவிகள், வெட்டுக் கருவிகள் கிடைத்துள்ளன. ஆய்வின்போது இவை கி.மு. 6,000 முதல் 1,000 ஆண்டுகள் வரை இந்தத் தேரித்தொழில் நடந்து வந்ததாக தெரியவந்துள்ளது. மேலும் தாமிர பருணி ஆற்றின் தென்கரையிலுள்ள ஆதிச்ச நல்லூரில் கிடைத்த முதுமக்கள் தாழிகள் சிறப்பானவை ஆகும். சில தாழிகளில் மனித எலும்புகள் காணப்பட்டன. தாழிகளில் வெண்கலம், தங்க நகைகள், நவரத்தின மணிகள், துணிகள், மரம், நெல் உமி பொதிந்த கலங்கள் மண்ணாலானவை, விளக்குகள் இரும்பாலானவை. இந்தத் தாழிகள் 10 - 15 அடி ஆழத்தில் பாறாங்கற்களால் மூடியிருந்தன. ஆதிச்ச நல்லூரில் வாழ்ந்த மக்களின் இரும்புப் பயன்பாடு பெருங்கல் நாகரிகத்துடன் தொடர்புடையது. ஆதிச்ச நல்லூர், நெல்லை மாவட்டத்தின் திருவைகுண்டம் கடந்து திருச்செந்தூர்ப் பாதையில் தாமிரபருணியின் தென்கரையிலுள்ளது. கி.மு. 1,000 முதல் கிறிஸ்தவ சகாப்த தொடக்க நூற்றாண்டு வரை, இந்தப் பெருங்கற்கால நாகரிகம் நீடித்தது.

தொழில் வளம்

பொதிகை மலையில் பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். இவர்களை மலைக்குறவர் என்பர். தொழிலால் சிறப்புறும் ஊர்; பேட்டை எனப்படும். திருநெல்வேலியில் பெயர்பெற்ற பந்த மடைப்பாய்கள் பின்னப்படுகின்றன. காணியர் கூடை முடைவதில் வல்லுனர். பாலியர் எனப்படுபவர் மலைக்குகைகளில் தேன் எடுப்பர். கடலில் முத்துக்குளிப்பு சிறப்பாக நடைபெறுகிறது. மீன்பிடி, சங்கு அறுத்தல், நல்ல வருவாயைத் தருகிறது. உப்பு விளைச்சல்கூட இடம்பெறுகிறது. கைத்தொழிலாக நூல் நூற்றல், நெசவு, கைத்தறி, பஞ்சு ஆலைகள், சர்க்கரை ஆலைகள், சீமேந்துத் தொழிற்சாலை, பருத்தி அரைக்கும் தொழிற்சாலைகளும் உண்டு. குடிசைக் கைத்தொழிலாக பனந்தும்பு, பனை வெல்லம், பனங்கற்கண்டு இடம்பெறுகிறது. மட்பாண்டம் வனைதல், பரக்கக் காணக்கூடியதாக உள்ளது. இரசாயனத்

தொழிற்சாலை, உருவாக்கம், அணுமின் நிலையம் கூட நல்ல நவீன முறையில் அமைந்துள்ளது. நெல் வேளாண்மைதான், திருநெல்வேலி மாவட்டத்தின் முக்கிய தொழிலாகும். நெல் லோடு கரும்பு, கம்பு, கேழ்வரகு, சோளம், சாமை, வரகு, குரக்கன், எள், வேர்க்கடலை, பருத்தி, வாழை, உழுந்து, பயறு, கொள்ளு, மிளகாய், கடலை, துவரை, வெற்றிலை, வள்ளிக் கிழங்கு, வெண்காயம், காய்கறி வகைகள் யாவும் விளைகிறது. பால் தரும் நல்லினப் பசுக்களுக்குக் குறைவில்லை. அம்பா சமுத்திரத்தில் அரிசி ஆராய்ச்சி நிலையமும், கோவில்பட்டியில் விவசாய ஆராய்ச்சி நிலையமும் இயங்குகிறது.

ருத்திர கணிகையர்

சிவாலயங்களில் தொண்டு செய்ய வந்த மகளிர், ருத்திர கணிகையர் எனப்பட்டனர். இவர்கள் பரதம், இசை போன்ற கலைகளில் தேர்ச்சியும், ஈடுபாடும் கொண்டிருந்தனர். வசதியான குடும்பங்களில் இருந்தும் வந்தனர். இவர்கள் தமது வாழ்வை இறைபணிக்கு அர்ப்பணித்தனர். இறைவனுக்கு அடிமையாகை யால் தேவடியார் எனப்பட்டனர். அரசரால் போற்றி மதிக்கப் பட்டனர். பல்லவர் காலத்தில் கூத்திகள் எனப்பட்டனர். இராசராச சோழன் காலத்தில், தளிச்சேரிப் பெண்கள் எனப்பட்டனர். கோவிலில் பொட்டுக் கட்டிவிடப்பட்டனர். தஞ்சை பெரிய கோவிலில் "பதியிலார்" என்ற 400 தளிச்சேரிப்பெண்கள் கோவில் பணிக்காக குடியமைத்துக் கொடுக்கப்பட்டனர். இவர்கள் யாரையும் மணவாததினால் "பதியிலார்" எனப்பட்டனர். திருநெல் வேலியில் ருத்திர கணிகையர் கோவிலில் திருவலகிடுதல், மெழுகுதல், இறைவன் திருவமுதுக்கான அரிசியை தூய்மை செய்தல், திருப்பதிகம் பாடல், இறைவியை அலங்காரஞ் செய்து கவரி வீசுதல், பள்ளியெழுச்சி பாடுதல் இவர்கள் பணியாகும். நாயக்கர் காலத்தில் மிகவும் பாதிக்கப்பட்டனர். 20ஆம் நூற்றாண்டில் இந்திய அரசால், தேவதாசி ஒழிப்புச் சட்டம் வரும்வரை எல்லாக் கோயில்களிலும் இந்த ருத்திர கணிகையர் எனப்பட்டோர் இருந்தனர். பதியலார், நெல்லையப்பர், திருவுலா வரும்போது முனைக்கு முனை நின்று அழகாகப் பாடி ஆடினர். இவர்கட்கு 30 கலம் நெல், ஆண்டொன்றுக்கு அளிக்கப்பட்டது.

இராஜராஜசோழன் கூட, தான் நிறுவிய தஞ்சைப் பெரிய கோவிலில் தனது அருமை மகள் குந்தவிக்குப் பரதக் கலையைப் பயிற்றுவித்து தஞ்சைப் பெரிய கோவிலில் அரங்கேற்றம் செய்தான்.

திருநெல்வேலித்தல புராணம்

பெருந்தலங்கள் அனைத்திற்கும் தலபுராணம் உண்டு. திருநெல்வேலிக்குத் தலபுராணம் பாடியவர் திரு. நெல்லையப்பா பிள்ளை அவர்கள். தலபுராங்கள் பலவற்றுள்ளும் அடங்குபவை:

1. வரலாற்றுக் கதைகள் (Historical Legends)
2. இதிகாசம் (Legends)
3. புராணக் கதைகள் (Myths)
4. தலத்தில் உரிய கதைகள் (Folk Tales)
5. தலத்தில் நடந்தேறிய உண்மைக் கதைகள்
6. தலத்தோடு தொடர்பில்லாத பிற.

திருநெல்வேலித் திருத்தல புராண வரலாறு, அதன் அமைவிடம், வளமான பொதியமலை, நெல்லையப்பர் கோவிலின் அமைப்பு, நின்றநிலையில் அருள்புரியும் காந்திமதி அம்மன், பொல்லாப் பிள்ளையார், மகோற்சவங்கள், செம்பொற் றிரு மேனிகள், பஞ்ச சபைகளுள் ஒன்றான தாமிரசபை, சோமவார மண்டபம், பாண்டியர் வரலாறு, திராவிடக் கலை, சிற்பக்கலை, கல்வெட்டுக்கள், தொல்பொருள் தொழில்வளம், ருத்திர கணிகையர், தலபுராணம் சம்பந்தமாக ஓரளவு தொகுத்து விரித்துரைத்தோம்.



காஞ்சி மாவடி வைகுஞ் செவ்வேள்
(காஞ்சிபுரம்)

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற இராறுதோள்கள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலு மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி.

- கந்தபுராணம்

தோற்றம்

கந்தபுராணம் பேசும் செவ்வேள் காஞ்சிபுரத்தில் மாமரத் தருகில் சிவந்த திருமேனி உடையவராக எழுந்தருளி உள்ளார். கந்தக்கடவுளை பல்வேறு திருப்பெயர்களால் நாம் துதிக்கி றோம். அவற்றுள் செவ்வேள் என்னும் திருப்பெயர் திவ்விய மானது. வேள் என்ற சொல் குறிஞ்சிக்குமரனைக் குறிக்கும். செவ்வேள் என்னும் சொல் பரிபாடலில் எட்டுப் பாடல்களில் சொல்லப்பட்டுள்ளது. செவ்வேள் என்பதன் பொருளாக சிவந்த நிறமுடைய அழகன் முருகனைக் கொள்ளலாம். நீலநிறக் கடலில் இருந்து தோன்றும் காலைக் கதிரவனின் அழகில் உள்ளம் பறி கொடுத்தோர், அந்தச் சூரியனையே இறைவன் எனத் தொழத் தொடங்கினர். காலஞ் செல்லச்செல்ல, அந்தக் கதிரவனே, நீல மயில்மீது வீற்றிருக்கும் செவ்வேள் வழிபாடாக மலர்ந்தது. நீலநிறக் கடலை நீலநிற மயிலாகவும், அதில் நிவர்ந்து எழும் காலைக் கதிரவனை செந்நிறம் கொண்ட செவ்வேளாகவும் எமது முன்னோர் கண்டனர்.

சேயோனைக் குறிஞ்சித் தெய்வமாக தொல்காப்பியர் கூறுவர். முருகன் தோற்றத்தை நக்கீரர் தனது திருமுருகாற்றுப் படையில் முன்னே சொல்லியவாறு, நீலக்கடலில் எழும் காலைக் கதிரவனாகக் காண்கிறார். பெருந்தேவனார் தான் பாடிய குறுந் தொகைக்குக் கடவுள் வாழ்த்துப் பாடும்போது, செவ்வேளின் திருவடி, திருமேனி, உடை, வேல், கொடி ஆகிய அனைத்தும் செம்மையாக விளங்குவதாகப் பாடியுள்ளர். இவ்வாறு சங்கப் புலவர்கள் பாடிப் பெருமகிழ்வுற்றனர்.

செவ்வேளை நாம் மயிலேறும் பெருமாளாகக் காண்கி றோம். மகிழ்கிறோம். "மறைகளின் முடிவாலும், வாக்காலும், மனத்தினாலும் அளக்கொணாமல் நிறைவுடன் யாண்டுமாகி, நின்றிடும் நிமல மூர்த்தியாம், பரம்பொருளே மனிதகுலம் உய்ய வேண்டி ஆறுமுக உருவாய், முருகன் என்னுந் திருப்பெயருடன் தோன்றியதை கச்சியப்பர் மனமுருகித் தருகிறார். இயற்கையை வழிபட்டு, அந்த முழுமுதற்பொருட்கு அழகு என்னும் பொருள்பட முருகன் என்னும் பெயரணிந்தார்கள்" என்கிறார் திரு.வி.க. அவர்கள்.

சங்ககாலம்

தமிழ் இலக்கியத்தில் சங்ககால இலக்கியம், பிரதான இடத்தைப் பெறுகிறது. சங்ககாலம் தமிழின் பொற்காலம் (Golden Era) எனலாம். குக்கிராமங்களாகவும், குலங்களாகவும் தமிழ் மக்கள் வாழ்ந்த காலத்தில், அவர்களது வாழ்வில் கொற்றவை, வேலன், வருணன் போன்ற தெய்வங்களே பிரதான மாக வணங்கப்பட்டன. ஆனகாரணத்தால் சிவ வழிபாடு சங்க காலத்தில் வாழ்ந்த மக்களிடையே பெரும் இடத்தைப் பெற வில்லை. சங்க காலத்தில் செவ்வேள் வழிபாடு பெற்றிருந்த பிரதான இடம் மாறி, நால்வரின் திருமுறைக் காலத்தில் சிவ வழிபாடு முதன்மை பெறத் தொடங்கியது.

வேலன் வெறியாடலில், கிராமங்களில் செவ்வேள் ஊர்த் தெய்வமாகப் போற்றப்படுகின்றான். குன்றுதோறும் குலவிய முருகன் மக்கள் மனங்களில், உள்ளத்தில் பெரும் இடத்தைப் பெற்றதைக் காணமுடிகிறது. நக்கீரரின் திருமுருகாற்றுப்படை யில் செவ்வேள் ஆறுமுகனாகப் போற்றிப் பாடப்படுகிறார். புராணக் கதைகளில் காட்டாறு பெருக்கெடுத்து, பேராறாக மாறு வதைப் போல ஆறுமுகப்பெருமானின் திருப்பெருவடிவத்தை இன்று காண்கிறோம், கண்டு இன்புறுகிறோம். மேலை நாடுகளி லும் செவ்வேளின் வழிபாட்டை ஒத்த முறைகள் இருந்தன. சைபீரிய மலைவாழ் மக்கள் பாற்காவடியுடன் சேவற்கொடி யேந்தி வழிபட்டதாக அறிய முடிகிறது. இந்த வழிபாடு தமிழ கத்திலிருந்து சைபீரிய தேசத்திற்குச் சென்றதா? அல்லது தமிழகத்திற்கு வந்து சேர்ந்த வழிபாடா? என்பது அறிஞர் பெருமக்களின் ஆய்விற்குரியது.

செவ்வேள் உறையும் தலங்கள்

மனித வாழ்க்கை ஆரம்பமான இடம் மலை ஆகும். இமய மலை எவ்வாறு சிவபெருமானுக்கு ஆயிற்றோ, அவ்வாறே கந்த வெற்பும் கந்தவேளுக்கு உகந்ததாகும். ஆறுபடை வீடுகளாவன: திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருத்தணி, சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை ஆகும். செவ்வேள் கையில் வேலேந்தி இரவில் குறிஞ்சி நிலத்தில் உலாவுவதாகவும், இதனால் மலையும் மலைசார்ந்த இடங்களும் கந்தப்பெருமானுக்கு உரிய இடமாகும். ஆறுபடை வீடுகள் நீங்க கந்தப்பெருமானுக்கு சுருளிமலை, இலஞ்சி, குன்றக்குடி, விராலிமலை, வயலூர், வைத்தீஸ்வரன் கோவில், நல்லூர், செல்வச்சந்நிதி, மண்டூர், கதிர்காமம் என்பன செவ்வேளுக்கு உரிய, உகந்த தலங்களாகும்.

முழுமுதற்நன்மை

தமிழ் நாட்டில் சங்க காலத்தில் செவ்வேளுக்கு முதன்மை இருந்தது. சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர் காலத்தில் நாயன்மார்கள் நால்வரும் சிவபெருமானே பரம்பொருள் எனக் கருதி தேவார திருவாசகங்களைப் பாடி வந்தனர். இதற்குக் காரணம் நால்வர் காலத்தில் சமண சமயம் வளர்ச்சிபெற சைவசமயம் வீழ்ச்சியடைய, இதனால் செவ்வேள் வழிபாடு சிறிது பின்னடைவு பெற்றது. இருந்தபோதும் நாயன்மார்கள் ஏற்றிப் போற்றி வளர்த்த சைவசமயத்திற்கும், சிவபெருமானது முதன்மைக்கும் மாசு வராமல், முருகப் பெருமானை மீண்டும் முழு முதற் கடவுளாக, கச்சியப்ப சிவாச்சாரியார் உயர்நிலை தந்தார். சிவபெருமானே முருகப்பெருமான். முருகப்பெருமானே சிவபெருமான் என்று கொள்வோமாக! பண்டைய தமிழகத்தில் இருந்த, நிலவிய, வேல் வழிபாட்டை மீண்டும் முருக வழிபாட்டுடன் இணைத்தார் கச்சியப்பர்.

தேவார, திருவாசக காலத்தில் முருகவழிபாட்டில் தேக்கம், பின்னடைவு நிலவி இருந்தாலும், தமிழ்ப் பழங்குடி மக்கள் தொடர்ந்தும் செவ்வேள் வழிபாட்டில் ஈடுபட்டிருந்தமையால், கல்லாடர் காலத்திலும் (6ஆம் நூற்றாண்டாக இருக்கலாம்) சைவ வழிபாட்டில் முருக வழிபாடு மீண்டும் தலைதூக்கியது.

செவ்வேள் தோன்றிய வரலாற்றை விரித்துக் கூறுவது பரிபாடலே! திருமுருகாற்றுப்படை அதனை சுருக்கிக் கூறுகிறது.

பிரணவப்பொருள்

கயிலையங்கிரியில் சிவபெருமானை வழிபட்டு மீண்ட பிரமனை செவ்வேள் அழைத்தார். ஆனால் பிரமன் மதித்து பணிந்திடாது சென்றான். உடனே செவ்வேள் பிரமனை திரும்ப அழைத்து "நீ யாது தொழில் புரிகிறாய்" என்று கேட்க அனைத் தும் படைப்பன் என்று அகந்தையுடன் கூறினான். "படைப்புத் தொழில் புரியும் உனக்கு சுருதிகள் வருமோ?" என்று முருகப் பெருமான் கேட்டார். அதற்கு பிரமன் "ஓம்" என்று சொன்னான். உடனே முருகப்பெருமான் அவனிடம் அந்தப் பிரணவத்தின் பொருளைக் கேட்டார். பிரமனோ அதன் பொருள் தெரியாது விழி பிதுங்க மயங்கினான். இதனால் அந்தப் பிரமனின் நான்கு தலை களும் குலுங்கக் குட்டிச் சிறையில் அடைத்தார் செவ்வேள்.

இவ்வாறு சிறையில் இட்ட கந்தக் கடவுளிடம், சிவபெரு மானே நேரில் வந்து மகனை வேண்டி, அயனை சிறையில் இருந் தும் விடுவித்தார். பரம்பொருள் பின்னர் பாலமுருகனை மடிமீது இருத்தி ஓமென உரைக்கும் சொல்லின் உறுபொருள் உனக்கு வருமோ? என்று கேட்க "மூலத்தொல்பொருளை யாரும் தெரிய கேட்கலாமோ?" என்று மகன் மறுக்க, பின்னர் தன் திருச்செவி சாய்த்து, மகன் சொல்ல, மறைவாகக் குடிலைப் பொருளைக் கேட்டருளினார் சிவபரம்பொருள். பிறதெய்வங்களைக் காட்டிலும், செவ்வேள் தலைமை உடையவன் என்பதை உலகாருக்கு உணர்த்தினார் மண்சுமந்த பெருமான்.

ஓம் என்னும் ஒலிக்குப் பெயர் பிரணவம். ஓம் என்னும் சொல் புனிதமானது. ஓம் என்று சொன்னால் அந்தச் சுற்றாட லையே புனிதமாக்கும். உபநிஷதங்களில் ஓம் என்பது, பரம் பொருளைக் குறிக்கும். அதுவே வேதங்களையும், உலகையுங் கூடக் குறிக்கும். ஓங்காரத்திலிருந்து எல்லாம் தோன்றி ஓங்காரத்தில் மறுபடியும் ஒடுங்குகின்றன. வேள்விகள், யாகங் களில் கூறப்படுகின்ற மந்திரங்களோடு ஓம் என்ற சொல் உச்சரிக்கப்படுகின்றது.

"வேதங்கள் எல்லாம் எந்தப் பதத்தைக் குறித்து முறை யிடுகின்றனவோ, தவங்கள் எல்லாம் எதைச் சொல்லுகின் றனவோ, மனிதர் எல்லாம் எதை விரும்பிப் பிரமாசாரிய வழியில் நடக்கின்றனரோ, அதை உனக்கு சுருக்கமாகக் கூறுவேன். அதுதான் "ஓம்" என்று கடோபநிஷதம் கூறுகிறது. பரம்பொருளை அடைய விதிக்கப்படும் உபாசனைகளுள் பிரணவ உபாசனை மிகவும் முக்கியமானது.

வேலின் வடிவம்

கச்சியப்ப சிவாச்சாரியார் செவ்வேளின் திருவுருவாகவே, முருகப்பெருமானின் திருக்கை வேலை வர்ணிக்கிறார். இரும்புக் காலம் (Iron Age) கி.மு. 7ஆம் நூற்றாண்டில் ஆரம்பம். சங்க நூல்களின்படி வேல் பற்றிய செய்தி மிகவும் தொன்மையானது என்று கருத இடமுண்டு. ஆதலால் முருகவழிபாட்டின் தொன் மையை இது உறுதிப்படுத்துகிறது. வேலிற்கான தனிக்கோட்டம் அமைத்து, வழிபட்டமையை சிலப்பதிகாரத்தில் காணமுடிகிறது. ஆகவே வேல் வழிபாடு பழந்தமிழகத்தில் நிலவி இருந்தது என்று துணிந்து கூறமுடியும்.

கோவில்களில் ஆதிகாலத்தில் உருவ வழிபாடே இருந்த தாகத் தெரியவில்லை. வேல், சூலம் போன்ற ஆயுதங்களே வழிபாட்டிற்குரியவையாக இருந்தன. பகையைப் போக்க செவ்வேள் தங்கிய இடமே படைவீடு. படைவீடு என்பது வேல் இருக்கும் இடம் எனப் பொருள்படும். பகைவரை அழித்து வெற்றியீட்டித்தரும் ஒரு கருவியாகவே வேலைச் சங்கப் புலவர் புகழ்ந்து பாடினர். ஆனால் கச்சியப்பர் செவ்வேளின் வேல் வெற்றியீட்டித்தரும் கருவியாகச் சொல்லாமல், மாயையில் சிக்கித் தவிக்கும் உயிர்களை விடுவிக்கும் வேலாயுதமாகவும், கந்தப்பெருமானாகவும் விதந்துரைத்தார். "சக்தி" ஆயுதமாகிய வேலாயுதத்தை சிவபெருமானிடம் இருந்து பெற்றதாகவும் கூறுவர்.

இளமை குன்றாத, அழகே உருவாகிய தெய்வமாகத் திகழும் கந்தப்பெருமானை போர்த்தெய்வமாக (War God) சங்க நூல்கள் போற்றுவதை அறிய முடிகிறது. கச்சியப்பர் தனது

விடைபெறு படலத்தில் உருத்திரகணத்தார் பதினொருவரையும் தோமரம், கொடி, வாள், குலிசம், பகழி, அங்குசம், மணி, தாமரை மலர், தண்டு, வில், மழு என்னும் பதினொரு படைகளாக மாற்றி, செவ்வேளின் கரங்களில் வீற்றிருக்கச் செய்து "எப்படைக்கும் நாயகமாம்" ஒரு தனிச்சுடர் வேலையும் ஈந்ததாகக் கூறுகிறார்.

திருப்பெருவடிவம்

கந்தவேள் தன்னுடைய வலிமையை தெரியாதற்கு தெரியத்தருவதற்கு எடுத்த வடிவமே இத்திருப்பெருவடிவம். சூரபன்மன் செவ்வேளுடன் நாலு நாட்களாகத் தொடர்ந்து போர் செய்கிறான். அந்த நேரத்தில் தான் முருகப் பெருமான் இந்த விஸ்வரூபத்தை எடுத்தார். புவனம், அண்டம் (உயிர்கள் அனைத்தும் உள்வாங்கிய நிலை) அடிமுதல் முடிவரை உள்ள திருப்பெருவடிவத்தை கச்சியப்பர் விரிவாகச் சொல்கிறார். "அகவடிவில் மலைகளும் புறவடிவில் சப்த சமுத்திரங்களும், திருவடி விரல்களில் இடியும், நாள்களும், கோள்களும் பரட்டில் வருணன், குபேரன், நிருதி முதலியோர்களும், கணைக்கால் களில் முனிவர்களும், சிந்தாமணி முதலிய மணிகளும், முழந் தாளில் விஞ்சயர், வானவர் முதலியோரும் தொடையில் இந்திர னும் அவன் மைந்தனும், தொடை முதலில் கூற்றுவனும், கடித டத்தில் அசுரர்களும், பக்கங்களில் தேவர்களும் மூலாதாரத்தில் நாகர்களும், குறியில் அமிர்தமும், உந்தியில் உயிரினங்களும், மார்பில் கலைகளும், முப்புரி நூலில் ஞானமும், உரோமத்தில் அண்டங்களும், அங்கையில் அகில போகங்களும், தடந் தோள்களிற் திருமாலும், விரிஞ்சனும் செங்கை விரல்களில் தேவப்பெண்டிரும், கழுத்தில் ஒலித்திரளும், அக்கினியும், மணி வாயில் வேதங்களும், பற்களில் எழுத்துக்களும், நாவில் சிவாக மங்களும், இதழில் மனுவின் விஞ்சைகளும், மூக்கில் அணிய னும், விழிகளில் சோமனும், கதிரவனும், செவியில் திசைகளும், திருநுதலில் குடிலையும் (பிரணவமும்) சென்னியில் பரமான்மா வாகிய பரமசிவமும் பொருந்தித் தோன்றும் வண்ணம், பலகோடிப் பகலவனின் ஒளியுடன் செவ்வேள் தன் பேருருவைச் சூரபன் மனுக்குக் காட்டியதாக நவில்வர். இப்பெருவடிவத்தை முருகப் பெருமான் அருளால் கண்ட சூரபன்மன்

"கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் தன்னைப்
பாலனென் றிருந்தேன் அந்நாட் பரிசிவை யுணர்ந்தி லேன்யான்
மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற மூர்த்திஇம் மூர்த்தி அன்றோ"

- கந்தபுராணம்

எனத் தன் சிறுமையை உணர்ந்து உளந்திருந்தி செவ்வேளின் முழுமுதற்றன்மையை ஏற்று பகை எனக் கருதி வந்த கந்தப் பெருமானை, பக்தியுணர்வுடன் போற்றுவதற்கும், தனக்கு வரம் தந்த சிவபெருமானும் தன்முன்னே காட்சி தந்த முருகப்பெரு மானும் ஒன்றென உணர்ந்தான் சூரபன்மன்.

கந்தனை வழிபடும் முறை

செவ்வேளின் பேருருக் காட்சியைக் கண்ட பின்னர், இந்திரன் எவ்வாறு செவ்வேளை வழிபட்டான் என்பதனைப் பார்ப் போம். முருகப்பெருமானை ஓர் உயர்ந்த நிலையில் இருத்தி வான் கங்கை நீரால் திருமுழுக்காட்டி, நுண் துகில் சாத்தி, சந்தனம் முதலிய நறுமணப்பொருளுடன் பொன்னாலான அணி கலன் அணிந்து, நறுமலர் மாலை சூட்டி, ஐவகை நறும்புகை புகைத்து, கற்பூரதீபம் காட்டி இந்திரன் வழிபட்டானாம்.

தாரகனை அழித்தபின், தேவகிரிக்கு வந்த திருமால் முதலியோர் ஆறுமுகப் பெருமானின் உத்தரவுபெற்று அப்பெருமானுக்கு வழிபாடாற்றினர். குடங்களில் வானாறு பெற்று செவ்வேளின் அருகில் நின்று, அவன் திருப்பெயராம் ஆறெழுத்து மந்திரத்தை உச்சாடனம் செய்து, திருமஞ்சனமாட்டி, ஈரத்துகில் நீக்கி, புதிய பொன்னாடை அணிந்து, பிறிதோர் இருக்கையில் இருத்தி அம்மந்திரத்தைச் சொல்லி, கற்பக மலர் மாலை அணிந்து சந்தனமும் பச்சைக் கற்பூரமும் பூசி, செவ்வேளின் திருமேனியை மாணிக்க மாலைகளால் அழகுக்கு அழகு செய்து சந்து, அகில், கற்பூரம், குந்துருக்கம், குங்கிலியம் ஆகியவற்றின் நறும்புகை காட்டி, பரமணி ஒலிக்க, தலைதனைச் சுற்றிப் பணிந்து ஏத்தியதாக ஆகமங்கள் கூறுகின்றன. மணக்கோலத் தில் எழுந்தருளி இருக்கும் கந்தப்பெருமானுக்கு மாம்பழம், தேன்

கதலி, தேன் கலந்த பலாப்பழம், கரும்பு, செந்தேன், பசுவின் பால் ஆகிய ஆறு பொருள்கள் கொண்டு ஆறுமுகனுக்கு படையல் செய்வர்.

கச்சியப்பர் காலத்தில் குமாரதந்திரம் என்னும் நூலில் கூறியபடி செவ்வேளை வழிபடும் வழக்கம் தமிழகத்தில் நிலவியது. சூரனைத் தடிந்த செந்தூர் மேய ஆறுமுகனை பிரமன் முதலியோர் குமாரதந்திரத்தில் சொல்லியபடி கும்பம், விம்பம் (விக்கிரகம்) அக்கினி என்னும் மூவகை இடத்திலும் மன மகிழ்வுடன் பணிவன்போடு பூசை செய்தனர். முருகப்பெரு மானுக்கு உரிய வெள்ளிக்கிழமை விரதம், கார்த்திகை விரதம் ஆகிய விரதங்களை நோற்கும் முறை, நோற்போர் பெறும் பயன் முதலியன வசிட்டமுனிவர் மூலமும், விநாயகப் பெருமான் மூலமும் கந்த விரதப் படலத்தில் முற்றும் காணமுடியும்.

எங்கும் நிறைந்தவன்

தெய்வ யானையை செவ்வேள் மணந்த காலை கந்தக் கடவுள் தன் பெற்றோரின் திருவடிகளில் மனைவியுடன் வீழ்ந்து பணிந்தார். அடிதலத்தில் வீழ்ந்த மக்கள் இருவரையும் ஆர்வத்துடன் எடுத்து அணைத்து "உமக்கு எம்முறும் முதன்மை கொடுத்தோம்" என்று இறைவனும், இறைவியும் கூறியதால், கந்தவேளின் முதன்மையை நாம் கூறவேண்டியதில்லை.

வள்ளியை மணந்த காலை, மலைக்குறவர் விரும்பி அளித்த தேனும் தினை மாவையும் கந்தக்கடவுள் அயின்ற காலை, அச்சில் உணவு தேவர்கள் முனிவர்களிடத்தும் அனைத்து உயிர்களிடத்தும் சார்ந்ததால் எங்கும் நிறைந்த முருகப்பெருமானின் முதன்மையை எடுத்துக் கூறாமலே அறிய முடிகிறது. இந்திரன் முதலியோரின் குறை தீர்ப்பான் வேண்டி சிவபரம்பொருளே குழவி போன்று ஆறுமுகங்கொண்டு வந்து உதித்தனன் என்றவாறு.

நிறைவாக

கந்தக் கடவுளின் புராணக் கதைகள் சங்ககாலம் முதல், கந்தப்புராண காலமாகிய கி.பி 7ஆம் நூற்றாண்டு வரை மெல்ல

மெல்ல வளர்ச்சியடைந்தன. திருமுருகாற்றுப்படை, பரிபாடற் காலங்களில் செவ்வேள் பெற்றிருந்த தலைமையினை நாயன் மார் காலங்களில் சிவபெருமான் பெற்றுத் திகழினும், தமிழ்ப் பழங்குடி மக்களிடையே செவ்வேளின் தலைமை குறைய வில்லை என்பதைத் திருமுறைகளில் கண்டு தெரிந்து கொள்ள முடியும்.

பல்லவர் காலத்தில் வடமொழிச் செல்வாக்கு அதிகம் இருந்தது. தமிழ்நாட்டில் நிலவிய செவ்வேளின் பழைய கதைகளையும் சேர்த்து, வடமொழிக் கந்தபுராணம் தொகுத்து எழுதப்பட்டிருக்கலாம். இதற்குப் பிந்திய காலத்தில் தோன்றிய தமிழ்க் கந்தபுராணத்துள் செவ்வேளின் புராணக் கதைகள் மிகவும் திறம்பட தமிழ் நாட்டிற்கு, தமிழ் கலாசாரத்திற்கு பொருந்தக் கூடியதாக, செம்மையாக பரிபாடலைக் காட்டிலும் விரிவாக அமைந்துளது.


பல்லவரை அடுத்து தமிழகத்தை மிகவும் சிறப்புடன் ஆண்ட வேந்தர்கள் சிவபெருமானை மிகவும் பயபக்தியோடு வழிபட்டதோடு, முருக வழிபாட்டிலும் பெரிதும் ஈடுபட்டிருந்த தைக் கல்வெட்டுக்கள், செப்பேடுகள் மூலம் அறிய முடிகிறது. யாழ்ப்பாணத்தில் கந்தபுராணத்தைப் படித்து பயன் சொல்லும் முறை, வருடந்தோர்றும் இதுவரை காலமும் தொய்வின்றித் தொடர்கிறது என்றால், சைவமக்கள் செய்த பெருந்தவம் என்றே கொள்ள வேண்டும்.

காவினன் குடிலுறு காமர் பொன்னகர்
மேவினன் குடிவர விளியச் சூர்முதல்
பூவினன் குடிலையம் பொருட்கு மாலுற
ஆவினன் குடிவரு மமலற் போற்றுவாம்.

- கந்தபுராணம்



நடனம் ஆடினார்



தலம் - சிதம்பரம் பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய வெடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மானிலத்தே.

திருச்சிற்றம்பலம்

- அப்பர்

குனித்த - வளைந்த
பனித்த சடை - கங்கைநீராற் குளிர்ந்த சடை
இனித்த - இனிதாந் தன்மை

சிற்பக்கலை

கவிஞனின் கற்பனையில் தோன்றியது "அருவம்" என்னுஞ் சொல். அந்த அருவத்திற்கு அவன் கவி புனைவது "சொல் வடிவம்". சிற்பியின் உள்ளத்தில் உருவாகியதும் "அருவம்" அந்தச் சிற்பி கல் உளியால் செதுக்கியது "கல்வடிவம்" இந்த நுண்ணிய சிற்பக் கலையானது மாமன்னர்களின் பேராதரவில் பெரிதும் வளர்ந்தது. ஆகவே எம் முன்னோர் கல்லிலே காவியம் கண்டனர். அழகின் பரம்பலை, அதன் வடிவத்தை, அந்தக் கருத்தின் ஆழத்தை, அதன் பொருளை, கவர்ச்சியின் தோற்றத்தை, மகிழ்ச்சியின் உறைவிடத்தை, பண்பாட்டின் சிகரத்தை, மலர்ந்த நாகரிகத்தின் இருப்பிடத்தை, கல்லிலும், செம்பிலும், ஓவியமாகவும், சிற்பக்கலையின் உச்ச வடிவில் காண்கிறோம், களிப்புறுகிறோம், பெருமைப்படுகிறோம். நீக்கமற நிறைந்து நிற்கும் நிமலனை சிலையாகக் காண்கிறோம். அவனது அழகுத் திருமேனியைப் பாரிலுள்ளோர் பலரும், பரந்துபட்டு நின்று வழிபட ஓவியமாக, சிலையாக வடித்துத்தந்த கலைஞானியைக் கைகூப்பித் தொழுகிறோம். கலைகளில் சிற்பக் கலையானது, காண்பாரைத் தன்பால் ஈர்க்கும் காந்தக் கம்பி போல் ஆனது. கல்லிலே கதை சொல்லும் தமிழர் பண்பாட்டை, பாரம்பரியத்தை இந்தியப் பெருநிலப்பரப்பில் அமைந்துள்ள ஆலயங்களில் பரக்கக் காணலாம்.

ஓவியக்கலை

ஓவியக்கலையானது, சிற்பக்கலையோடு இணைந்து ஆலயங்களை அலங்கரிக்கின்றது. திருவலஞ்சுழியிலுள்ள சிவஸ்தல மண்டத்தில், நாயக்கர் கால ஓவியங்கள் வரிசையாகக் காணப்படுகின்றன. முதலில் பதினாறு திருக்கைகளில் பல்வேறு படைக்கலங்களைப் பெற்றுள்ள நடராஜப்பெருமானின் ஓவியம் உளது. இப்பெருமானின் இடதுகாலின் கீழ் காணப்படும் ஐந்தலை நாகத்தின் வால், சிவனது திருமேனியைச் சுற்றித் திருவாசியைப் போன்று அமைக்கப்பட்டள்ளது. நடராஜரது இடப்புறத்தில் உமையும், நான்முகனும் காணப்படுகின்றனர். இறைவனது நடனத்திற் கேற்பத் திருமால் மிருதங்கங் கொட்டுகிறார். மற்றொரு தேவ கணத்தார் ஐந்து முகங்களையுடைய தோற்கருவி ஒன்றினை இசைக்கிறார். இந்த ஓவியங்களின் மேற்பகுதியில் முனிவர்கள்,

கந்தருவர் ஆகியோர் வியப்பு மேலிட நடராஜப்பெருமானை நோக்கியவாறு உளர். திருக்குற்றாலத்தின் சித்திர சபையின் உள்ளே ஆடல்வல்லானின் திருவுருவம், சிவகாமியுடன் தேவர் கள் தொழுது நிற்க அழகாக சித்திரமாக, வண்ண ஓவியமாக வரையப்பட்டுள்ளது.

நிருத்தம் நிருத்தியம்

இறைவன் ஆனந்த நடனம் ஆடினார். சிவபெருமான் தாம் இயற்றிய மகத்தான நர்த்தனத்தை நினைவுகூர்ந்து தமது கணங் களை அழைத்து, அந்த நர்த்தனத்தை பரதமுனிக்குக் கற்பிக்கச் செய்தார். முன்னதாக அவர் பார்வதியைக் கொண்டு, அம்முனி வர்க்கு லாசியத்தைக் கற்பிக்கச் செய்திருந்தார். தண்டு முனிவரி டம் இருந்து இருஷிகள் தாண்டவத்தைக் கற்று மானிடர்க்குச் சொல்லிக் கொடுத்தார்கள். பார்வதிதேவியார் பாணனுடைய மகள் குமாரி உஷைக்கு லாசியத்தைக் கற்பித்தாள். உஷை அதை துவாரகையிலுள்ள இடைச்சியர்கட்குக் கற்பிக்க, அவர்கள் மூலம் பரதக்கலை பாரெங்கும் பரவியது.

பரத நாட்டியக்கலைக்கு இடைக்காலச் சோழர், முதன் மையான ஆதரவு நல்கியதால் பரத நாட்டியத்திலுள்ள கரணங் களை விளக்கும் சிற்பங்கள் உருவாக்கம்பெற்றன. நடராஜர் சிற்பங்களும் படிமங்களும் இக்காலத்திலிருந்து தான் அதிகள வில் வார்க்கப்பெற்றது. இது நாட்டியக் கலைக்கு கிடைத்த பெரும் பேறாகவே கருத வேண்டும். திருக்கோவில்களில் ஆடல் மகளிர் அதிகமாக அரச ஆதரவுடன் நியமனம் பெற்றதும் இக்காலத்தில்தான்.

நடராஜ வடிவம்

நடராஜப்பெருமானின் திருமுடியில் அபிஷேகம் செய்தால் அந்நீர் மூக்கு நுனிவழியாக தூக்கிய திருவடிவிரல் வழி, வழிந்து கீழே கொட்டுமானால், அத்திருவுருவமே சிறந்த இலக்கண வடிவ மைப்பாகும். தில்லையில் உள்ள ஸ்ரீ நடராஜப்பெருமானின் திருவுருவமே, இந்த இலக்கண வடிவமைப்புக்குச் சிறந்த உதார ணமாகும். சிவபெருமான் ஆதியும், அந்தமும் அற்றவன். நித்திய

மான சிவபரம்பொருளே, ஸ்ரீ நடராஜர்மூர்த்தம். இப்பெருமானே ஸ்ரீ பஞ்சாட்சரம். சிவபெருமான் திருவைந் தெழுத்தைத் திருமேனியாகக் கொண்டவன். நடராஜப்பெருமானின் தோற்றம் எப்பொழுதம் அசைவையே குறிக்கும். இந்த நடனக்கோலம் நிதம், நிதம் ஆனந்தத்தையே தரும். நடராஜமூர்த்தமானது சிறப் பாகவும், அளவிட முடியாத கலை அம்சங்களை உள்ளடக்கிய தாகவும், நிறைந்த தத்துவங்களைத் தன்னகத்தே கொண்டுள் ளது. சகல சிவமூர்த்தங்கட்கும் சிவலிங்க வடிவே மூலவடிவ மாகும். நாம் செய்யும் நிருத்தங்கட்கு நிறையப் பொருளுண்டு. ஆனால் அளவிலா விளையாட்டு உடையவனும், உலகப் பொருள்கள் அனைத்தும் தன்னுருவமான எம்பெருமான் நிருத்தம் செய்யப்புகுந்தால் ஆயிரம் ஆயிரம் கருத்துக்கள் தாமாகச் சென்று, அந்த நடனத்தை சரண்புகுமன்றோ? அப்பெருமானின் நிருத்தத்தில் அரிய பொருள்களை அறிந்து ஆன்றோர் விளக்கந் தந்துள்ளனர். நாம் நடராஜப்பெருமானை ஆடல்வல்லான் எனப் போற்றுகிறோம். அவனின் 108 கரணங்கள் புராணங்களிலும், நாட்டிய நூல்களிலும் திருக்கோவில் வரலாற்றுச் சிற்பங்களிலும் சிறப்பாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. தாண்டவஞ்செய்யும் சிவனுக்கு பல கைகள் உள்ளனவாக அருளாளர்கள் பாடுவர். சிற்பிகளும் அவற்றை மனதில் இருத்தி சிலை வடிப்பர். இவற்றின் மூலம் ஆகாயமே இறைவனுக்கு உடலாகவும் திசைகளே கைகளாக வும் கொள்ளுதல் ஆகும்.

கலைவிளக்கந் தரும் வகையில் இறைவன் ஆடிய ஏழு வகைத் தாண்டவங்களும் இசைநாதச் சிறப்புடன் போற்றப்படு கிறது. தாண்டவங்களுள் குரல், துத்தம், கைக்கிளை உழை, இளி, விளரி, தாரம் ஆகியன ஏழிசைகளினின்றும் தோன்றியவை எனக் கருதி இவற்றிற்கு கலை நோக்கிலே மெய்ப்பொருளியல் விளக்கந் தருவர். நடராஜப்பெருமானின் 108 கரணங்களை அதன் சிறப்பை, அவற்றின் தத்துவத்தை, அந்தத் திருவுருவத் தைத் திருமூலரின் திருமந்திரத்திலும், மந்திர சாஸ்திரத்திரங் களிலும் யந்திரங்கள், பூசை முறைகள், நாமாவளிகள் மூலம் தொகுக்கப் பெற்றுள்ளதை ஒருவாறு அறிய முடிகிறது.

உலக இயக்கம்

.நடராசப் பெருமானின் ஆடல், அசைவினால் உயிர்கள் உலகில் தோன்றி வாழ்ந்து மறைவது தொடர் நிகழ்வாக நிகழ் கிறது. இறைவன் தன் அடியார்கள் நிமித்தம் ஆடும் ஆடல்களே தாண்டவங்கள் அல்லது நிருத்தம் எனப்படுகிறது. இவ்வுலகமும் அனைத்து அண்டகோளங்களும் இவற்றினூடே பொலியும் அணுக் களும் இயக்கமுற ஒரு பேராற்றல் முனைந்து செயற்படுவதை மனிதகுலம் உணரமுடிகிறது. ஒரு யந்திரம் இயங்கும்போது அது பலனைத் தருகிறது. அது போலவே இறைவனும், அவனால் இயங்கும் உயிரினங்களும் பயன் தருகின்றன. இந்தப் பேராற்றல் அல்லது உந்துசக்தி, அநாதி காலமாக இருந்து வருகிறது. பரம்பொருளின் ஆடலே இந்தப் பேராற்றல் இயக்கம். இந்த உலக இயக்கம் என்று தொடங்கியது என்பதை எவரும் அறியார். இந்த உலக இயக்கம், தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இந்த உலக இயக்கம் சிறிது தவறினாலும் அண்டகோளங்கள் அனைத் தும் துகள், துகளாக சிதறிப்போய் விடும். எமது கற்பனைக்கும், அறிவிற்கும், ஆற்றலுக்கும் அப்பாற்பட்டது நடராஜப்பெருமானின் நடனம் ஆகும். இந்த நடராஜ தத்துவத்தை உலகோர் வியக்க, மகிழ்வுற சிற்பக்கலை வல்லலார், எமது சிந்தனைக்கும் அரிய திருவுருவமாகத் தந்துள்ளனர்.

ஐந்தொழில்

சிவபெருமான் உயிர்கள் மாட்டுச் செய்வது பஞ்சகிருத் தியம் எனப்படும் ஐந்து செயல்களாகும். இந்த ஐந்து செயல்கட் கும் ஐந்து தாண்டவங்களைப் புரிகிறார். இவற்றைத் தவிர, இந்த ஐந்து செயல்கட்கான படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகியவற்றை ஒன்று சேரச் செய்வது ஆனந்த தாண்டவம் எனப்படும். ஐந்து தாண்டவங்களுடன் ஆனந்த தாண்டவம் சேர, ஆறு தாண்டவங்கள் ஆகும். ஏழாவது தாண்டவ மானது உயிர்கள் செய்கின்ற நல்வினை, தீவினை ஒன்றுசேரச் செய்யும் காத்தல் தாண்டவமாகும்.

ஏழு தாண்டவங்கள்

1. ஆனந்த தாண்டவம்
2. சந்தியா தாண்டவம்
3. உமா தாண்டவம்

4. கௌரி தாண்டவம்
5. காளிகா தாண்டவம்
6. திரிபுர தாண்டவம்
7. சங்கார தாண்டவம்

திருவுருவத் தத்துவம்

நடராஜப் பெருமான் ஆனந்த மாநடனம் புரிகையில் அவரது ஊன்றிய வலதுகால், முயலகன் என்னும் அசுரன் மீது பதிந்து இருக்கும். முயலகன் ஆன்மாவின் அறியாமைக்கு அடையாளம். எம்மில் குடிகொண்டிருக்கும் ஆணவம் அகன்ற தும், வினைகள் தீர்ந்ததும், ஆன்மாவானது விடுதலை பெறும், பேரின்பம் அடையும். இறைவனின் ஊன்றிய திருவடி இந்த மறைப்பைக் குறிக்கும். சிவபெருமானது தூக்கிய திருவடி குஞ்சிதபாதம், அருளலுக்கு அடையாளமாக வீசி எடுத்து நிற்கும். இந்த நிழலில் ஆன்மா என்றென்றும் தங்கி இன்புறும். இதுவே முத்தி ஆகும். கங்கைகொண்ட சோழபுரக் கோபுரத்தில் கிழக்கு நோக்கி அமைந்திருக்கும் நடராஜத் திருவுருவத்திலே தூக்கிய திருவடியின்கீழ், காரைக்காலம்மையாரின் திருவுருவம் அமைந்து உள்ளது.

ஆடல் வல்லானின் நான்கு கைகளுள் வலப்புறப் பின்கை பிரணவ ஒலியை வெளிப்படுத்தும், ஓர் உடுக்கை (படைப்பின் அறிகுறி)யாக ஏந்தி நிற்கும். வலப்புற முன்கை (உள்ளங்கை) அபய முத்திரையைக் காட்டி நிற்கும். உயிர்கள் தன்பால் அஞ்சாமல், அடைக்கலம் பெறுதற்காக! இடப்புறப் பின்கை அனல் ஏந்தி நிற்பது அழித்தலைக் குறிக்கும். இடப்புற முன்கை மார்பை ஒட்டி குறுக்காக வீசிக் கைவிரல் ஒன்றால் திருவடியைச் சுட்டி நிற்கும். உயிர்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காக, நடராஜத் திருவுருவின் பின், ஒரு வட்ட வடிவமான திருவாசியும் அதன் விளிம்பில் 51 தீச்சுடர்களும் அமைந்திருக்கும். திருவாசியின் உட்பொருள் ஓங்காரம். இந்தப் பிரபஞ்சமே இறைவனின் ஆடரங்கு. 51 சுடர்களும் 51 எழுத்துக்கள் என்றும் இந்த எழுத் துக்கள் தாம்; பேச்சுக்குக் காரணம் என்பர். இந்தத் தாண்டவம் படைப்பிற்கு முன்னும் இருந்தது. பிரளயத்திற்கு பின்னும் இருப்பது நுணுகிய தத்துவமாகும்.

திருமூலர்

கூத்தப்பெருமானின் அக, புற மார்க்கங்களைக் கண்டு அகமகிழ்ந்து, அனுபவித்தவர் திருமூலர். திருமூலர் தமது திருமந்திரம் வாயிலாக கூத்தப்பெருமானின் திருக்கூத்தினை

1. சிவானந்தக் கூத்து
2. சுந்தரக் கூத்து
3. பொற்பதிக் கூத்து
4. பொற்றில்லைக் கூத்து
5. அற்புதக் கூத்து

என ஐவகையாகக் குறிப்பிட்டுள்ளார்.

வேதங்க ளாட மிகுவா கமமாடக்
கீதங்க ளாட கிளரண்ட மேழாடப்
பூதங்க ளாட புவன முழுதாட
நாதங்கொண் டாடினான் ஞானானந்தக் கூத்தே.

- திருமூலர்

ஆனந்த தாண்டவம்

ஐந்தொழில்களாகிய படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகியன பஞ்சகிருத்திய தாண்டவம் என்பதை ஏற்கனவே கண்டோம். ஆனந்த தாண்டவம் நடராஜப் பெருமானால் அந்திவேளையில் ஆடியது. தில்லையில் கனக சபையின் கண்ணே ஆடிய இந்நடனம், மிகச் சிறந்த தாண்டவம் ஆகும். கலைகளைக் கற்றறிந்தவரின் நோக்கில், இப்பெரு நடனம் மிகவும் உயர்ந்த கருத்துக்களை உள்ளடக்கியதாகும். நாட்டிய நூலில் கூறப்படும் புயங்கத்திராசிதம் என்னுங் கரணமே ஆனந்த மாநடனமாகும். இறைவன் தனது உலகப் படைப்பைக் கண்டு பெருமகிழ்வுடன் ஆனந்த நிருத்தம் செய்கிறான். சிவபெருமான் தனது திருக்கையில் ஏந்திய உடுக்கை "டுமடுமுத" என உலகப் படைப்புக்கான நாதத்தைத் தோற்றுவிக் கிறது. இடது கையில் படைப்புக்குத் தடங்கல் செய்யும், தீய சக்திகளை அழிக்கும் அக்கினியினை ஏந்தி உள்ளான். உலகம் தோன்றுவதையும் உயிரினங்கள் உயிர் பெறுவதற்கு அறிகுறி யாக அசைவுகள், பார்வை தெரியவரும் பரம்பொருளின் முதன் முதலான ஒளிவடிவமான பிரணவம் "ஓம்" என்னும் நாதம்

தோன்றும். இந்த நாதத்தால் ஆனந்தத்தால் தோன்றும் சைதன்யம் வெளிப்படும். அதாவது நாமும், தலைவனும் ஒன்றெனக் காணுதல்.

பிரம்மாவின் ஓர் இரவில் பிரகிருதி செயலற்றுச் சடமாய்க் கிடக்கின்றது. அது சிவனுடைய சங்கற்பமின்றித் தனது ஆடலைத் தொடங்க முடியாது. இறைவன் ஆனந்தக் களிப்பினால் எழுந்து ஆடும்போது உயிரற்ற சடப்பொருள்களை எல்லாம் விழித்தெழச் செய்யும் ஒலித்திரைகளைச் செலுத்துகிறான். உடனே அதே இயற்கையும் உயிர்ப்புப் பெற்று, அவனுடைய விபூதியை வெளிப் படுத்தும் வகையில் அவனைச் சுற்றி ஆடுகிறது. நாதாந்த நடனம், ஆடிக்கொண்டே இறைவன் இயற்கையின் பல்வேறு தோற்றங்களைத் தாங்குகிறான். கால அடைவிலே அவன் ஆடிக் கொண்டே இந்த இயற்கையின் நாம ரூபங்களைத் தீயினால் அழித்து அவற்றிற்கு ஓய்வு தருகிறான்.

உண்மையில் ஆடவல்லான் தில்லையில் ஆடிய திருக் கூத்து அறிவியல் ரீதியாக ஒப்பிடுகையில் உலக இயக்கம் பொருத்தமாகவே அமைகிறது. ஆடவல்லானுக்கு எனத் தனிச் சபை உருவாக்கம் பெற்றது, மாமன்னன் முதலாம் இராசராசன் காலத்திலேயே! மாமன்னன் முதலாம் இராசராசன் காலம் முதல் நடராஜப்பெருமானின் செப்புப் படிமங்கள் உன்னத வளர்ச்சி பெற்று, உலகப்புகழ் அடைந்தன. திருவாலங்காட்டில் கண்டெடுக் கப்பெற்ற செப்புத் திருவுருவம் உலகிலேயே காணுதற்கரிய கலைப்பொக்கிஷமாகும். சோழர் காலக் கலைக்கோலத்தை நாம் எல்லாம் காணக்கொடுத்து வைத்தவர்கள் ஆவோம். அது நாம் செய்த தவம் ஆகும். கலாயோகி டாக்டர் ஆனந்தக்குமார சாமி, வங்கக் கவிஞர் தாகூர் போன்ற கலை வல்லார், இந்த ஆடல் வல்லானின் எடுப்பான தோற்றங் கண்டு தமது மனதைப் பறிகொடுத்தனராம்.

சந்தியா தாண்டவம்

சந்தியா தாண்டவம் இறைவனின் காத்தல் தொழிலுக் குரிய பிரதோஷ தாண்டவமாகும். இந்தத் தாண்டவம் கைலாய மலையில் நிகழ்ந்தது. குளிர்ந்த ரம்மியமான மாலை வேளை

யில் தேவர்கள் புடை சூழ்ந்திருக்க, பார்வதிதேவியாரை இரத்தின சிம்மாசனத்திலிருந்தி, அன்னை காண, அன்னையின் அகம் குளிர, சரஸ்வதி வீணை வாசிக்க, இந்திரன் புல்லாங்குழல் இசைக்க, பிரம்மன் தாளம் இட, மகாலக்குமி பாட, மகாவிஷ்ணு மிருதங்கம் கொட்ட, சூலபாணி மகிழ்ச்சி ததும்ப நடனம் ஆடினார். திருப்பரங்குன்றம் குகைக்கோயிலிலும், திருமழபாடி, தஞ்சைப் பெருவுடையார் கோவிலிலும் இந்தத் தாண்டவ மூர்த்தி யின் புடைப்புச் சிற்பம் உளது. கலாயோகி டாக்டர் ஆனந்தக் குமாரசாமியின் அழகான ஆங்கில மொழிபெயர்ப்பு:-

Evening Dance if the Himalays

"Placing the Mother of the three worlds upon a Golden throne studded with precious gems. Shulapani dances on the heights of Kailasa, and all gods gather round him. Saraswathi plays on the veena, Indra on the flute, Bramha holds the time marking cymbals, Lakshmi begins a song, Vishnu plays a drum and all the gods stand round about all the beings dwelling in the three worlds assemble there to witness the celestial dance and hear the music of the hour of twilight"

- Dr. Ananda Coomaraswamy

உமா தாண்டவம்

அனைத்ததையும் சிவபெருமான் தன்னுள் அடக்கிக் கொள்ளும் நேரம். அந்த நேரத்தில் இறைவனும் இறைவியும் சுடுகாட்டில் சேர்ந்து நடனம் ஆடினர். திருவெண்ணீறு அணிந்து, சடையில் சந்திர கலை அசைந்து ஆட, வீரபைரவன் என்னும் பெயரில் பரம்பொருளும் வீரபைரவி என்னும் பெயரில் பரமேஸ் வரியும் நிருத்தம் செய்கின்றனர். உயிரினங்கள் ஒவ்வொன்றும் அனைத்து உடல்களையும் விட்டு நீங்கி இறைவன், இறைவி யுடன் இரண்டறக் கலக்கின்றன. தீச்சுவாலைகளாக இருக்கும் சிதையிலிருந்து தீப்பொறிகளாக, ஒளிக்கதிர்களாக அவர்களுள் புகுந்து விடுகின்றன. மலைகள் சரிய, சப்த சமுத்திரங்களும் பொங்கியெழ, நிலவுலகு தடுமாறி அசைய ஈஸ்வரனும் ஈஸ்வரி யினுடைய நிருத்தம் வீரம் செறிந்ததாக இருந்தது.

கௌரி தாண்டவம்

திருப்புத்தூர் சிற்சபையில் ஆடியது இந்தத் தாண்டவம். இதுவும் காத்தல் தாண்டவம் ஆகும். சாந்தமான தோற்றம், நான்கு கைகள், செந்நிறம், புன்னகை பூத்த திருமுகம், கபாலம், கொக்கிறகு, ஊமத்தம் பூ, எருக்கலம்பூ, பிறைமதி இவற்றை அணிந்த சடாமுடி, பரந்த சடை, பாம்பு வளை அணிந்து முயலகன் மேல் வலது காலை ஊன்றி, இடது காலை வளைத்து, வலது கையில் அபயம், உடுக்கை இவற்றைத் தாங்கி, இடது கையில் தீ, அகல் வியாளம் (புலி) இவற்றை ஏந்தி, இடப்பக்கத்தில் கௌரி தேவியுடன், வலப்பக்கத்தில் நந்தியுடனும், வரித்துப் பரந்து மகுடாகச் சுற்றப்பட்டதுமான சடாமுடியை இடப்பாகம் சாய்த்து நின்று நிருத்தம் செய்வது கௌரி தாண்டவமாகும்.

காளிகா தாண்டவம்

படைத்தல் தொழிலுக்குரிய இந்தத் தாண்டவம், திருநெல்வேலி தாமிர சபையில் நிகழ்ந்தது. அஞ்ஞானத்தை நீக்கிப் புத்தொளியைத் தரவல்லது. இந்தத்தாண்டவத்தை காளிகா தாண்டவம் அல்லது முனி தாண்டவம் என்பர். வலது காலை மேலே உயரத் தூக்கிய நிலை. தாருகாவனத்தில ஒரு ரிஷிக் கூட்டம், இவர்கள் இறைவனை மதிக்கவில்லை. சிவபெரு மான் இவர்கள் மனதை மாற்ற விரும்பி விஷ்ணுவை ஓர் அழகிய அணங்காக வடிவம் தாங்கப் பணித்து, மனையாளாக அவளை அமர்த்தி, ஆதிசேடனைத் துணைக்கொண்டு பிச்சாடனர் வடிவந்தாங்கி, காட்டிற்கு எழுந்தருளினார். இறைவன் வனத்தில் இருந்த இருடிகள் ஒருவித உணர்வால் யாகாக்கினியை எழுப்பி வந்தவர்களை அழிக்க முயன்றனர். ஓம குண்டத்திலிருந்து ஒரு பயங்கரமான வரிப்புலி தோன்ற, சிவன் அதைக்கொன்று அதன் தோலை உரித்து, ஆடையாக அரையில் அணிந்தார். இதன் பின்பே அந்த அற்புதமான நடனத்தை ஆரம்பித்தார். அந்நிலை யில் ஒரு நாகம் தோன்றவே, சிவபெருமான் அதை எடுத்துத் தனது கழுத்தில் மாலையாக அணிந்தார். அடுத்து குள்ளன் உருவில் முயலகன் தோன்றினான். பரம்பொருள் முயலகனைத் தனது பாதத்தின் கீழ் அமர்த்திக் கொண்டார். இதன்பின் இருடிகள் ஆற்றாமையால் தமது அகந்தை, அறியாமை நீங்கி சிவபெருமானை - அவரது பேராற்றலை உணர்ந்து மதித்தனர்.

ஆதிசேடன், இந்த நிகழ்வைக் காணப் பெரிதும் விரும்பினார். அந்நிலையில் பரம்பொருள் இந்த நடனத்தை தில்லையில் காண்பாயாக என்று திருவாய் மலர்ந்தருளினார். தேவுக்கள் வேண்டுதலுக்கு இணங்கவும், பதஞ்சலி, வியாக்கிரபாத முனிவர் களின் விருப்பத்திற்கிணங்கவும் இந்த நடனம் இசைக்கருவி களுடன் இடம்பெற்றது.

திரிபுர தாண்டவம்

இந்தத் தாண்டவம் மறைத்தலைக் குறிக்கும். திருக் குற்றாலம் சித்திர சபையில் நிகழ்ந்தது. திரிபுர அசுரர்களின் பெரும்துன்பம் தாங்காமல், திரிபுரம் எரிய வேண்டும் எனத் தேவர்கள் வேண்ட, எரிமுகப் பேரம்பினை எய்யுமாறு சிவனைக் கேட்டதும், உமையவள் ஒரு பக்கமாகக்கொண்டு, இறைவன் அத்திரிபுரத்தை சிரித்தே எரித்து, வெற்றிக் களிப்பாற் கைகொட்டி நின்று, ஆடிய கொடுகொட்டி என்ற ஆடலாகும். இந்தத் தாண்ட வத்தை "கொட்டிச் சேதம்" என்றும் சங்க நூல்கள் கூறும். இதை வென்றிக்கூத்து என்றுஞ் சொல்வர். வென்றிக் காலத்தைப் போர்க்காலம் எனலாம்.

"திருநிலைச் சேவடிச் சிலம்புவாய் புலம்பவும்
பரிதரு செங்கையிற் படுபறை ஆர்ப்பவும்
செங்கண் ஆயிரம் திருக்குறிப்பு அருளவும்
செஞ்சடை சென்று திசைமுகம் அலம்பவும்
பாடகம் பதையாது, சூடகம் துளங்காது
மேகலை ஒலியாது, மென்முலை அசையாது
வார்குழை ஆடாது, மணிக்குழல் அவிழாது
உமையவள் ஒருதிறன் ஆக ஓங்கிய
இமையவன் ஆடிய கொட்டிச் சேதம்"

- சிலப்பதிகாரம் (சாக்கையர் கூத்து)

பொருள்

சிவன் இதை ஆடுகையில் திருநிலைப்பெற்று இருக்கின்ற சிவந்த பாதங்களிலே சிலம்புகள் ஒலிமுழங்கவும், சிவந்த கையிடத்தே விளங்கும் பறை முழங்கவும், கண் ஆயிரக்கணக்

கான திருக்குறிப்புகளை உணர்த்துவனவுமாக உளது. செஞ்சடையானது சென்று எட்டுத் திக்குகளிலும் அலையும் நிலையில், உமையானவள் தன் கணவனுடன் தானும் இணைந்து ஆடாமல், அசைவின்றி நின்றாள். பாடகம் என்ற காலணி பதையாமலும், சூடகம் என்ற கை அணி அசையாமலும் இடை யில் உள்ள மேகலை ஒலியாமலும், மென்மையான முலைகள் அசையாமலும், நீண்ட குழையாகிய காதணிகள் ஆடாமல், மணி போன்ற கருங்குழல் அவிழாமல் இருந்ததாம். இந்த கொடு கொட்டி ஆடலின்போது சிவனுடன் ஒத்து இயங்க வேண்டிய இறைவி, எதற்காக அச்சமும் வியப்பும் கொண்டு ஒதுங்கிய வண்ணம் அசைவிலாது இருந்தாள்.!

சிவன் திரிபுரங்களை எரித்து உமையவளின் உதவியுடன் ஆடிய ஆடல்கள் கொடுகொட்டி, பாண்டரங்கம் (கூத்து), கபாலம் என்பன. கலித்தொகையில் கடவுள் வாழ்த்தில் இறை வனது ஆடலுக்கு ஏற்பத் தாளம் இடும் பொறுப்பேற்ற உமையவள், சிலப்பதிகாரத்தில் நடுகற்காதையில் அசைவற்று நிற்பதேன்?

"படுபறை பலவியம்பப் பல்லுருவம் பெயர்த்துநீ
கொடுகொட்டி யாடுங்காற் கோடுயரகல் குறிக்
கொடிபுரை நுசுப்பினாள் கொண்டசீர் தருவாளோ"

- கலித்தொகை (கடவுள் வாழ்த்து)

பொருள்

நின்கையில் ஒலிக்கின்ற பறை பலவாச்சியங்களையும், ஒலியா நிற்கக், கட்புலனாய் பல வடிவங்களையும், மீண்டும் நின்னிடத்தே ஒடுங்கிக் கொண்டு கொடிதாகிய கொட்டியென்னுங் கூத்தை நீ ஆடுகின்ற காலத்துப், பக்கம் உயர்ந்த அகன்ற குறியினையுடைய கொடியை ஒத்த இடையினை உடையாள் தாளம் முடிந்து விடுங் காலத்தினை, தன் இடையே கொண்ட சீரைத் தருவாள்? தரமாட்டாள். இவ்வண்ணம் சிவன் ஆடும் போது அம்மை சீரும், தூக்கும் பாணியும் ஆகிய தாளவகை பக்கத்தில் நின்று செய்கிறாள். கலித்தொகையிற் போர்க்காலம்

ஆயின், அம்மை உடனிராள் என்றும், பெண் உடனிருக்க போர் புரிவது அக்கால மரபன்று, என்று கண்ட அம்மை, சீர்பெற ஆடுதலில் இது வென்றிக்கூத்து என்பது தெளிவு.

சங்கார தாண்டவம்

சிவபெருமானின் ஏழுவகைத் தாண்டவங்களுள் சங்கார தாண்டவமும் ஒன்று. இத்தாண்டவம் அழித்தல் தொழிலைக் குறிக்கும். இறைவன் சுடுகாட்டில் இருண்ட நள்ளிரவில், பூத கணங்களோடு செய்யும் நிருத்தம் இதுவாகும். இதனை ஊழிக் கூத்து, மகா சங்கார தாண்டவம் என இருவகையாக ஆய்வாளர் கருதுவர். ஊழிக்கூத்து என்பது ஊழிக்காலத்தில் சிவன் ஆடுவது. மகாசங்கார தாண்டவம் என்பது தன்னைத் தவிர எல்லாம் அழியும் பேரூழிக் காலத்து உலகமே கடலலையாகக் காணப்படும்போது, காண்பார்கள். யாரும் இன்றித் தனியாக சிவபெருமான் நின்று ஆடுவது, பேரூழிக் கூத்து எனப்படும். இத் தாண்டவத்தில் இறைவியும் இறைவனுடன் இணைந்துகொள்வ தாக இலக்கியங்கள் இயம்புகின்றன. பேய்கள் உலாவும் மயானத்தில், தாழ்ந்த சடைகள், எட்டுத் திசையும் பரவ, அங்கங் குளிர்ந்து, சிவன் திருவாலங்காட்டில் ஆடுவதைக் காரைக் காலம்மையாரின் மூத்த திருப்பதிகத்தில் காணலாம்.

திருச்சிற்றம்பலம்

கொங்கை திரங்கி நரம் பெழுந்து
குண்டுகண் வெண்பற் குழிவீயற்றுப்
பங்கி சிவந்திரு பற்கணீண்டு பரடுயர்
நீள்கணைக் காலோர் பெண்பேய்
தங்கி யலறி யுலறி காட்டிற்
றாள்சடை யெட்டுத் திசையும் வீசி
யங்கங் குளிர்ந்தன லாடுமெங்க
ளப்பனிடந் திரு வாலங்காடே.

திருச்சிற்றம்பலம்

- காரைக்காலம்மையார்

அளவற்ற பிறவி எடுத்த ஆன்மாக்கள், வினைகள் புரிந்து பிறந்து, இறந்து மீண்டும் பிறந்து தொடர் நிகழ்வால் அல்லலுற்று, அலமலந்து தவிப்பதை மீட்கவும், அவற்றிற்கு ஓய்வு தருவதற்கு மாக இறைவன் இந்த சங்கார தாண்டவம் புரிகின்றான். சங்கார தாண்டவச் சிற்பங்களை திருச்செங்காட்டங்குடி, காஞ்சிபுரம் போன்ற இடங்களில் காணலாம்.

ஊர்த்துவ தாண்டவம்

சிவபெருமான் புரியும் ஐந்து செயல்களில் அருளலுக்கு உரிய தாண்டவம் ஊர்த்துவ தாண்டவம் ஆகும். ஊர்த்துவ தாண்டவத்தில் அப்பன் அண்டமுற நிமிர்ந்து ஆடுவது போல, திருவாலங்காட்டில் உள்ள இரத்தின சபையில் ஆடற்கரசன் எண்றோள் வீசி ஊர்த்துவ தாண்டவம் ஆடுகிறார். "உத" என்றால் மேல் இடக்கை, வலக்கால் மேலே தூக்கிய நிலை. இடது கால், வலக்கால் மேலே தூக்கிய நிலை. இடது கால் முயலகனில் ஊன்றிய நிலை. இயற்கை மற்றும் புருடன் என்னும் இவ்விரண்டினிடையே தோன்றிய பிணக்கே இத்தாண்டவத்தின் உட்பொருளாகும். தாண்டவத்தை இறைவன் தோற்றுவித்தது போலவே நளினமும் மென்மையும் கொண்ட "லாஸ்யம்" என்னும் நடன முறையைத் தோற்றுவித்தவள் அம்பிகை. இறைவன் இறைவியிடையே தத்தம் திறமையைப் பற்றிக் கலகம் தோன் றிற்று. தேவ வம்சத்தவரான கந்தர்வர், இயக்கர், கின்னர், கிம்புருடர் அனைவரும், இத்தாண்வத்தைக் கண்கொள்ளாக் காட்சியாகக் கண்டுகளிக்கச் சிவனும், பார்வதியும் நடனஞ் செய்தனர். ஏற்றத்தாழ்வு இல்லா நிருத்தமாக இருந்தது. தாண்ட வத்தின் இடையே சிவபெருமான் வலது காலை உடலோடு ஒட்டி உயர்த்தித் தலைமேல் வைத்துக்கொண்டு துருவநிலையில் (அசையா நிலையில்) தாண்டவம் செய்து, மெல்ல மெல்ல விலம்பிதத்திற்கு லயை மாற்றித் தாண்டவம் ஆடினார். உமையோ அவ்வாறு காலை உயர்த்த மனமின்றி (பெண்மை காரணமாக) தன் தோல்வியை ஒப்புக்கொண்டாள். திருவாலங் காட்டில் ஆடிய ஊர்த்துவ தாண்டவம் மிகச் சிறப்பானதொன் றாகும். உமையம்மையின் கூறாகத் தோன்றிய காளி முனைந்து ஆடுகையில் சினந்தெழுந்த சிவன் தன் ஒரு காலை உயரத் தூக்கி, ஊர்த்துவ தாண்டவம் ஆடுகையில் குழை ஒன்று

(குண்டலம்) நழுவி வீழ அதைப் பிறர் அறியாதவாறு தன் திருவடியால் எடுத்து ஆடியதே நடனச் சிறப்பாகும். ஊர்த்துவ தாண்டவத்தைக் கண்டு வீடுபேறு பெற்றவர்கள் கார்க்கோடனும் முஞ்சிகேச முனிவரும் ஆவர். ஊர்த்துவ தாண்டவச் சிற்பங் களை காஞ்சிபுர ஸ்ரீ கைலாசநாதர் திருக்கோவிலிலும் திருச்செங் காட்டங்குடி, தஞ்சைக் கலைக்கூடம் (17ஆம் நூற்றாண்டு) சிதம்பரத்திலும் காணலாம்.

இதுகாறும் நடனம் ஆனார் என்னும் விடயமாக சிற்பக் கலை, ஓவியக்கலை, நிருத்தம், நிருத்தியம், நடராஜ வடிவம், உலக இயக்கம், ஐந்தொழில், ஏழு தாண்டவங்கள், திருவுருவத் தத்துவம், திருமூலர் சிவானந்தக்கூத்து, ஆனந்த தாண்டவம், சந்தியா தாண்டவம், Evening Dance, உமா தாண்டவம், கௌரி தாண்டவம், காளிகா தாண்டவம், திரிபுர தாண்டவம், சங்கார தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம் சம்பந்தமாக தொகுத்து விரித்துரைத்தோம்.

திருச்சிற்றம்பலம்

தலம் - சிதம்பரம் பண் - காந்தாரபஞ்சமம்

ஆடினாய் நறுநெய்யொடு பால் தயிர்! அந்தணர் பிரியாத சிற்றம்பலம்
நாடினாய் இடமா! நறுங்கொன்றை நயந்தவனே!
பாடினாய் மறையோடு பல்கீதமும்! பல்சடைப் பனிகால் கதிர் வெண்திங்கள்
சூடினாய்! - அருளாய் சுருங்க எம தொல்வினையே!

திருச்சிற்றம்பலம்

- சம்பந்தர்



திருவாலங்காடு

4ஆம் திருமுறை திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

செந்தழலுருவர் போலுஞ்சின
விடையுடையர் போலும்
வெந்த வெண்ணீறு கொண்டு மெய்க்
கணிந்திடுவர் போலும்
மந்தமாம் பொழிற் பழனை
மல்கிய வள்ளல் போலும்
அந்த மிலடிகள் போலு
மாலங் காட்டிகளாரே.

திருச்சிற்றம்பலம்

- அப்பர் தேவாரம்

திருவாலங்காடு

திருவாலங்காடு என்னும் புராதனப் பெருமைமிக்க பேரூர், திருத்தணிகை சுற்றுவட்டத்தில், செங்கற்பட்டு மாவட்டத்தில் தமிழ்நாட்டின் தலைநகராம், சென்னையிலிருந்து மேற்கே 57.6 கி.மீ தொலைவில் உளது. புகைவண்டி மூலம் செல்வதானால் திருவாலங்காட்டில் இறங்கவேண்டும். பேரூந்துகள் மூலமாகவும் திருவாலங்காட்டைச் சென்றடைய முடியும். புகைவண்டி நிலையத்திலிருந்து வடகிழக்கே மூன்று மைல் தூரத்தில் இந்த சிவஸ்தலம் உண்டு. காரைக்காலம்மையார் இங்கே நடராசப் பெருமானின் திருவடியின் கீழிருந்து, தாளமிட்டுப் பாடும் நிலையில் சிவானந்தப் பேரின்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்.

அருகாமையில் உள்ள பழையனூர், திருவாலங்காட்டோடு இணைந்த பெருநிலப்பரப்பாகும். பழையனூர், திருவாலங்காடு சோழப்பேரரசர் காலத்தில் 10 சதுரமைல் பரப்பில் ஒரே ஊராக இருந்ததாக கல்வெட்டுக்களிலும் இலக்கியங்களிலும் குறிக்கப்பட்டுள்ளன. நெல்வயல்கள் சூழ்ந்த வளம்மிக்க, புராதன ஊர் திருப்பழனம். பழையனூரை திருப்பழனம் என்றே புராணிகர் உரைத்தனர். ஆலமரங்கள் பரந்து விரிந்து விழுதெறிந்து நாலாபக்கமும் நிறைந்து நிழல் பரப்பி காடுபோல் இருந்ததால்

இவ்வூர் திருவாலங்காடாயிற்று. சர்க்கரை ஆலை ஒன்றும் உண்டு.

இறைவன் காளியுடன் திருநடனமாடிய திருத்தலம் இது. கார்க்கோடகன் என்ற பதஞ்சலி முனிவர், வியாக்கிரபாத முனிவர் திருமேனிகள் இங்கே உண்டு. அழகிய சிற்ப வேலைப்பாடுடைய பழமையான தேரைக்கண்டு இன்புறமுடியும். 1983இல் திருப்பணி வேலைகள் நடைபெற்று, குடமுழுக்கு இடம்பெற்றது. ஐந்து நிலைக் கோபுரத்தைத் தாண்டியதும், வலப்புறத்திலுள்ள நூற்றுக் கால் மண்டபத்தில் தேவஸ்தானத்தின் சார்பில், சித்த வைத்தியம் நடைபெறுகிறது. இங்கேதான் நடேசர் அபிஷேகம் நடைபெறுவ துண்டு. வெளிப்பிரகாரத்தில் சந்தனமரங்களுள. அடுத்து மூன்று நிலைகளையுடைய கோபுரம் உளது. இந்தக் கோபுரத்தில் ஊர்த்துவதாண்டவர், பிரம்மா, நந்தியம்பெருமான் மிருதங்கம் வாசித்தல், காரைக்காலம்மையார் பாடுதலோடு இந்த அம்மை யாரின் வரலாறு அழகாக செதுக்கப்பட்டுள்ளது.

வரலாறு

பொதுவாக இந்திய உபகண்டத்தையும், சிறப்பாக செந்தமிழ் நாட்டையும் பொறுத்தவரை வரலாற்றுச் சான்றுகள், தொல்லியற் பொருட்கள், சின்னங்கள், இலக்கியங்கள், புராண இதிகாசச் சம்பவங்கள், நிறைய நிகழ்ந்த இடங்கள் ஆலயங் களையண்டிய பிரதேசங்களாகத்தான் தென்படுகின்றன. திருப் பழனத் திருவாலங்காட்டுப் பகுதிகளில் ஆய்வாளர் ஆய்வு களை மேற்கொண்டபோது, மிகவும் தொன்மையான காலத்தில் பழைய கற்காலமனிதன் வாழ்ந்த எச்சங்கள் பெருமளவில் தெரிய வந்துள்ளது.

எனவே வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தை ஆய்வுசெய்த அறிஞர்கள், அந்தக்காலத்தை பழங்கற்காலம், இடைக்கற் காலம், பிந்திய கற்காலம் என வகுத்தனர். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மனிதன் பாவித்த கருவிகள், அவை காணப்பட்ட நிலத்தின் மண் அடுக்குமுறை, இவர்கள் ஓரிடத்தில் வாழாமல் நீர்வளம்மிக்க பகுதிகளை நாடிச் சென்றமை நோக்கற் பாலது. பழையனூரில் புத்தேரி, வெள்ளேரி ஆகிய இரு

ஏரிகட்கும் இடையிலிருந்த சிறிய நிலப்பரப்பில், பெருங்கற்கால மனிதர்கள் வாழ்ந்திருக்க வேண்டும். அந்தப் பெருங் கற்காலம் கி.பி 5ஆம் நூற்றாண்டு என்பர். இந்த மக்கள் நாகரிகத்தின் வளர்ச்சியில் சென்று கொண்டிருந்தனர். அத்தோடு நிலையான இடத்திலும் வாழ்ந்து வேளாண்மை செய்தமையை அறிய முடிகிறது.

இதற்கு ஆதாரமாக இலக்கியச் சான்றுகளான காரைக் காலம்மையாரின் மூத்த திருப்பதிகம், மூவர் தேவாரங்கள், திருவாலங்காட்டுத் தலவராலறு, புராணங்கள் மூலமாகவும், மிகவும் தொன்மையான தொல்லியற் சான்றுகளான சோழர் ஆட்சிக்கால படிமக்கல், கற்குவியல்கள், கல்வெட்டுக்கள், தெய் வீகச்சிற்பங்கள், கற்கோடரிகள், வெட்டுக்கத்திகள், மண்தாழி கள், ஈமத்தொட்டிகள், ஈமச்சின்னங்கள், செப்பேடுகள், செப்புத் திருமேனிகள், கற்கிடைகள் ஆகியன காலங்காலமாக கண்டெடுக் கப்பட்டுள்ளன. இவை திருவாலங்காட்டு வரலாற்றை அறிய உதவும் கருவூலங்களாகும்.

காரைக்காலம்மையார் வாழ்ந்த காலம் கி.பி 560 எனலாம். இக்காலத்துக்குப் பின், திருத்தலங்கள் தோறும் சென்று திருப்பதி கம் பாடிய, மூவர்முதலிகள் காலம் கி.பி 7ஆம் நூற்றாண்டு என்பர் ஆய்வு ஆசிரியர். மூவர்முதலிகள் கி.பி 7ஆம் நூற்றாண் டில் பழையனூரிலிருந்தே, திருவாலங்காட்டிலுள்ள இறைவனை பழையனூருடையானென்று பாடியதால் இந்த இரு ஊர்களும் ஓர் ஊராகவே தேவார காலத்தில் இருந்ததை உய்த்து உணரமுடிகிறது.

பல்லவரின் ஆட்சி கி.பி 880 இலும், பல்லவரின் வீழ்ச்சிக் குப் பின், சோழர் தலையடுத்த காலம் கி.பி 1018 என்பதும் தெரிந்ததே. முதலாம் இராஜேந்திரன் முடிகொண்ட சோழபுரத் தில் இருந்தபோது, பழையனூரை தேவதானமாக திருவாலங் காட்டு இறைவனுக்கு ஈந்ததை, திருவாலங்காட்டுச் செப்பேடு செப்புகிறது. சான்றாக திருவாலங்காட்டுச் செப்புப் பட்டயம் (S.I.I.VOL III.No.205) சோழப்பேரரசர்களின் பின், விஜயநகரப் பேரரசும், அதன்பின் ஜமீன்தார் ஆட்சியிலும் திருவாலங்காட்டுச்

சிவஸ்தலம் பேராதரவு பெற்று இருந்ததை கல்வெட்டுகள் மூலம் காணமுடிகிறது. திருவாலங்காட்டில் சோழ முத்திரையுடன் 31 செப்பேடுகள், 60க்கு மேற்பட்ட கல்வெட்டுகள் படி எடுத்துள்ளமை மகிழ்ச்சியைத் தருகிறது. ஆங்கிலேயர் காலத்தில் கி.பி 1811இல் சித்தூர் மாவட்டத்துடன் இணைக்கப்பட்ட இப்பகுதி, மீண்டும் அண்மையில் 1960இல் திருத்தணி தமிழகத்துடன் இணைந்தபோது பழையனூர் - திருவாலங்காடு, செங்கற்பட்டு மாவட்டத்தின் ஊர்களாக மாறின.

திருவாலங்காடு - திருப்பழனம்

இவ்விரு ஊர்களிலும் பத்துக் கோவில்களுள. இவற்றுள் திருவாலங்காட்டிலுள்ள வட ஆரண்யீஸ்வரராலயம் தான் திருவாலங்காடு எனப்படும். இந்த சிவஸ்தலம் தான், மிக மிகப் பழமையும் சிறப்பும் மிக்கதாகும். இறைவர் திருநாமங்கள் வட ஆரண்யீஸ்வரர், திருவாலங்காட்டு இறைவர், தேவர் சிங்கப் பெருமான், மகாதேவர், அம்மை அப்பன் ஆகும். இவ்விறைவரே சைவசமய குரவர்களாலும், காரைக்கலாம்மையாராலும் போற்றிப் பாடப்பெற்றவர். இறைவியின் பெயர் வண்டார் குழலியம்மை - நாச்சியார், பிரம்மராலகம்பாள் என்றும், அழைப்பர். திருவாலங்காட்டுத் தலவிருட்சம் ஆலமரம், பலா ஆகும். மகா தீர்த்தம், மூர்த்திதீர்த்தம், சென்றாடுதீர்த்தம் எனப்படும். இந்தத் தீர்த்தம் மேற்குப் பகுதியில் 9 ஏக்கர் நிலப்பரப்பில், நடுவில் நீராழி மண்டபத்துடன் உள்ளது. திருவாலங்காட்டுத் திருத்தலம் பல ஏக்கர் நிலப்பரப்பிலுள்ளது.

முதல் சுற்றுப் பகுதியில் கருவறை மூலமூர்த்தியாகிய ஆலங்காட்டு இறைவர், சாந்தமே உருவாக இலிங்க வடிவிலுள்ளார். இந்தக் கருவறை என்னும் உண்ணாளி 1906இல் புதுமை பெற்றது. கருவறை வைரக் கற்களால் கட்டப்பெற்று சிறப்பாக உளது. இந்த ஆலயம் பல்லவர் காலத்தில் சீரும் சிறப்பும் பெற்று, சோழர்காலத்தில் புதுப்பிக்கப்பெற்று பெருவளர்ச்சி கண்டு, விஜயநகர ஆட்சியில் புதிய பல ஆலயங்கள் அமைக்கப்பெற்று விளங்குகிறது. மூலமூர்த்திக்குமேல் உருத்திராக்கவிதானம், மூலவர்க்கு அருகாமையில் போகசக்தி அம்மன் (உற்சவத்திருமேனி) உண்டு. பங்குனி உத்தரத்திற்குத் திருவாலங்காடு பெருவிழாக்

காணும். கருவறையை அடுத்து இடைநாழிகையில் இருபுறமும் நெடியுயர்ந்த வாயிற் காப்போர் கம்பீரமாகவுளர். வடகிழக்குச் சந்நிதியில் வண்டார் குழலி அம்பிகையும் அழகேயுருவாகக் காட்சி தருகிறார். திருமூலர் காரைக்காலம்மையார், அப்பர், சுந்தரர், சம்பந்தர், மணிவாசகர், பரஞ்சோதி முனிவர், சேக்கிழார், பட்டினத்து அடிகள், அருணகிரிநாதர் போன்ற ஞானக்குரவர்கள் திருவாலங்காட்டு இறைவனைப் புகழ்ந்து பாடி உள்ளனர்.

இரத்தின சபை

ஆடல் வல்லானுக்கு தமிழ் நாட்டில் ஐந்து சபைகள் உண்டு.

1. சிதம்பரத்தில் - கனகசபை
2. மதுரையில் - வெள்ளியம்பலம்
3. திருநெல்வேலியில் - தாமிரசபை
4. குற்றாலத்தில் - சித்திரசபை
5. திருவாலங்காட்டில் - இரத்தினசபை

இரத்தின சபையை, மணிமன்று என்றும் அழைப்பர். இந்த இரத்தின சபை பத்திரகாளி அம்மன் கோவிலுக்கு எதிரில் உள்ளது. இந்த இரத்தின சபை நடராஜப்பெருமானுக்கு உரியது. இந்த நடராஜ மூர்த்தம் ஐம்பொன்னாலானது. இங்கே ஆடற் கரசன் எண்தோள்வீதி ஊர்த்துவ தாண்டவம் ஆடுகிறார். அவர் அருகில் சிவகாமியம்மையும், தலையால் நடந்து வந்த காரைக் காலம்மையாரின் திருவுருவமும் செப்புத்திருமேனிகளாக உளது. பக்கத்தில் ஸ்படிகலிங்கமும், அருகில் சிறிய மரகதலிங்கமும் உள. இந்த லிங்கட்கு நாலுகால அபிடேகம் நிகழ்கிறது. திரு முறைகள் பேழையில் உளது. இரத்தினசபையை வலம் வரலாம். சுந்தரர் பதிகம் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது. இரத்தின சபைக்கு எதிரில் பெருந்தூண்கள் கொண்ட மண்டபம் உளது. இரண்டாம் சுற்றில் தென்கிழக்கில் திருமடைப்பள்ளியும், நந்தி மண்டபமும் கருவறையின் நேரெதிரில் உள்ளது. இப்பிர காரத்தை வலம் வரும்போது, ஆருத்திரா அபிஷேகம் நடை பெறும் மண்டபத்தை இரத்தினசபை வாயிலில் கண்டுகொள்ள முடியும். இங்கே ஒரு மூலையில், பாரிய ஆலமரம் கிளை பரப்பிய நிலையிலுளது. இரத்தினசபை விமானம் செப்புத் தகட்டால்

வேயப்பட்டு, அதன் மேல் ஐந்து கலசங்கள் உள. இரத்தினசபை மிகவும் அலங்காரமாக உளது.

வண்டார் குழலி சன்னதி

இரண்டாம் சுற்று வளாகத்தில் வடகிழக்கு மூலையில் அம்பிகை சன்னதியுளது. இந்த இரண்டாவது திருச்சுற்றில் மூன்று நிலைகளையுடைய சிறிய கோபுரம் உண்டு. இந்த அம்பிகையின் சன்னதியை, இராஜாதிஇராஜனின் படைத்தளபதிக்காகப் பழைய னூரைச் சார்ந்த கூழாண்டார் என்பவர் கட்டினார். இதற்குச் சான்றுகள் இச்சுற்று வளாகத்திலுள்ள மடைப்பள்ளித் தூண்களி லுள்ள கல்வெட்டுகளில் காணமுடியும். இந்த அம்மன் சன்னதி யில் பிற்காலச் சோழர்களின் கலை எவ்வாறு இருந்தது என்ப தைக் கண்டு அறியலாம். தூண்களைத் தாங்கி நிற்கும் கல்வெட் டுப்படி, இந்தக் கொடிக்கம்பத்திற்குப் பொருத்திய செப்புத் தகடுகள் கி.பி 1441ஆம் ஆண்டு விஜயநகர அரசர் காலத்தவை யாகும். இந்தச் சன்னதியைக் கட்டிய கூழாண்டார் என்பவர் யார்? இந்தக் கூழாண்டார் கோத்திரத்தினர் பழையனூரில் இன்றும் வாழ்கின்றனர். இவர்கள் வேளாண்மை செய்து வாழ்ந்தவர்கள். இவர்கள் தமது வயலில் விளைந்த நெல்லை, இறைவனுக்குத் தானம்செய்து விட்டு, வயற்பரப்பில் ஒரு சிறுபகுதியில் வரகினைப் பயிர்செய்து, அந்த வரகுக்கூழினை அருந்தி ஜீவனம் செய்தனர். திருவாலங்காட்டு இறைவர் மீது இவர்கட்கிருந்த சிவபக்தியை எப்படி இயம்பமுடியும்?

சோமாஸ்கந்தர் திருமேனி

உமையோடுங், கந்தனோடுங் கூடிய சிவமுகூர்த்தமே சோமாஸ்கந்தத் திருமேனி, பல்லவர் காலத்தில் கோவில்களின் கருவறையின் பின்புறத்தில் அமைக்கப்பட்ட இந்தத் திருவுருவம் சோழர்காலத்தில் செப்புத் திருமேனிகளாக உருவாக்கம் பெற்றது. திருவாலங்காட்டிலிருந்து சென்னை அருங்காட்சியகத்திற்குக் கொண்டு வரப்பெற்ற இத்திருமேனி கி.பி 9ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. அமர்ந்த நிலையில் உள்ள சிவனின் இடப்பாகத்தில் உமை காணப்படுகிறாள். பாலமுருகன் இருக்கவேண்டிய இடத் தில் தற்பொழுது இரண்டு குழிகள் தென்படுகின்றன. சிவபரம் பொருள் இடக்காலைத் தொங்கவிட்டு வலக்காலை அழகுற

மடித்தநிலையில் காணப்படுகிறார். சிவனின் வலது பின்கையில் மழுவும், முன்கையில் கபாலமும், இடது முன்கையில் நீண்ட திரிசூலமும், பின்கையில் மானும், வலக்காதில் மகரகுண்டல மும், இடக்காதில் பத்தரகுண்டலமும் காணப்பெறுகின்றன.

வல்லப விநாயகர்

மூன்றாம் திருச்சுற்று வளாகத்தில் இடப்பக்கத்தில், வல்லப விநாயகப்பெருமான் வீற்றிருக்கிறார். சிவகணங்கட்கு அதிபதி ஆகையால் கணபதியெனப்பட்டார். சர்வ வல்லமை பொருந்திய இந்த விநாயகர் தனிப்பெருங்கடவுளாக, ஞானமே வடிவான திருமேனியுடன் வீற்றிருக்கிறார். விநாயகப்பெருமானை முழு முதற்கடவுளாகக் கருதும் மதம் காணபத்தியம். காணபத்திய மதம், வடநாட்டில் பரவத்தொடங்கிய காலம் கி.பி 10ஆம் நூற் றாண்டு என்பர். ஆதிசங்கரர் வகுத்த சண்மதங்களுள் ஒன்று காணபத்தியம், திருவாலங்காட்டில் வீற்றிருக்கும் வல்லப விநாய கனை, நாம் நினைத்த காரியம் கைகூடவும், நாம் செய்யத்துணி யும் பணிகள் விக்கினம் இன்றி நிறைவேறவும், அந்தப் பெரு மானை நினைத்து வணங்கிய பின்பே அவ்வூர் மக்கள் எந்தக் காரியத்தையும் ஆரம்பிப்பர். திருவாலங்காட்டில் வீற்றிருக்கும் ஆறுமுகசுவாமி வள்ளி, தெய்வயானை சமேதராராகக் காட்சி தருகிறார். இந்தத் திருச்சுற்றுமாளிகை இராஜஇராஜன் காலத் தில், அவர்கள் காலத்தூண் அமைப்புக்களைக் கொண்டே கட்டப் பெற்ற நூற்றுக்கால் மண்டபமுளது. இந்த மூன்றாவது சுற்றில் ஐந்து நிலைகளைக் கொண்ட இராஜகோபுரம் பிற்காலத்தில் கட்டப்பட்டதாகும். கோவிலின் வெளிப்புற வீதியில் 16 கால் மண்டபம் ஒன்றுளது. மிகவும் சிற்ப வேலைப்பாடு உடையது. விஜயநகரப் பேரரசு காலத்தில் கட்டப்பட்டது.

ஆடல் வல்லான்

சிவபிரான் கொண்டருளிய மூர்த்தங்களுள் தலைமையும், பெருமையும் உடையது நடராச மூர்த்தம். உடலை இயக்கும் இதயத்துடிப்புப் போல, உலக இயக்கத்திற்கு இப்பெருமானது தாண்டவம் துணைபுரிகிறது. எம்பெருமான் இத்திருநடனத்தால் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களைச் செய்தருள்கிறார். ஆதலில் இந்நடனம் பஞ்சகிருத்திய பரமானந்த தாண்டவம் எனப்பெயர்பெறும்.

அழகின் இருப்பிடமாகவும், அரிய பெரிய கருத்துக்களை விளக்கும் நிலையிலும், கவர்ச்சியின் தோற்றமாகவும், நிறை வான மகிழ்ச்சியின் பெட்டகமாகவும், பண்பாட்டின் உச்சமாகவும், நாகரிகத்தின் நிறைவாகவும் இருக்கும் இத்திருவுரு, அதன் தெளிவு, காலூன்றும்விதம், எடுப்பான போக்கு, சூரிய ஒளி போன்ற கண்கள், சிற்பம், இசை, நாட்டியம் ஒருங்கமைந்த தன்மை, விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் சங்கமிக்குமிடமாக இந்த ஆடவல்லானின் திருவுருவை என்றென்றும், பார்த்து மெய்மறந்து இருக்கலாம்.

திருவாலங்காட்டில் கண்டெடுக்கப் பெற்ற இந்தச் செப்புத் திருவுருவம் உலகிலேயே காணுதற்கரிய கலைப்பொக்கிஷ மாகும். இது சோழர்கால கலைக்கோலத்தை எமக்கெல்லாம் படம் பிடித்துக் காட்டுகின்றது. இலங்கையைச் சார்ந்த டாக்டர் ஆனந்தகுமாரசாமி, வங்கம் தந்த கவிஞர் தாகூர் போன்ற கவிஞர் பெருமக்கள் இந்த எடுப்பான தோற்றம் கண்டு மயங்கின ராம். இந்த நடமாடும் தெய்வீகத் திருமுகத்தில் இளநகை அரும்புகிறது. இடக்காலைத் தூக்கி அழகுறத் திருநடனம் செய்வதைத் தற்போதும் சென்னை அருங்காட்சியகத்தில் கண்டு இன்புறமுடியும். இந்த திருவுருவின் உயரம் 114.5 செ.மீ ஆகும்.

ஊர்த்துவ தாண்டவர்

ஊர்த்துவம் என்பது, ஒருகாலை மேலே தூக்கிய நிலை. மேல்நோக்கிய தாண்டவம் என்றுங் கூறலாம். இந்த ஆடல் அரசன் அண்டமுற நிமிர்ந்து ஆடும்நிலையில் முயலகன்மீது வலக்காலை உறுதியாக ஊன்றி, இடக்கால் இடக்காதைத் தொடும் வண்ணம் நடனமாடுகிறார். மதுரையில் கால்மாறி ஆடியதும் உண்டு. திருவாலங்காட்டிலுள்ள இந்த செப்புத் திருமேனியை காணக்கண்கழிப்புறும். ஆடல்வல்லானுக்கும் காளிக்கும் இடையே ஏற்பட்ட நடனப் போட்டியில் இந்த ஆடல் வல்லான் மகாகாளியை வென்றது இந்த ஊர்த்துவ தாண்டவம் மூலமே! இடப்பகுதியின்மேல் கைதூக்கிய திருவடியினைத் தழுவியவாறு, அவ்வடியும் உயர்ந்து செல்கிறது. கூத்தப்பெரு மானின் ஏழுவகைத் தாண்டவத்தில் ஊர்த்துவ தாண்டவம் திரு வாலங்காட்டில், இரத்தினசபையில் நிகழ்வது அருளல் ஆகும்.

தமிழ்நாட்டில் சோழமன்னர், கூத்தப்பெருமானில் எல்லை கடந்த அன்புடையவர்கள். இந்தச் சோழ அரசர்களில் ஒருவன் நடராச உருவத்தைப் புதிதாக வார்க்க எண்ணி நாட்டிலுள்ள கைதேர்ந்த நல்லொழுக்கமிக்க சிற்பிகளை வரவழைத்தான். நல்ல நாளிலே இந்தத் திருவுருவை வார்ப்பதற்காக மண்ணால் கரு செய்யத்தொடங்கினர். செம்பு முதலிய பஞ்ச உலோகக் கூட்டுச் சரக்குகள் கொதிக்கவைக்கப்பெற்றன. அந்த ஐந்து உலோகங்களும் உருகிக் குழம்பாகியபோது கருவை நிமிர்த்திய சிற்பிகள், துவாரம் மூலம் கொதிகுழம்பை ஊற்றினர். நடராச உருவில், உரு அமைவது மிகக் கடினம். ஆறிய பின் கருவை உடைத்ததும் ஏமாற்றம். உரு சிறப்பாக அமைய வில்லை. பல்லாண்டு சென்றும் இப்பணி நிறைவெய்தவில்லை. சோழமன்னன் மனம் மிகவருந்தினான். அந்தச் சிற்பிகளை அழைத்து இந்தத் தெய்வீகப்பணி நிறைவேற காலக்கெடு விதித்தான். இந்த திருவுருவார்ப்பு இனிது நிறைவேறாவிடின் சிற்பிகட்கு சிரச்சேதம் என்றான். கலங்கிய சிற்பிகள் திகைத்தனர். அதே நேரம் செம்பு உலை கொதித்தது. அதேவேளை கிழவேதியர் ஒருவர் சிவவேடந்தாங்கி, ஒரு கிழவியுடன் அவ்விடம் வந்து கஞ்சி காய்ச்சுகிறீர்களே! எங்கள் பசி போக கொஞ்சம் வாருங்கள் என்றார். சிற்பிகள் அச்சம், ஆத்திரமாகியது. நாங்கள் மூன்று மணி நேரத்தில் இறக்கப் போகிறோம். போ போ என்றனர். ஆனால் கிழவேதியரோ கொதிக்கும் செம்புக் குழம்பையாகுதல் அள்ளி அகப்பையால் ஊற்றுங்கள் எங்கள் பசிபோக என்றார். சிற்பிகளும் அதிசயமடைந்து ஊற்றினர். செப்புக்குழம்பு தீர்ந்தது அந்தச் சிற்பிகள்முன், கூத்தப்பெருமான் சிவகாமி அம்மையாருடன் தோன்றினார். செய்தி சோழமன்னனுக்கு எட்டியது. அதுவே இன்றைய தில்லையம்பலத்திருவுருவாகும்.

மகாகாளி

சக்தியை முழுமுதற் கடவுளாகவும், சக்தியிலிருந்தே சகலதும் தோன்றியதாகவும் கொள்ளும் மதம் சாக்தம். மகா சக்தியின் பல்வேறு தோற்றங்களில் காளியும் ஒன்றாகும். சக்தி வழிபாடு மேலோங்கி இருந்த காலம்

1. சிந்துவெளி காலம்
2. வேதகாலம்
3. மகாபாரத இராமாயண காலம்

போர்வீரர்கள் போருக்குச் செல்லமுன் மகாகாளியை வழிபட்டு, அதன் பின்பே போருக்குச் செல்வது வழக்கம். திருவாலங்காட்டிலுள்ள இந்தக் காளியின் செப்புத்திருமேனி, எட்டுக் கைகளுடன் காட்சி தருகிறது. ஊர்த்துவதாண்டவத்தில் அப்பன், அண்டமுற நிமிர்ந்து ஆடுவதுபோல், காளியும் தனது முகத்தை சிறிதுமேலே தூக்கி சதுர தாண்டவமாடும் நிலையில் காளி பத்மாசனத்தில் நின்று நடம்புரிகிறாள். காளியின் வலது புறக்கைகள் நான்கிலும் வாள், தமர், திரிசூலம், எரி அழல் உடனும், இடதுகைகளில் கபாலம், பாசம், கேடயம், மணி உட னும் மகுடத்தில் சுவாலையும், கழுத்தில் கபால மாலையுடனும் தோன்றும் காட்சி அனைவருக்கும் அச்சம் தருவதொன்றாகும். சம்பந்தப்பெருமானும் தனது தேவாரத்தில் "ஆடினார் காளி காண ஆலங்காட்டடடிகளாரே" என்றருளியது நினைவுகூரத் தக்கது.

செப்புத் திருமேனிகள்

திருவாலங்காட்டிலுள்ள சிவஸ்தலத்தில், திருப்பணி நடந் தேறியகாலை, இந்தக் கோவிலைச் சார்ந்த பல்வேறு செப்புத் திருமேனிகள் சென்னை அருங்காட்சி அகத்திற்கு எடுத்துச்செல் லப்பட்டன. இந்தத் திருமேனிகள் அனைத்தும் உலகோர் அதிச யிக்கும் கலைச்செல்வங்களாகும். திருவாலங்காட்டிலுள்ள இரத்தினசபையில், இறைவன் அருகில் காரைக்காலம்மையாரின் செப்புத் திருமேனி உளது. இந்தத் திருமேனி சதா சிவபெருமா னின் திருநடனத்தை, வயது முதிர்ந்தநிலையில் என்புருவாய் தாளம் கையிலேந்தி, தன்னையே மறந்த நிலையில் வீற்றிருப் பதைக் காணமுடிகிறது. இந்தத் திருவுருவானது நீண்டு தொங் கும் மார்பகங்களுடன், அவற்றிலே மேலாடை ஏதுமின்றி, கண் கள் பிதுங்க, கன்னங்கள் உட்சென்று தலைவிரிகோலமாக சிவபெருமானிடம் "அறவா நீ ஆடும் போது உன்னடியின்கீழ் இருக்க வேண்டும்" என்ற தன்பெருவிருப்பை அந்தக் காரைக் காலம்மையாரின் திருவுருவில் காண்கின்றோம். மேலுயர்ந்த பக்தி வெள்ளநிலை, பேய் போன்ற திருவுரு, பார்ப்பவரைத் திகிலடையச் செய்யுமுருவம் இந்தச் செப்புத்திருமேனி ஆகும்.

சிற்பங்கள்

திருவாலங்காட்டு கருவறையின் தெற்கு மாடத்தில் புதிய ஆலமர் இறைவனின் சிற்பம் ஒன்று உளது. முன்பு இதே இடத்தில் இருந்த சிற்பம் திருப்பணி நிறைவேறிய காலை நீக்கப்பட்டது. இங்கே இருந்த பழைய சிற்பம் சோழர்காலத்தைச் சார்ந்தது. எம்பெருமானைச் சுற்றி நான்கு முனிவர்கள் சூழ்ந்து இருக்க, இறைவனின் பின்னிய அழகான சடை, தலையின் வலதுபுறம் கங்கையாள், இடதுபுறம் பிறையுடன் கபாலமும் காணப்படுகிறது. பல்லவர், சோழர் காலங்களில் எல்லாம் அரச ஆதரவுடன் தான் சிற்பங்கள், கோபுரங்கள், கோயிற் கட்டடக் கலை வளர்ந்து பெருகின. தமிழ்நாட்டில் சிற்பிகளின் உளிபடாத இடமே இல்லை.

கோவில் நிர்வாகம்

திருவாலங்காட்டு கல்வெட்டு A.R.E.P.Nos.B 469, 474 of 1905 பிரகாரம் பழையனூர் திருவாலங்காடு கோவிலின் நிர் வாகம், சிவாச்சாரியார்களால் நடாத்தப்பெற்றது என்பதை அறிய முடிகிறது. காணி உரிமையை சிவப்பிராமணர்கள் பெற்றிருந் தனர். சோழர் காலத்தில் பிறதேசங்களிலிருந்து பெருந் தொகையான பிராமணர்கள் வரவழைக்கப்பெற்று சதூர் வேதி மங்கலங்கள் என்ற பெயரில் தமிழ்நாட்டில் குடியேற்றப்பட்டனர். நன்கொடைகளைப் பெற்று நித்திய பூசைகள் செவ்வனே நிறை வேறின. கோவிற் பசுக்கள் மூலம் பெற்ற பசுநெய்யும், திருநந்த வனத்தில் அன்றலர்ந்த மலர்களும், நிறைவாகக் கிடைத்தன. மேலும் தேவரடியார்கள், குயவர்கள் தத்தமது கோவிற் பணி களை நிறைவேற்றி வந்தனர். இறைவனுக்கு அபிஷேகம் செய்ய பாலாற்றிலிருந்து நீர் பெறப்பட்டன. நித்தியபூசைகள், பங்குனி உத்தரத்திருவிழா, அன்னதானம், தண்ணீர்ப்பந்தல் சிறப்புற அமைய, நெல்வயல்கள் பெருமளவில் தானம் செய்யப்பட்டன. திருவந்தி திருவொட்டத் திருநாளின்போது பிட்டமுது வழங்கப் பட்டன. திருவாலங்காட்டில் திருவசந்தத் திருவிழா பத்து நாட்களுக்கு ஆண்டுதோறும் நடந்தேறியது. கார்த்திகை மாதம் சோதி நட்சத்திரத்தின்போது தெப்பத்திருவிழாவும் நடந்தது. முற்காலத்தில் பண்டாரத்தாராலும், சிவாச்சாரியர்களாலும்,

நாட்டு மடத்தாராலும் முறையே காலைச்சந்திப்பூசை, உச்சிக் காலப் பூசை, சாயரட்கூஷி, அர்த்தசாமப்பூசைகள் நிறைவேறி வந்தன. இன்று திருவாலங்காட்டு கோவிலின் நிர்வாகம், திருத் தணி திருமுருகன் ஆலயத்தின் நிர்வாகத்தின்கீழ் சிறப்புற நடை பெறுகிறது.

காரைக்காலம்மையார்

காரைக்கால் ஓர் துறைமுகப்பட்டினம். இவ்வூரைச் சார்ந்தவர் ஆகையால் காரைக்காலம்மையார் எனப்பட்டார். காரைக்காலம்மையார் 63 சிவனடியார்களில் ஒருவர். இவரது திருப்பதிகங்கள் 11ஆம் திருமுறையிலுள்ளது. சேக்கிழார் சுவாமி கள் அருளிய பெரியபுராணத்தில், காரைக்காலம்மையாரின் சரிதம், மிகவும் சிவபக்தி நிறைந்ததாகும். இந்த அம்மையார் சைவசமயகுரவர்கட்கு முன் வாழ்ந்தவர் என்பதை ஏற்கனவே கண்டோம். சிவனடியாருக்கு மனமாரத் திருவமுது படைத்து மகிழ்ந்தவர். ஒருகால் கணவனானவன், இல்லாளான காரைக் காலம்மையாரின் பாதம் பணிந்து எழுந்ததால், அந்தத் துர்ப்பாக் கிய செயலால் அதிர்வுற்ற அம்மையார், இல்லற வாழ்வை வெறுத்து ஒதுக்கி, சிவனடியே சதா சிந்திக்கும்நிலை ஏற்பட்டது. காரைக்காலம்மையாரின் இல்லற வாழ்வில் நடக்க ஒண்ணாத நிகழ்வு ஏற்படுத்திய வெறுப்பை, சேக்கிழார் சுவாமிகள் மிக அழகாக அருளியுள்ளார்.

"ஈங்கிவன் குறித்த கொள்கை யீதுவீனி
யிவனுக் காகத்
தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி
கழித்திங் குன்பால்
ஆங்குநின் றாள்கள் போற்றும் பேய்வடி
வடியேனுக்குப்
பாங்குற வேண்டு மென்று பரமனைப்
பரவி நின்றார்."

ஒண்ணாத - முடியாத

தனது கணவனுக்கென்றே தாங்கிய அழகு நிரம்பிய தசையாலடைத்த இந்த உடம்பை இல்லாமல் செய்து, கயிலை யிலுள்ள சிவனுடைய திருவடிகளை எப்போதும் வணங்கும் பேய்வடிவம் தந்தருள வேண்டி, சிவபெருமானின் திருவடிகளை வணங்கிநின்றார், காரைக்காலம்மையார். இவ்வாறு வேண்டிய தும், அம்மையாரின் திருவுடல் அழகெலாம் அகன்று, ஞானம் மிகுந்த எலும்புக்கூடாக தேவர்களும், மனிதர்களும் வணங்கும் பேய்வடிவம் கொண்டு, பரிபக்குவ நிலையடைந்து, பூதகணங் களில் அம்மையாரும் ஒருவராகி, விருப்பு மிகுதியால் சிவபெரு மான்மீது, அற்புதத் திருவந்தாதி பாடியருளினார்.

திருச்சிற்றம்பலம்

"பிறந்து மொழிபயின்று பின்னெலாங் காதல்
சிறந்து நின் சேவடியே சேர்ந்தே - னிறந்திகழு
மெஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
யெஞ்ஞான்று தீர்ப்ப திடர்"

- காரைக்காலம்மையார்

ஞானம் கைகூடிய நிலையில், தொடர்ந்து திருவிரட்டை மணிமாலை பாடினார். காரைக்காலம்மையாருக்குக் கயிலை செல்லப் பேராசை உண்டாகி, கயிலை நோக்கி விரைந்து சென்றார். இந்த ஞானத்தாயின் பேயுருவைக் கண்டவர், அஞ்சி விலகிச்சென்றனர். கயிலை மலையை காலால் மிதிக்க அஞ்சித் தலையால் நடந்தார். இந்த என்புரு தலையால் நடந்து வரு வதைக் கண்ட சிவபரம்பொருள் "அம்மையே" என்றார். காரைக்காலம்மையாரும் "அப்பா" என்று உளம் உருகி அவன்றாள் வணங்கி எழுந்தார்.

சிவபெருமான் காரைக்காலம்மையாரை, அம்மையே நீ வேண்டுவது என்ன? என்று கேட்டபோது காரைக்காலம்மையார் "தேவாதி தேவனே தங்களிடம் குறையாத அன்பு, மறுபிறவி எடுக்காத வரம், மறுபிறவி எடுத்தாலும் தேவரீரை என்றும் மறவாது இருத்தல், அத்தோடு எம்பெருமானே நீர் ஆனந்த நடனஞ் செய்யும்போது உமது திருவடியின்கீழ் என்றென்றும் நான் இருக்க வரம் தருக! என்றார்.

அவ்வாறு அம்மையார் வேண்டியதும் சிவபெருமான் நீ தென்பால் அமைந்துள்ள திருப்பழனத்தில் உள்ள திருவாலங் காட்டுக்குச் செல் அப்பதியில் நாம் ஆடும் ஊர்த்துவ தாண்டவத் தைக் காண்பாயாக! என்றென்றும் நீ அந்தப் பதியில் நிதம் என்னைப்பாடி துதித்திருப்பாயாக! இவ்வாறு இறைவன் அருளிய தும், திருவாலங்காட்டுத் திருமண்ணைக் காலால்மிதிக்க அஞ்சி, அந்தத் திருத்தலத்தின் வெளிப்புறத்தில் தங்கியிருந்து திருப் பதிகங்கள் பாடியருளினார். காரைக்காலம்மையார்; ஆடல் வல்லான், காளி திருநடனம் கண்டு உவகையுற்று "திருவாலங் காட்டு மூத்த திருப்பதிகம்" பாடியருளி தனது இறுதிக்காலத்தைத் திருவாலங்காட்டிலேயே கழித்து இறைவனடி சேர்ந்தார்.

திருச்சிற்றம்பலம் 11ஆம் திருமுறை

பண் - நட்டபாடை

"கொங்கை திரங்கி நரம்பெழுந்து
குண்டுகண் வெண்பற் குழிவயிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கணீண்டு பரடுயர்
நீள்கணைக் காலோர் பெண் பேய்
தங்கி யலறி யுலறி காட்டிற்
றாள்சடை யெட்டுத் திசையும் வீசி
யங்கங் குளிர்ந்தன லாடுமெங்க
ளப்பனிடந்திரு வாலங்காடே"

- காரைக்காலம்மையார்

இதுகாறும் திருவாலங்காடு என்னும் பெருமைமிக்க சிவஸ்தலம், அதன் வரலாறு, திருவாலங்காடு, திருப்பழனம், இரத்தினசபை, வண்டார் குழலிசன்னதி, சோமஸ்கந்தத் திருமேனி, வல்லப விநாயகர், ஆடல்வல்லான், ஊர்த்துவதாண்ட வர், மகாகாளி, இத்தலத்தின் செப்புத் திருமேனிகள், சிற்பங்கள், திருவாலங்காட்டின் நிர்வாகம், காரைக்காலம்மையார் சம்பந்த மாக தொகுத்துவிரித்து உரைத்தோம்.

திருவாரூர்

திருச்சிற்றம்பலம்

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தை
தன்னை மறந்தாள்தன் நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே!

திருச்சிற்றம்பலம்

- அப்பர் சுவாமிகள்

வரலாறு

சோழ வேந்தர்கள் காலத்தில் கோவில்கள் கட்டி எழுப் பப்பட்டன. பக்தி மார்க்கத்திற்கு ஆக்கமும், ஊக்கமும் அரச அவையால் பெரிதும் கிடைத்தன. சிற்பக்கலை வளர்ந்தது. நீற்றின் பெருமை உய்த்து உணரப்பட்டது. பெரிய புராணம் போன்ற சைவ நூல்கள் எழுந்தன. தேவார திருவாசகங்களைக் கோவில்களில் பண்ணோடு ஓத, ஓதுவா மூர்த்திகள் நியமனம் பெற்றனர். திருக்கோவில்களை அண்டி குடியிருப்புக்கள் எழுந் தன. உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய நீர்ப்பாசனம் விருத்தி அடைந்தது, போக்குவரத்திற்கு வசதிகள் பெருகின.

பராந்தகன் - I திருவாரூர் பூங்கோவிலுக்கு விளக்கிடப் பொன் வழங்கினான். இராசஇராசன் III திருவாரூர் கோவிலுக்கு நிலம் விட்டான். திருவாரூர் கோவிலுக்கு 6000 ஏக்கர் நிலமுண்டு. இந்த நெல் வருவாய் கொண்டு திருவாரூர் கோவில் நித்திய நைமித்தியங்கள் சிறப்புற நடைபெற்றன. பராந்தகன், இராசராசன், முதல் இராசேந்திரன், இராசாதிராசன், முதற் குலோத்துங்கன், இரண்டாம் இராசேந்திரன், விக்கிமர சோழன், இராண்டாம் குலோத்துங்கன் முதலியோருடைய கல்வெட்டுக் கள் மூலம் திருவாரூரின் பழைய சிறப்பை அறிய முடியும். திருவாரூரில் மாடமாளிகைகள், கூடகோபுரங்கள், உயர்

கட்டிடங்கள் பலகணியோடு கூடிய சபைகள் பல இருந்தன. திருவாரூரை சோழ அரசர்கள் நேரே கண்காணித்தனர். சிவபெருமான் சோழஅரசனாக இருந்து அரசு புரிந்தார். பரம்பொருளின் திருவிளையாடல்கள் பலகண்ட இடம் திருவாரூர்.

தமிழ்ப் பெரும் காப்பியங்கள் புகழ், மனுநீதி கண்ட சோழன் திருவாரூரில் இருந்து நீதி வழுவாது அரசு செய்தான். அந்த மனுநீதி ஈற்றில் மனுதர்ம சாஸ்த்திரமானது. திருவாரூரில் செங்கோல் ஒரு போதும், ஒருபாற்சாயவில்லை. மன்னன் மனுவின் செவிப்புலத்து பசு இழுத்து அடித்த மணி ஓசை கேட்ட போது "பழிப்பறை முழக்கோ? வார்க்கும் பாவத்தி னொலியோ? என்கிறார் சேக்கிழார் சுவாமிகள். அதாவது பழியினது பறைச் சத்தமோ? அல்லது பாவத்தின் சத்தமோ? என்று சிந்தை கலங்கினான் மன்னன். திருவாரூர் பிறந்தார்க்கு இயமவேதனை இல்லையென்பது எம்மவர் நம்பிக்கை. திருவாரூர் சப்த "விடங்க" தலங்களில் ஒன்று. "விடங்க" என்றால் கையால் புனையாதது. சிற்பி கைபடாச் சிலை. கர்நாடக சங்கீத மும்மூர்த்திகளான முத்துச்சாமி தீட்சதர், தியாகராஜ சுவாமிகள், சியாமசாஸ்திரிகள் பிறந்த பெருவிடம் திருவாரூர்.

திருநகரச் சிறப்பு:

பஞ்ச பூதங்களில் ஒன்றாகிய பூமி, கடினமாகி யாவற்றையும் தாங்கி நிற்கிறது. இதேபோலத் திருவாரூர் பிருதிவித்தலமாய், யாவற்றையும் தாங்கி உளது. இறக்க முத்தி தருவது திருவாரூர். தமிழ் நாட்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவாரூர் என்னும் பாரிய சிவத்தலம் உண்டு. காவிரி பாயும் வளமான சோழ நாட்டில் ஒரு பகுதி திருவாரூர். நாகபட்டினத்தில் இருந்து மேற்குத் திசையில் 14 கல் தொலைவில் திருவாரூர் உளது. திருவாரூர் ஒரு புகைவண்டிச் சந்திப்பு. இந்தப் புகைவண்டிச் சந்திப்பில் இருந்து, ஒரு கல் தொலைவில் இச்சிவத்தலமுண்டு. "நிறைசெல்வத் திருவாரூர்" என்ற சிறப்புப் பெயர் பெற்றது. திருவாரூரை மூலாதாரம் என்பர். காவிரிப் புதுநீர், வயல்களில் புகுவதால் சம்பா நெல் செழித்து வளரும். கரும்பும், கமுகும், கதலியும் மலிந்து விளையும். மல்லிகையும், முக்கனியும் திருவாரூரில் நிறைந்து குறைவற்று இருக்கும்.

நீர்ப்பூக்களான வெண்தாமரை, செந்தாமரை, ஆம்பல், அல்லி, நீலோற்பலம், குமுதம், செங்குவளை, செங்கழுநீர், கருங்குவளை மலர்ந்து நிறைந்திருக்கும். திருவாரூர் சோழப் பேரரசர்கள் இருந்து கோலோச்சிய வரலாற்றுச் சிறப்புமிக்க பெருநகரம். திருவாரூரின் செழுமைமிக்க வரலாற்றைக் காட்டும் கல்தேரும் பசு, அதன் கன்று, அரசிளங்குமரன் ஆகிய உருவங்கள் இங்கே தனி இடத்தில் காணமுடியும். திருவாரூர்த் தேரழகு, பாவநாசம் படி அழகு, திருவிடை மருதூர் தெரு அழகு என்று கூறுவர். புறநகரிலே கூத்தாடும் அரங்குகளும், மாடமாளி கைகளும் இருந்தன. திருவீதிகளிலே வாத்திய ஓசை, செழு மணித்தேரொலி, யானை ஒலி, குதிரை ஒலி கேட்கும். மாதவங் கள் நல்கியது திருவீதி நான்கும் ஆடும் மாதர்களின் சிலம்பொலி யும் கேட்கும். சிவன் அடியார்களையும், சிவபெருமானையும் அன்றி, வேறு பதியில்லாத உருத்திர கணிகையர் மாளிகைகள் திருவாரூர் திருநகரைச் சிறப்பித்தன.

திருவாரூர்த் தேர், மிகப் பழையது. இதனை ஆழித் தேர் என்பர். அத்தேர் இன்று இல்லை. தியாகப் பெருமான் தேரில் எழுந்தருளும் காட்சியை அப்பர் சுவாமிகள் மிக அழகாக;

ஊழித்தீ அன்னானை
ஓங்கொலி மாப் பூண்டதோர்
ஆழித் தேர் வித்தகனை
நான் கண்ட ஆரூரே.

தியாகப்பெருமான் தேருக்கு எழுந்தருளும்போது பொன்பூ, வெள்ளிப்பூ, இறைப்பு நடைபெறும். அந்த வீதியைப் பொன் பரப்பிய திரு வீதி என்பர். நகரச் சிறப்பிற்கு சேக்கிழார் பெருமான் திருவாரூரை மிகச்சிறப்பாக எடுத்து இயம்புகிறார்.

"வேத வோசையும் வீணையி னோசையும்,
சோதி வானவர் தோத்திர வோசையும்
மாத ராடன் மணிமுழ வோசையும்
கீத வோசையும் மாய்க்கிளர் வுற்றவே.

நமி நந்தி அடிகள்

திருவாரூர் பிறந்தார் யாவராயினும் சிவ கணங்களாக வும், சிவன் அடியார்களாகவும் கருதப்பெறுவர். இங்கே சாதி வேறுபாடில்லை. உயர்வு தாழ்வு இல்லை. இது திருவாரூரின் சிறப்பு. இவர்கள் தொகை அடியார்களாகப் பாராட்டப் பெறுகின் றனர். ஒரு முறை சிவனடியாரான நமிநந்தி அடிகள் நாயனார் திருவாரூரில் நடைபெற்ற பங்குனி உத்தரத்திருவிழாவிற்கு வந்திருந்தார். அங்கு பல சாதியினரும் வந்திருந்தனர். திருவிழா முற்றுப்பெற்றதும் தம் ஊருக்குத் திரும்பிச் சென்றபோது நள்ளி ரவாகிவிட்டது. வெளித்திண்ணையில் படுத்துக்கொண்டார். மனைவியிடம் பல சாதியினரும் திருவிழாவிற்கு வந்திருந் தமையால் நீராடாமல் உண்பது தவறு என்று கூறிவிட்டார். அன்றைய தினம் இரவிலே பரம்பொருள் தோன்றி "திருவாரூரில் பிறந்தவர்கள் எல்லோரும் சிவகணங்கள், ஆகையால் வேற் றுமை பாராட்டாதே" என்றார். இது திருவாரூர் மக்களின் ஒற்று மைக்கும், ஒருமைப்பாட்டிற்கும், வழிவகுத்தது எனலாம். நமி நந்தி அடிகள் செய்த நெய் விளக்கு ஏற்றும் திருப்பணி, இன்றும் தருமபுர ஆதினத்தால் தொடர்கின்றது.

திருவாரூர்த் திருக்கோயில்

மூன்று பிரகாரங்களைக் கொண்டது. நான்கு கோபு ரங்கள் அணிசெய்யும் மிகப் பெரிய கோவில். திருவாரூரை "கமலாலயம்" என்றும் "பூங்கோவில்" என்றும் கூறுவர். திருவா ரூர் நகரத்திற்கு, அகமலர் போல்வது பூங்கோவில். அப்பூங் கோவில் திருமதில் வாயிலை அடுத்து கோவிலுக்குள் முதல் காணப்படுவது தேவாசிரிய மண்டபம்.

கோவில் 5 வேலி, குளம் 5 வேலி, செங்கழுநீர் ஓடை 5 வேலி ஆகும். கமலாலயம் என்ற தெப்பக் குளம் கோவிலின் மேற்குப் பக்கமாகவுள்ளது. இதன் நடுவில் ஓர் தீவும், அழகான ஆலயமும் உண்டு. தாமரைகள் மிகுந்த படர்ந்திருந்தமையால் "கமலாலயம்" என்ற பெயர் நிலைத்திருக்கலாம். தென்கரையில் அரண்மனை பங்களா உண்டு.

திருவாரூர் வடக்குக் கோபுரம் கருணாகரத் தொண்ட மான் திருப்பணி. கோவிலுக்குள் நுழைந்தவுடன் உயர்ந்த நீண்ட கற்றூண்கள் மட்டும் நிற்கும். இது ஆயிரங்கால் மண்டபம் எனப்படும். திருவிழாக்காலங்களில் இவற்றின் மீது காவணம் (ஓலைப்பந்தல்) போடுவர். இந்த ஆயிரங்கால் மண்டபத்தில் இருந்துதான் சுந்தரர் திருத்தொண்டத்தொகையை அருளினார். கீழைக்கோபுரம் 118'. இக்கோபுரம் சோழர் காலத்தது. மேலைக் கோபுரம் 101'. கோவில் நிலப்பரப்பு தெற்கு வடக்கு ஆக 666' கிழக்கு மேற்காக 846' நாற்புறமும் 30' உயரக் கருங்கல் மதில் உண்டு. திருவாரூரில் மிகப்பெரிய நாயனம் உண்டு. நாதஸ்வரம் பாரி, மத்தளம் சுத்த மத்தளம், வாத்தியம் பஞ்சமுக வாத்தியம், பிள்ளைத்தண்டு மாணிக்கத் தண்டு, நடனம் அசபை, கொடி தியாகக் கொடி, சிம்மாசனம் இரத்தின சிம்மாசனம், சபை தேவசபை. திருவாரூரின் மறுபெயர்கள் கமலாலயபுரம், முசுகுந்த புரம், ஆடகேசபுரம், சத்திபுரம் ஆகும். திருவாரூர் வாயிலில் எல்லாத் தேவர்களும் கூடிக் காத்திருப்பர். உள்ளே மாதவர் களாகிய அடியார் திருக்கூட்டம் நிறைந்திருக்கும். அடியார்கள் முழு நீறு பூசி உருத்திராக்கம் அணிந்து, திருவைந்தெழுத்து ஓதி நிற்பர்.

திருமூலட்டானம்

தில்லையில் திருச்சிற்றம்பலம் போல, திருவாரூரில் திரு மூலட்டானம். மூலத்தானத்தில் புற்றிடமாக வன்மீகநாதர் என்ற திருநாமம் பூண்டு சுயம்பு மூர்த்தியாக அருள்பாலிக்கின்றார். திருமூலட்டானம் என்ற பெரிய திருக்கோயில் இரண்டாம் பிரகாரத்தில் மேற்குத் திசையில் உள்ளது. புற்றிடங் கொண்டார், ஆதிதேவராய் உள்ளார். இறைவன் விரும்பி எழுந்தருளி யிருப்பது இந்தப் பூங்கோவில் என்னும் திருவாலயம். புற்றிடம் கொண்டு, இறைவன் எழுந்தருளிய காரணத்தாலே, இது பிருதி வித்தலமாயிற்று. வன்மீகநாதருக்கு தெய்வேந்திரனே பூசை செய்வதாக ஐதீகம். புற்றிடங்கொண்டார், கருவறையில் வெள்ளிக் கவசம், நாகாபரணம் அணிந்து அருகே சோமகுசாம்பாள் என்ற போக சக்தி அம்மன், அர்த்த மண்டபத்தில் நாலு யாளிகள் தாங்கிய மேடையில் அமர்ந்திருக்கிறாள். மண்டபத் தூண்கள் மிகுந்த வேலைப்பாடு உடையன. இரண்டாம் பிரகாரத்தில்

தெற்கு நோக்கியவாறு, நீலோத்பலாம்பிகை தனிக் கோயில் கொண்டுள்ளார். உள்ளே திரு மூலத்தானத்தில் எழுந்தருளியி ருக்கும் புற்றிடங் கொண்டாராயும் உள்ள பெருமானே, வீதியில் எழுந்தருளுவர். ஆதலின் வீதி விடங்கர் எனப் பெயர் பெறுவர்.

"அணியுடைய நெடுவீதி நடப்பர் போலும்
அணியாருர்த் திரு மூலட்டான னாரே"

அதாவது, திருமூலட்டானத்திலே எழுந்தருளி இருப்பதைவிட்டுத் திருவாரூர்த் திருவீதியிலே வந்து, விழாக் கொள்வர் என்ற கருத்துப்பெற அப்பர் சுவாமிகள் அருளினார்.

சப்த விடங்கர்

திருவாரூர், திருநள்ளாறு, திருநாகைக்காரோணம், திருக் காறாயில், திருக்கோளிலி, திருவாய்மூர், திருமறைக்காடு ஆகிய ஏழு சிவத்தலங்களும் சப்த விடங்கதலங்களாகும். திருவாரூர் தியாகேசர் சந்நிதி மிகச் சிறப்பானது. திருவிழாக் காலங்களில் தியாகருடைய திருநடனம் காணக் கண்ணாயிரம் வேண்டும். தியாகப் பெருமான் எழுந்தருளியாக இரத்தின சிம்மாசனத்தில் முன்னே இரண்டு வாட்படையும் நடுவில் ஒரு மலர்ச்செண்டும் உண்டு. இங்கே எழுந்தருளிய அம்பிகை இருவர். ஒருவர் அல்லியங்கோதை, மற்றவர் கமலாம்பிகை, (தவக்கோலத்தில்) காணமுடியும். பராசக்தி பீடங்களில் இத்தலமும் ஒன்று. தியாகராஜர் சந்நிதியில் இருபுறமும் துவார பாலகர்கள் வார்ப்பு விக்கிரகங்கள் வாயில் காப்போனுக்கு வேண்டிய இறுகிய தேகம், உறுக்கும் சிங்க விழிகள், நாக குண்டலங்கள், பயங்கர மான பற்கள், நந்தி சடாமுடி, நெற்றிக்கண், நாகாபரணம், மான், மழு ஆகிய சிவ சின்னங்களோடு கூப்பிய கைகள், மூலவர்க்கு எதிரே எழுந்தருளி உள்ளனர். தியாகராஜர் சந்நிதியில் நந்தி நின்ற நிலையில் உளது. இங்கே ஓர் மரகதலிங்கமுளது. அவர் சப்த விடங்கரில் ஒருவர். தியாகேசருக்கும் வன்மீகநாதருக்கும் இடையில் ஐங்கலக்காசு விநாயகர் காட்சி தருகிறார். திருவாரூர் கோவிலில் சோமஸ்கந்த மூர்த்தமாகிய தியாகேசப் பெருமானே உற்சவர்.

திருவாரூர் சம்பந்தமான நூல்கள்

1. கமலாலயச் சிறப்பு
2. திருவாரூர்ப்புராணம்
3. தேரூர்ந்த சோழபுரம்
4. தியாகராசர் குறவஞ்சி
5. திருவாரூர்ப் பன்மணிமாலை
6. கமலாம்பிகை பிள்ளைத்தமிழ்
7. திருவாரூர் மாலை
8. கமலாம்பிகை மாலை
9. திருவாரூர் அந்தாதி
10. தியாகராச லீலை
11. திருவாரூர்நான் மணிமாலை
12. தியாகராசர் பள்ளு
13. திருவாரூர் ஒரு துறைக்கோவை
14. தியாகராசர் கழி நெடில்
15. திருவாரூர் உலா
16. திருவாரூர் மான்மியம்
17. திருவாரூர்க்கோவை
18. திருவாரூர் பாதி - திருவொற்றியூர் பாதி

திருவாரூர்த்தியாகேசர்

திருவாரூர் சோழவள நாட்டின் சிவத்தலங்களுள் மிகப் பழமையும், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததும் ஆகும். தியாகேசர் சந்நிதியை தேவசபை என்பர். கருவறையில் உள்ள வன்மீகநாதரைவிட புகழ் மிக்கவர் தியாகேசர்.

'மாடமொடு மாளிகைகள் மல்குதில்லை
மணி திகழும் அம்பலத்தே மன்னிக் கூத்தை
ஆடுவான் புகுதற்கு முன்னோ பின்னோ
அணி ஆரூர் கோயிலாக் கொண்ட நாளே'

என்று அப்பர் சுவாமிகள், திருவாரூரின் தோற்றத்தை, காலத்தை சிந்தனை செய்தார். ஞானசம்பந்தர் ஐந்து தேவாரப் பதிகங்களையும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் எட்டுத் தேவாரப்

பதிகங்களையும், அப்பர் சுவாமிகள் இருபத்தி ஒரு தேவாரப் பதிகங்களையும், பாமாலை ஆகச் செய்து திருவாரூரை அலங் கரித்தனர்.

தியாகேசர் திருவுருவத்தில், முகத்தை மட்டும் காண முடியும். மற்றவை அலங்காரத்தில் மறையும். பங்குனி உத்தரம், மார்கழித் திருவாதிரை ஆகிய தினங்களில் தியாகேசரின் பாத தரிசனம் செய்யலாம். தியாகேசப் பெருமான் ஆழித்தேர்விழா முடித்து, தேவாசிரிய மண்டபத்தில் மகா அபிஷேகங் கொண்டு அருளுவர். பங்குனி உத்தரத்தில் இவை நிகழும். தேவ தீர்த்தம் கமலாலயம் ஆகும். சபாபதி மண்டபத்தில் புராண படனம் நாள் தோறும் நிகழும். கோவில் மேற்கு வீதியில் வாதாபிவிநாய கரைத் தரிசிக்க முடியும்.

தியாகரின் புராண வரலாறு, மிகவும் சுவையானது. திருமாலின் மார்பில் பாற்கடலில் தியாகப்பெருமான் இருந்த போது, திருமாலின் உச்சுவாச, நிச்சுவாசத்தினால் மார்பு அசைய அந்த அசைவிற்கேற்ப தியாகப்பெருமான் ஆடினர். அதனால், "இருந்தாடழகர்" என்ற பெயரும் தியாகேசருக்கு உண்டு. அந்த நடனத்திற்கு "அசபா நடனம்" என்று பெயர். சிவன், உமையாள், வேலவன் ஆகிய மூவரையும் ஓர் பீடத்தில் இருத்தி, பரம் பொருளை சோமாஸ்கந்தமூர்த்தமாக திருமால் வழிபட்டு வந்த வர். அந்த சோமஸ்கந்த மூர்த்தத்தை திருமாலிடம் பெற்று, இந்திரன் அதற்கு தியாகப் பெருமான் என்ற திருநாமம் இட்டு, பூசனை புரிந்து வந்தான். முன் ஒரு போது நடந்தேறிய போரில் முசுகுந்தச்சோழான் இந்திரனுக்கு உதவியிருந்தான். அதற்குப் பரிசாக முசுகுந்தன் தியாகப் பெருமானைக் கேட்க, அந்த தியாகப் பெருமானைக் கொடுக்க மனமில்லாத இந்திரன் அதற்கு தியாகப்பெருமான் போல, ஆறு உருவங்கள் புனைந்து, தான் பூசிக்கும் தியாகப் பெருமானையும் இணைத்து, அவற்றுள் எதையாவது எடுத்துச் செல்லுமாறு முசுகுந்தனை வேண்ட, இறைவன் அருளால் இந்திரன் பூசித்த தியாகரையே முசுகுந்தன் எடுத்தான். இதன்பின் இந்திரன் அந்த ஏழு உருவங்களையும் முசுகுந்தனிடம் அளித்தான்.

தேவலோகத்தில் இருந்துகொண்டு வந்த தியாகப்பெரு மானை முசுகுந்தச் சோழன், திருவாரூர் என்னும் திவ்விய சேத் திரத்தில் எழுந்தருளச் செய்தான். இந்திரன் பூசித்த திருவுருவமே திருவாரூரில் உளது. ஏனைய ஆறு திருவுருவங்களையும் திருநள்ளாறு, திருநாகைக்காரோணம், திருக்காறாயில், திருக் கோளிலி, திருவாய்மூர், திருமறைக்காடு ஆகிய தலங்களில் எழுந்தருளச் செய்தான்.

சுந்தரரும் திருவாரூரும்

"திருத்தொண்டத் தொகை" பாட சுந்தரருக்கு "தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கு அடியேன்" என்று அடியெடுத் துக் கொடுத்தவர் திருவாரூர்த் தியாகேசப் பெருமானே! திருத் தொண்டத்தொகை எழுந்த இடமும், அதற்கு பொருளாகிய அடியார் திருக்கூட்டமும் எழுந்தருளிய இடம் திருவாரூராகும். திருவாரூரில் உள்ள தேவாசிரியன் மண்டபத்தில் தான், சுந்தரர் தாம் பாடிய திருத்தொண்டத் தொகையை அருளினார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள், விருத்தாசலத்தில் தாம் இறை வனிடத்தில் பெற்ற பொன்னை, அங்குள்ள மணிமுத்தாற்றில் இட்டு வைத்தார். அந்தப் பொன்னை திருவாரூரில் உள்ள கமலாலயத்தில் பெற இறைவனிடம் அனுமதி வேண்டினார். இறைவனும் இசைந்தார். அதன்படியே அப்பொன்னை சிவபெரு மான்மீது பதிகம் பாடி, கமலாலயக்குளத்தில் பெற்றார். பொன்னை மறுத்துரைத்தபோது சரியாக இருந்தது. ஒருபோது சிவபெருமான் குண்டையூர்க் கிழாரின் கனவில் தோன்றி "ஆரூரனுக்கு நெல் தந்தோம்" என்றார். மறுநாள் குண்டையூர் முழுதும் நெல்மலை யாகத் தென்பட்டது. இதனைக் கிழார் சுந்தரிடம் கூற, சுந்தரர் திருக்கோளிலிக்கு வந்து, குண்டையூர்க்கிழார் அளித்த நெல்லைத் திருவாரூருக்குக் கொண்டு செல்ல ஆள் உதவி வேண்டி,

'நீளநினைந் தடியேனுமை நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்டமடவா னவள் வாடி வருந்தாமே
கோளிலி யெம்பெருமான் குண்டையூர்ச் சில நெல்லும்பெற்றே
னாளிலை யெம்பெருமா னவையட்டித் தரப்பணியே'

என்று பதிகம் பாடினார். அந்த நெல்லை திருவாரூருக் குக் கொண்டு சென்றார். சுந்தரருக்கு திருவாரூர் தெற்கு கோபுர வாயிலின் அருகில் தனிக்கோயில் உண்டு.

தூது சென்ற அற்புதம்

சுந்தரர் திருநாவலூரில் பிறந்து, திருவெண்ணை நல்லூ ரில் இறைவனுக்கு ஆட்பட்டு, இறைவனோடு தோழமை பூண்டு, தம்பிரான் தோழராக வாழ்ந்தார், தம்பிரான் தோழரான சுந்தரர் திருவாரூரில் தங்கியிருந்தபோது இறைவன் திருவருட்பாங்கின் படி பரவையார் என்ற ருத்திர கணிகை மீது காதல் கொண்டு, அவளை மணம் புரிந்தார். பரவையார் வாழ்ந்த வீட்டில், பரவை யாருக்கு தனிக்கோயில் உண்டு. அந்தக் கோயில் திருவாரூர் தெற்கு கோபுர வாயிலின் அருகே உண்டு. யார் இந்தப் பரவை யார்? உலக மாதாவாகி உமை அம்மையாரின் சேடியரில் ஒருவ ராகிய கமலினியார் தான், பின் பரவையாராக அவதரித்தார். பரவையார் கோவில் உள்வீதியை செந்தாமரை நாறும் வீதி என்பர்.

"வன் றொண்டர்க்கு தூது போய்
நடந்த செந்தாமரை யடி நாறுமால்"

- பெரியபுராணம்

சிவபெருமான் பாதம் சிவக்க, நடந்து தூது சென்ற வீதி அல்லவா? சிவபெருமான் சுந்தரமூர்த்தி சுவாமிகட்காக ஒரு முறைக்கு இருமுறை பரவையாரின் ஊடலைத் தணிக்கத் தூது சென்றதால், பரம்பொருளின் பாதம் சிவந்தது.

சுந்தரர் திருவொற்றியூர் சென்றபோது சங்கிலியாரையும் விரும்பி மணந்து கொண்டார். இதனால்தான் திருவாரூரில் பரவையார் ஊடல் கொண்டார். பரவையாரின் ஊடலைத்தணிக்க சுந்தரர் இறைவனை இரவில் தூது அனுப்பினார். பரவையாரின் ஊடல் தணிந்தது. இறைவன் பரவையார் இல்லத்திற்கு தூது சென்றதை புலவர் ஒருவர், சிவபெருமானின் அடியும், முடியும் காண வேண்டி திருவண்ணாமலையில் அயனும், அரியும் தினறி இருக்கின் றார்களே! அந்த அயனும், அரியும் இந்தப் பரவையார் வீட்டு வாயிலிற்கு வந்திருந்தால் பரம்பொருளின் அடியையும்

முடியையும் சுலபமாக ஐயன் தூது வந்தபோது கண்டிருக் கலாம்.

'ஆனார் இலையே அயனும், அரியும் காணா
அடிமுடி முன் காண்பதற்கு - மேனாள்
இரவு திருவாரூரில் எந்தை பிரான் சென்ற
பரவை திருவாயில் படி'

மனுநீதிச்சோழன்

மனுநீதி கண்ட சோழன் திருவாரூரில் செங்கோல் செலுத்தி வந்த காலத்தில், அரண்மனை வாயிலில் ஆராய்ச்சி மணி தொங்கிற்று. மனுவின் செங்கோல் ஆட்சியில் தவறு நேர்ந்தால் ஆராய்ச்சி மணி ஒலிப்பது வழமை. ஒரு போது மனு நீதி கண்ட சோழனின் மகன், தேரில் திருவாரூர் நகரை வலமாக வரும் வேளையில் துள்ளிச்சென்ற இளம் பசுக்கன்று ஒன்று, தேர்ச் சில்லில் அகப்பட்டு உயிர்நீத்தது. தாய்ப்பசு துயருற்று ஆராய்ச்சி மணியைத், தனது கொம்பினால் அசைத்து அடித்தது. இது சோழ அரச நீதிமுறை. அ.ஃறிணையாயினுஞ்சரி, உயர்திணையா யினுஞ்சரி வேறு எவரின் உதவியும் இன்றி, தமது குறையை அரசனுக்கு அறிவித்துக்கொள்ளும் வழக்கம் திருவாரூரில் இருந்தது. இதை சேக்கிழார் பெருமான் மிக அழகாக:-

"தன்னுயிர்க் கன்று வீயத் தளர்ந்த வாத் தரியா தாகி
முன்னெருப் புயிர்த்து விம்மி முகத் தினிற் கண்ணீர் வார
மன்னுயிர் காக்குஞ் செங்கோன் மனுவின் பொற்கோயில் வாயிற்
பொன்னணி மணியைச் சென்று கோட்டினாற் புடைத்த தன்றே"

- பெரியபுராணம்

மணியோசை கேட்ட சோழ மன்னன் ஆராய்ச்சி மணி அடித்ததன் காரணத்தை நன்றாக ஆய்ந்து அறிந்து, அ.ஃறிணையாயினுஞ்சரி செங்கோல் சாயாமல் நீதி வழங்கும் முகமாகத், தன் ஒரே மகன் என்றும் பாராது, தேர்க்காலில் இட்டு தேர் ஊர்ந்தான். இதை சேக்கிழார் சுவாமிகள் மிக நீதி வழுவா முறையில்:-

ஒரு மைந்தன் தன் குலத்துக் குள்ளா னென் பதுமுணரான்
தருமத்தின் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமந்தன் றேராழி யுறவூர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோ? மற்றெளிதோ! தான்

- பெரியபுராணம்

கடைச் சங்ககாலத்திற்கு பிற்பட்ட தமிழிலக்கிய நூலான சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் இந்த நிகழ்வை மேலும் விபரிக்கிறார்:-

'வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சு சுடதான் தன்
அரும் பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்.

- சிலப்பதிகாரம் வழக்குரை காதை

திருவாரூரில் சோழர்கள் ஆட்சி, அவர்களின் வரலாறு, திருவாரூர் நகர் சிறப்பு, அங்கே உயர்வு, தாழ்வு இல்லாமை, திருவாரூர் திருக்கோயிலின் சிறப்பு, திருமூலட்டானம், சப்த விடங்கர், திருவாரூரில் எழுந்த நூல்கள், தியாகேசரின் புராண வரலாறு, சுந்தரும் திருவாரூரும், தூதுசென்ற சுவையான நிகழ்வு, மனுநீதி கண்ட சோழன் செங்கோல் சாயாமை பற்றி விபரித்தோம்.



இராமேஸ்வரம்

தலம்: இராமேஸ்வரம் பண்: காந்தாரபஞ்சமம்

அலை வளர் தண்மதியோடு அயலே அடக்கி, உமை
முலை வளர் பாகம்முயங்க வல்ல முதல்வன் முனி
இலை வளர் தாழைகள் வீம்மு கானல் இராமேச்சுரம்
தலை வளர் கோலநல் மாலையன் தான் இருந்து ஆட்சீயே.

- சம்பந்தர் தேவாரம்

தல வரலாறு

மகாபாரதம், இராமாயணம் ஆகிய நூல்களை ஆங்கில மொழியில் EPICS என்பர். மேற்கூறிய நூல்களை இதிகாசம், வீரகாவியம், புராண வரலாறு எனலாம். இந்த இரு இலக்கியங் களும் இந்தியப் பெருநிலப்பரப்பின் பண்பாட்டு இலக்கியங்களா கும். இவற்றுள் இராமாயணம், இராமேஸ்வர வரலாற்றோடு பின்னிப் பிணைந்துள்ளதை நாம் காணலாம். இராமேஸ்வரம் ஒரு சிவஸ்தலம் ஆகும். தேவாரப் பதிகங்கள் பெற்ற 274 சிவஸ்தலங் களுள் இராமேஸ்வரமும் ஒன்றாகும். அப்பரும், சம்பந்தரும் பாடித் துதித்த தலம் இதுவாகும். அருணகிரிநாதரும், தாயுமான சுவாமிகளும் இத்தலத்தின்மீது பாடிய பாடல்கள் இனிமை யானவை ஆகும்.

இராமேஸ்வரம் சக்கரவர்த்தித் திருமகனின் திருவடிகள் பதிந்த தலம். ஸ்ரீ இராமன் சிவபூசை செய்த தலம். அகத்தியர், அஸ்வத்தாமர், இராம இலட்சுமணர், சீதை, அக்கினி, இலட்சுமி, கவிசம்பு, காசிபரிஷி, சரஸ்வதி, சங்கரபாண்டியன், தருமகுத்தன், அனுமன், தாயுமான சுவாமிகள் முதலியோர் பூஜித்து அனுக்கிர கம் பெற்ற சிவஸ்தலம். பல ரிஷிகள், முனிவர்கள், தவசிரேஷ்டர் கள், சந்நியாசிகள், யோகிகள், சித்தர்கள், ஆதிசங்கரர், அப்பர், சம்பந்தர் போன்றோரின் தாமரைத் திருவடிகள் பதிந்த திருத்தலம்.

இராமேஸ்வரம், இராமாயண காலத்தில் தோன்றிய திருத்தலம். இராமாயண வரலாற்றோடு தொடர்புமிக்கது, இந்த இராமேஸ்வரப் பிரதேசம். இராமாயண காவியத்தின்படி, சிவபக்த

னான இராவணன் மாற்றான் மனைவியான சீதையை, கடத்தி இலங்கையிற் சிறைவைத்தான். ஸ்ரீ இராமன் வானரப் படைகளின் உதவியோடு இலங்கை சென்று சீதையை மீட்டு இராமேஸ்வரம் வந்து சேர்ந்தான். இதன்பின் சீதை விளையாட்டாக, மணலால் செய்த சிவலிங்கத்தை, சீத்தாராமன் இராமேஸ்வரத்தில் தாபித்து சிவபூசை செய்தான். கௌசலை குமாரன் பிரதிஷ்டை செய்த லிங்கம் என்பதால் இராமலிங்கம் எனப்படுகிறது. கடலருகில் அமைந்துள்ள இச்சிவஸ்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே அமைந்த விசேடம் உடையது. இந்திய ஒருமைப்பாட்டிற்கு உறைவிடமாக, பல்லாண்டு காலம் விளங்கி வருகிறது. தென் கோடியில் அமைந்துள்ள இராமேஸ்வரத்திற்கு. வடக்கே காசி முதல் தெற்கே இராமேஸ்வரம் வரை மக்கள் பண்டுதொட்டு இன்றுவரை தீர்த்தமாட இப்புண்ணிய தலத்திற்குச் சென்ற வண்ணமே உளர். பக்தி பெருகவும், முத்தி அடையவும், ஈராயிரம் மைல்கட்கு அப்பால் இருந்து, சிந்தாது பாதுகாப்பாக எடுத்து வரும் புனிதமான கங்கைநீரை, இராமலிங்கத்திற்குச் சொரிந்து ஆனந்தம் அடைவர்.

இந்துக்களைப் பொறுத்தவரை, வடநாட்டில் இருந்து தென் நாடு வரை சிவஸ்தல யாத்திரை மேற்கொள்வது அவர் களது வாழ்நாளில் ஒரு பிரதான கடமையாகக் கருதுவர். அலை ஓசையுடன் கூடிய சமுத்திரமும் அதன் அருகில் உள்ள புனித மான தீர்த்தங்களும், நம்மவரால் ஏற்றிப் போற்றப்படுகிறது. இதேபோல் காசியில் உள்ள கங்கையும், இராமேஸ்வரத்தி லுள்ள சேதுவும், புனிதத்தின் புனிதமாக, தமிழ் மக்கள் கருதுகின் றனர். பாரதத்தில் உள்ள பன்னிரண்டு ஜோதிலிங்கங்கள் ஆவன:-

1. இராமேஸ்வரம்
2. பீமசங்கரம்
3. திரியம்பகம்
4. குருஷ்மேசம்
5. நாகேசம்
6. சோமநாதம்
7. உஜ்ஜயினி
8. ஓங்காரம்
9. கேதாரம்

10. காசி
11. வைத்தியநாதம்
12. ஸ்ரீ சைலம்

இராமேஸ்வரத்தில் அமைந்துள்ள ஜோதிலிங்கம் இராமலிங்கமாகும். இந்தச் சிவாலயத்தை இராமேஸ்வரம் என்றும் சேது என்றுங் கூறுவர். தலபுராணமாகிய "சேது புராணத்தை" நிரம்ப அழகிய தேசிகர் இயற்றி உள்ளார். காசிக்கு இணையான தலமாகையால் "காசி இராமேஸ்வரம்" என்பர்.

இராமேஸ்வரம் மிகவும் புனிதமானது என வட இந்தியரும் கருதுவதால், பரந்த பாரதத்தின் கலாசார ஒருமைப்பாட்டிற்கு, அன்றே கால்கோள் இடப்பட்டது. இராமேஸ்வரத்தின் உட்பிரகாரங்களில் வடநாட்டினரும், தென் நாட்டினரும், ஏன் யாழ்ப்பாணப் பெருங்குடியினரும், ஒன்றாகக் கலந்து சங்கமித்து பேதமின்றி, இராமநாத சுவாமியை இறைஞ்சி ஒன்றாகத் தீர்த்தமாடி, பலமொழி பேசி, தங்கள்தங்கள் மூதாதையினரின் சாம்பலை சேது சமுத்திரத்தில் கரைத்து, நீராடி இராமலிங்க சுவாமியின் பிரமோற்சவ காலங்களில் தேர்வடம் பிடித்து நாதஸ் வர கானத்தில் மெய்ம்மறந்து, தமிழ் மக்களோடு பந்திபோசனஞ் செய்து வருவதை காலங்காமாகக் காணக்கூடியதாக உள்ளது.

மேலும் இராமக்கிருஷ்ண பரமகம்சரின் தேவியாரான அன்னை சாரதா அம்மையார், ஒரு முறை இராமேஸ்வரம் வருகை தந்தார். கௌசலை குமாரன், பிரதிஷ்டை செய்த சிவலிங்கத்தை கண்ணுற்றதும், அதே இடத்தில் தான் இருக்கி றது என்றாராம். இதன் பொருள் என்ன? அன்னை சாரதா அம்மையார் முந்தைய பிறப்புகளில் சீதாதேவியாக, ஸ்ரீ இராகவனின் மனைவியாக, தான் சிவலிங்கப் பிரதிஷ்டையில் ஈடுபட்ட இடத்தைக் கண்டதும், இப்படிக் கூறினார் என்று நாம் கொள்ளலாம் அல்லவா?

இராமேஸ்வரத் தீவு

இராமேஸ்வரம் மன்னார் வளைகுடாவில், வங்கக் கடல், அரபிக்கடல் கடக்கும் இடத்தில் இந்தியப் பெருநிலப்பரப்பில்,

தென்கோடியில் உள்ள ஒரு சிறிய தீவு. இராமநாதபுரம் மாவட்டத்தில் மண்டபம் - பாம்பன் இடையே கடலில் உள்ள நெடுஞ் சாலை - பாலம் அமைந்த பின்னர், தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் இராமேஸ்வரத்திற்குப் பேருந்து, புகையிரதப் போக்குவரவு வசதிகளுண்டு. கப்பல் போக்குவரத் திற்காக இந்த நீளமான புகையிரதப்பாலம் மேலே எழுந்து, கீழே கடலில் கப்பல் போக வழிசெய்யும். மதுரை விமான நிலையத்திலிருந்து இராமேஸ்வரம் 98 மைல்களாகும். ஏராளமான மீனவர்களின் மீன்பிடிப் படகுகளை கடல் ஓரத்தில் காணலாம்.

இராமேஸ்வரம், மூன்று பிரகாரங்களைக் கொண்டது. இராமலிங்கம் மணலாலான லிங்கம் ஆகையால், இத்தீவின் மண் புனிதமானது எனக் கருதி, இத்தீவில் ஏர் பூட்டி உழுவது, செங்கற் சூளை போடுவது, சட்டி, பானை வனைவது வழமையில் இல்லை. சிவலிங்க அருவுருவத் திருமேனி செக்குப் போன்ற வடிவில் அமைந்திருப்பதால், இத்தீவில் செக்கு ஆட்டும் தொழில்கூட இல்லை. இத்தலத்திற்கு தல விருட்சம் கிடையா. நெடுந்தீவிலிருந்து முன்னைய காலங்களில் தோணிகள் மூலம் சிவபூசைக்கு, பூக்கள், பால், தயிர், புத்துருக்கு நெய் கொண்டு சென்றதாக முதியோர் சொல்லக் கேட்டதுண்டு. நெடுந்தீவிலி ருந்து குறிப்பிட்ட சில காலங்களில் பார்த்தால் இராமேஸ்வரக் கீழைக்கோபுரம் தெரியுமாம். இராமேஸ்ரவக் கோவிலுக்கு எமது முன்னோர்களான யாழ்ப்பாணப் பெருங்குடியினர், தமது காணி களை நன்கொடையாகக் கொடுத்துள்ளனர். நெடுந்தீவு - இராமேஸ்வரம் மிக்க குறுகிய தூரமே!

அருவுருவத் திருமேனி

சிவலிங்கத் திருமேனி என்பது ஒரு நாமம், ஒரு உருவம் ஒன்றும் இல்லா அருவுருவத் திருமேனியாகும். உருவத் திருமேனி என்றால் ஒரு புறம் மட்டுமே அவயங்கள் இருக்கும். ஆனால் சிவலிங்கத்திருமேனி எல்லாத் திசைகளிலும் திருமுகங் கொண்ட பெருமான். சிவலிங்கத்தின் உச்சிப்பாகம் பூமியின் வடிவில், வான் கவிழ்ந்து இருப்பது போல அரைவட்ட வடிவ முள்ளது. அவய அடையாளங்கள் எதுவும் கிடையாது. எத் திசையிலும் திருமுகங் கொண்ட பெருமான் சிவலிங்கம். கண்,

காது, கை, கால், முகம் கொண்டிருப்பது உருவத் திருமேனி, ஒன்றுமே இல்லாத பரந்த வெளியைக் குறிப்பது அருவம். உருவமும், அருவமும் இல்லாது இருப்பதால் சிவலிங்கத் திருமேனி அருவுருவத் திருமேனியாகும்.

இராமலிங்கம்

புலத்திய முனிவனின் பேரன் இராவணன். சிவபக்தனான இராவணண் அந்தண குலத்தைச் சார்ந்தவன். இராவண வதம் முடிந்ததும், இராமபிரானை பிரம்மகத்தி தோஷம் பற்றிக் கொண்டது. சீதாபிராட்டியாருடன் ஸ்ரீ இராமன், கந்த மாதன பர்வதம் எனப்படும் இராமேஸ்வரத்தை வந்தடைந்தார். அந்நிலையில் அங்கு இருந்த அகத்தியர் முதலிய முனிவர்கள் ஸ்ரீ இராகவனைத் தொழுதனர். அப்போது சக்கவர்த்தித் திருமகன், அம் முனிபுங்குவர்களை நோக்கி "பிரம்ம குலத்தில் தோன்றிய இராவணனை வதை செய்ததால் என்னை பிரம்மகத்தி தோஷம் பற்றிக் கொண்டது. இந்தப் பீடையைப் போக்க என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார். அதற்கு அந்த மாமுனிவர் கள் "மகாப் பிரபோ தர்மத்தை நிலைநாட்டத் திருவவதாரம் செய்த தாங்கள், இத்திருத்தலத்தில் ஒரு சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து, வழிபடுங்கள். நீங்கள் செய்த கொலைப்பாவம் அனைத் தும், பகலவனைக் கண்ட பனிபோல நீங்கிவிடும்" என்றனர்.

உடனே கல்யாண இராமன், ஸ்ரீ ஆஞ்சநேயரை நோக்கி காசி சென்று, ஒரு சிவலிங்கத்தைக் கொண்டு வரும்படி கூற, காசி சென்ற அனுமான், காசியில் சிவலிங்கம் கிடைக்காததால் மாருதி வாயு வேகத்தில், கைலாயம் விரைந்தார். கைலாயத்தில் கடுந்தவம் இருந்து, சிவபெருமானிடம் பெற்ற இரண்டு சிவலிங்கத் திருவுருவையும், தமது கரங்களாலும் ஏந்திய வண்ணம் தென்திசை திரும்பினார். அனுமான் பெற்ற சிவலிங்கங் களில் ஒன்று, ஸ்ரீ இராமன் பிரதிஷ்டைக்கும், மற்றையது தனது சிவவழிபாட்டிற்கும் ஆகும். சிவலிங்கப் பிரதிஷ்டைக்கு குறித் சுபநேரம் நெருங்கியதாலும், இராமதூதன் வரத்தாமதம் ஆவதை யும் உணர்ந்த ரிஷிகள் ரகுநாயகா! முகூர்த்தத்தைத் தவறவிடக் கூடாது என்று எடுத்துக்கூறி, சீதை விளையாட்டாகச் செய்த மணலால் ஆன சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து விடுங்கள்

என்றனர் மாமுனிவர்கள். ஆகவே ஆனி மாதம், சுக்கில பட்சம், தசமித்திதி, புதன்கிழமை ஹஸ்த நட்சத்திரம் கூடிய சுபயோக சுபதினத்தில் தசரத குமாரன், தனது திருக்கரங்களால் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்தார். ஸ்ரீ இராகவன், தாம் தாபித்த சிவலிங்கத்திற்கு முன், ஒரு அழகான நந்தியையும் எழுந்தருளச் செய்ததாக சேது புராணம் தெரிவிக்கிறது. சிவலிங்கப் பிரதிஷ்டை நிறைவு எய்தியதும், சீதா இராமன் சிவபூசை செய்யலானார். மண்ணில் உதித்த சீதை, மண்ணிலே லிங்கம் பிடித்த பூமி இராமேஸ்வரம்.

கால தாமதமாய் வியர்வை சிந்த வந்த இராமதூதன், சிவலிங்கப் பிரதிஷ்டை நிறைவடைந்ததைக் கண்ணுற்று, மனமுடைந்து, மிகவும் துக்கமடைந்த ஸ்ரீ ஆஞ்சநேயர், ரகுகுல திலகனை நோக்கி, நான் எடுத்த இந்தப்பிறவி வீணாகி விட்டது; என்னை நீங்கள் நம்பவில்லை, என்னைப் பலர் முன்னிலையில் அவமதித்து விட்டீர்கள்! நான் பிராணத்தியாகம் செய்வதன்றி வேறில்லை; என்று குழந்தை போல் மண்மீது வீழ்ந்து, புரண்டு புலம்பினான். வாயு புத்திரனின் கோபதாபத்தைத் தணிக்க இராமராஜன்; மாவீரனே! சாந்தமடைக!! நீ கூறுவதெல்லாம் முற்றிலும் உண்மை. ஆனால் குறிப்பிட்ட கால எல்லையில், நீ வராததால் இவை நடந்தேறிவிட்டது. நீயும் நானும் வேறல்லவே! கயிலைநாதன் தந்த ஒரு சிவலிங்கத்திருவுருவை நான் பிரதிஷ்டை செய்த திருமேனிக்கு வடபால், நீயே உனது கையால் பிரதிஷ்டை செய்துவிடு, அது உன்பெயரால் அனுமந்த லிங்கம் என்று வழங்கும். இராமேஸ்வரம் வருபவர்கள் நீ இவ்வாறு பிரதிஷ்டை செய்த சிவலிங்கத்தைத் தரசிக்க வேண்டும் என்று ஆணையிட்டார் இராமச்சந்திர மூர்த்தி.

தனது ஞானோபதேசத்திலும் சாந்தி அடையாத, அனுமனின் நிலையைக் கண்ணுற்ற கிருபாகரன்; அனுமனே! பிரமாவும், விஷ்ணுவும் பல வருடங்களாகத் தேடியும் அடிமுடி காணாத ஜோதிலிங்கமே இந்த மணல் லிங்கம் (பிருதுவி லிங்கம்). அதல, விதல, சுதல, தலாதல, இராசதல, மகாதல, பாதாள முதலிய ஏழு லோகங்களையும் கடந்து சென்று, இப்போது ஊன்றி நிற்கிறது இச்சிவலிங்கம். இப்பிரதிஷ்டை

உனக்குச் சம்மதம் இல்லை என்றால், இதை நீ பெயர்த்துவிட்டு, நீ கொண்டு வந்த லிங்கத்தையே பிரதிஷ்டை செய்வாய் என்றார் சீதா இராமன்.

இதைச் செவியுற்றதும் ஸ்ரீ ஆஞ்சநேயர் எழுந்து, சக்கர வர்த்தித் திருமகனை சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கித் தனது பலத்தைக்காட்ட எண்ணி, எல்லோர் முன்னிலையிலும் மிக அலட்சியமாக, இடது கரத்தால் இராமலிங்கத்தைப் பெயர்க்க முற்பட்டார். ஆனால் அந்தச் சிவமூர்த்தம் அகலா மூர்த்தி யானார். இருந்தபோதும் தன் முழுப்பலத்தையும் பிரயோகித்தும், அசையாத அந்த சிவபரம்பொருளைக் கண்டு, தனது இரு கைகளையும் பூமியில் ஊன்றிக்கொண்டு. தன் பலம் பொருந்திய வாலால், சிவலிங்கத் திருவுருவை சுற்றி ஆகாயத்தில் கிளப்ப முழுப்பலத்துடனும் எழுந்தார். இருந்தபோதும் அந்தச் சிவமூர்த்தம் இம்மியும் அசையாத மூர்த்தியானார். எனினும் அனுமன் இழுத்த வேகத்தில், வால் நழுவவே சிறுதொலைவில் போய் வீழ்ந்தார்.

விழுந்த அதிர்வினால் இரத்தம் கக்கி, மூர்ச்சை அடைந் தார். இப்போதும் கூட இராமலிங்கத்தில், அனுமன் வாலால் சுற்றி இழுத்த தழும்பு காணப்படுகிறது. மூர்ச்சை அடைந்த அனுமனின் கண், மூக்கு, செவிகளில் இரத்தம் பெருகியது. அந்த நேரத்தில் பூமியும், மலைகளும் கிடுகிடுத்தன. எங்கும் இடி முழக்கச் சத்தம் கேட்டது. உடனே ஆனந்தராமன் தனது பக்தனை, தன்மடிமீது இருத்தி, தன் இரு கைகளாலும் தடவி னார். பம்பாநதிக்கரையில் சந்தித்தது தொடக்கம், இதுவரை தனக்கு மாருதி ஆற்றிய அரும்பெரும் உதவிகளை நினைந்து கண்ணீர் சிந்தினார். இதன் பின்பு மிக்க மகிழ்வுள்ள மாருதி, தான் கொண்டு வந்த மகாலிங்கத்தை, பிருதுவி லிங்கத்தற்கு அருகில் வடபுறம் பிரதிஷ்டை செய்தார். அந்த ஈசனை விஸ்வநாதர் என்பர். காசி விஸ்வநாதர் சந்நிதிக் கருவறை, நீர் பாய்ச்சி நிரப்பும் அமைப்புக் கொண்டது. இதற்கு வடக்கே விசாலாட்சி சந்நிதி உண்டு.

"சுந்தர இராமா! யாம் மிக்க மகிழ்வுற்றோம். தனுஷ்கோடியின் புனித நீரில் நீராடிவிட்டு, இப்போது ஸ்தாபனஞ் செய்த மூலவரான ஜோதிர் லிங்கத்தை வணங்கு" ஓம் நமசிவாய! என்று ஒரு முறை கூறிவிட்டு இராமேஸ்வரத்தில் வழிபடுவோனுங்கூட சகல பாவங்களிலிருந்தும் விடுபடுவான், உங்கள் அனைவர்க்கும் மங்களம் உண்டாகுக! என்று பகர்ந்த பிறைசூடிப் பெருமான் தனது தேவியுடன் மறைந்து, அந்த ஜோதிர் லிங்கத்தில் ஐக்கியமாகிவிட்டார். சீதை பிடித்த மணலால் ஆன இந்தப் பிருதுவி லிங்கம், கருங்கற் பாறை போல இறுகிவிட்டது.

காக்கும் கவசமாக ஐந்து தலைநாகம் குடைபிடிக்க இராமநாதர்; கம்பீரமாக்க் காட்சி தருகிறார். சிவலிங்கத்தின் திருமேனியில் உருத்திராட்ச மாலையும், பதக்கங்களும் பீடத்தில் பரந்து வழிந்து காணப்படுகிறது. இருபுறமும் மேல் அங்கிப்பட்டு மடிப்புக் குலையாத பாவனையில் மேடையில் படிந்துளது. ஓங்கார வடிவில், தங்க ஒளி பரப்பும் ஒன்பது விளக்குகள், திருவாசி, வெளிச்சுடர் அழகுக்கு அழகு செய்கிறது.

பர்வதவர்த்தனி

ஸ்ரீ பர்வதவர்த்தனி அம்பிகை சந்நிதி இராமலிங்கத்திற்கு தென்புறம் இருக்கிறது. ஆகவே இராமநாதசுவாமியின் திருத்தேவியார், இராமலிங்கருக்கு வலப்பக்கமாக சந்நிதி கொண்டு இருப்பதால் மிகவும் மகத்துவம் உடையதாக பக்தர்கள் கருதுவர். ஈசன் சந்நிதியில் தாயார் வலமாக இருப்பது இராமேஸ்வரம், திருவானைக்கா, கபாலீச்சரம் ஆகும். அன்னை தவம்செய்யும் கோலத்தில் இருப்பதான தலங்கள் தனிச் சிறப்புக்கொண்டவை. இங்குள்ள ஸ்ரீ சக்கரம், அவசியம் பார்த்து வழிபடவேண்டியது. மூன்றாம் பிரகாரத்தில், நவசக்தி மண்டபம் என்ற சுக்கிரவார மண்டபம், பர்தவர்த்தனி அம்மன் சந்நிதி முன் உளது. இந்த மண்டபத்தில்தான் அம்பிகையை வெள்ளிதோறும் எழுந்தருளப் பண்ணி, நல்லாடை, நறுமலர்கள் சூட்டி நளினமாக அலங்காரச் செய்து, கொலுவில் வைத்து, இரண்டு மணி நேரம் தீபாராதனை சோடச உபசாரம் தேவாரப் பாடல்கள், மங்கள இசை முதலியன நிறைவுபெற்றபின், விலை உயர்ந்த தங்கப் பல்லக்கில் மூன்றாம் பிரகாரத்தில் பவனி வருதல் இடம்பெறும். இந்தத் திருவிழாவைத்

தொடக்கிய, ஸ்ரீ முத்து விஜய ரகுநாத சேதுபதிக்கு பரிவட்டம் கட்டுவர். இவை அனைத்தும் மிகவும் இனிய கண் கொள்ளாக் காட்சியாகும்.

அம்மன் சந்நிதிகளையும், இராமநாதர், விஸ்வநாதர் சந்திதிகளையும் இரண்டாம் பிரகாரம் சுற்றி வருகிறது. இராம நாத விஸ்வநாத சந்நிதிகளைச் சுற்றி, முதற் பிரகாரம் அமைந் துள்ளது. பர்வதவர்த்தனி, விசாலாட்சி அம்மன்களை, சேதுபதி அம்மன் என்றும் அழைப்பர். இராமேஸ்வரத்தில் பர்வதவர்த்தனி அம்மன், இராமலிங்கருக்கு வலது புறமாகவும், விசாலாட்சி அம்மன், விஸ்வலிங்கத்திற்கு வடபுறமாகவும் அமைந்துள்ளனர். இராமேஸ்வரம் இரண்டு லிங்கக் கோவில் ஆகையால், தாயார் மாட்சிமை பொருந்தியவர். சேதுபதி இந்தத் தாய்க்கு, தமது மகளுக்காகச் செய்த கொலுசை வழங்கிவிட்டாராம். இராமேஸ் வரத்துத் தங்க நகைகள் மிகவும் பழையன, ஆனால் அழகா னவை. சர்வமங்களம் அருளும் ஸ்ரீ சக்கரம், அம்மையின் பீடத் திற்கு அருகே உளது. அம்மையின் உருவத்தில் அடி முதல் முடி வரை ஒரே நேர்கோட்டில் அமைந்துள்ளது. சொர்ண பந்தனம் செய்த உருவத்தில் மந்திரங்கள் தடையின்றி உருவேறும் சக்தி அதிகம் என்பர். இங்கே அன்னையின் வடிவம் தங்க பந்தனம், நீலோற்பல ஹஸ்தம், கர்ணபத்திரம், கிரீடம், தங்க ஆபரணங் கள் சாத்திய திருக்கோலம், தீப ஒளியில் ஜொலிக்கிறது.

மலைவளர் காதலி

பர்வதவர்த்தனி அம்மனை, தாயுமான சுவாமிகள், வட மொழிக்கலப்பில்லாத தனித்தமிழில் பெயர்சூட்டிப் பாடியுள்ளார். மேலை நாட்டினர் இராமேஸ்வரத்தில் விலை உயர்ந்த தங்கம், வைரங்கள் இருப்பதை அறிந்ததும், முதலில் திருகோணமலை யைத் தகர்ப்பது என்று திட்டம் தீட்டினர். இந்த விடயம் தாயுமான சுவாமிகட்குத் தெரியவந்ததும், முப்பதினாயிரம் படை வீரரைத் திரட்டி, தானே தளபதி ஆகச் சென்று இராமேஸ்வர சிவஸ்தலத் தைக் காப்பாற்றினார். தாயுமானசுவாமிகட்கு தகவல் கிட்டியது ஒரு தற்செயல் நிகழ்வே! இந்தப் பணி மேற்கொள்ள அருள் புரிந்தவர் பர்வதவர்த்தனி அம்மையார் ஆகையால் அவளை அழைத்துப் பாடியது எட்டுப் பாடல்கள்.

Thayumana Swamigal
(தாயுமான சுவாமிகள்)

"The Ariya Kings of Jaffna, took great interest in Koneswaram and Rameswaram temples. One of the Ariya Kings of this period caused, the Kerpagraham (Main shrie) of Rameswaram to be built with granite stones, taken from Trincomalee by sea. Rameswaram was saved mainly by Thaumana Swamigal who rallied the maravas and made a fierce onsluaught, against, the Portugese assailants"

- C. S. Navaratnam

பள்ளியறைப் பூசை

கண்ணாடி மாடம் எதிரே அமைய, பள்ளிஅறை நாயகியும், அங்கே எழுந்தருளி வரும் சுவாமியும் தங்கத் திருமேனி கொண்டு அமைந்தனர். ஸ்ரீ பர்வதவர்த்தனி சமேத ஸ்ரீ இராமநாத சுவாமியும் திருப்பள்ளி கொள்வதையும், திருப்பள்ளி எழுவதையும் பூசையாகக்கொண்டாடுவர். இந்த நிகழ்வைத் தேவர்களும் போற்றித் துதி பாடுவர். இவ்வளவு சிறப்பு ஈசனுக்கும் தேவிக்கும் சிதம்பரம், மதுரை, இராமேஸ்வரத் திருத்தலங்களில் மட்டுந்தான் உண்டு. பள்ளியறைப் பூசையின்போது, விடிகாலையில் அடியார்கள் நீராடி, நீறு துதைந்த மேனியராய், சகல வாத்தியங்களும் மங்களமாக ஒலிக்கப் பாடிப் பரவி நிற்பர். அழகே உருவான அன்னையின் பள்ளியறை உருவம் நேர்த்தியானது. வலக்கை இறைவன் தோள் மீது சேரும்படி சிற்பிகள் அமைப்பது வழமை. அப்போது வலக்கையுடன், முகமும் மார்பும் அம்மையின் பால் சரிவது உண்டு, ஆனால் இங்கே தாயார் வலக்கை பக்கமாகச் சாயாமல், இடக்கைப் பக்கமாகச் சாய்ந்திருக்கிறாள். அதனால் வலக்கரத்தை இறைவன் கையுடன் சேர்க்கும்போது, அம்மையரின் முகம் இடப்புறமாக விலகி, புதுமணப்பெண் நாணி ஒதுங்குவது போன்ற தோற்றம் தெரிகிறது. இதை அமைத்த சிற்பிகள் அன்னையின் உருவத்தை ஈசனுக்குரிய காதலின் வடிவத்திலும், கண்டு தியானஞ் செய்து. பள்ளியறைப் பூசைப் பலனைப் பெற்றனர் ஆன்றோர்.

கோவில் அமைப்பு

இராமாயண காலத்தில் தோற்றம் பெற்ற இராமேஸ் வரம், 12ம் நூற்றாண்டு வரை, ஓலையால் வேய்ந்த கொட்டகை யாக, ஒரு துறவியின் நேரடிப் பாதுகாப்பில் அமைந்து இருந்த தாம். இதே நூற்றாண்டில், இலங்கை மன்னன் பராக்கிரமபாகு நீரிழிவு நோயால் பெரிதும் நலிவுற்று, தவம் இருந்து, நோய் குணம் அடைந்து இறைவனுக்கு நன்றியாக, மூலவர் கோவிலை மட்டும் கட்டினான். 15ஆம் நூற்றாண்டில் இராமநாதபுரம் அரசர் உடையார் சேதுபதி, பிரதான சந்நிதிகளை எழுப்பினார். இதன்பின் சேதுபதி மன்னரும், நாகூரைச் சார்ந்த வள்ளலும் 78 அடி உயர மேலைக் கோபுரத்தையும், கருங்கற்கள் பதித்த மதிற் சுவரையும் கட்டினர். 16ஆம் நூற்றாண்டில் இருந்து 18ஆம் நூற்றாண்டுவரை, உலகப் பிரசித்திபெற்ற 3ஆம் பிரகாரம் மற்றும் இக்கோவிலின் ஏனைய பிரகாரங்களை இராமநாதபுர சேதுபதி மன்னர்களான திருமலை சேதுபதி, சின்ன உடையான் சேதுபதி, விஜய ரகுநாத சேதுபதி, முத்து இராமலிங்க சேதுபதி ஆகியோரால் கட்டி முடிக்கப்பெற்றது. மூன்றாம் பிரகாரத்தின் நவீன பொறியியல் முறையை, பொறியியல் நுணுக்கங்களை அவதானிக்க முடியும். இந்த மூன்றாம் பிரகாரத்தில் இரண்டு பக்கங்களிலும் 5 அடி உயர மேடை உண்டு.

இந்த மேடைமேல் எழுப்பப்பட்ட கலைஅம்சம் பொருந்திய தூண்களின் நடுவே இப்பிரகாரம் அமைந்துள்ளது. இந்த பிரகாரத்தின் நீளம் 4,000 அடிகள் ஆகும். ஆயிரக்கணக்கான தூண்கள் துளியும் அடிபிசகாமல் ஒரே ஒழுங்காக மிக அலங்கார மாக உள்ளன. 18ஆம் நூற்றாண்டு பார ஊர்திகள் (லொறிகள்) அற்ற காலம். இராமேஸ்வரம் மணற் பூமி, கருங்கற்களைக் காணமுடியாது. ஆகவே திருகோணமலையில் இருந்து கருங்கற்கள் செதுக்கப்பெற்று, கடல் மார்க்கமாக கப்பல் மூலம் கொண்டு வரப்பெற்றன. கருங்கற்களைக் கொண்டு இவை கட்டி முடிக்க 30 ஆண்டுகள் சென்றதாம். இராமேஸ்வரத்தில் உள்ள கொடிமரம், உயர்ந்த தரமான தேக்கு மரத்தால் ஆனது. இந்தக் கொடிமரத்திற்கு, தாமிரத் தகடு பொருத்தப்பட்டுள்ளது. ஆலயத் தின் நீளம் 1000 அடி, அகலம் 657 அடி. பாரிய நந்தி செங்கல் சுண்ணாம்பு கலவை கொண்ட சுதையால் அமைக்கப்பெற்றது.

வெளிப்பிரகாரத்தில் 1212 தூண்கள் உள. தூண்களின் உயரம் 30 அடி ஆகும். சேது மாதவர் சந்நிதிக்குப் போகும் வழியில் "சொக்கட்டான் பந்தல்" போல அமைக்கப்பட்டுள்ளன. வடகிழக்கில் சிவகாமி சமேத நடராஜப்பெருமான் உருத்திராட்ச மாலை அணிந்து தரிசனம் தருகிறார்.

17ஆம் நூற்றாண்டில் தளவாய் சேதுபதி அவர்களால் கீழைக்கோபுரம் ஒரு பகுதி மாத்திரம் உருவாக்கம் பெற்றது. மேலைக்கோபுரம் மிக அழகாகவும், உறுதியாகவும் அமைந்ததைப் பார்த்த தேவகோட்டை ஜமீன்தார் குடும்பத்தினர், வசூல் செய்து 9 நிலைப் படிகளையும் 126 அடி உயரமும் கொண்ட, உறுதியான அழகு வாய்ந்த திராவிடச் சிற்பக் கலைக்கு உதாரணமாகக் காண்போர் மனதைக் கவரும் கீழைக் கோபுரத்தைப் பூர்த்திசெய்தனர். தற்போது வெள்ளை மைப்பூச்சுடன் ஜொலிக்கிறது.

சேது நாடு

"சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம் சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்" என்றான் பாரதி. இராமநாதபுரம் மாவட்டமே சேது நாடு ஆகும். இராமேஸ்வரம் என்ற சிவஸ்தலத்தை சேது என்றுங் கூறுவர். ஸ்ரீ இராமபிரானால் வானர சேனைகளின் உதவியோடு கடல் மேல் இட்ட அணையே "சேது" எனப்படுகிறது. சிறு அணில் பிள்ளைகள் கூட சிறிய கூழாங் கற்களைச் சுமந்து வந்து போட்டு தங்கள் பங்கை செய்தனவாம். இந்த அணையைக் காக்க ஸ்ரீ இராகவனால் நியனம் பெற்ற, மறவர் குலத்தலைவரே சேதுபதி மன்னர்கள். சேதுவைப் பற்றிய குறிப்புகள், ரிக்வேதத்திலும் யசுர் வேதத்திலும், பாரதி பாடலிலும் பரக்கக் காணலாம். சேது தீர்த்தம் ஆடுபவர்களின் புண்ணிய பலன்களைப் பற்றி வேதங்கள், கருட புராணம், பத்ம புராணம் உயர்வாகக் கூறுகின்றன. உடல் புனிதமடைய, உற்றார், உறவினர் நற்கதிபெற, சேது ஸ்நானஞ் செய்வர். இன்று சேதுவை ஆழமாக்கி, கடல்வழிக் கப்பல் போக்குவரவைச் சீராக்க சேது சமுத்திரத்திட்டம் அமுலில் உளது. யாழ்ப்பாணத்தை அரசாண்ட ஆரியச்சக்கரவர்த்திகள் "சேது காவலர்" என்ற பட்டத்தைப் பெற்று, இராமேஸ்வரக் கோவிலின் காவலராகக் கடமையாற்றி உள்ளனர்.

சேதுபதிகள்

சேதுபதிகள் முற்காலத்தில் பாண்டியர்களின் படைத் தலைவர்களே! இவர்களை தமிழ் வளர்த்த சேதுபதிகள் என்பர். இராமேஸ்வரத்தில் உள்ள சொக்கட்டான் பந்தலில் சேதுபதி களின் ஆதரவில், 1898இல் சுவாமி விவேகானந்தர் பேருரை நிகழ்த்தியது ஓர் சரித்திர நிகழ்வாகும். சுவாமி விவேகானந்தர் ஆற்றிய பேருரையின் பின்னர், இந்த வீரத்துறவியை அமெரிக்கா விற்கு உரையாற்ற அனுப்பி வைத்த பெருமை, இந்தச் சேதுபதிகளையே சாரும். இதனால் எமது சமய உண்மைகளை உலகறியச் செய்தவர்கள் இந்தச் சேதுபதிகளே!

இராமேஸ்வரத்தில், இந்தச் சேதுபதிகள் சுவாமி வீதி வலம் வரும்போது தங்கத் தீவட்டி பிடித்து, பள்ளி அறை தரிசனம் செய்து, கோவில் பிரசாதம் பெற்று, அதை அரண்மனை உணவு போல, அக்கினி தீர்த்தக் கரையில் நின்று உண்பதை பெருமையாகக் கருதினர். சேதுபதிகள் இராமநாதரை தமது குலதெய்வமாகக் கருதி வந்தனர். இராமேஸ்வர வரலாற்றை வரையும்போது சேதுபதிகளை, அவர்கள் ஆற்றிய சைவத் தமிழ் தொண்டை எடுத்து இயம்பாமல் இருப்பது இமயத் தவறாகும். சேதுபதிகள் இராமேஸ்வரத்தில் செய்த பணிகள் ஏராளம், ஏராளம். நன்றி உள்ள சமுதாயம் சேதுபதிகளின் உருவச் சிலைகளை கோவிலில் அமைத்துள்ளனர். பாம்பன் பாலம் கட்ட முன், சேதுபதிகள் தான், படகுப் பணி செய்தவர்கள். தங்கச்சி மடம், பாம்பன் அருகாமையில் உளது. முன்பு இராமேஸ்வரம் வரும் அடியார் திருக்கூட்ட வசதி கருதி, சேதுபதிகள் ஆதரவில் அனனதானம் தினமும் நடைபெற்றது. அத்தோடு தீவுக்குள் நுழைகிறவர்களிடம் வரி வசூலிக்காத மரபு இருந்தது.

சேதுபதி மண்டபத்துள் நுழையும் போதே, தென்முகமாக பெரிய அளவிலான அனுமனைத் தரிசிக்கலாம். திருமேனி முற்றும் சாதிலிங்கக் குளம்பு பூசப்பட்டுள்ளது. வடக்கே அனுமான் செந்தூரப் பொடி சாத்திய திருக்கோலமாக, கடலைக் கடக்கத் தாவிய கோலமாக உள்ளார்.

பாஸ்கர சேதுபதி

1868இல் பிறந்து 1903 வரை வாழ்ந்தவர் பாஸ்கர சேதுபதி. குறுகியகால வாழ்வில் சாதனை படைத்தவர், பாஸ்கர

சேதுபதி. சுவாமி விவேகானந்தரின் பொலிவான தோற்றம், துறவு வாழ்க்கை பாஸ்கர சேதுபதியைப் பெரிதும் கவர்ந்தது. சுவாமி விவேகானந்தரை அமெரிக்காவிற்கு அனுப்ப மூலகாரணராய் இருந்தவர் பாஸ்கர சேதுபதிதான். இதனாற் போலும் சுவாமி விவேகானந்தர் பாஸ்கர சேதுபதியை "இராஜரிஷி" என உளமார அழைத்தார். மேலும் சுவாமிகள் "என்னால் ஏதும் நற்பணி செய்ய முடிந்தது என்றால் அதற்குக் காரணம் இந்த சேதுபதி தான்" என்று கூறினார்.

தீர்த்தங்கள்

இராமேஸ்வரத்தில் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே பொருந்தி மிக விசேடமாக அமைந்துள்ளது. இவற்றில் 22 தீர்த்தங்கள் கோவில் உள்ளே உளது. அக்கினி தேவன் சீதை யின் கற்புத் தீயால் வெந்து போனான். அந்த வெம்மை தீர அக்கினிதீரத்தில் (கடற்கரையில்) நீராடினான். இந்தக் கடற்கரை யில் ஆதிசங்கரர் வந்து நின்ற இடத்தில், காஞ்சி மாமுனிவர் சங்கர மடக் கிளையை நிறுவி உள்ளார். கடலில் நீராடும் போதே, இந்தத் தூய மடத்தின் அழகான தோற்றம் தெரியும். இந்த மடத்திற்குள் உட்புகுந்தால் ஓவியங்கள், சங்கரர் தெட்சணாமூர்த்திக்கு அபிஷேகம், பூசை நடைபெறுவதைக கண்டு ஆனந்திக்கலாம். சங்கர மடத்திற்கு மேற்கே சரஸ்வதி மண்டபம் உளது. இந்த மடம் 50 அடி உயரம். இங்கே ஆதிசங்கரர் தமது 4 சீடர்களுடன் அமர்ந்திருக்கும் திருக்கோலம் அற்புதமானது. சங்கரர் தென்நாட்டில் அவதரித்து, வடநாடு வரை பாத யாத்திரை செய்த அவரது திருவாக்கிலிருந்து, புனிதம் மிக்க பல்வேறு மூர்த்தி, தலம், தீர்த்தங்களைப் பற்றி அறியும் பேறுபெற்றோமோ, எவரது தோத்திரங்களைப்பாடி, தெய்வ பக்தியை வளர்த்தோமோ, அந்தச் சங்கர பகவானுக்கு சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ் செய்கிறோம்.

வில் ஊன்றித் தீர்த்தம்

யாழ்ப்பாணத்திலும், இராமேஸ்வர தங்கச்சிமடத்திலும் வில்ஊன்றி நன்நீர்த் தீர்த்தம் உண்டு. கௌசலை குமாரன் இலங்கையிலிருந்து சீதையை மீட்டு வரும்போது, தங்கச்சிமடம் என்ற இடத்தில் சீதைக்குத் தாகம் ஏற்படவே, நன்னீர் பெற தனது

வில்லை ஊன்றி நன்னீர் பெற்ற இடம். இவை செவி வழிவந்த செய்தி மட்டுமே!

கோடி தீர்த்தம்

கல்யாண இராமன், தன் வில்லின் முனையால் (கோடியால்) பூமியைப் பிளந்து, ஒரு கிணற்றை உண்டாக்கி அந்தத் தீர்த்தத்தால் இராமேஸ்வரத்தில் அமைந்துள்ள ஜோதி லிங்கத்திற்கு அபிஷேகம் செய்தார். இந்தக் கிணற்று நீர் இன்று கோடி தீர்த்தம் எனப்படுகிறது. இருபத்திரண்டாவதும், இறுதித் தீர்த்தமான இதில் மக்கள் தீர்த்தமாடுவர். கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய நதிகள் சங்கமிக்கும் இடம்தான் திரி வேணி சங்கமம். அங்கே பிரயாகை என்னும் ஷேத்திரம் உண்டு. தமிழ் நாட்டு மக்கள், கோடி தீர்த்தத்தையும் இராமேஸ்வர மணலையும் மிகவும் பயபக்தியோடு எடுத்துச் சென்று காசி விஸ்வநாதருக்கு அபிஷேகம் செய்து ஆனந்திப்பர்.

இராமேஸ்வரத்தில் திருவிழாக்கள்

மாசி மாதம் பிரமோற்சவம் பிரமாதமாக நடைபெறும். வட இந்தியரும் வந்து கூடி தேர்த்திருவிழா அன்று வடம்பிடிப்பர். தெப்பத் திருவிழாவிற்கு, இராமேஸ்வரம் வாழ் முகமதிய சகோதரர்கள் தமது தெப்பங்களைத் தந்து உதவுவர். ஆடி மாதம் அம்மன் உற்சவம் இடம்பெறும். அந்த உற்சவத்தின்போது அம்மன் தபசு அருமையாக இருக்கும். அம்மன் உற்சவ நிறைவாக திருக்கல்யாணம் நடைபெறும்.

இதுகாறும் இராமேஸ்வர சிவஸ்தல வரலாறு, இராமேஸ்வரத்தீவு, அருவுருவத் திருமேனி, இராமலிங்கம் பர்வத வர்த்தனி, மலைவளர் காதலி, Thayumana Swamigal, பள்ளியறைப் பூசை, கோவில் அமைப்பு, சேதுநாடு, சேதுபதிகள், பாஸ்கர சேதுபதி, தீர்த்தங்கள், வில்லூன்றித் தீர்த்தம், கோடி தீர்த்தம் திருவிழாக்கள் போன்ற தலைப்புக்களில் சுருக்கமாகத் தொகுத்துத் தந்தோம்.



திருவண்ணாமலை

திருச்சிற்றம்பலம்

பண் - நட்டபாடை

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைமுழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவா வண்ணம் அறுமே.

திருச்சிற்றம்பலம்

- சம்பந்தர் தேவாரம்

புராண வராலறு

(அடிமுடி தேடிய படலம்)

திருவண்ணாமலையின் புராண வரலாறுகளை ஆராயும் போது அவை பக்திச்சுவை மிக்கதாகும். மனிதர்களிடம் மாத்திரம் அல்ல தேவர்களிடமும் நான், எனது என்ற ஆணவம், அகந்தை, அகங்காரம், மமகாரம் இருக்கத்தான் செய்தது. நான்முகன் சரஸ்வதியின் கணவன் ஆகையால், கல்விச் செருக்கும், திருமால் இலக்குமியின் கணவன் ஆகையால் செல்வச் செருக்கும் மிகுந்திருந்தது. நான்முகன் திருமால் இடையே இருந்த போட்டி, பொறாமை போராக மாறி, யார் பெரியவர் என்ற சச்சரவுகூட ஏற்பட்டு, இதைத் தீர்க்க முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானிடம் நான்முகனும் திருமாலும் சென்றனர். பரம்பொருளாகிய சிவபெருமான் நடுவராக நின்று எனது அடியையும், முடியையும் எவர் காண்கிறீர்களோ அவரே பெரியவர் என அருளினார். இவ்வண்ணம் அருளியதும் எம்பெருமான் இருவருக்கும் இடையே ஒளி உருவாய், எரிமலை யாக எட்டாத பொருளாய் திருப்பெருவடிவம் கொண்டார் திருவண்ணாமலையில்.

திருமால் பன்றி உருக்கொண்டு பாதாளம் ஏழினுங்கீழ் குடைந்து, குடைந்து சென்றும், பரம்பொருளின் பாதமலரைக் காணமுடியவில்லை. இதேபோல் நான்முகனும் அன்னப்பறவை உருக்கொண்டு உயர உயர எட்டி, எட்டிச் சென்றும் சிவபெரு மானின் திருமுடியைக் காணமுடியவில்லை. திருமால் தனது

தோல்வியை ஒப்புக்கொண்டார். ஆனால் நான்முகனோ அண்ட வெளியில் பறந்து வரும்போது தாழம்பூ ஒன்று கீழ்நோக்கி வீழ் வதை அவதானித்த நான்முகன், அந்தத் தாழம்பூவை பார்த்து நீ எங்கிருந்து வருகிறாய்? என்று வினவ அதற்குத் தாழம்பூ ஆனது, நான் சிவபெருமானின் திருமுடியில் இருந்து வருகின்றேன் என்று கூறவும், நான்முகன் மனமிக மகிழ்ந்து, ஏ! தாழம்பூவே நீ எனக்காக சான்று பகரவேண்டும் என்று வேண்டி நிற்க, தாழம்பூ அதற்குச் சம்மதித்தது. நான்முகன் சிவபெருமானின் திருமுடி யைக் கண்டதாக, தாழம்பூ பொய்ச்சாட்சி கூறியது. உடனே சிவபெருமான் சினந்து நான்முகனே! உலகில் உனக்குக் கோயில் இல்லாது இருக்கக் கடவது என்று சபித்தார். ஆதலால் எவரும் நான்முகனைக் கோவில் கட்டி வணங்குவது இல்லை. மன்று ஓரம் (பொய்ச்சாட்சி) கூறியதற்காக தாழம்பூவே! நீ என் மேனியைத் தீண்டக்கூடாது என்று விலக்கினார். இதனால் தாழம்பூ மிக்க நறுமணம் உடையதாக இருந்தாலும் கூட, எவரும் சிவபூசைக்கு தாழம்பூவை எடுப்பதில்லை, புஷ்ப விதியிலும் இல்லை. சிவபெருமான் சிவலிங்கத் திருமேனியராய், ஒளி உரு வாய் நெடிது உயர்ந்து எவருக்கும் எட்டாதநிலையில் தோன்றிய தால் அண்ணாமலை என்றும் திருப்பெயர் திருவண்ணாமலைக்கு வழக்கில் வந்தது. அண்ணாத - எட்டாத - அண்ணமுடியாத மலை திருவண்ணாமலை.

உமை இடப்பாகம் பெற்றமை

அம்பிகை சுவாமியிடம் தனக்கு வாமபாகம் தந்தருள வேண்டும் என்றதும், சுவாமி, அம்பிகையை திருவண்ணா மலைக்கு எழுந்தருளும் வண்ணம் ஆஞ்ஞாபிக்க, அம்பிகையும் அவ்வாற எழுந்தருளி கௌதமருடைய ஆச்சிரமத்தில் தரித்து இருந்து ஊசியில் ஒரு காற்பெருவிரலை ஊன்றி, பரம்பொருளை நினைத்து நின்று கடுந்தவம் செய்து, மகிடாசூரனை வதம் செய்து, அண்ணாமலை அண்ணலை நினைந்து நினைந்து உருகி, கார்த்திகை மாதத்தில் திருவண்ணாமலையை வலம் வந்து இடப்பாகம் பெற்றாள்.

திருவண்ணாமலைத் திருத்தலம்

திருவண்ணாமலையை சிறப்பாக ஸ்ரீ அருணாசலம் என்றும் பொதுவாக அருணகிரி, சோணகிரி, சோணாசலம், தென்கைலாயம், தலேச்சுரம், சுத்தநகரம், கௌரிநகரம், தேசுநகரம், சிவலோகநகரம், வாயுநகரம், முத்தி நகரம், ஞானநகரம் என்றும் வழங்குவர். தமிழ்நாடு தெய்வப் பொலிவுமிக்க நாடு. கிராமம் தோறும் கோவில்கள், திங்கள் தோறும் திருவிழாக்கள், வானத்தை எட்டும் ராஜ கோபுரங்கள், தேரோடும் வீதிகள், புனிதம்மிக்க தீர்த்தங்கள், அழகான ஆறுகள் பாயும் ஞானப்பூமியாகும். இந்தச் செந்தமிழ் நாட்டிலே தான் திருவண்ணாமலை என்னும் தெய்வீகத் திருத்தலம் உண்டு.

சென்னையில் இருந்து திருவண்ணாமலை 141மைல் ஆகும். காட்பாடி விழுப்புரம் ரெயில் பாதையில் 8ஆம் மைலில் உள்ள ரெயில் நிலையம் திருவண்ணாமலை. வட ஆர்க்காடு மாவட்ட தலைநகர் திருவண்ணாமலை ஆகும். இந்த மலையின் உயரம் 2,665 அடி, திருவண்ணாமலையில் நாற்புறமும் குன்றுகள் உள. இந்த அழகிய மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளது இப்பெரிய ஊர். பல சதுரத் தெருக்களைக் கொண்டது திருவண்ணாமலை. இந்த நகரை நிர்வகிப்பது நகராண்மைக்கழகம். அண்ணாமலையார் கோயில் நகரின் நடுவில் உள்ளது. இந்தக் கோவில் 7ஆம் நூற்றாண்டில் சிறிய அளவில் செங்கற் சுதை மாடமாக இருந்திருக்கலாம். விஜய பாலன் வழிவந்த சோழமன்னர்கள், கருங்கல் திருப்பணியை தொடங்கி வைத்தனர். இறைவனை அண்ணாமலையார் என்றும், அருணாசலேசர் என்றும், இறைவியை உண்ணாமுலை அம்மை என்றும் அழைப்பர். தலவிருட்சம் மகிழமரம். இதனை 3ம் பிரகாரத்தில் காணலாம். நினைக்க முத்தி தரும் திருவண்ணாமலை. பஞ்சபூத தலங்களில் ஒன்று திருவண்ணாமலை. இது தேயுத்தலமும் ஆகும்.

44 ஏக்கர் பரப்புடைய ஸ்ரீ அருணாசலம் மிகப் பெரியது. வெகு தூரத்தில் ஒருவர் வரும்போதே அழகான திருவண்ணாமலையும், 217 அடி உயர இராஜகோபுரமும் வானளாவி செம்மாந்து காட்சி தரும். இந்தக் கோபுரம் விஜயநகர மன்னர்களின் பண்பாட்டுக்கலை நுணுக்கங்கட்கு ஓர் எடுத்துக்

காட்டு. நாற்புறமும் உயரிய மதில் வாயில்கள், நான்கு பெரிய கோபுரங்கள், ஐந்து நடுத்தரக் கோபுரங்கள், எல்லாமாக ஒன்பது கோபுரங்கள், நீரோடைகள், ஆயிரங்கால் நூற்றுக்கால் மண்டபங்கள், கணக்கற்ற சிற்பங்கள், நந்தவனங்கள் எனக் கண்டு இன்புறமுடியும். தேவார, திருவாசக, திருப்புகழ் பெற்ற தலம் என்றுங் கூறுவர். மலையே இறைவன் உருவமாக சோதி வடிவமாக புகழ்பெற்றது.

அண்ணாமலையில் மலைக்கோலமாக இருந்த இறைவனை நான்முகனும், திருமாலும் தரிசித்து பரம்பொருளே! தாங்கள் இவ்வண்ணம் மலைக்கோலமாக இருந்தால் நாங்கள் தங்களை எவ்வாறு பூசிக்க முடியும்? ஆகையால் தாங்கள் இம்மலையின் கீழ் சிவலிங்கத் திருவுருவமாக எழுந்தருள வேண்டும் என்று கூற, அவ்வாறே இறைவன் சிவலிங்க முகூர்த்த மாக எழுந்தருளினார். உடனே நான்முகனும் திருமாலும் மயன் என்ற தேவதச்சனைக்கொண்டு, ஓர் ஆலயத்தை அழகுற அமைத்தனர். அண்ணாமலையாருக்கு ஆலயம் அவ்விடத்தில் அமைந்த தும் அவ்விடம் செழிப்பான நகரமாக மாறியது. தீர்த்தங்களும். கிணறுகளும் தோன்றின. கற்பக தருக்கள் தழைத்தன. தேவர் களும், முனிவர்களும், மனிதராக மாறியதாக தல புராணம் கூறுகிறது.

திருவாசகம்

(திருவம்மானை)

"வீண்ணாளுந் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணாமலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்"

- மாணிக்கவாசகர்

கங்கைகொண்ட சோழன், இராசேந்திரன் காலத்திற்கு கி.பி 1028 முன்னரே இக்கோயில் கற்றளியாக இருந்ததென்பதை

கல்வெட்டு மூலம் தெரிய வருகிறது. பரம்பொருளே மலை வடிவமாக அமர்ந்து உயிர்கட்கு முத்தி தரக்கூடிய "அருணா சலம்" என்னும் சிவசொரூபமே இந்தத் திருவண்ணாமலை ஆகும். கருவறையில் அண்ணாமலை அண்ணல் சாந்தமே உரு வாக, சிவலிங்கத் திருமேனியாக எழுந்தருளி உள்ளார். ஆவுடையார் வட்டமாக அமைந்து, உருத்திரபாகம் சொர்ண பந்தத்துடன் காட்சி தருகின்றது. தீட்சை பெற்ற சிவாச்சார்யர் களைத் தவிர, வேறு எவரும் அண்ணாமலைப் பெருமானை தீண்டவியலாது. அருகே மேரு சக்கரம் எனப்படும் பள்ளியறைச் சுவாமியும், போக சக்தி அம்மனின் செப்புத் திருமேனியும் உள்ளன. கருவறையை அடுத்து அந்தராலம், முகமண்டபம், பலதிருச்சுற்றுக்கள், பல மதில்கள், புதிய பரிவாலயங்கள் உண்டு.

கோபுரங்கள் மிகுந்த கோயில் அண்ணாமலை, 9 கோபுரங்கள், 9 விமானங்கள் உண்டு. திருவண்ணாமலையில் ஞானப்பால் மண்டபம், தீர்த்தவாரி மண்டபம், திருவருள் விலாச மண்டபம், மாதப்பிறப்பு மண்டபம், உருத்திராக்க மண்டபம், நந்தி மண்டபம், அமாவாசை மண்டபம், பன்னீர் மண்டபம், காட்சி மண்டபம், திருக்கல்யாண மண்டபம் என்பன உண்டு. கல்யாண மண்டபம் ஒரு கவினுறு மண்டபம், மர விதானத்தின் மீது செப்பு ஓடு வேயப்பெற்று, அற்புத வேலைப்பாடு உள்ள அழகிய தூண்கள் அமைந்த மண்டபம். 1903ஆம் ஆண்டு நாட்டுக் கோட்டை நகரத்தார் அமைத்தது. இது ஒரு கலைக்கூடமாகும்.

திருக்கோவிலின் 3ம் பிரகாரத்தில் சோகாளதீஸ்வரர், ஏகாம்பரேஸ்வரர், சிதம்பரேஸ்வரர், ஜம்புகேஸ்வரர், ஆய திருச்சந்நிதிகள் உண்டு. சுவாமி சந்நிதியில் ஒரு யாளியின் வாயிலிருந்து வளையங்கள், பல சங்கிலி கோர்த்தாற் போல பிணைந்து தொங்கும். கோவில் நீண்ட பிரகாரங்களைக் கொண்டது. வானளாவிய கோபுரங்கள், புனிதமான தீர்த்தங்கள், பெரிய தத்துவம், பாரிய வாகனங்கள், நெடிது உயர்ந்த மதில்கள் யாவும் பிரமிக்கத்தக்க வகையில் உளது. எட்டுத் திசைகளிலும் உள்ள அட்டலிங்கங்கள் ஆவன: இந்திரலிங்கம், அக்கினிலிங்கம், யமலிங்கம், நிருதிலிங்கம், வாயுலிங்கம்,

ஈசான்ய லிங்கம், வருணலிங்கம், குபேரலிங்கம் ஆகும். இந்த லிங்கங்கள் அருகே தீர்த்தங்களும் உண்டு. தல விநாயகர் - கண்டாரதித்த சோழனின் மனைவியான செம்பியன் மாதேவியின் திருப்பணி. துவாரபாலகர் இருவர், 10 அடி உயரம் சடாமகுடம், மழு, தண்டம், தர்ஜினி, முத்திரை கொண்டு தண்டத்தின் மீது காலை ஊன்றிய நிலை. திருவண்ணாமலையின் உற்சவங்கள் புகழ் பெற்றவை. ஞானநகரம் என்ற சிறப்புப் பெற்றது இத்திருத் தலம்.

உண்ணாமுலை அம்மை

உண்ணாமுலை அம்மைக்கு தனிக்கோயில் உண்டு. கருவறையில் உண்ணாமுலை அம்மை மூன்று அடி உயரங் கொண்டு கருணையே வடிவமாகக் காட்சி தருகிறாள். அம்மன் கருவறை முழுவதும் சென்ற நூற்றாண்டில் நகரத்தார்களால் புதுப்பிக்கப்பெற்று பிற்கால அமைப்போடு அழகுற்று விளங்கு கிறது. கோவிலின் முற்பகுதியில் பாரியமண்டபம், கொடிமரம், நந்தி, நவக்கிரகங்கள் உள. இரண்டு கரங்களுடன் தர்ஜினி, கதைகொண்டு மகுடத்துடன் துவாரபாலகர்கள் காணப்படு கின்றனர். இக்கருவறையைச் சுற்றி உள்ள பிரகாரத்தின் மேற்கே உற்சவமூர்த்திகள் உளர். இலிங்கோற்பவர், உற்சவப் பிள்ளை யார், சோழலிங்கம், பிராமி, துர்க்கை ஆகிய திருவுருவங்கள் கல்லில் காணப்படுகின்றன. திருச்சந்நிதிக்கு வெளியே உள்ள மண்டபத்தில் ஒவ்வொரு தூணிலும் அழகிய சிற்ப வேலைப் பாடுகள், அட்ட இலட்சுமி மண்டபம் என விளங்குகிறது. அம்பிகை கோவிலின் மகா மண்டபத்தில் 16 கற்றூண்களும் மிகவும் கலை அழகுடையவை. சிற்ப சாஸ்திர நுணுக்கங்களைக் கொண்டவை. அம்பிகை சந்நிதி ஒரு சிற்ப கலைக்கூடம், அழகான தேவதை கள் நடமிடும் இடம் போல் காட்சி தருகிறது. இவற்றைப் பார்த்து மகிழ இப்பிறவி போதாதே!

அணி அண்ணாமலைக் கோவில்

அழகிய கோபுரத்தை உடையது அணி அண்ணாமலைக் கோயில். இது ஓர் வைப்புத் தலம் ஆகும். இக்கோயில் அண்ணா மலைக்கோவிலுக்கு முந்தியது. ஆதி அருணாசலம் என்னும் பெயரை உடையது. அடி அண்ணாமலை என்றும் இக்கோயிலை

அழைப்பர். திருவண்ணாமலையை வலம் வரும்போது 6வது மைலில், மலையின் மேற்குப் பகுதியில் உளது. ஆதி அருணாசலம், பிரம தேவரால் சிவலிங்கப் பிரதிட்டை செய்து பூசிக்கப்பெற்ற சிறப்புடையது. திருவண்ணாமலையில் தங்கி இருந்து திருவெம்பாவை, திருவம்மானை பாடி அருளிய மணி வாகசருக்கு இங்கே தனிக்கோயில் உண்டு. திருக்கார்த்திகை நாளில் அணி அண்ணாமலையாரை நாட்டுப்புற மக்கள் தேன் தினைமா கொண்டு மாவிளக்கு பசு நெய்யில் தீபம் ஏற்றி வழிபடுவர். மலையைச் சுற்றி 360 தீர்த்தங்கள் அகத்திலும் புறத்திலுமாக மலைப்பகுதியிலுள்ளது. அட்டதிக்குகளில் அட்டலிங்கங்களும், நந்திகளும் உண்டு. அப்பரும், சம்பந்தரும் நாவார தேவாரம் பாடிய பெருந்தலம். குன்றக் குடியிலுள்ள திருவண்ணாமலை ஆதீனம் 500 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. மலை அடிவாரத்தைச் சுற்றி சிறு கோவில்களும், மண்டபங்களும் உண்டு. திருவண்ணாமலை போல இங்கேயும் இறைவன் பெயர் அண்ணாமலை அண்ணல், இறைவி பெயர் உண்ணாமுலை அம்மை.

செப்புத் திருமேனிகள்

அருணாசலத்தில் உள்ள செப்பிலான திருமேனிகள் பல நூற்றாண்டுகளுக்கு முன் வார்க்கப்பெற்றவை. பெரும்பாலா னவை திருவாசிகளோடு கூடியவை. இரத்தின நியாசம் செய்யப் பெற்றுள்ளது. பஞ்சலோகங்களில் தாமிரம் அதிகம் சேர்க்கப் பெற்றுள்ளதால் எல்லாத் திருமேனிகளும் சிவந்த நிறத்திலேயே உளது. பெரும்பாலான திருஉருவங்கள் பத்மபீடத்தையும் அதன் மேல் பத்திரபீடத்தையும் கொண்டு உள்ளன. இவை யாவும் அலங்காரமாக திருவிழாக் காலங்களில் திருவீதி உலாவரும். அருணாசலத்தில் உள்ள மூலமூர்த்திகட்கு எழுந்தருளியாக செப்புத் திருமேனிகள் சிலவற்றிற்கு தங்கக் கவசங்கள் உண்டு.

நடராசர் திருவுருவம்

நடராசப் பெருமான் ஐந்தடி உயரம் உள்ள புன்முறுவல் பூத்த திருமுகம், பத்மபீடத்தில் பொலிவு மிகுந்து காணப்பெறு கிறது. நடராசப்பெருமானுக்கு வருடத்தில் ஆறு அபிடேகங்கள் சிறப்பாக நடைபெறும். இவற்றுள் ஆனித் திருமஞ்சனமும்,

ஆருத்திரா தரிசனமும் மிகவும் சிறப்புவாய்ந்தவை. ஆயிரங்கால் மண்டபத்தில் இவை நிகழும் - அன்றைய தினம் சுவாமி வீதி வலம் வருவார்.

சிற்பங்கள்:

அருணாசலம் கலையின் கருவூலமாகும். பிடாரி கோவி லில் உள்ள சப்தமாதர் உயிருள்ள திருஉருவங்களாக அமைக்கப்பெற்றுள்ளது. இத்தூண்களில் காணப்படும் அட்ட இலக்குமிகள், உருத்திரதுர்க்கை, மகாசக்தி, மகா சரஸ்வதி, சித்திவிநாயகர், கார்த்திகேயர், கலாந்தகர், வீணாதரர், வீரபத்திரர் ஆகியன தமிழரின் கலைச்செல்வங்களாகும். மேலும் கோபுரங்களிலும் விமானங்களிலும் நிறைந்து விளங்கும் சுதைச் சிற்பங்கள் கண்களை ஈர்த்து இழுக்கக் கூடியவை.

ஓவியங்கள்:

திருவண்ணாமலைத் திருத்தலத்தின் மண்டபங்களின் விதானங்களில் உள்ள வண்ண ஓவியங்களைக் கண்டு இன்புற முடியும். இரண்டாம் சுற்று மாளிகை விமானத்தில் ஒரு வீரன் வேங்கையுடன் போர் புரிகின்றான். புலி வாயைப் பிளந்து காலை மேலே தூக்கிப் பாய்வது, வீரன் புலியை கத்தியால் குத்துவது, யானை வேட்டை, கோலாட்டம் ஆடும் பெண்கள், பாற்கடல் கடைந்த காட்சி, பரம்பொருளின் திருமணம், நடராசர் காளி திருமணம், துச்சாதனன் துகிலுரியும் காட்சி, வள்ளி திருமணம் ஆகியன ஓவிய வடிவில் காணமுடியும்.

மணிவாசகர்

மணிவாசகர் காலம் கி.பி 9ஆம் நூற்றாண்டு எனலாம். மாணிக்கவாசக சுவாமிகள் திருவெம்பாவை இருபது பாடல் களையும், திருவம்மானை இருபது பாடல்களையும் திருவண்ணா மலையில் தங்கி இருந்தே அருளினார். மார்கழி மாதத்தில் திருவாதிரைக்கு முந்திய நாட்களில் கன்னிப்பெண்கள் அதிகாலையில் எழுந்து வீட்டைக் கூட்டிப், பெருக்கி, கோலமிட்டு நீராடச் செல்வர். நீர்நிலைக்கு செல்லும் வழியில் பெண்கள் ஒருவரை ஒருவர் துயிலெழுப்பி ஒன்று சேர்ந்து "மாதே வளருதியோ வன் செவியோ நின் செவி" என்றும் "ஒள்நித் தில

நகையாய் இன்னம் புலர்ந்தின்றோ" என்றும் "மானே நீநென்னலை நாளைவந் துங்களை நானே எழுப்புவன் என்றலும் நாணாமே" என்றும் திருவெம்பாவை பாடிச் செல்வதைக் கண்டு மகிழ்ந்தே மணிவாசகர் திருவெம்பாவை பாடினார். மேலும் "மாலறியா நான்முகனும் காணாமலையினை" என்றும் பிறிதோரி டத்தில் "அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்" என்றும் திருவண்ணாமலை அண்ணலைத் தொழுது பாடியதை காணமுடிகின்றது. மணிவாசகர் தனது திருவம்மானையில் "நாயேனை ஆட்கொண்ட அண்ணாமலையானைப் பாடுதுங் காண் அம்மானாய்" என்று அண்ணாமலையானின் அடி தொழு கிறார். அம்மானை ஆவது, உலகியலில், தங்கட்கு நல்ல கணவன் வாய்க்க கணவனின் சிறப்பு இயல்புகளை வரிப்பாட் டாகப் பாடுவர், ஆடுவர். இங்கே மங்கையர் பிரபந்தத் தலைவனின் தன்மையை உரையாடுவதைக் காண்கின்றோம்.

திருவண்ணாமலைத் தீபம்

கார்த்திகை மாதம் இருள் சூழ்ந்து அடைமழை பெய்யுங் காலம். இந்த மாதத்தில் திருக்கார்த்திகை நாளில் முருகனை விரதமிருந்து வழிபடுவர். திருக்கார்த்திகை விரதத்தை முறை யாக அனுஷ்டித்து அரிச்சந்திரன், அந்திமான், சந்திமான் முதலானோர் நன்மை அடைந்தனர். இத்திருநாளில் உலகில் பரந்து வாழும் சைவ மக்கள் அனைவரும், மிகவும் பக்தி பூர்வமாக தீபம் ஏற்றுவர். இறைவனுக்கு பசு நெய்யில் தீபம் ஏற்றுதல் சாலச்சிறந்தது. கார்த்திகை தீபமன்று சைவ மக்கள் திருவண்ணாமலை நோக்கி கை தொழுவர். அடிமுடி தேடிய ஐதீகத்தைப் பின்பற்றியது கார்த்திகைத் தீபம். கார்த்திகைத் தீபத்தின்போது கணக்கற்ற யாத்திரிகர்கள் திருவண்ணா மலையை வலம் வருவர். அண்ணாமலையார் கோவில் வாசலில் இருந்து கிரிப்பிரதட்சணம் ஆரம்பமாகி அருணாசலத்தை வலம் வர 8½ மைல் தூரமாகும். காலை 7 மணிக்கு அருணாசலத்தை வலம்வர ஆரம்பித்தால் 11 மணிக்கு (மதியத்திற்கு முன்) நிறைவுபெறும்.

அருணாசலத்தை எப்படி வலம் வரவேண்டும்? நீரடிப் புனிதராய், தோய்த்து உலர்ந்த வஸ்திரம் தரித்து, திருவெண்ணீ

றணிந்து, விரதமிருந்து, தானம் செய்து, தானம் வாங்காமல் சிரசின் மேல் கை குவித்து, அடி மேல் அடி வைத்து அமைதி யாக, பாதணி இன்றி நடந்தும், திருவைந்தெழுத்தை ஓதியும், அண்ணாமலையானை நினைந்து, அருணாசலா உனக்கு வந்தனம்! புண்ணியா, மகாதேவா, வாமதேவா, காலாந்தக, நீலகண்ட, சந்திரசேகர, சம்போ சிவா, மகேஸ்வரா, பசுபதி, நீலநேத்திர, ஐயருத்திர, கங்காதர, பரமேஸ்வரா, கிருபாநிதி, நந்திகேஸ்வரா, தயாநிதி, தேவதேவா, காலகால, கருணைப் பெருக்கே என்றும், உபசரித்தவண்ணம் வலம் வருதல் வேண்டும். அதே நேரத்தில் எம்மோடு எமக்குத் தெரியாமல் எமது அருகிலே தேவர்களும், மகான்களும், ரிஷிகளும் உருமாறி வலம் வருவர். ஆகவே குடை பிடியாது, தாம்பூலம் தரியாது, சிவசிந்தனை யோடு அடிமேல் அடி வைக்க வேண்டும். சூரியன்கூட இம்மலையை வலம்வருவதாக ஐதீகம்.

கார்த்திகை விளக்கை சோபதீப தரிசனம், அக்கினி தரிசனம், அழல் என்றும் எரி என்றும் கூறுவர். "அழல் சேர் குட்டம்" எனச் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. இவ் விளக்கை மலை மேல் இடுவது வழக்கம். அடைமழை ஒருபுறம், இருட்டு மறுபுறம், கூதல் குளிர் இன்னொரு புறம், ஆக வீட்டினுள் ஒதுங்கி இருந்த மக்கள் ஒளியைக் காண விரும்பி மலைமீது விளக்கிட்டு மகிழ்வதையே கார்த்திகை விளக்கு குறிக்கும். இந்த நல்ல நாளில் வீடெங்கும் விளக்கேற்றி திருக்கோவில்கட்கு சென்று வழிபடுவது தமிழ்நாட்டின் வழக்கம். அன்று சொக்கப் பனை கொழுத்துவர். அந்தக் குன்றின் மேலிட்ட தீபத்தைக் கண்டு தொழுத பின்பே உண்பர். ஒளிப்பிளம்பான சிவபிரான் அருணகிரியாக நின்று, அம்மலைமீது தோன்றும் தீபத்தை வழிபடுவோருக்கு அருள்பாலிப்பர்.

இந்த நாளில் சிவபிரான் திரிபுர அசுரர்களை எரித்த விழா, கோவில்களில் நடைபெறுகின்றது. கீற்று முதலியவற்றால் சொக்கப்பனை (சுட்டகப்பனை) ஒன்று பெரிதாகக்கட்டி அருகிலே சிவபிரானின் உற்சவ விக்கிரகத்தை எழுந்தருளச் செய்து சொக்கப்பனை கொழுத்துவர். அந்த தீயிற்கு குங்கிலியத்தை தூவித்தூவி தீயை வளர்ப்பர். திருவண்ணாமலையில் கார்த்

திகைத் தீபப் பெருவிழா 13 நாட்கள் நடைபெறும். கார்த்திகை மாதம் பிரமோற்சவம் இறுதிநாள் கார்த்திகைத் தீபம் மலைமேல் ஏற்றப்படும் இந்த மகா தீபத்தை:

"மழைக்கால் நீங்கிய மகா விசும்பில்
குறு முயல் மறுநிறம் கிளர்மதி நிறைந்து
அறுமீன் சேரும் அகவிருள் நடுநாள்
மறுகு விளக் குறுத்து மாலை தூக்கிப்
பழவிறல் முதூர்ப் பலருடன் துவன்றிய
விழவு உடன் அயர வருகதில் அம்ம!"

- அகநானூறு (141)

திருவண்ணாமலை தேயுத்தலம், ஒரு காலத்தில் எரிமலை யாக இருந்தது, பின் குளிர்ந்து மலையாக மாறியது. இம் மலையை வலம் வருவது பிறவி எடுத்ததன் பெரும்பயன். கார்த்திகைத் தீபத்தின் போது வீடுகள் தோறும் விருந்தினர் தங்கி இருப்பர். நகரமே விழாக்கோலம் பூணும். 6 அடி உயர முள்ள காய்ந்த கொப்பராவில் பசுநெய், கோடித்துணி, கற்பூரம் இட்டு தீபம் ஏற்றுவர். இந்தத் தீபம் 3 நாள்வரை நின்று எரியும். இந்த அழலை 20 மைல் சுற்றளவுவரை தரிசிக்க முடியும். பெருங்கார்த்திகை, முழுமதி நாளில் கார்த்திகை நட்சத்திரங்கள் சூழ்ந்து நிற்க, உமா மகேஸ்வரர் பஞ்சமூர்த்திகளாய் தரிசனம் கொடுக்க, திருவண்ணாமலை உச்சியில் அகண்ட தீபங்கள் சோதியாய் விளங்கும். 16 கால் மண்டபத்தில் பஞ்சமூர்த்திகள் எழுந்தருளுவர். அர்த்தநாரீஸ்வரர் எழுந்தருளி பலிபீடத்தின் முன் தீபம் ஏற்றிய உடன், கார்த்திகைத் தீபம் திருவண்ணா மலையில் எரியும். திருக்கார்த்திகை விழா 10ஆம் நாள் காலை 5 மணிக்கு பரணி தீபமும், மாலை 6 மணிக்கு மலையில் சோபதீப தரிசனமும், பெருவிசேடமாக இடம்பெறும். 3ம் குலோத்துங்க சோழன் காலத்தில் கார்த்திகைத் திருவிழாவின் போது பெருந்திருவமுது, ஆடல் அரசரின் திருமேனிக்கு சாத்தவும், அவர் எழுந்தருளும்போது, தூவச்சாந்து வழங்கவும் கட்டளைகள் இருந்ததை கல்வெட்டுக்களில் காணலாம்.

வல்லாள மகாராஜன்:

தமிழ் நாட்டில் மிக அழகாகத் திட்டம் இட்டு அமைக்கப் பெற்ற சிவாலயம் திருவண்ணாமலை. இத் திருப்பதியை பன்நெடுங்காலமாக நீதி வழுவாது செங்கோலோச்சியவன் வல்லாளன். இவனது காலம் கி.பி 1340 எனக் கல்வெட்டு கூறுகின்றது. வல்லாளன் குபேர செல்வத்துடன் ஆட்சிபுரிந்தவன். இவனது காலத்தில் திருவண்ணாமலைக் கோபுரம் திருச்சுற்று மதில்கள், 6 அடி நீளமான நந்தி குறிப்பிடத்தக்க திருப்பணிகள் ஆகும். இவனது வாழ்வில் பெருங்குறை மகப்பேற்றின்மை. இருந்தபோதும் இவனது தான, தருமங்கள் பெருகியதே அன்றி குறையவில்லை.

புத்திரப்பேறு இன்மையால் மனம் வருந்திய வல்லாள னின் நிலையை, நாரதர் பரம்பொருளின் திருநோக்கிற்கு சமர்ப்பித்தபோது, இறைவன் அரசனின் தான தருமச் செயல் களை சோதிக்கும் திருநோக்குடன் ஸ்ரீஅருணையம்பதிக்கு சிவனடியார் திருக்கூட்டம் சூழ எழுந்தருளி, வல்லாளனின் அரண்மனைக்கும் சென்று, அவனது தான தருமங்களில் திருப்தி உற்று வல்லாளனுக்கு மகவாகி மறைந்தருளும்போது, வல்லாள னின் வேண்டுதலுக்கு இயைந்த இறைவன் அரசனே! உனக்கு நாமே மகவாகத் தோன்றியமையால், உனது புத்திரன் செய்ய வேண்டிய அபரக் கிரியைகளை உனக்கு நாமே செய்து வரு வோம் என்று, திருவருள் புரிந்த வண்ணம் வருடா வருடம் வல்லா ளனின் விழாவின்போது, மாசி மகத்தன்று கோவிலின் கிழக்கு கோபுர வாசல் வழியாக, ஒருநாள் மட்டும் சுவாமி கொண்ட பட்டிற்குச் சென்று வல்லாள மகராசாவினது அபரக் கிரியைகளைச் செய்துவிட்டு திரும்புவதாக ஐதீகம். மற்றைய திரு விழாக்காலங்களில் அண்ணாமலையார் பெரிய கோபுரத் தின் வடபாலுள்ள திட்டி வாசல் வழியாக எழுந்தருளுவது வழக்கம்.

சோழர் காலத்திருப்பணி

இராசேந்திர சோழனுடைய பணி மகன், அண்ணாமலை யார் கோவில் பிச்சாடனர் திருவுருவம் செய்து, அதற்கு நித்திய பூசை ஏற்பாடு செய்து, நைவேத்தியத்திற்கு கறி அமுது,

பொரிக்கறி போன்றவை படைக்க ஆவன செய்தான். ஆண்டுக்கு 160 கலம் நெல் அளக்க ஏற்பாடு செய்தான். நெல் அளக்கும் மரக்காலுக்கு திருவண்ணாமலை மரக்கால் என்று பெயர். 4 பட்டி நிலம் இதற்காக உபகரித்தான். அடியார்கட்கு கார்த்திகை திருவேட்டைத் திருவிழாவின்போது அமுது படைக்கவும், இரண்டு நந்தா விளக்கு எரியவும் ஆவன செய்தான்.

கிருஷ்ண தேவராயர்

கிருஷ்ணதேவராயர் தான் அடைந்த வெற்றிகளின் நினைவாக அண்ணாமலையார் கோவிலில் மேற்கொண்ட திருப்பணிகள்:- ஆயிரங்கால் மண்டபம், வசந்த உற்சவ திருக்குளம், 11 நிலை கொண்ட கோபுர மண்டபம், விநாயகர் தேர், வாயிற் கதவுகள், வாயிலுக்கு பொன், உத்தம சோழன் வாயில், பத்தரை மாற்றுக்கொடி, கொடுங்கை, மடப்பள்ளி முன் கிணறு, பதக்கம், நாகாபரணம், வெள்ளியால் இந்திர விமானம், பொன்னால் சேகண்டி, வெள்ளிக்குடம், சந்திப்பூசை, ஓதுவார் கள், தேவரடியார்கள், அத்தியனம் பண்ணுவோர், பல்லக்கு சேவை ஆகியன.

கல்வெட்டுக்கள்:

கல்வெட்டை கல் எழுத்துச் சாசனம், சிலாலேகை என்றுங் கூறுவர். கடந்தகால நிகழ்வை, எதிர்கால மக்கள் அறி யும் வண்ணம், கல்லில் பொறிக்கப்பட்டவையே கல்வெட்டுக்கள் ஆகும். திருவண்ணாமலையில் சேகரிக்கப்பட்டவற்றில் 119 கல்வெட்டுகள் திருவண்ணாமலை சம்பந்தமானவை. பெரும் பாலானவை சோழருடைய கல்வெட்டுக்கள். இவை இனிமை யான வரலாற்று வடிவங்கள். மிகப் பழமையான கல்வெட்டு திருவண்ணாமலைக் கோவிலின் கருவறைச் சுவரில் உள. இராசாதித்த சோழன் (கி.பி 955) இவனின் கல் திருப்பணி கருவறை மட்டுமே. நகரத்தார் பயிர் செய்து, வரி யாவற்றையும் அண்ணாமலையாருக்கே ஈந்ததாக இராசராசன் காலத்து (ARE479, 1902) கல்வெட்டு ஒன்று கூறுகிறது. 10ஆம் நூற்றாண் டில் 1ம் இராசராசன் ஆட்சிக் காலத்தில் கல்வெட்டுக்கள், பெருகின. மங்களம் உண்டாகட்டும் என்று தொடங்கும் கல்வெட்டுக்கள் வடமொழி தென்மொழி கலந்த மணிப்பிரவாள

நடையில் செய்யுள் போல அமைந்திருக்கும். திருவண்ணாமலை ஆண் டார், திருவண்ணாமலை மகாதேவர், திருவண்ணாமலை உடையார் என்ற திருப்பெயர்களை கல்வெட்டுக்களில் காண லாம். கோப்பெருஞ்சிங்கன் என்பவன் அண்ணாமலை அண்ண லுக்கு திருவாசி, நடராசர் பாதம், பொன் சிம்மாசனம், பொன் அணிகலன்கள் செய்தான். கல்வெட்டுக்களைப் பிரதிபண்ணி, நூல்களைத் தொகுதி தொகுதியாக வெளியிட்டு வருகின்றனர். தமிழகத்தில் சிவாலயங்கட்குச் சொந்தமான காணிகட்கு சூலம் பொறிந்த கற்களை எல்லைகளில் புதைப்பர். சாலைக் கற்களை திருவண்ணாமலையை வலம் வரும்போது காணலாம். இவைகள் 700 ஆண்டுகள் பழமை வாய்ந்தவை. இரு மீன் ஒரு செண்டு உள்ள கற்கள் பாண்டியர்களின் முத்திரையாகும்.

செட்டியார்கள் (நகரத்தார்)

நகரத்தார் தொழில் வியாபாரம். இவர்களை தன வணிகர் என்றும் அழைப்பர். தமிழர் வாழும் இடங்களில் எல்லாம் இவர்களைச் காணலாம். இவர்கள் சைவத்திற்கும், தமிழுக்கும் செய்த தொண்டு, திருப்பணிகள் ஏராளம். மன்னர் ஆட்சிக்குப் பின் திருவண்ணாமலையில் இவர்களின் திருப்பணி எண்ணில் அடங்கா. இராமநாதபுரம், தேவகோட்டை, காரைக்குடி போன்ற நகரங்களில் இவர்கள் வாழ்கின்றனர். குன்றக்குடியிலும் பரந்து வாழ்கின்றனர், இது அருணைநாடாயிற்று. திருவண்ணாமலை யில் சத்திரங்கள், சாதுக்களுக்கு அமுது வழங்குவது வழக்கம். அமுது வழங்கும் ஓயாமாரிமடம், சிவகாசிமடம், மதுரையார் மடம், விருதுநகர் மடம், நூல்காரர் மடம், குறுமேறியார் மடம், காரைக்குடியார்மடம், ஞானதீபக்குடைமடம் என பல மடங்கள் உண்டு. ஓயாமாரிமடம் நகரத்தாருடையது, இங்கே ஓயாமல் மாரிமழை போல் அமுது படைப்பர். செட்டியார்கள் அண்ணா மலையாருக்கு அபிடேகம் செய்ய பால், தயிர், இளநீர், நெய் குறைவற வழங்குவர். நகரத்தார் தேவாரப் பாடசாலை, துவக்கப் பள்ளி, வேத பாடசாலை நடத்தி வருகின்றனர். மேலும் இவர்கள் திருநந்தவனம், தண்ணீர்ப்பந்தல், தேர், தங்க ஆபரணங்கள், வாகனங்கள், இரத்தின கிரீடம், நாகாபரணம், வைர நெற்றிப் பட்டம், தங்கக் கவசம், வைரமுடிகள், முத்துவடங்கள், தங்க முடிகள், உருத்திராக்க மாலை, கமலை மணிகள், செய்து மனமுவந்து வழங்கியவர்கள் இந்த நகரத்தார்.

ரமண மகாரிஷி

காலம் காலமாக தமிழ் நாட்டில் ஞானிகள், யோகிகள், ரிஷிகள் தோன்றினர். திருவெம்பாவை இறுதிநாள் ஆருத்திரா தரிசனம். தமிழ் மக்கள் செய்த மாதவத்தால் ரமணமகாரிஷி 1873 மார்கழி 30 இரவு 1 மணி ஆருத்திரா தரிசன நாளில் திரு அவதாரம் செய்தார். சிறுவனாக இருக்கும்போது வைகை ஆறு வழிந்தோடும் மணலில் வீழ்ந்து புரண்டு விளையாடினார். மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் நிஷ்டை கூடுவார். இந்தச் சின்ன வயதில் அருணாசலம் என்ற திருப்பெயர் அவர் காதில் விழும் போதே அந்தத் திருப்பெயர் கற்கண்டு போல் தித்தித்தது. நாட்கள் செல்லச் செல்ல, ரமணரை திருவண்ணாமலை தன்பால் ஈர்க்கத் தொடங்கியது.

கல்வியில் கவனம் செல்லவில்லை. அருணாசலத்தை சென்று அடைய வேண்டும் என்ற பேரவாவால் தனது ஊரான திருச்சுழியைவிட்டு, தனது பிறந்தகத்தை விட்டு, உற்றார், உறவினரை துறந்து ஞானமார்க்கத்தை நாடித், தேடி திருவண்ணாமலைக்கு ரயில் ஏறினர். இந்த ஞானயாத்திரையின் போது, அவரது வழிச் செலவிற்கு போதிய பணம் இருக்க வில்லை. இதன் காரணமாக காதில் இருந்த கடுக்கன்களை கொடுத்து காசாக்கினார். சிறிது சிறிதாக சொந்த பந்தங்கள் குறைந்தன. வழிப்பயணத்தின்போது திருக்கோவலூர் சிவாலய பட்டைச் சாதம், பசியைப் போக்கியது. ஈற்றில் 1886 செப்டம்பர் 1ம் நாள் திருவண்ணாமலையில் பாதம் பதித்தார். பல கோடி வருடம் தவம் இருந்து கிடைத்த பலன்போல் திருவண்ணாமலை இந்த ஞானதேசிகருக்குத் தோன்றியது.

திருவண்ணாமலையில் பாதம் பதிந்ததும் அவருடைய நோய், நொடி, துன்பம், மனக்கவலை யாவும் அகன்றது. தாய்ப்பசுவைத் தேடிய கன்று போல் தாமதமின்றி சிவபெருமான் சந்நிதிக்குச் சென்று பந்த பாசமற பணிந்தார். முடியை இறக்கி னார். பூணூலும் அகன்றது. உடைகளை உதறினார். கௌபீனமே ஆடையாயிற்று. சிலர் இந்த இளம் துறவியை ஏளனம் செய்தனர். சிறுவர்கள் கல்லை எடுத்து வீசினர், பல ஞானிகளும் துறவிகளும், ரிஷிகளும், சித்தர்களும் தவம் செய்த

இடமல்லவா திருவண்ணாமலை. சாந்தம், அமைதி, தியானம் மேற்கொள்ள இந்த முற்றும் துறந்த முனிவருக்கு ஒதுக்குப்புறம் தேவைப்பட்டது. அருணாசலத்தில் பல குகைகள் உண்டு. ஆகவே முதலில் பாதாள லிங்கக்குகையில் இருள் மண்டிய இடத்தில் பல காலம் அமர்ந்து கடுந்தவம் மேற்கொண்டார். பல நாட்களுக்கு இந்த தவம் நீடித்தது. அமுது இல்லாது இருந்த நாட்கள் பல. பகவானின் சடை வளர்ந்தது, நகங்கள் நீண்டது, மேனியில் புழுதி படிந்தது, வெளியாரின் தொல்லை குறைந்தது. இருட்டுக் குகை அல்லவா? எறும்புக்கடி அதிகரித்தது, தேள் கொட்டியது, உடம்பு எலும்புக்கூடாகியது, வலி அதிகரித்தது. மகா ஞானியினுடைய உடம்பு பூச்சி புழுக்களால் உண்ணப் பட்டு, இரத்தமும் சிதலும் வடிந்தது. இவை அனைத்தையும் தாங்கினார். பொறுத்தார், யோகநிலை தடைப்படவில்லை. நச்சுப் பாம்புகள் பகவானைத் தீண்டவில்லை. அணில்பிள்ளைகள் அவர் மீது தாவிப் பாய்ந்தன. குரங்குகள் அங்கே சூழ்ந்து இருந்தன. பறவைக்கூட்டம் அவரைச்சுற்றி வட்டம் இட்டன, காகங்கள் கரைந்தன. மகாகவி பாரதி பாடியது போல் "காக்கை குருவி எங்கள் சாதி" என்பது நினைவுக்கு வருகிறது. இந்த மகாஞானி எந்த உயிரினத்தையும் சுதந்திரமாக திரிய வைத்தார்.

ரமண மாமுனிவர் திருவண்ணாமலையின் ஞானச் சுடராகியதும், இந்த ஞானபிரானை தரிசிக்க அவரின் ஆசியை பெற உலகமே அவரது காலடிக்கு வரத்தொடங்கியது. நாட்கள் புரண்டோட பசுப்பால் மட்டுமே பகவான் ஏற்றார். ஞானப்பழமாகி விட்ட மகாஞானி பேசா மௌனியாகி இருந்தார். பசித்தபோது புசித்தார், சில நாட்கள் செல்ல, ஒரு சில வார்த்தைகள் பேசினார். மகாரிஷியின் சீடன், இந்த மகாஞானியின் மணி வாக்குகளைத் தொகுத்தார். இந்த ஞானபிரான் அப்போது விருபாட்சி குகையில் இருந்தார்.

இந்த நிலையில் உலகமே கைகூப்பிய மகாரிஷியின் மாதா, 1916இல் திருவண்ணாமலைக்கு வந்து மகனோடு துறவு பூண்டு, தன் அருமை மைந்தனோடு உடனிருந்து உதவி வரலானார். 1922 மே மாதம் 22ம் திகதி அன்னையின் நோய்

மிகுந்ததால் அவரைச் சூழ இருந்த எவரும் உணவு உட் கொள்ளவில்லை. மகாரிஷி தனது ஒரு கையை தன் தலையி லும், மறுகையை தன் தாயின் நெஞ்சிலும் வைத்ததும்; அன்னை அமைதி பெற்றார். மகாஞானியைப் பெற்ற அன்னை சமாதி அடைந்தார். பாலி தீர்த்தக் கரையில் அன்னையின் திருவுடலை சமாதி வைத்து, சிவலிங்கப்பிரதிஷ்டை செய்தனர்.

இதன்பின் மகாரிஷி அங்கேயே தங்கிவிட்டார். இந்தப் புனித இடம்தான் இப்போது உலகம் புகழும் ரமணாசிரமம். மகா ஞானியார் உபதேசங்கள், தமிழ் ஆங்கில நூல்களாக வெளி வந்துள்ளது. ரமணமகாரிஷி பல பாடல்களையும் பாடி உள்ளார். இந்த மகாஞானி தனது வாதக்காலை மடக்கிப் பத்மாசனத்தில் வீற்றி இருப்பதே ஒரு தனி அழகு. இந்த ரமணாசிரமத்தில் மலர் எடுக்க நந்தவனம், கோசாலையில் பசுக்கள், விருந்தினர் விடுதி, உணவு விடுதி, பழத்தோட்டம் யாவும் உள.

1950 ஏப்பிரல் 14 இரவு மணி 8.47 மகாஞானி பரிபூரண மானார். இந்தியப் பெருநாட்டின் ஞானச்சுடர் அணைந்தது. மகரிஷியை யோகநிலையில் இருத்தி சுற்றிலும் வீபூதி, கர்ப்பூரம், உப்பு ஆகியவற்றால் நிரப்பி, அதன்மேல் சலவைக்கல்லால் சமாதியும் உருவச் சிலையும் அமைத்தனர். "புணர்ந்த பாவம் எல்லாம், பரிபூரணம் உணர்ந்த மகா ஞானியை வழிபட ஓடுமே" என்பது கற்றுணர்ந்த பெரியோர் திருவாக்கு.

அன்னியர் வருகை:

மைசூரை ஆட்சி செய்தவர்கள் ஐதர் அலியும் அவன் மகன் திப்பு சுல்த்தானும் ஆவர். ஐதர் அலியை துரத்திக் கொண்டு, செங்கம் கவாய் வழியாக 1767இல் திருவண்ணா மலையை ஆங்கிலேயர் வந்தடைந்தனர். திருவண்ணாமலையில் இந்தப் போர் 1782 வரை நடைபெற்றது. திருவண்ணாமலைத் திருத்தலம் ஆங்கிலேயரின் இராணுவத்தளமாகியது. மராத்தியர், முகமதியர், ஆங்கிலேயரின், தொடர் படையெடுப்பால் திருவண் ணாமலை நகரும் திருக்கோயிலும் பல இன்னல்கட்கு உள்ளா கியது. போரினால் பலர் இறந்தனர், வீடுகள் தீக்கிரையாகின,

சொத்துக்கள் அபகரிக்கப்பட்டன. மக்கள் திருவண்ணாமலையி லிருந்து இடம்பெயர்ந்தனர். ஆங்கிலேயர் ஆட்சியின்போது போர்த்தளபாடங்கள், வெடி மருந்துகள், பீரங்கிகளை களஞ்சியப் படுத்த திருவண்ணாமலைத் திருத்தலம் பெரிதும் பயன்பட்டது. வெடிமருந்துக் கிடங்கும் கோவிலுக்குள் இருந்தது, ஆங்கிலே யரின் படைவீடாகவும், பாசறையாகவும் பலகாலம் இருந்தது, இந்தத் திருத்தலம். குதிரைலயமாகக்கூட இருந்தது. அருணா சலத்தின் தங்க கவசங்கள் களவாடப்பட்டன. இந்த இன்னல் களின் பின்பும் இந்த திருத்தலம் பழைய உன்னதநிலைக்கு உயர்ந்து நிற்கின்றது.

தல நூல்கள்

தேவாரம், திருவாசகம் (திருவெம்பாவை திருவம்மானை) திருப்புகழ், திருமந்திரம், புராணங்கள், கலம்பகம், அந்தாதி, வெண்பாமாலை, வண்ணம், கோவை, பிரபந்தம், சதகம், பதிகம், விருத்தம், அட்சரமாலை, பஞ்சரத்தினம், பிள்ளைத்தமிழ், நாமவளி, பஞ்சகம், அற்புதமாலை, கீர்த்தனம், இரட்டை மணிமாலை, வசனம், அட்டகம், கும்மி, நாடகம், வடமொழி நூல்கள் ஆக 68 நூல்கட்கு மேல் வெளிவந்துள்ளது. இவை தவிர, திருவண்ணாமலையில் வாழ்ந்த தவசிரேஷ்டர்கள், ஞானிகள், யோகிகள், சித்தர்கள், மகாரிஷிகள் சம்பந்தமான வரலாறுகள் வேறு, காலம் காலமாக வெளிவந்த வண்ணமே உளது. அச்சு வாகனம் ஏறாத ஏட்டுப் பிரதிகளும் உண்டு. திருத்தல நிர்வாகமும், தமிழ்நாடு அரசும் கூட்டாகக் கையெழுத் துப் பிரதிகளாக இருக்கும் எழுத்தோவியங்களை அச்சு வாகனம் ஏற்ற முன்வருதல் வேண்டும்.

திருவெம்பாவை

திருவண்ணாமலையில் அருளியது

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
வீண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம் அகலப்

பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
வீண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல் பாடிப்
பெண்ணே இப்பூம்புனல் பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

- மணிவாசகர்

திருவண்ணாமலையின் புராண வரலாறு, உமை இடப் பாகம் பெற்றமை, திருவண்ணாமலைத் திருத்தலம், உண்ணா முலை அம்மை, அணி அண்ணாமலைக் கோவில், செப்புத் திருமேனிகள், நடராசர் திருவுருவம், சிற்பங்கள், ஓவியங்கள், மணிவாசகர், திருவண்ணாமலைத்தீபம், வல்லாள மகாராஜன், சோழர்காலத் திருப்பணி, கிருஷ்ண தேவராயர், கல்வெட்டுகள், நகரத்தார், ரமணமகாரிஷி, அன்னியர் வருகை, திருத்தல நூல்கள் சம்பந்தமாக ஓரளவு விரித்துரைத்தோம்.



திருக்குற்றாலம்

முதலாந் திருமுறை பண்: குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

பக்கம் வாழைப் பாய் கனியொடு பலவின் தேன்
கொக்கின் கோட்டுப் பைங்கனி, தூங்குங் குற்றாலம்
அக்கும் பாம்பும் ஆமையும் பூண்டு ஓர் அனல் ஏந்தும்
நக்கன் மேய நன்நகர் போலும்; நமரங்காள்!

- சம்பந்தர் தேவாரம்

வரலாறு

முன்னொரு காலத்தில் குற்றாலநாதர் விஷ்ணு மூர்த்தியாக, மூலவராக இருந்தவர். ஆகவே குற்றாலம், வைணவத் தலமாக திருமுற்றம் என்ற பெயரில் வைணவ ஆச்சாரியார்களால் பூசிக் கப்பட்டு வந்தது. அகத்திய முனிவர் இத்தலத்திற்கு நீறணிந்த மேனியராய் சிவக்கோலத்துடன் உட்சென்றார். அகத்திய முனிவரின் திருமேனியில் சிவசின்னங்கள் தரித்திருப்பதைக் கண்ட வைஷ்ணவாச்சாரியர்கள் இம்முனிபுங்குவரை இத்திருத் தலத்திற்குள் உட்புகவிடாமல் தடுத்தனர். இதனால் சினமுற்ற அகத்தியர்; அண்மையில் அமைந்துள்ள திருவிலஞ்சியில் கோயில் கொண்ட முருகப் பெருமானிடம், குற்றாலத்தில் நிகழ்ந் தவற்றை முறையிட்டார். தமிழ் முனிவன் முறையீட்டைக் கேட்ட தமிழ்க் கடவுளும், குற்றாலத்தில் உள்ள பெருமாளை சிவமாக்க வழி கூறினார்.

சில நாட்களுக்குப்பின் அகத்தியர் வைணவக் கோலமுற்று மிக்க ஆசாரமாக கோயிலுட் புகுந்தார். அங்கே சங்கு, சக்கரம் ஏந்திய பெருமாளை மனமுருகப் போற்றித் தொழுது, மகிழ்ந்து, திருக்கதவைச் சாத்தி அப்பெருமானின் மேனியைத் தொட்டு சிவலிங்கத் திருமேனியாக்கினார். அருகிருந்த ஸ்ரீதேவி, பூதேவியையும் முறையே குழல் வாய்மொழியம்மையாகவும், ஸ்ரீ பராசக்தியாகவும் மாற்றினார். பின்பு திரிகூட நாதரின் சங்க வீதியில், தென்மேற்குப் பக்கத்தில் பெருமாளை வைத்துப் பூஜை செய்ய ஆவன செய்தார். இவ்வாறு மாற்றிய

திருவுருவங்களை மிகவும் பயபக்தியோடு வணங்கிய பின் அகத்தியர் திருக்குற்றாலத்தில் இருந்து வெளியேறியதாக தலபுராணங் கூறுகிறது. இன்றும் குற்றாலத்தில் இறைவனைப் பகலில் தேவர்களும், இரவில் அகத்தியரும் பூஜை செய்வதாக இப்பகுதி மக்களின் நம்பிக்கை. குற்றாலநாதருக்கு நாளாந்தம் ஒன்பது காலப் பூஜைகள் மகுடாகம முறையில் முதலில் விநாயகருக்கும், அடுத்து தொல் பழங்கோயிலில் எழுந்தருளி இருக்கும் கூத்தப்பிரானுக்கும், மூன்றாவதாக மூலவராகிய திருக்குற்றாலநாத சுவாமிக்கும் நடைபெறுகிறது.

உற்சவங்கள்

குறும்பலா ஈசனாகிய குற்றாலநாதருக்கு சித்திரைத் திருவிழா பத்து நாட்களுக்கு நடைபெற்று, புதுவருடப் பிறப்பன்று நிறைவெய்தும். ஐப்பசித் திருவிழாவும் பத்து நாட்களுக்கு, நடை பெற்று ஐப்பசி முதலன்று நிறைவெய்தும். இவ்விரு திருவிழாக் களுக்கும், திருவிலஞ்சி முருகப்பெருமான் வள்ளி, தெய்வ யானை சமேதராக பிரசன்னமாகி இருந்து திருவீதி உலா வருவர். ஐப்பசித் திருவிழா முதல் நாளன்று, அப்பர் சுவாமிகளின் உழவாரப் பணிவிடை நடைபெறும். அப்போது அப்பரும் வீதி உலா வருவார். முதல் நாள் கொடியேற்றம், ஐந்தாம் நாள் தேர்த்திருவிழா, ஏழாம் நாள் காலை, மாலை இறைவனும், இறைவியும் வெள்ளிச் சப்பரத்தில் வீதி உலா வருவர். நடராச ருக்குத் தாண்டவ தீபாராதனை நடைபெறும். பத்தாம் நாள் தீர்த்தோற்சவம். வருடத்தில் அடுத்து நடைபெறுவது, மூன்றாவது உற்சவம், தென்தில்லை எனப்படும் திருக்குற்றாலத்தில், திருவெம்பாவைத் திருவிழா மார்கழி மாதத்தில் பத்து நாட்களுக் குச் சிறப்பாக நடைபெறும். ஆடல் வல்லானாகிய கூத்தப் பிரானுக்குக் காலையும், மாலையும் தாண்டவ தீபாராதனை மகுடாகம முறைப்படி நடைபெறும், சிறப்பு ஆராதனையாகும். திருக்குற்றாலத் திருவாதிரைத் திருவிழா ஆராதனைகளைக் காணக் கண்ணாயிரம் வேண்டும். இங்கே இறைவனுடைய, இறைவன் காட்டிய நடனக் காட்சியே ஒளி வடிவில் வெளிப்படு கிறது. இதுவே தாண்டவ தீபாராதனையாகும். தேவர்கள் விரும்பிப் பூஜை செய்கிறார்கள். இறைவன் காட்சி தருகிறார். தாண்டவ தீபாராதனை அற்புதம், அற்புதம்.

குற்றாலம் - பொதிகை

'பொதிகை மலை விட்டெழுந்து, சந்தனத்தின் புதுமணத்தில் தோய்ந்து
பூந்தாது வாரி நதி தழுவி, அருவியின் தோள் உந்தித், தெற்கு
நன்முத்துக் கடல் அலையின் உச்சி தோறும் சதிராடி, மூங்கிலிலே
பண் எழுப்பித், தாழையெல்லாம் மடற்கத்தி சுழற்ற வைத்து
முதிர் தெங்கின் இளம்பாளை முகம்சு வைத்து, முத்துதிர்த்துத்
தமிழகத்தின் வீதிநோக்கி, அந்தியிலே இளமுல்லை சிலிர்க்கச்
செந்நெல் அடி தொடரும், மடைப்புனலும் சிலிர்க்க, என்றன் சிந்தை
உடல் அணு ஒவ்வொன்றும் சிலிர்க்கச், செல்வம் ஒன்றுவரும்,
அதன் பெயர்தென்றற் காற்று!'

- பாரதிதாசன்

திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசிக்கும் செங்கோட்டைக்கும் மத்தியில் குற்றாலம் உள்ளது. தென்காசியிலிருந்தும், செங்கோட்டையில் இருந்தும், நேரத்திற்கு நேரம் தவறாமல் பேரூந்துகள் விரைகின்றன. மேலும் திருநெல்வேலியில் இருந்தும், மதுரையிலிருந்தும் பேரூந்துகள் குற்றாலம் வழியாகச் செல்கின்றன. புகையிரத மார்க்கமாகச் செல்வதானால் சென்னை - கொல்லம் தபால் வண்டி மூலமும் சென்னை செங்கோட்டை புகைவண்டி மூலமும் சென்று செங்கோட்டையில் இறங்கிப் பேரூந்தில் குற்றாலம் செல்ல முடியும்.

குற்றாலம் நீர்வள, நிலவள, மலை வளம் மிகுந்த பெருநகர். குற்றாலம் பருத்தி, மா, பலா, வாழை, கரும்பு, கமுகு, ஏலம், கராம்பு, சாதிக்காய், மிளகு, குங்கிலியம், தேன், முல்லை மலர்கள் மிகுந்த பிரதேசம். ஆண் மயில்கள் பேடையுடன் தோகை விரித்தாடும். வண்டுகள் ரீங்காரம் செய்யும். மலை அருவி, மலர்களை அடித்து அள்ளி மிதந்து வரும். திருக் குற்றாலம் சிவபெருமான் கோவில் கொண்ட திருநகர். பாண்டி நாட்டின் தேவாரப் பாடல்பெற்ற பதிநான்கு சிவத்தலங்களுள் குற்றாலமும் ஒன்றாகும். திருக்குற்றாலத்தின் மறுபெயர்கள் திரிகூடாசலம், திரிகூடமலை, திரிகூடம் ஆகும். திரிகூடம் என்றால் மூன்று கொடு முடிகள் ஒன்றாகக் கூடியது எனப் பொருள்படும். இதனால் பொதிகை மலையைத் திரிகூடமலை எனவும் அழைப்பர். குற்றாலத்திற்குப் பெருமை சேர்ப்பது,

சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து இழுப்பது, திருத்தல யாத்திரைத் தலமாக அமைந்தது, கோவிலும் குற்றால நீர் வீழ்ச்சியும், இதன் சுகந்தமும், சுவாத்தியமும், குழு குழ தன்மையும், தென்றற்காற்றும் ஆகும். சுற்றுலாத் தலமாகையால் இங்கே ஏராளமான சத்திரங்களும், சாவடிகளும், உணவகங் களும் நிறைவாக உண்டு. தென்மேற்குப் பருவமழை தொடங்கி யதும், பன்னாட்டு மக்களும் வருகைதந்து, ஆனந்தமாகப் பருவ காலம் முடியும் வரை பல நாட்கள் தங்கி இருப்பர், அருவி நீராடுவர். மேலும் குற்றால யாத்திரை செல்ல மக்களைத் தூண்டுவது மூர்த்தி, தல, தீர்த்த விசேடமாகும். கோவிலைச் சுற்றிய நாநூறு ஏக்கர் நிலப் பரப்பையும் பெருநகராக்கவும் பெரு வீதியாக்கவும், அரசு ஆவன செய்து வருகிறது. கோவில் நிர்வாகம் சமூகநல சேவைகளையும் செய்து வருகின்றது. இலவச மருத்துவ நிலையம், தேவாரப் பண்ணிசைப்பள்ளி, பராசக்தி மகளிர் கல்லூரிக்குக் காணி நன்கொடை, நலிந்த கோவில்களின் நன்மை நிதியம், குழந்தை நலன், பசுப்பால் வழங்கல், சத்திரம், சாவடிகளில் சம பந்தி போசனம், பாரிய நூலகம், நூல்கள் வெளியீடு குறிப்பிடத்தக்கவை ஆகும்.

குற்றால நாதர் திருக்கோயில்

இரண்டாந் திருமுறை பண்: காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

திருந்த மதி சூடித் தெண் நீர் சடைக் கரந்து, தேவீபாகம்
பொருந்திப் பொருந்தாத வேடத்தால் காடு உறைதல் புரிந்த செல்வர்
இருந்த இடம் வினவில் - ஏலம் கமழ் சோலை இனவண்டு யாழ்செய்,
குருந்த மணம் நாறும் குன்று இடம்சூழ் தண்சாரல், குறும்பலாவே.

திருச்சிற்றம்பலம்

- சம்பந்தர் தேவாரம்

இறைவன் குற்றாலநாதர், நிழல் தரும் தல விருட்சமான குறும்பலா மரத்தின் கீழ் கோயில் கொண்டு உள்ளார். குற்றால நாதர் கருவறையில் ஈசானம், தத்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் என்னும் ஐந்து திருமுகங்களுடன் சிவலிங்க உருவில் அருள்பாலிக்கிறார். உலகில் வாழ்ந்து மறைந்த பெரியவர்களைத், திராவிடர்கள் தெய்வமாக வழிபட்டனர். இறந்த

மனிதனின் உடலைப் புதைத்த இடத்திலேயே மரம் ஒன்று நாட்டி, அம்மரத்தின் அடியில் நடுகல் நட்டு வழிபாடு செய்து வந்தனர். இந்த அடிப்படையிலேதான் தல விருட்சங்கள் தமிழகத்துத் திருக்கோவில்களில் காணப்படுகிறது. இது போலவே குறும்பலா குற்றாலத்தில் தல விருட்சமாகியது. இந்தக் குறும்பலாவின் கொப்பெல்லாம் நான்கு மறைகள், அதன் பழங்கள் எல்லாம் சிவலிங்கம், அதன் சுளைகளெல்லாம் சிவலிங்கம், அதன் வித்துக்கள் எல்லாம் சிவலிங்கம் என்றார் கவிராயர். இந்த மரத்தில் பழுக்கின்ற பழங்களை, யாரும் பறிப்பதில்லை. அவை குற்றால மந்திகட்கே உணவாகிறது. தேன் போன்ற பலாச் சுளைகளை குற்றாலக் குறவர் தேனில் கலந்து குற்றால நாதர் திருமுன் படைப்பர். திருக்குற்றாலத்திற்கு இருபத்தியொரு திருப்பெயரக்ள் உண்டு, எனத் தலபுராணம் கூறுகிறது. இறைவனைக் குற்றாலநாதர், குறும்பலாவீசர், திரிகூடாசலபதி, திருகூடாசலேஸ்வரர் என்றும் இறைவியைக் குழல்வாய் பொழியம்மை என்றுங் கைதொழுவர்.

ஆதியில் மாமன்னன் இராசராசனால் வடிவமைக்கப் பெற்று, நாயன்மார்களால் பாடப்பெற்று, பல்லவர், சோழர், பாண்டியர், நாயக்கர், செட்டிநாட்டவரால் திருப்பணி செய்யப் பெற்று, மக்களின் பேராதரவைப் பெற்றுக், காலத்திற்கு காலம், குற்றாலநாதசுவாமி கோவில் முன்னேற்றம் கண்டு வந்தது. சங்கு வடிவத்தில் அமைந்த கோவில் இது. மகுடம் என்றால் சிரசு என்றும் பொருள் கூறலாம். மகுடாகம முறையில், குற்றால நாதர் கோவில் வழிபாடு நடைபெறுகிறது. தீர்த்தம் சிவமது கங்கையாகும். இந்தப் புனித நீர்தான் அபிஷேக தீர்த்தத் திரவியமாகப் பயன்படுகிறது. குற்றாமலையின் அடிவாரத்தில் சிவபெருமான் எழுந்தருளி உள்ளார். முன்னொரு காலத்தில் கங்கையானவள், சிவபெருமானை மதியாது பூமியில் பிரவாகித்து வந்தபோது அவள் ஆணவத்தை அடக்க இறைவன் அவளைத் தன் சடையில் வைத்தார். அடங்கிய கங்கையும் இறைவனை வணங்கச் சிவபெருமானது ஆணையால் திரிகூட மலையின் உச்சியில் சிவலிங்கத்தை வைத்துத் தேனால் பூஜித்தாள், நற்பேறையும் பெற்றாள். கங்கை தேனால் பூஜித்தமையால் இத் தலத்தின் தீர்த்தம் சிவமது கங்கை ஆயிற்று. இவ்வருவியே தேனருவியென அழைக்கப்படுகிறது.

சங்க இலக்கியங்களில் குற்றாலநாதர் கோவில் பற்றிய செய்திகள் அதிகம் இல்லை ஆயினும், குற்றாலநாதர் கோவில் வழிபாடு, சங்க காலத்தில் இருந்ததென்றே கருதமுடியும். பல்லவர் காலத்தில் நாயன்மார்களால் பாடப்பெற்று, சோழர் காலத்தில் முதல் சுற்று வீதியும், பாண்டியர் காலத்தில் மூலவர், சிகரம், அர்த்த மண்டபம் இரண்டாவது சுற்று வீதியும், நாயக்கர் காலத்தில் சித்திரசபை, தேர் வாகனங்களும் உருவாகின. சங்க வீதியில் அமைந்துள்ள அறுபத்திநாலு சக்தி பீடங்களில் ஒன்றான, குழல் வாய்மொழியம்மை என்னும் தரணி பீடம் 1925இல் செட்டி நாட்டவரால் பளிங்குபோல் இழைக்கப்பட்ட கருங்கல்லால் கட்டப்பட்டது. ஞானசம்பந்தரின் திருக்குற்றாலப் பதிகம், குறும்பலாப் பதிகம், அப்பரின் திருவங்கமாலை ஆகிய மூன்றையும் சலவைக் கல்லில் எழுதி, செப்பேடுகளிலும் பதித்துக் கொடுத்த பெருமை ஸ்ரீ காசிமடம் தம்பிரான் சுவாமி களையே சாரும். வெள்ளிச் சப்பரம், வெள்ளி ரிஷபம், வெள்ளி மயில், சிற்பங்கள், வண்ண ஓவியங்கள், செப்புத் திருமேனிகள் குற்றாலத் திருக்கோயிலில் நிறைந்து காணப்படுகின்றன. நந்தா விளக்குகள் ஏற்ற; பசு நெய்க்காக பசுக்கள் பல தானம் செய்யப்பெற்றன. அற்புதமான விலையுயர் தங்க நகைகள், சுவாமிக்குத் தங்கக் கிரீடம், சிவகாமி அம்மையின் மாம்பழக் கொண்டை, தும்பிப் பதக்கம், உத்தர குண்டலப் பதக்கம், நடராசர் வீர கண்டமணி, நீலகண்டம், சடைநாகம், சாமந்திப் பூமாலை, ஒட்டியாணம், திருமாங்கல்யம், தங்க வீபூதிப்பட்டை போன்றவை இன்றும் மிக்க பாதுகாப்புடன் உளது.

திரிகூட மண்டபத்தில் உள்ள சிற்பங்களில் யானை, குதிரை வீரர்களும், பழத்தை வாயில் வைத்துக் கொண்டும், கையில் பழத்தை ஏந்திக் கொண்டும், மரங்களில் இருந்து இறங் கும் மந்திகளின் சிற்பங்கள் மிகவும் அழகானவை. இருபுறமும் உள்ள கொடுங்கைகள்; பலாப்பழம் போல் அமைக்கப்பட்டு அவற்றைக் கிளி கொத்துவது போலவும், புறாக்கள் பறித்து வருவது போலவும் உள்ள சிற்பங்கள் மிகவும் உன்னதமானவை. ரிஷப வாகனத்தில் சுவாமி அம்பாள் சிற்பங்களை என்றென்றும் பார்த்துக்கொண்டே இருக்கலாம். அகத்தியரால் தாபிக்கப்பட்ட சக்திபீடத்தைச் சுற்றி, சப்த மாதர்களாகிய பிராமி மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, மாகேந்திரி, சண்டி, மகாலட்சுமி

காணப்படுகின்றனர். கோவில் வாசலில் துவாரபாலிகைகளாகப் பெண்கள் இருவர் வீரவசீகரமாக உளர்.

குற்றாலநாத சுவாமி கோவிலுக்குக் காலத்துக்குக்காலம் அரசர்களாலும், பிரபுக்களாலும், செட்டி நாட்டாராலும் வழங்கிய நன்செய், புன்செய் நிலங்கள், நெல், பணம், தேங்காய், இளநீர், நந்தவனத்தில் இருந்து பெறப்படும் அன்றலர்ந்த மலர்கள், வருமானங்கள் கோவில் பூஜைகள் குறைவற நடைபெறப் பெரிதும் உதவுகின்றன.

குற்றாலம் சார்ந்த கோவில்கள்

திருக்குற்றாலநாத சுவாமி கோவிலின் நிர்வாகத்தின் கீழ் பன்னிரண்டு கோவில்கள் உள. இவற்றுள் மூன்று முக்கிய கோவில்களைப் பார்ப்போம்.

சித்திர சபை

சித்திரசபை, குற்றாலநாதர் திருக்கோவிலுக்கு வடபால் தனிக்கோவிலாக உளது. இந்தச் சித்திர சபையில்தான் சிவபெருமான் திருக்கூத்தாட, உமையாள் தாளம் கொட்டிக் களித்து நின்றாராம். சிவபெருமான் திருநடம் புரியும் ஐந்து சபைகள் தமிழ்நாட்டில் உண்டு. இவற்றில் குற்றாலத்தில் உளது சித்திரசபை (ஓவிய வடிவிலுளது). சித்திரசபைக்கு எதிரில் தெப்பக்குளம். இந்தத் தெப்பக்குளம் நடுவில் மணிமண்டபம். இதன் சபா மண்டபத்தில் நுழைந்தால் குறவஞ்சிச் சிலைகளின் அருமையான காட்சிகளைக் காணலாம். கீழே கற்பீடம், மேலே முன் மண்டபம் மட்டும் மரத்தாலானவை. விமானம் செப்புத் தகட்டாலானது. எட்டுக் கலசங்கள் விமான உச்சியில் மிக அலங்காரமாக உளது. சித்திரசபையின் வெளிச்சுற்றில் ஊர்த்துவ தாண்டவம், பத்திரகாளி, மயிலேறும் முருகன், சூரபத்மன், சிங்கமுகன், தாரகன், மன்மதன், ரதி ஆகிய உருவங்கள் வண்ணத்தில் உள. கொடுங்கைகளின் அழகு, பார்த்து அதிசயிக்கத் தக்கது. சித்திரசபையின் உள்ளே நடராசர் சிவகாமி அம்மையுடன் தேவர்கள் தொழுமாறு அழகான சித்திரமாக உள்ளார். பார்வதி பரமேஸ்வரன் திருமணக் காட்சிச் சிற்பம் - அதன் அழகு, வாயால் வர்ணிக்க முடியாது.

மர வேலைப்பாடு உள்ள தூபியில் கண்ணாடி உளது. அகத்தியருக்குக்காட்சி தந்தது போன்ற பல சிற்பங்கள் உள. சித்திர சபை, கிழக்கு நோக்கி இருக்கிறது. உள்ளே நடராஜர் சிற்பம் தெற்கு நோக்கிய நிலையில் இருக்கிறது. குற்றாலப் பெருந் திருவிழாவான எட்டாம் திருவிழா அன்று நடராஜப் பெருமான், ஆலயத்தில் இருந்து சித்திரசபைக்கு எழுந்தருளி பச்சை சாத்தி ஆஸ்தானம் திரும்புவர். சித்திர சபையிலே, சிவபெருமான் கூத்தாடிய வண்ணம் இருப்பதை, மணிவாசகர் தனது திருவாசகத்தில், திருவாரூரில் அருளிய திருப்புலம்பல் எம்மையெல்லாம் கசிந்துருக வைக்கிறது.

கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

உற்றாரையான் வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையுங்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தா உன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே.

திருச்சிற்றம்பலம்

- மணிவாசகர்

என்று கண்ணீர் மல்கினார்.

திரோபவம் (மறைத்தல்) தொழிலைச் செய்யும் நடமாடும் இறைவனுக்கு சிவாச்சாரியார்கள் தாண்டவ தீபாராதனை செய் கின்றனர். உமையாள் இன்னிசை பாட, தாளத்திற்கு ஏற்ப ஆடும் நடனத்தைத் தேவர்களும் தேவ கணங்களும், தவத்திலுயர்ந்த முனிவர்களாகிய பதஞ்சலி, வியாக்கிரபாதரும் கண்டுகளித்தனர்.

சித்திரசபையானது ஐந்தருவிச்சாலையில் தனிக்கோவில் போலுளது. சித்திரசபை முன் உள்ள மண்டபத்தில் இருபத்தி நான்கு தூண்கள் அலங்காரமாக உளது. நடுநாயகமாக நந்தி, சிற்ப வேலைபாடுகளுடன் கூடிய மரக்கதவு, பரந்து விரிந்த கற்றள வரிசைகள். இவை 17ம் நூற்றாண்டைச் சார்ந்தவை. செப்போடுகளைக் கூரையின் மேல் பொருத்த 1008 செப்பாணிகள் பொருத்தப்பட்டன. இந்தச் செப்பாணிகளில் பிரணவ மந்திரம் எழுதப்பட்டுள்ளது.

செண்பகாதேவி அம்மன்

செண்பக மரங்கள் நிறைந்த சோலைகளின் மத்தியில் அமைந்த அழகிய சிறிய கோவில், கருவறையில் மூன்று தேவி யர்கள் எழுந்தருளி உள்ளனர். செண்பகாதேவியின் பெருமை தலபுராணத்திலும் உள. தெற்குப்பக்கத்தில் பேச்சி அம்மை வலக்கரங்களில் உடுக்கை, சூலம் இடக்கரங்களில் கிளி, தீ தெரிகிறது. அருகில் செண்பக அருவி, நீராட வசதி உண்டு. குற்றாலநாதர் திருவிழா சிறப்புற நடைபெற, முதல் வழிபாடு இங்கேதான் நடைபெறுகிறது. வனவிலங்குகள் இங்கே அதிகம் உலாவுகின்றன.

கூத்தர் கோவில்

அப்பரும் மணிவாசகரும் பாடிய கோவில். சோழன் கோச்செங்காளன் காலத்தில் கட்டப்பட்ட செங்கற்கோயில். தல விருட்சம் செண்பக மரம். பெரிய புராண உரையில் திருக்குற் றாலத்தில் இரண்டு சிவன் கோயில்கள் இருந்தன என்ற செய்தியை ஆராயும்போது, தொல் பழங்கோயில் கூத்தர் கோயில் தான் என்ற உண்மை உய்த்து உணரமுடிகிறது. பிற்காலச் சோழர்கள் குறும் பலா ஈசர் கோவிலையும், கூத்தர் கோவிலையும் இணைத்து குற்றாலநாதர் கோவில் என ஒரே பெரிய கோவிலாக அமைத்தனர். இருந்தபோதும் கூத்தர் கோவில்தான் தொல்பெருங்கோவில் என ஒரே பெரிய கோவி லாக அமைத்தனர். கூத்தர் கோவில்தான் தொல்பெருங் கோவிலாக இருந்த காரணத்தால் கூத்தர் கோவில் பூஜைகள் நடந்தேறிய பின்தான், குற்றாலநாதர் கோயில் பூஜைகள் ஆரம்ப மாகின்றன.

மேலகரம் செண்பக விநாயகர்

குற்றாலத்தில் இருந்து தென்காசி செல்லும் வழியில் இயற்கையான சூழலில் இக்கோயில் அமைந்துளது. இந்தக் கிராமத்தில்தான் திரிகூடராசப்ப கவிராயர் வாழ்ந்தவர். தனது அனைத்து இலக்கியங்களையும், இந்த விநாயகரைத் துதித்த பின்னரே பாட ஆரம்பிப்பார். குற்றாலநாதர் ஆண்டுக்கு ஒரு முறை மேலகரம் வருகிறார். இங்கே தங்கி இருந்து, இந்த ஊரில் தனக்குச் சொந்தமான நன்செய், புன்செய் நிலங்களைப் பார்வையிட்டு அறுவடை மசூலைப் பெற்றுத், தனது ஆஸ்தானம் திரும்புவதாக மக்களிடையே ஓர் நம்பிக்கை.

திருவிலஞ்சிக் குமரன் கோயில்

குற்றாலம் - செங்கோட்டை சாலையில் ஐந்தருவியும், சித்திரா நதியும் கலக்கும் கரையில், வளமான நெல்வயல்கள் சூழ்ந்த நிலப்பரப்பில் முருகப்பெருமானுடைய திருக்கோவில் அமைந்துள்ளது. வற்றாத நதிக்கரையில், சுற்றுமதில் சூழ கோபுரம், கொடிமரம் யாவும் உள்ள தனிக்கோயில். முருகப் பெருமான், குற்றாலநாதர் திருவிழாக் காலங்களில் எழுந்தருளி வருகை தந்து, பத்து நாட்களும் குற்றாலத்தில் தங்கி இருந்து, திருவிழாக் காலங்களில் குற்றாலநாதரோடு வீதி வலம் வருவர். வைஷ்ணவ ஆச்சாரியர்கள் அகத்தியரைத் தடுத்து நிறுத்திய போது அகத்தியருக்கு உதவிக்கரம் நீட்டியவர் திருவிலஞ்சி முருகன்தான். பழமையான இந்தக் கோவிலைப் புதுப்பித்தவன் குலசேகர பாண்டியன் ஆவான்.

அகத்தியர்

திங்கள் முடி சூடுமலை தென்றல் விளை யாடுமலை
தங்க புயல் சூழுமலை தமிழ் முனிவன் வாழுமலை
அங்கயற்கண் அம்மைதிரு வருள் சுரந்து பொழிவதெனப்
பொங்கருவி தூங்குமலை பொதியமலை யென்மலையே.

- மீனாட்சியம்மை குறம்

தமிழ் முனிவராகிய அகத்தியர் வாழும் மலை, பொதிய மலை ஆகும். பொதியமலை பாண்டி நாட்டில் உள்ள மலை. ஒருகால் தேவரெல்லாம் கூடியிருந்த இடம், ஆதலின் பொதிய மலையைப் பொதுவில் என வழங்கினர். அகத்தியர் குறுகிய வடிவம் உடையவர். அகத்தியரின் வலக்கையில் கமண்டலமும், இடக்கையில் எழுத்தோலையும் உளது. அகத்தியர் தமிழிலக்கண ஆசிரியராகையால், பொதியமலை தமிழ் பிறந்த பொருப்பென்றும் கூறுபர். பொதியமலையில் சந்தன மரங்கள் அதிகம். ஆகவே தென்றல் காற்று, இம்மரங்களில் தோய்ந்து இனிமை பெற்றதென்று தமிழ் நூல் வல்லார் பெருமிதம் உறுவர். இமையமலையிலும் பார்க்கப், பொதிய மலை காலத்தால் முந்தியது. பொதியமலை மேற்கு மலைத்தொடரில் ஒரு பகுதி. ஏக பொதிகையின் அருகில் பொருநை என்ற தாமிரபரணி ஆறு ஊற்றெடுக்கிறது. தமிழ் நாகரிகத்தின் பிறப்பிடம் இது ஆகும்.

கிழங்கு கிள்ளி, தேனருந்தி, யானைத் தந்தம் ஒடிந்தது. தினை இடித்து, தேனும் தினைமாவும் உண்டு வாழ்ந்த மக்கள் பொதிய மலைச்சாரலில் வாழ்ந்தவர்கள்.

பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர், செந்தமிழிற்கு இலக்கணம் அளித்தவர் அகத்தியர் பெருமான். அகத்தியம் என்ற இலக்கண நூலை இயற்றியவர், இறைநிலைக்கு உயர்ந்தவர். அகத்தியருக்கு கோவிலும் உண்டு. முதற்சங்க காலத்தில் வாழ்ந்தவர். அகத்தியம் 12,000 சூத்திரங்களைக் கொண்ட இலக்கண நூல். இந்த நூல் இப்போது இல்லை. தேவாரத் திருப்பதிகங்களை ஒன்று சேர்த்தவர், அகத்தியர் சேக்கிழாரின் பெரிய புராணத்தை வடமொழியில் எழுதியவர். கடல் கடந்து தூர கிழக்கு நாடுகட்கெல்லாம் சென்றவர். இமைய மலையில் சிவபெருமான் பார்வதி தேவியாரை திருமணம் செய்தபோது வடநாட்டில் பலரும் கூடியதால் அப்பகுதி தாழ்ந்து, தென்நாடு உயர்ந்தது. இவ்வாறு உயர்ந்த தென்நாட்டைச் சமமாக்க சிவபெருமான் அகத்திய முனிவரை தென் நாட்டிற்கு அனுப்பி வைத்தார். அப்போது அகத்தியர், முருகப்பெருமானிடம் தமிழ் கற்று தென்நாடு வந்தார்.

கல்வெட்டுக்கள் - செப்பேடுகள்

திருத்தலக் கட்டுரைகளைத் தொகுத்து எழுதும்போது அரச பரம்பரையினர் ஆற்றிய திருப்பணிகளை எடுத்து இயம்புவது கல்வெட்டுகளும் செப்பேடுகளும் ஆகும். சோழர் காலத்தில், பல்லவர் நிர்மாணித்த செங்கற்கோவில்கள், கருங்கற் கோவில்களாக மாறின. குற்றாலத்தில் கிடைத்த கல்வெட்டுக்கள் எண்பத்தொன்பது ஆகும். இவற்றில் பதினான்கு பிற்காலச் சோழர்களுடையது. இந்தக் கல்வெட்டுகளில் பதினெட்டு வட்ட எழுத்துக்களிலும், எஞ்சியவை தமிழ் எழுத்துக்களிலும் உள. செப்பேடுகள் நாயக்க மன்னர்களால் வழங்கப்பட்டவை. பழைய கோயிலை இடித்த பொழுது அதில் காணப்பட்ட வட்ட எழுத்தில் அமைந்த கல்வெட்டுக்கள் தமிழ்ப்படுத்தப்பட்டு, புதிய கோயிலில் பொறிக்கப்பட்டன. இன்றைய கோயில் இராசராசன் காலத்தைச் சார்ந்தது. சோழர் கோயிலைப் புதுப்பிக்கும்போது குற்றாலத்துக் கூத்தன் கோயிலையும் ஒன்றாக இணைத்து, பெரிய கோயிலாகக் கட்டி இருக்க வேண்டும்.

குலசேகர தேவ பாண்டியன் காலத்தில் வணிகன் ஒருவன் கோயிலுக்கு நன்கொடையாக வெள்ளிப் பாத்திரங்கள் வழங்கிய செய்தியும், இதேபோல் காலை நேரத்தில் மேலகரம் கைலாச நாத பட்டருக்கு வேதம் ஓத காணி மானியமாகக் கொடுபட்ட செய்தியும், இதற்கு மேலாக குற்றாலநாதர் சந்நிதியில் புராண படனத்திற்கு நிலமளித்தமையும், அம்மன் சந்நிதியில் தேவாரம் பண்ணிசைக்காக மெய்கண்டவேதன் சித்தாமணி என்பவருக்குப் பாண்டியமன்னன் காணி மானியமாக வழங்கியதையும் கல்வெட்டு களில் கண்டறியமுடிகிறது. 921 - 922இல் பாண்டி நாட்டை ஆண்ட சடையன் மாறன் கல்வெட்டுப்படி, ஆயன்குட்டன் என்னும் வணிகப்பெருமகன் விளக்கு எரிக்க மூன்று எருமைகள் வழங்கிய செய்தியும் காணப்படுகிறது. முத்து விசயரங்க சொக்கநாத நாயக்கர் என்ற மன்னர், குற்றாலத் தலபுராணம், உலா, அந்தாதி, குறவஞ்சி போன்ற இலக்கியங் கள் இயற்றிய, திரிகூடராசப்பக் கவிராயரைப் பாராட்டி, கோவில் வித்துவானாக நியமித்துக் குறவஞ்சி மேடு என்னும் விளைநிலத்தை இறையிலி யாக வழங்கிய செய்தி தாங்கிய செப்பேடு இன்றும் குற்றாலத் திருத்தலத்தில் பாதுகாப்பாக உளது.

குற்றாலக் குறவஞ்சி

இந்நூல் ஓர் இனிமையான நாட்டிய நாடகம் ஆகும். குற்றாலக் குறவஞ்சியை இயற்றியவர் மேலகரம் திரிகூடராசப்பக் கவிராயர் ஆவார். ஏறக்குறைய முந்நூறு வருடங்கட்கு முன் இயற்றப்பெற்றது. இந்நூல் திருக்குற்றாலத்தில் எழுந்தருளி இருக்கும் சிவபெருமானை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பெற்ற நூல். சொல்லழகு, பொருளழகு, கருத்தாழம் மிக்கது. இக்குறவஞ்சி, ஓசைஇன்பம், பாமரரும் விளங்கக் கூடிய இனிய, சுவைமிக்க இலகுதமிழ் நடையிலுள்ளது. குற்றாலக் குறவஞ்சி ஆசிரியர், குற்றாலநாதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பதினான்கு இலக்கியங்களைப் படைத்துள்ளார். திருக்குற்றாலக் குறவஞ்சியின் சிறப்பைக் கண்டு வியந்த, தென் தமிழகத்தை ஆண்ட முத்து விசயரங்க சொக்கநாத நாயக்கர வர்கள், திரிகூடராசப்பக் கவிராயருக்கு வித்துவான் என்ற பட்டம் சூட்டி, "குறவஞ்சிமேடு" என்னும் நன்செய் நிலத்தை ஈந்து, அதற்குரிய செப்பேடும் பொறித்து கவிராயருக்கு உரிமையாக்கி, கையொப்பம் இட்டு வழங்கினார்.

குறவஞ்சி என்னும் சொல்லிற்கு, குறமாது என்பது பொருள். குறவரின் வாழ்விடம் மலைநாடு ஆகும். குறவரின் தொழில் பறவை பட்சிகளை வேட்டை ஆடுதல், பாம்பாட்டுதல், கூடை பின்னுதுல், கயிறு திரித்தல், திருகணை, உறி, புட்டில், பாய் பின்னுதல், குறி சொல்லுவதோடு, குறமகளிர் பரண் மீது இருந்து தினைப்புனத்தைப் பாதுகாக்க இரைதேடி வரும் பட்சிகளைக் கவண் வீசிக் கலைப்பதுமாகும்.

குற்றாலநாதர் உலா வருகிறார். இறைவன் உலா வரும்போது, அவரைக் கண்ட ஏழு வகைப் பருவப் பெண்களான, பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண்கள் இறைவனிடம் மனதைப் பறிகொடுத்து, காதல் வயப்பட்டு, உணர்விழந்து நிற்கும் நேரத்தில், இவ்வண்ணம் வருந்தும் தோகையர்க்குக் கைக்குறி பார்த்துக் குறி சொல்ல வருகிறாள் குறவஞ்சி. அவள் குறி சொல்லும் வண்ணத்தைப் பார்ப்போம்.

இராகம் - தோடி தாளம் - ஆதி

பல்லவி

வித்தாரம் என்குறி அம்மே! - மணீ
முத்தாரம் பூணு முகிழ் முலைப் பெண்ணே
வித்தாரம் என்குறி யம்மே!

வித்தாரம் = பெரியது, சிறந்தது குற்றாலக் குறவஞ்சி போல், மீனாட்சியம்மை குறம், கொடுமளூர்க் குறவஞ்சி, சரபேந்திர பூபாலக் குறவஞ்சி, கும்பேசர் குறவஞ்சி, திருவாரூர்க் குறவஞ்சி போன்றவை மிகவும் தித்திப்பானவை.

குறவஞ்சியின் தோற்றம்

குறமகள் வெண்சேலை உடுத்து, குன்றி மணிமாலை, பாசிமணி மாலை அணிந்து, இடுப்பில் தாங்கிய கூடையும், வலது கையில் குறி சொல்லும் மாத்திரைக் கோலும் கொண்டு, நீறணிந்த நெற்றியினளாய், பூச்சூடி, பொட்டிட்டு, குலுக்கு நடையும், மொழிக்கொரு பசப்பும் விழிக்கொரு சிமிட்டும், ஊர்வசி, அரம்பை போன்ற தேவமாதர்கள் தோற்றுப்போக,

முனிவரும் சித்தரும் வாய் பிளந்து நிற்க, குற்றால அருவியைப் பார்க்கச் சொல்லி, அருவியின் இரைச்சலைக் கேட்கச் சொல்லி, அருவியில் முகிழ்ந்து எழச் சொல்லி, மந்திகள் குற்றாலத்தில் கொப்புவிட்டு கொப்பு பாய்வதைச் சொல்லி, மந்திகள் கனி கவரும் பாங்கைச் சொல்லி, அக்கனிகள் தேன் பிலிற்றுவதை யும், குற்றால நன்நகரில் செந்தமிழும் தென்றலும் சேர்ந்து தவழுவதையும் தென்பாண்டி நாட்டின் வளத்தையும், குற்றால நாதரின் பெருமையையும், குறத்திதான் குற்றாலநாதருக்கு உறவானவள் என்பதையும், தன் முத்துப்போன்ற வெண்பற்களை உடைய செவ்வாயால் தலைவிக்குக் குறிசொல்ல வந்த நோக்கத்தையுங் கூறி, குறியும் சொல்லி, வசந்தவல்லிக்கு உன் தலைவர் திரிகூடநாதர் என்று சொன்னதும்; தலைவி நாணத்தால் தலைகுனிந்து குறத்திக்குப் பரிசாக பல தங்க நகைகளை அணிவித்தாள்.

குற்றால இலக்கியங்கள்

தேவாரம் பாடிய திருஞான சம்பந்தர் திருக்குற்றாலப் பதிகமொன்றும், திருக்குறும்பலாப்பதிகம் ஒன்றும், அப்பர் சுவாமிகள் அருளிய திருஅங்க மாலையும், மணிவாசகர் ஊனினை உருக்கும் திருவாசகத்தில் திருப்புலம்பலும், திருக் கோவையாரில் குழல்வாய் மொழி அம்மையின் எழிலையும் பாடியுள்ளார். மேலும் அருணகிரிநாதர் தனது திருப்புகழில் திருவிலஞ்சி முருகப் பெருமானையும், திருப்பத்தூர் புராணத்தில் திரிபுர தாண்டவம் ஆடிய செய்தியையும், அழகுறப் பாடியுள் ளார். கந்தபுராணத்தில் சித்திர சபையில் நடம்புரிந்த சிறப்பை யும், பட்டினத்தடிகள் அந்திம காலத்தில் குற்றாலக் கூத்தனை நினைவுகூர வேண்டிய தன்மையையும் கூறி, சேக்கிழாரும் தனது பெரியபுராணத்தில் குற்றாலக்கூத்தனைப் போற்றியுள்ளார். திரிகூட இராசப்பக்கவிராயர் தாம் இயற்றிய பதிநான்கு சிற்றிலக் கியங்கள் அனைத்தையும், திருக்குற்றாலத்தலத்தையே பாட்டுடைப்பொருளாக வைத்துப்பாடியுள்ளார். இவற்றுள் குற்றாலக்குறவஞ்சி இன்று, மேல் வகுப்பு மாணவர்கட்குப் பாட நூலாகத் தமிழ்நாட்டில் அமைந்துள்ளது. குற்றாலத் தல புராணமும், ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பல விடயங்களைத் தந்து உதவுகிறது.

ரசிகமணி டி கேசி

குற்றாலம் என்றால் குற்றாலநாதர் கோவிலும் கோபுரமும், கூத்தப்பிரான் சந்நிதியும், தேரும் திருவிழாவும், பாட்டும் பரதமும், தவிலும் தாளமும், சிற்பமும், சித்திரமும் நிறைந்த தென்காசி நகரமாகும். இங்கே குற்றால அருவி வீழ்ச்சியும், தென்றலும், குளிர்மையும் கூட இருக்கும். குற்றாலக் குறவஞ்சி தோன்றிய திருவிடம் தென்காசியை அடுத்த மேலகரம் என்னும் நகரமாகும். எனவே இந்தத் திருவிடயங்களை நோக்கும்போது எனது மனக்கண் முன் தோன்றுவது நிறை வாழ்வு வாழ்ந்த ரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியாராவர். **"தோன்றிற் புகழொடு தோன்றுக"** என்பதற்கிணங்க 1881ஆம் ஆண்டு ஸ்ரீ வில்லிபுத்தூரில் ரோகிணி நட்சத்திரத்தில் அவதரித் தார். எங்கள் ரசிகமணி நெடிதுயர்ந்த தோற்றம், நீண்ட கைகள், செந்நிறம், நீண்ட மூக்கு, அடர்த்தியான மீசை, சந்தனப் பொட்டு இவை தாம் ரசிகமணியின் தோற்றம் ஆகும். தென்காசியில் ஓங்கி வளர்ந்த மரங்களும், மா, பலாத் தோப்புகளும், தென்னங் கன்றுகளும், நிறைந்த ஆற்றங்கரையிலே சம்பாத்தெருவிலே ரசிகமணியின் பூர்வீக மனை அமைந்து இருந்தது. நன்செய், புன்செய் நிலங்களும் பால், தயிர், நெய், கல்வி, பண்பாடு, இடம், பொருள், ஏவல் நிறைந்த வசதி மிக்க குடும்பம். மன்னர் போல் வாழ்ந்த காரணத்தால் இராமாயணம், முத்தொள்ளாயிரம் போன்ற நூல்களைப் படிக்கவும், ரசிக்கவும் ரசிகர் குழாத்தை தம் வீட்டில் அழைத்து, இன்முகத்தோடு விரும்தோம்பவும் பெருவாய்ப்பாய் அமைந்ததெனலாம்.

ஐந்து வயதில் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து முதலில் மணலில் எழுதிப் பழகினார். பின் ஏடு எழுத்தாணி கொண்டு ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்தார். ஈற்றில் தமிழை, ஆங்கிலத்தை ஆழக்கற்று B.A.B.L பட்டங்கள் பெற்று வக்கீல் ஆனார். 1927இல் M.L.C ஆனார். 1930இல் இந்து அறநிலைய ஆணையாளரானார். இந்தப் பட்டம், பதவிகள் இவர் உயர ஏணியாக அமைந்தது மட்டுமே! ஆனால் தமிழ் இலக்கிய காவிய நயம், அதன் மேல் கொண்ட மோகம் தான், தமிழுலகில் ரசிகமணியின் புகழை இமயம் போல் உயர்த்தியது.

குற்றாலத்தில் ரசிகமணியின் வீடு பாவலர்களையும், பாமரர்களையும், படித்த மேதாவிகளையும் ஈர்க்கத் தொடங்கியது. வீட்டிற்கு வந்த விருந்தாளிகட்கு அடுக்களையில் சாதம், சாம்பார், அவியல், பொரியல், அப்பளம், மோர், ரசம் யாவும் தயாராகி இலையில் பந்தி பரிமாறப்படும். விருந்தினருடன் ரசிக மணியும் கூட இருந்து, உணவு உண்பதுவே ஒரு தனி அழகு. திருச்சி வானொலியில் நடைபெறும் கவிரயங்கிற்கு ரசிகமணி தலைமை ஏற்று நடத்த அழைக்கப்படுவார். பழைய காலத்தில் தென்காசியில் வாகன வசதி மிகக்குறைவு. ஆகவே ரசிகமணி கூடார வண்டியிலேயே பிரயாணம் செய்வார். மாட்டுவண்டிப் பிரயாணத்தில்கூட கையில் கம்பராமாயணம் இருக்கும். நாட்செல் லச்செல்ல ரசிகமணியின் வீடு, காவியக் கலாசாலையாக மாறி யது. சதா இலக்கிய ரசிகர் குழாம் ரசிகமணியைச் சூழவே இருப்பர். ஆனந்தவிகடனில் டி.கே.சி.யின் கட்டுரைகள் வரத் தொடங்கின. தமிழகமும், ஏன் ஈழமும் இவற்றை விரும்பிப் படித்தது. கவிதை வகுப்புகள், நூல் நயம்காணல், தாம் அனுப வித்த சுவைத்த கம்பராமாயணப் பாடல்களை ஏனையோர்க்கு விளக்கிய வண்ணமே இருப்பார். ரசிகமணியின் வீடு தமிழாயும் தமிழ்ச்சங்கமாகியது. தமிழ் இலக்கியம் ரசிகமணியை மதுபோல் மயக்கியது. ரசிகமணியின் கம்பராமாயண, முத்தொள்ளாயிர விரிவுரைகள் எளிமையாகவும் தெளிவாகவும் அழகாகவும், சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் பிரசங்கமாகவும் அமைந்தி ருந்தன. ரசிகமணியின் கவிநயம் காணும் தன்மை, கற்றவரையும், கல்லாதவரையும் இவர்பால் சுண்டி இழுத்தது. ரசிகமணியின் தலைவாசல் காலை, மாலை, இரவு எல்லாம் தமிழாயும் புனித இடமாகவும் மாறியது. பாவத்தோடு பாடுவார். இவரது உரையில் நகைச்சுவை மிகுந்து இருக்கும்.

இராஜாஜி அவர்கள் ஒரு முறை ரசிகமணியை "ஸ்ரீ இராமன் கம்பர் உள்ளத்தில் எப்படி அவதரித்தாரோ அவ்வாறே கம்பரும் டி.கே.சி.யின் உள்ளத்தில் அவதரித்தார்" எனப் புகழ்ந்து உரைத்தார். தமிழ்க் காவியநயம் பெருக வேண்டி, அந்தப் பேரவாவால் தனது பொருளை அள்ளி அள்ளிக் கொடுத்த வள்ளல் ரசிகமணி. நல்ல சாரல் நேரங்களில் சிறிது நேரம் அருவி நீராடுவார், ரசிகமணி 1926இல் தனது குடும்பத் தினரோடு தமிழகத் தலயாத்திரை மேற்கொண்டார். டி.கே.சி.யின்

அந்தஸ்து, கல்வி, பதவி யாவும் இமயம் போல் வளர்ந்து வந்தது. கல்கியில் "கம்பர் தரும் காட்சி" தொடராக பன்னிரண்டு வருடங்கள் ரசிகமணி எழுதி வந்தார். கல்கி வார ஏட்டைத் தமிழுலகம் எங்கும் வார முடிவில் தேடி, ஓடி வாங்கிப் படித்து வந்தது. கவிதைகளைச் சந்தி பிடித்து தெளிவுபடுத்திச், சந்தம் கொடுத்து எல்லோரும் பாடுவதற்கு ஏற்ற முறையில் எழுதி வந்தார். சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் ரசிகமணிதான் பாடல்களின் பொருளை நல்ல அரிய, எளிய வசனங்களாக்கித் தெளிவுபடுத்தியவர். போலிக்கவிதைகளை, செருகி, கவிதை களை இடைச்செருகல்களைக் கண்டறிந்து அவற்றை நீக்கி, பிழைகளைத் திருத்தி கம்பராமாயணத்தின் மூன்று காண்டங் களை வெளியிட்டார். பழைய காலத்தில் ஏன் இந்த இடைச் செருகல் கவிதைகள், கம்பராமாயணத்தில் புகுந்தது? பெரும் பாலும் ஓலைச் சுவடிகள் கறையான் அரித்தும் நனைந்தும், இன்னும் காலத்தால் சிதிலமடைந்தும் இருந்த பகுதிகளை நீக்கி நிரப்பினர் பலர். இவை தாம் இந்த இடைச்செருக்கல்கள், ரசிகமணி இவற்றைக் கண்டறிந்து நீக்கி உண்மையான் கவிதை களைப் பிழையறப் பதிப்பித்தார். இவ்வண்ணம் நீக்கியதைப் பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார் போன்றோர் ஏற்கவில்லை.

ரசிகமணி தமிழ்த் தாயின் பொன்முடியைத் தலைவாரி, கொண்டையிட்டு, பூச்சூடி, பொட்டு வைத்து அலங்காரம் செய் தவர். "கம்பர் தரும் இராமாயணம்" வெளியீட்டு விழா 1953இல் குற்றாலத்தில் நடந்தது. இந்தியாவை ஆண்ட இராஜாஜி அவர்கள் தலைமை தாங்கினார். கற்றிந்த பெரியோர் சபை கூடி இருந்தது. குற்றால மைந்தரான ரசிகமணியின் புகழ் கேட்டு தமிழுலகம் தலை வணங்கியது. மங்களமாக வைபவம் நிறை வெய்தியது. காலங்காலமாக சங்கீதம் என்றால் பிறமொழி, எவருக்கும் விளங்காத மொழி, இதனால் தமிழிசையின் அவசி யத்தை ரசிகமணி சொல்ல, அந்தக் கருத்துக்களை அப்படியே ஏற்றார் ராஜா சேர் அண்ணாமலைச்செட்டியார் அவர்கள். தாமதம் இன்றி ரசிகமணி முத்துத்தாண்டவர், மாரிமுத்தாப்பிள்ளை ஆனைஐயா, அருணாசலக்கவிராயர், கோபாலக்கிருஷ்ணபாரதி போன்றவர்களின் பாடல்களை எடுத்து கீர்த்தனை, பதம் என்றும் பிரித்து தமிழிசைப் பாடல்கள் என்று வெளியிட்டார் ரசிகமணி.

திருமதி ருக்மணி அருண்டேல் சிறந்த நடன மாதரசி, நடன ஆசிரியரும் கூட. ரசிகமணி இவர்களிடம "குற்றாலக் குறவஞ்சி" பாடல்களைப் பத்து நாட்களாகத் தொடர்ந்து விளக்கி வந்தார். ருக்மணி அம்மையார் கேட்டு மகிழ்ந்தது மாத்திரமல்ல குறவஞ்சியை நாட்டிய நாடகமாகத் தயாரித்து அரங்கேற்றினார். பக்தி, பண்பாடு, ஞானம், கல்வி, தமிழிசை கூடிக் குலாவியது குற்றாலத்தில்.

டி.கே.சி. பதிப்பித்த நூல்கள்

1) முத்தொள்ளாயிரம்
2) கம்பராமாயணம் (மூன்று காண்டம்)
3) கம்பர் தரும் இராமாயணம்
4) இதய ஒலி
5) கம்பர் யார்?
6) அற்புத ரசம்
7) கடிதங்கள்
8) வாழ்க்கைக் குறிப்பு

திருக்குற்றால வரலாறு, உற்சவங்கள், குற்றாலம் - பொதிகை குற்றாலநாதர் திருக்கோவில், குற்றாலம் சார்ந்த கோவில்கள், சித்திரசபை, செண்பகாதேவி அம்மன், கூத்தர் கோவில், செண்பக விநாயகர், திருவிலஞ்சிக்குமரன், அகத்தியர் கல்வெட்டுகள், செப்பேடுகள், குற்றாலக்குறவஞ்சி, குறவஞ்சி தோற்றம், குற்றால இலக்கியம், டி.கே.சி. சம்பந்தமாக தொகுத்து உரைத்தோம்.




BALA CONTRACTOR & SUPPLIER

பாலா கட்டிட ஒப்பந்தகாரர்ளும்
கட்டிட பொருள் விநியோகஸ்தர்களும்

Building Constructions,
Developers & Planning,
Engineers & Consultants,
Estimation & Valuation

அனைத்து விதமான கட்டிட வேலைகளும்
கட்டிட பொறியியலாளர்கள் உத்தரவாதத்துடன்
செய்து தரப்படும். ஆலோசனைகளும்
வரைபடங்களும் மதிப்பீடுகளும் செய்து தரப்படும்



T.P:- 0777111726,0772551785 No 42, Punkankulam Road

நன்றியுரை


இந்த நூல் அச்சேறத் தூண்டுகோலாக இருந்த, நண்பனும் கவிஞருமாகிய திரு. முருகையா அவர்கட்கு மனமு வந்த நன்றியைச் செலுத்துவதோடு, கடந்த பல வருடங்களாக, எனது ஆக்கங்களை திருத்தியுதவிய சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியை செல்வி த.கணேசலிங்கம் அவர்கட்கும் நன்றிகூற பெரிதும் கடப்பாடுடையேன்.

இந்த நூலை அச்சேற்றித்தந்த, யாழ். மாவட்டக் கூட்டுறவுச்சபை அச்சகத்தாருக்கும் எனது உளம்கனிந்த நன்றிகள்.

இந்த நூலை வெளியிட உதவி செய்த, ஸ்ரீ வதரிபீட ஆலய நிர்வாகத்தினருக்கும் மனமார்ந்த நன்றிகள். அத்தோடு நூல் வெளியீட்டு விழாவிற்கு வருகைதந்து பெருமைசேர்த்து நூலைப் பெற்று ஆதரித்த உள்ளங்கட்கும் இமயம் போன்ற நன்றிகள்.

அத்தோடு ஆசியுரை தந்த, குருமஹா சந்நிதானம் அவர்கட்கும், வாழ்த்துச்செய்தி தந்த இந்து மகாவித்தியாலய அதிபர் அவர்கட்கும் நன்றிகள் பல.

மேலும், இந்த நூல் உருவாகப் பல்வேறு வழிகளிலும் உதவிய அன்புள்ளங்களுக்கு எனது உளம்கனிந்த நன்றிகள் பல. மற்றும் யாருக்கும் நன்றிகூறத் தவறின், அவர்கட்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.



பொ. சிவப்பிரகாசம்

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை அச்சகம் ☎0213210031